# உலக நாகரிகங்களின் வரலாறு

**அலகு – 1**

**வரலாற்றுக்கு முந்தைய காலங்களில் வாழ்க்கை**

நாகரீகம் தோற்றம் – நாகரீகம் தோன்றுவதற்கும், மேம்படுவதற்குமான சாதகமான காரணிகள் – வரலாற்றுக்கு முந்தைய கால மனிதன் – பழைய கற்காலம் – புதிய கற்காலம் – வெங்கலக்காலம் – இரும்புக்காலம் – மனித இனங்கள் மற்றும் அவர்களின் நடவடிக்கைகள்.

**அலகு – 2**

**வெங்கல கால நாகரீகம்**

மெசோபோடேமியா சுமேரிய நாகரீகம் – முக்கிய நகரங்கள் – அரச கல்லறை – மகா அக்காட் சர்கன் – சமூக மற்றும் பொருளாதார வாழ்க்கை – சுமேரிய சட்டம் மற்றும் சமயம் – பாபிலோன் மற்றும் அதன் பேரரசுகள் – மகா ஹாமுரபி – ஹாமுரபியின் சட்ட தொகுப்பு – இரண்டாம் நெபுகாட்நேசர் – கட்டடிடக்கலை – சமயம் – இலக்கியம் மற்றும் கற்றல் – அசிரிய அதிகாரத்தின் எழுச்சி: விரிவாக்கம் – போர்கள் – ஷால்டியன்கள் – எகிப்திய நாகரீகம்: முதல் அரசர் அல்லது பரோக்கள் – சமயம், கலை, கட்டடிடக்கலை, கணிதம் மற்றும் மருவத்துவத்திற்கு ஆற்றிய பங்களிப்பு – சீன நாகரீகம் – மண்ணும் மனிதர்களும் – அரசியல் நிறுவனங்கள் – பொருளாதார மற்றும் சமூக முன்னேற்றங்கள் – கலை – சமயம் மற்றும் தத்துவம் – இலக்கியம் மற்றும் கல்வி.

**அலகு – 3**

**பண்டைய இரும்புக்கால நாகரீகம்**

இரானிய நாகரீகம் – மகா சைரஸ் – மகா டேரியஸ் – சமூக, பொருளாதார மற்றும் சமய நிலைகள் – கலை மற்றும் கட்டிடக்கலை . கிரேக்க நாகரீகம் : நகர அரசுகள் – ஏதேன் மற்றும் ஸ்பார்ட்டாவிற்கு இடையே நடந்த போர் – உலக நாகரீகத்திற்கு ஆற்றிய பங்களிப்பு – ரோம நாகரீகம்: மன்னராட்சி – பண்டைய குடியரசு – சர்வதிகாரத்தின் எழுச்சி – ஜூலியஸ் சீசர் – அகஸ்டஸின் பொற்காலம் – ரோமானியர்களின் பங்களிப்பு

**அலகு – 4**

**மத்திய காலம்**

பைசாண்டிய அரசாங்கம் : கலை, சமயம் மற்றும் தத்துவம் – இலக்கியம் – ஜஸ்டின் சட்டத்தொகுப்பு – புனித சோபியா – பைசாண்டிய நாகரீகத்தின் முக்கியத்துவம் – கிறித்துவம் – திருச்சபையின் பங்களிப்பு – திருச்சபை மடாலயங்களின் பங்களிப்பு – பபாசி – உலக நாகரீகத்திற்கு பபாசியின் பங்களிப்பு

**அலகு – 5**

**நகரங்கள் மற்றுமெ மாநகரங்களின் எழுச்சி**

நகரங்களின் வளர்ச்சிக்கான சாதகமான காரணிகள் – நகரங்களில் மத்திய கால கில்டுகளின் பங்களிப்பு – கான்ஷ்டான்டிநோபிள் கிழக்கு ஐரோப்பாவின் அரண் – கான்ஷ்டான்டிநோபிளின் வீழ்ச்சி – மறுமலர்ச்சியின் தோற்றம்

**REFERENCES**

1. H.A. Davies, An Outline History of the World, Oxford University Press, 1968

2. Fellipe Fernandez, Civilizations, London, 2000.

3.Hermann Schneider, The History of World Civilization from Prehistoric Times to the Middle Ages, 1931

4. Manoj Sharma, History of World Civilizations, New Delhi,

5. Neil William & Sedlar Jean, Origin of Civilization, New York, 1981

6. Philip Lee Ralph & Others, World Civilizations, New York, 1997

7. F.G. Pearce, An Outline History of Civilization, Oxford University Press, London

8. J.E. Swain, A History of World Civilization, Eurasia Publishing House (Pvt.) Ltd., New Delhi, 1997.

9. W.N.Weech, History of the World, Volume I, II & III, New Delhi, 1992.

**Contents**


**அலகு – 1**

நாகரீகம் தோற்றம்

நாகரீகம் தோன்றுவதற்கும், மேம்படுவதற்குமான சாதகமான காரணிகள்

வரலாற்றுக்கு முந்தைய கால மனிதன்

பழைய கற்காலம் – புதிய கற்காலம் – வெங்கலக்காலம் – இரும்புக்காலம்

மனித இனங்கள் மற்றும் அவர்களின் நடவடிக்கைகள்

**அலகு – 2**

மெசோபோடேமியா சுமேரிய நாகரீகம்

முக்கிய நகரங்கள்

சமூக மற்றும் பொருளாதார வாழ்க்கை

சுமேரிய சட்டம் மற்றும் சமயம்

பாபிலோன் மற்றும் அதன் பேரரசுகள்

மகா ஹாமுரபி

எகிப்திய நாகரீகம்:

பொருளாதார மற்றும் சமூக முன்னேற்றங்கள்

கலை – சமயம் மற்றும் தத்துவம்

**அலகு – 3**

இரானிய நாகரீகம்

சமூக, பொருளாதார மற்றும் சமய நிலைகள்

கலை மற்றும் கட்டிடக்கலை

கிரேக்க நாகரீகம்

ரோம நாகரீகம்:

அகஸ்டஸின் பொற்காலம்

**அலகு – 4**

பைசாண்டிய அரசாங்கம்

கலை, சமயம் மற்றும் தத்துவம் – இலக்கியம்

ஜஸ்டின் சட்டத்தொகுப்பு

கிறித்துவம்

**அலகு – 5**

நகரங்களின் வளர்ச்சிக்கான சாதகமான காரணிகள்

கான்ஷ்டான்டிநோபிள் கிழக்கு ஐரோப்பாவின் அரண்

மறுமலர்ச்சியின் தோற்றம்

UN T–I

## 1. நாகரிகத்தின் தோற்றம்

நாகரிக சமுதாயத்தின் நான்கு அடிப்படைகளாக இருப்பவை அரசாங்கம் , அறநெறித் தொகுப்பு, கலைவளர்ச்சி, ஓரளவிற்குப் பொருளாதர வளம் ஆகியவையே என்று நாகரிகத்திற்கு இலக்கணம் கண்ட தலைசிறந்த வரலாற்றாசிரியரான அர்னால்ட் ஜே.டாயின்பி குறிப்பிட்டுள்ளார். அதாவது நாடோடிகளாகத் திரிந்த மக்கள் நிலையாக ஓர் இடத்தில் குடியேறி வாழ்வதை நாகரிகம் என்ற சொல்லால் குறிக்கலாம் . மேலும் சீரான அரசாங்க முறைகளை அமைத்துக் கொண்டு , வாணிகத்தை வளர்த்து முன்னேற்றத்திற்குத் தகுதி படைத்தவர்களாக வாழ்கின்ற மக்களின் வாழ்க்கையை 'நாகரிகம்' என்ற சொல் குறிக்கிறது

இத்தகைய நாகரிகங்கள் ஆற்றுப்படுகைகளிலேயே (River Valleys) எழுந்துள்ளன. நைல், யூப்ரடீஸ், டைகரீஸ், சிந்து, ஹொயாங்கோ அல்லது மஞ்சள் ஆற்றுப்படுகைகளில் மிகப்பழங் காலத்திலேயே தலைசிறந்த நாகரிகங்கள் விளங்கி வந்தன. இவ்வாறு ஆரம்பகால நாகரி கங்கள் ஆற்றுப்படுகைகளிலேயே தோன்றி வளர்ந்தன என்பதை நாம் காணலாம்

இயற்கை அன்னையின் அரவணைப்பு இல்லாத இடங்களில் குடியேறி வாழும் மக்கள் தங்களது வாழ்க்கைக்கு வேண்டிய வசதிகளையும் , தேவையான பொருள்களையும் தேடிப் பெரு றுதற்கு ஓயாது போராட வேண்டியதிருக்கும் . அப்படி ஓயாத வாழ்க்கைப் போராட்டத்தில் ஈடுபட்டிருக்கும் மக்கள் நாகரிகத்தில் முன்னேற முடியாது. அதற்கு மாறாக பெரிய ஆறுகள் பாய்வதால் வண்டல் மண்படிந்த சமவெளிகளில் வாழும் மக்களுக்கு வாழ்க்கைக்கு வேண்டிய வசதிகள் எளிதாகச் கிடைத்து விடுகின்றன. உயிர் வாழ்வதைப் பற்றியே எண்ணிக் கொண்டிருக்காமல் மற்ற வாழ்க்கைத் தேவைகளைக் குறித்துச் சிந்திப்பதற்கு அவர்களுக்கு அதிக அவகாசமும் ஓய்வும் கிடைக்கின்றன. எனவே ஒரு கிரேக்க அறிஞன் கனவு கண்ட 'நல்ல வாழ்க்கை (Good Life), அதாவது நாகரிக வளர்ச்சிக்கு உதவக்கூடிய 'நல்ல வாழ்க்கை ' ஆற்றுப்படுகைகள், அல்லது சமவெளி பகுதிகளில் மட்டுமே அமைய முடியும்

ஆனாலும் சாதகமானச் சூழ்நிலை காரணமாக ஆற்றுப்படுகைகள் ஆரம்பகால நாகரிகங்களின் தொட்டில்களாக (Cradle of Civilizations) அமைந்த போதிலும், இயற்கைக்

கூறுகளின் முக்கியத் துவத்தினை அளவுக்கு மீறி வல யுறுத்திக் கூறுவது அறிவுடைமை ஆகாது. அவ்விதம் செய்வதால், ஏதோ மாற்ற முடியாத இயற்கையின் நியதிகளுக்கு உயிரினங்கள் அடிமைப்பட்டுள்ளன என்றும் அங்கே மனிதனுக்கு அல்லது அவனது சுதந்திர எண்ணத்திற்கு எவ்விதச் சிறப்பும் இல்லையென்றாகி விடும் என்றும் அறிஞர்கள் குறிப்பிடுவர் உண்மையில் மனிதனுக்கும் அவனது சுற்றுப்புறச் சூழலுக்கும் இடையே ஏற்படும் செயல் மற்றும் எதிர்ச் செயல்களின் விளைவாகவே நாகரிகம் எழ முடியும்.

உயிரினங்களிலேயே மிகவும் பலம் குன்றியிருக்கும் மனிதன்தான் சுற்று சூழலுக்கு ஏற்ப தனது வாழ்க்கையே அமைத்துக் கொள்ளும் திறம் படைத்தவனாகவும் அந்தச் சூழலை யே தன் தேவைகளுக்கேற்ப மாற்றியமை த்துக் கொள்ளும் வலிமை கொண்டவனாகவும் திகழ்கிறான். பல இடங்களில் மனிதன் இயற்கை நிலைகளுக்கேற்ப தன் பழக்க வழங்கங்களை மாற்றிக் கொண்டிருக்கிறான் அது போல வேறு இடங்களில் இயற்கையை பண்படுத்தி பயிரிடவும் வீட்டு விலங்குகளை வளர்க்கவும் தொடங்கினான் மனிதன். அப்போதுதான் அங்கே சமுதாய அமைப்பு உருவானது . பொதுநலத்திற்காகத் தனிமனிதர்கள் தங்களுடைய உரிமைகளில் ஒவ்வொரு பகுதியை விட்டுக் கொடுக்க முன் வந்தனர். இவ்விதமான மக்கள் கூடி வாழ்ந்து கிராம வாழ்க்கையை அமைத்துக் கொண்டனர் நாளடைவில் நகர நாகரிகக் கூறுகள் அனைத்தும் கொண்ட பெரு நகரங்கள் தோன்ற ஆரம்பித்தன

**நாகரிகம் பற்றிய பொருள் விளக்கம்**

நாகரிகம் என்றால் என்பது பற்றி அறிஞர்களிடையே பல்வேறு கருத்துக்கள் நிலவுகின்றன. ஒருசமுதாயமானது உச்ச நிலை யடைந்து அறிவுத்துறையிலும் ஆன்மீகத்துறையிலும் பெரிதும் வளர்ச்சியடைந்துள்ள போதுதான் அது பண்பட்ட சமுதாயம் என்று கருத்தாகும் . நாளடைவில் அவை சீரழிந்த நிலையை அடைகின்ற போதுதான் அது நாகரிக சமுதாயம் என்று கருத்தாகும்." என்று ஆஸ்வால்ட் ஸ்பெங்ளர் (Oswald Spengler) கூறுகிறார்.

அர்னால்ட் டாயின்பி என்பவர் நன்கு பண்பட்ட ஒவ்வொரு சமுதாயத்தையுமே ஒரு நாகரிகம் எனக் கருதலாம் என்கிறார் . நாகரிகம் அடைந்த சமுதாயம் வேறு . நாகரிகம் அடையாத சமுதாயம் வேறு என்று அவர் பிரிவுபடுத்திக் காண்பிக்கிறார் பழங்குடி சமுதாயங்கள் நாகரிகப் பாதையில் ஓரளவு முன்னேறி அத்துடன் நின்று

விடுகின்றன. நாகரிகமடைந்த சமுதாயங்கள் நாளுக் கு நாள் முன்னேறி கொண்டிருப்பனவாகும். நாகரிகம் என்பது புற உலக முன்னேற்றத்தை மட்டுமே குறிக்கிறது என்று சிலர் கூறுவர் . ஆனால் அகப்பண்பாட்டை வளர்க்கத்தக்க சமுதாய அமைப்பே நாகரிகம் என்று வில் டூராண்ட் (Will Durant) என்பவர் கூறுகிறார் . புறமுன்னேற்றம், அகவளர்ச்சி இரண்டும் கலந்ததே நாகரிகம் என்று இன்று பொதுவாக கருதப்படுகிறது.

**நாகரிகங்களைப் பற்றிய டாயின்பியின் ஆராய்ச்சி**

இருபதாம் நூற்றாண்டின் இணையற்ற வரலாற்றாசிரியரான அர்னால்ட் ஜே டாயின்பி உலகத்தில் இதுவரை தோன்றிய நாகரிகங்கள் அனைத்தின் தன்மை, பிறப்பு, வளர்ச்சி, தேய்வு, அழிவு ஆகியவற்றைப் பற்றிய விபரங்களைத் தொகுத்து ஒரு வரலாற்று ஆய்வு ' (A Study of History) என்ற தனது நூலில் கொடுத்துள்ளார் உலகில் இதுவரை இருபத்தியொரு நாகரிகங்கள் தோன்றி வளர்ந்துள்ளதாக அவர் குறிப்பிட்டுள்ளார். அவை வருமாறு

1) ஹெலனியம் (கிரேக்க ரோமனிய நாகரிகம்). 2) எகிப்தியன், 3) 'மினோவான் 4 மேற்கு உலகம் (மேற்கு ஐரோப்பா, அமெரிக்கா, 5) சமேரியா, 6) மேற்கு ஆசியா) 6) ஹிட்டைட், 7) இந்தியா (பழங்காலம்) 8) தூரக்கிழக்கு (சீனா பழங்காலம் ), 9) தூரக்கிழக்கு பக்கக் கிளை (கொரியா, ஜப்பான்). 10) வைதீகதிருச்சபையின் பிரதான பிரிவு (பால்கன்) 11) வைதீக திருச்சபையின் பக்ககிளை (ரஷ்யா), 12) ரானியம், 13) பாபிலோனியம், 14) சீரியா, 15) அரேபியம், 16) இந்தியா (ஏழாம் நூற்றாண்டிற்குப்பின்), 17) சீனா (13-ம் நூற்றாண்டிற்குப்பின் ), 18) ஆண்டியன், 19) மாயன், 20) யுகோடெக் (மத்திய அமெரிக்கா), 21) மெக்சிகோ, ஆகியவை ஆகும்.

இவற்றில் ஏழு நாகரிகங்கள் இன்னமும் இயங்கி வருகின்றன என்கிறார் . ஐந்து நாகரிகங்கள் தோன்றி அப்படியே நின்று விட்டன என்றும் கூறுகிறார்

**நாகரிகத்தின் தோற்றம் பற்றிய டாயின்பியின் கோட்பாடு**

சாதகமான தட்ப வெட்ப புவியியல் கூறுகள் ஆகியவை நாகரிகம் தோன்றுவதற்கு அடிப்படை காரணம் அன்று . 'தூண்டல், துலங்கல்' (challange and response) என்ற கோட்பாட்டின் அடிப்படையில் தான் நாகரிகம் தோன்றி , வளர்கிறது என்று கூறுகிறார் டாயின்பி. மனித வாழ்விற்கு இன்றியமையாத சில கடினமான பிரச்சனைகளை சமாளிக்க தனது ஆற்றலை பயன்படுத்துகிறது. அந்தக் கடினமான பிரச்சனைகள் சமூக

ஆற்றலுக்கு ஒரு சவாலாக அமைவதுடன் , அதனைச் சமாளிக்க செயல்படத் தூண்டுகிறது. இவ்வாறு பிரச்சனைகளை சமாளிப்பதில் சமூகத்தின் ஆற்றல் வெளிப்படுத்தப்படுகிறது இதன் காரணமாகவே நாகரிகம் தோன்றுகிறது என்கிறார் டாயின்பி.

எந்த அளவிற்கு கடினமான பி ரச்சனைகள் சமாளிக்கப்படுகிறதோ அந்த அளவிற்கு நாகரிகமும் வளர்ச்சியடைகிறது . பண்டைய எகிப்திய நாகரிகம் நைல்நதி டெல்டாவின் சதுப்பு நிலங்களிலும் , உஷ்ணமான வறண்ட தட்பவெப்ப நிலையிலுமே தோன்றியது. இந்தியாவில் வறண்ட வளமற்ற சிந்து சமவெளியில் தான் பண்டைய இந்திய நாகரிகம் தோன்றியது. அதே போல் சீனாவின் துயரம் என்று அழைக்கப்படும் தொல்லைகள் மிகுந்த மஞ்சள் நதித்தீரத்தில் தான் சீன நாகரிகம் தோன்றியது. மனிதச் சூழ்நிலைகளை மேலும் மேலும் கட்டுப்படுத்தும் ஆற்றலும், இயற்கைச் சூழ்நிலைகளை மேலும் மேலும் கட்டுப்படுத்தும் ஆற்றல்களே நாகரிக வள ர்ச்சிக்குத் தேவையான இரண்டு முக்கிய அம்சங்கள் என்று டாயின்பி குறிப்பிடுகிறார்

**நாகரிகங்களைப் பற்றி அறிய உதவும் ஆதாரங்கள்**

எகிப்திய நாகரிகம் , கமேரிய நாகரிகம் , சிந்துவெளி நாகரிகம் , சீன நாகரிகம் ஆகியவை நாம் அறிந்த பண்டைக்கால பெரு நாகரிகங்களாகும் . இந்த நாகரிகங் கள் ஒன்றுக்கொன்று தொடர்புடையன என்று கூற இயலாவிட்டாலும் , தனிப்பண்புகளும், தனிக்கூறுகளும் பெற்றுத் திகழ்ந்தன என்ற அறிகிறோம் இவற்றில் வரம்பற்ற முடியாட்சி முதல் நிலமானியப் பிரபுக்கள் ஆட்சிவரை பல்வேறு ஆட்சி அமைப்புகள் , பொருளாதாரத் துறையிலோ , கட்டுபாடற்ற நாகரிகத்தின் தோற்றம் பொருளாதார அமைப்பு முதல் அரசுப் பொதுவுடைமைப் பொருளாதரம் வரை பல்வகை அமைப்புகள் வழக்கில் இருந்திருக்கின்றன.

ஆனால் இத்தகைய நாகரிகங்களைப் பற்றி முழுமையாக நாம் அறிந்து கொள்ள முடியவில்லை. பண்டைக்கால நாகரிகச் சின்னங்களின் இடிபாடு களிலிருந்தும் வழி வழியாக வந்துள்ள மரபுகளிலிருந்தும் கிடைக்கின்ற செய்திகளையே நாம் ஆதாரமாகக் கொள்ள வேண்டியுள்ளது. மிகப்பழைய எகிப்திய நாகரிகத்தின் மாட்சிமை குறித்து அந்த நாட்டின் பிரமிடுகள் அளவற்ற செய்திகளைத் தருகின்றன . சிந்து வெளி நாகரிகத்தின் சிறப்புகளை மொகஞ்சதாரோ ஹரப்பா அழிபாடு கள் அறிவிக்கின்றன . பாபிலோனுக்கு

அருகிலும் வடசீனாவிலும் நிகழ்ந்த புதைபொருள் ஆராய்ச்சிகள் முறையே சுமேரியா நாகரிகத்தைப் பற்றியும், சீன நாகரிகத்தைப் பற்றியும் செய்திகளைத் தருகின்றன

**நாகரிகமும், பண்பாடும்**

வரலாறு என்பது ஒரு இனத்தின் , நாட்டின் நாகரிகத்தினை விளக் குவதாகவும், பண்பாட்டினைப் படம் பிடித்துக்காட்டுவதாகவும் அமைய வேண்டும். என்று அறிஞர்கள் கருதுகின்றனர். மேலை நாட்டு அறிஞர்கள் நாகரிகம் வேறு , பண்பாடு வேறு என்ற கருத்தைக் கொண்டுள்ளனர்.

நாகரிகத்தை அகம் , புறம் எனப்பாகுபடுத்தலாம் . அதாவது, உள்ளத்தின் வளர்ச்சியையும் உணர்வுகளின் மலர்ச்சியையும் புலப்படுத்துவது நாகரிகத்தின் அகக்கூறு ஆகும். இதன் மூலம் உள்ளத்தின் எழுச்சி, உயர்வு, மேம்பாடு ஆகியவற்றை அறியலாம். உலக வாழ்க்கையில் , அதாவது புறவாழ்வில் மனிதன் அடைகின்ற வியக்கத்தக முன்னேற்றங்கள் , பெறுகின்ற பேறுகள் , போற்றிப் பின்பற் றுகின்ற நாள் வண்ணம், இன்பம்தரும் பகட்டான வாழ்க்கை வசதிகள் போன்ற யாவும் நாகரிகத்தின் புறக்கூறுகள் ஆகும் . இவ்வாறு அகமும் , புறமும், உணர்வும், அறிவும், உள்ளமும் உடலும் ஒன்றியும் இணைந்தும் இயங்குவதால் வெளிப்படும் வாழ்க்கை முறையே நாகரிகம் ஆகும்.

இந்திய சிந்தனையா ளர்களும், மேலைநாடுகளின் அறிஞர்களும் நகர்புறம் தோன்றிவளர்ந்த சிறப்புமிகு வாழ்க்கை நெறியை 'நாகரிகம்' எனக் கருதுகின்றனர் . வாழ்க்கையில் மனிதன் முழுநிறைவை அடைவதற்காக மேற்கொள்ளும் முயற்சியின் பயனாக அமைவதே பண்பாடு

பண்பாட்டின் வளர்ச்சியில் பல படிநிலைகள் உள்ளன . தனி மனிதனுடைய உணர்வுகளும், செயல்களும், பழக்க வழக்கங்களும் பண்பாட்டு வளர்ச்சியடைதல் ஒருநிலை ஆகும் . தனிமனிதர்கள் ஒன்றாகக் கூடி வாழ்வதால் உருவாகும் சமூகங்களின் பண்பட்ட முன்னேற்றம் மற்றொரு நிலை ஆகும் சமூகங்கள் பல சேர்ந்து ஒரு சமுதாயமாகப் பின்னிப் பிணைந்து இயங்கு ம் பொழுது உருவாகும் வாழ்க்கை நெறி, பழக்க வழக்கங்கள் , கலைஉணர்வு சிந்தனை முதிர்ச்சி ஆகிய அனைத்தும் இணைந்து ஒருவகை சமுதாயச் சிந்தனையாக வெளிப்படுவதே பண்பாடு என்பது மூன்றாம் நிலையாகும்

இவ்வாறு நாகரிகமும், பண்பாடும் ஒரு நாணயத்தின் பக்கங்களைப் போன்று பிரிக்க முடியாதவைகளாக உள்ளன. உள்ளப் பண்பாடும், உணர்ச்சிக் கனிவும் சேர்ந்து மனித உள்ளத்தில் மாட்சியைப் புலப்படுத்தும் அக வாழ்க்கைக் கூறுகளும், வளமார்ந்த வாழ்க்கை கையை வெளிப்படும் புறவாழ்க்கையின் கூறுகளும் இணைந்தும், இழைந்தும் இயங்குவதையே நாகரிகம் என்று போற்றுகிறோம் "What you have is Civiliza tion, what you are is Culture' இது நாகரிகத்திற்கும், பண்பாட்டிற்கும் ஒரு : எளிமையான விளக்கம் ஆகும்.

**நாகரிகத்தின் கூறுபாடுகள்**

ஒரு நாகரிக சமுதாயத்தில் காணப்படுகின்ற கூறுபாடுகள் நான்கு , ஆகும். அவை பொருளாதார வளம் , அரசியல் அமைப்பு , நன்னெறி மரபுகள் கல்வி கலைவளர்ச்சி ஆகியவையாகும்

**a) பொருளாதாரவளம்**

ஒரு சமுதாயத்தின் வளர்ச்சிக்கு நிலையான பொருளாதார வாழ்க்கை இன்றியமையாதது ஆகும். விலங்குகளை வேட்டையாடியும், கிழங்குகளைத்தின்றும், மீன்களைப் பிடித்தும் நாடோடிகளாக மனிதன் வாழ்ந்து வந்த போது நாகரிக ம் அடையவில்லை. வேளாண்மையில் ஈடுபட்டு ஒரு இடத்தில் நிலையாக வேரூன்றிய பின்னரே மக்களிடையே நாகரிகம் அரும்பலானது . பல தொழில்கள் ஏற்பட்டன . வாணிபம் வளர்ந்தது. பல சமுதாயப் பிரிவுகளும் அரசியல் அமைப்புகளும் ஏற்பட்டன. சமயம், கலை ஆகியவற்றில் மனிதனுக்கு ஈடுபாடு ஏற்பட்டது . மனிதர்கள் ஒன்று சேர்ந்து யோசிக்கத் தொடங்கியதால் பல அறிவியல் முன்னேற்றமும் ஏற்பட்டது

**b) அரசியலமைப்பு**

இரண்டாவதாக நாகரிக சமுதாயத்தில் காணப்படுவது அரசியலமைப்பு ஆகும் . ஆதியில் நாடோடிகளாக வாழ்ந்த மனிதர்கள் ஓரிடத்தில் நிலையாக வாழத்தொடங்கிய பின் ஒருவருக்கொருவர் சச்சரவில்லாமல் வாழ்வதற்காக சில விதி முறைகளை வகுத்துக் கொண்டார்கள். அவற்றை செயல்படுத்தி அரசியலமைப்பை வகுத்தார்கள் . முடியாட்சி, குடியாட்சி போன்ற பல்வேறு அரசியலமைப்புகளை அமைத்துக் கொண்டனர். அரசியலமைப்புகள் இல்லாத சமுதாயத்தை நாகரிகமுடையதென்று ஏற்றுக்கொள்ள முடியாது.

**c) ஒழுக்க நெறிகள்**

அரசியல் சட்டங்கள் புறவாழ்க்கையில் அமைதியை ஏற்படுத்த உதவியதைப் போல, அகவாழ்க்கையில் ஒழுங்கை ஏற்படுத்த பல நெறிமுறைகளை மக்கள் வகுத்துக் கொண்டனர். அவற்றை வற்புறுத்தவே சமயங்கள் தோன்றின. இவை மக்கள் ஒழுக்கம் கெடாமல் இருக்க தேவைப்பட்டன . இவையாவும் நாகரிகமடைந்த சமுதாயத்தின் பிரிக்க முடியாத கூறுபாடுகளாக அமைந்துவிட்டன

**நாகரிகத்தின் தோற்றம்**

**d) கல்வி, கலை வளர்ச்சி**

கல்வி, கலை வளர்ச்சியே நாகரிக மக்களுக்கும் காட்டுமிராண்டி க்கும் உள்ள முக்கிய வேறுபாடு ஆகும் . மனிதன் ஒரு சிந்திக்கும் பிராணி ஆவான் என்றை க்கு தானாக சிந்தித்து, அவ்வாறு சிந்தித்த தனது கருத்துக்களை பிறருடன் பரிமாறிக்கொள்ள ஆரம்பித்தானோ அன்றே கல்வி தோன்றியது மொழிகளும் நூல்களும் பிறந்தன இசை, நாட்டியம், சிற்பம், ஓவியம் ஆகியவற்றின் மூலம் தனது அக உணர்ச்சிகளை பிரதிபலிக்க கற்றுக் கொண்டான் அப்போதுதான் கலை பிறந்தது ஒரு சமுதாயத்தின் அக நாகரிக வளர்ச்சியை மனிதன் கல்வியிலும் , கலைகளிலும் அடைந்திருக்கின்ற மேம்பாடுகளை வைத்தே கணிக்க முடியும் கல்வியிலும், கலைகளிலும் நாளுக்கு நாள் முன்னேற்றம் அடைந்து வரும் சமுதாயமே நாகரிக சமுதாயம் என்று வரலாற்றாசிரியர்கள் கருதுகிறார்கள்.

**நாகரிகத்தின் தோற்றத்திற்கான காரணங்கள்**

உலகத்தின் பல்வேறு பகுதிகளில் அவ்வப்போது தோன்றிய பல்வேறு நாகரிகங்கள் எத்தகைய சூழ்நிலைகளால் முதல் முதலில் உருவாயின , அவற்றின் வளர்ச்சிக்கான காரணங்கள் யாவை என்பதைப் பற்றி விரிவாக ஆராய்லாம்

**a) தட்ப வெப்ப நிலை**

தட்ப வெப்ப நிலையைப் பொறுத்தே நாகரிகங்கள் தோன்றுகின்றன என்று பல அறிஞர்கள் கருதுகிறார்கள் . அரிஸ்டாட்டில், மாண்டஸ்கியூ, தற்கால புவி இயல் வல்லுநர் எல்ஜ்வொர்த் ஹன்டிங்டன் (Ellgw)orth Huntington போன்றோர் இக்கருத்தைக் வலியுறுத்துகின்றனர். ஒரு குறிப்பிட்ட கால நிலையில் தான் மக்கள் தங்கள் ஆற்றலை முழுமையாக வெளிப்படுத்த முடியும். மனிதனது மனம் உற்சாகமாக வேலை செய்து புதிய நாகரிகம் படைக்க முடியும் என்பது இவர்களின் திடமான நம்பிக்கை யாகும்.

தட்பவெப்பநிலையுடன் வேறு சில சூழ்நிலைகளும் தேவை . காற்றில் ஈரம் இருக்க வேண்டும். காலநிலை அ டிக்கடி மாறும் சூழ்நிலையில்தான் மனிதன் புதியதொரு தெம்பையும் உணர்ச்சியையும் பெறுகிறான் . குளிர்காற்று நிறைந்த ஆர்டிக் பிரதேசத்திலோ, வெப்பக்காற்று வீசுகின்ற சகாராபாலைவனத்திலோ , இருள் நிறைந்த ஆப்பிரிக்க காடுகளிலோ , வறட்சி நிறைந்த அமெரிக்கப் பகுதிகளிலோ நாகரிகம் தோன்றவில்லை என்பதை நாம் உணர வேண்டும். அதே சமயம் தட்பவெப்ப நிலையில் ஏற்படும் மாறுபாடுகள் நாகரிகம் அழிவதற்கும் , காரணமாக அமைந்துள்ளன என்பதை மறந்துவிடக்கூடாது.

**b) செழிப்பான நிலப்பரப்பு**

எங்கெல்லாம் நிலவளமும் , நீர்வளமும் காணப்படுகிறதோ அங்கு உயர்ந்த நாகரிக வாழ்க் கை வளர்ந்துவரும் சாகுபடிக்காகவும் , கால்நடை வளர்ப்புக்காகவும் நிலங்களை மனிதன் பயன்படுத்த முற்பட்ட போது நாகரிகம் வளர்ச்சியடைந்தது. நீர்வளத்தை பயிர் செய்வதற்காக மனிதன் பயன்படுத்திக் கொண்டான் . இதனால் தான் பல நாகரிகங்கள் ஆற்றுப்படுகைகளில் தோன்றின என்பது குறிப்பி டத்தக்கது ஆனால் மனிதன் நீர்வளத்தையும், நிலவளத்தையும் அதிகமாகப் பயன்படுத்தி அவற்றை வற்றச் செய்தபோது தனது அழிவைத்தேடிக் கொண்டான்

**c) நாட்டின் இயற்கை அமைப்பு**

ஒரு நாட்டின் இயற்கை அமைப்புதான் நாகரிக வளர்ச்சிக்குக் காரணம் என்று பத்தொன்பதாம் நூற்றாண்டில் வாழ்ந்த கார்ல் ரிட்டர் (Carl Ritter) என்ற ஜெர்மானிய அறிஞர் கருதுகிறார் . பண்டங்களின் அமைப்பு உருவம் முதலிய வற்றுக்கு ஏற்பவே அதன் நாகரிக வளர்ச்சி அமையும் என்பது அவரது கருத்து ஆகும் சான்றாக பெரிதும் உடைபட்ட கடற்கரையை உடைய நாடுகள் வாணிபத்தில் முன்னேற்றம் அடைகின்றன நான்கு பக்கமும் மலைகளால் சூழப்பட்ட நாடுகள் நலிவடைகின்றன . தங்களுக்கு அபாயம் இல்லை என்று அறிந்த மக்களிடம் ஒரு தேக்க நிலை ஏற்பட்டு விடுகிறது . ஐரோப்பாவில் இங்கிலாந்து உட்பட பல நாடுகள் நாகரிகமடையக் காரணம் அவைகளின் உடைபட்ட கடற்கரையே என்று கூறினால் அது மிகையாகாது

**d) நாடோடிகளின் பங்கு**

உலக நாகரிகங்கள் பலவற்றைப் படைத்தவர்கள் நாடோடிக் கூட்டத்தினரே என்பது ஒரு சில வரலாற்றாசிரியர்களின் கருத்து ஆகும் இத்தகைய கருத்தை

வெளியிட்டவர் பிரான்ஸ் ஒபன்ஹுமர் (Franz Openheimer) என்ற ஜெர்மானிய அறிஞர் ஆவார். நாடோடிகளான அரேபியர் சரசானிக் நாகரிகத்தையும், ஆரியர்கள் இந்திய நாகரிகத்தையும் படைத்தனர் என்று கூறுகிறார் . நாடோடிகள் ஒற்றுமையுள்ளவர்கள். பால் இறைச்சி ஆகியவற்றை உண்பதால் அவர்கள் உடலும் உள்ளமும் வலிமை நிறைந்து விளங்கின தங்களை விடப் பலவீனமானவர்களை வென்று அடிமைப் படுத்தினர். வெற்றி பெற்ற இவர்கள் நல்ல ஓய்வு நேரத்தைப் பெறுகின்றனர். அத்துடன் பொருள் வசதியும் இருப்பதால் நாளடைவில் நாகரீக வாழ்க்கையை உருவாக்குகின்றனர் என்பது அவரது வாதமாகும் ஆனால் நாகரிகங்கள் அனைத்தையும் தோற்றுவித்தவர்கள் நாடோடிகள் என்ற ஒப்பன் ஹுமரின் வாதத்தை ஏற்றுக் கொள்ள முடியாது. சான்றாக எகிப்திய நாகரிகத்தைத் தோற்றுவித்தவர்கள் நாடோடிகள் அல்ல . நாடோடிகள் பொருள்களை அழிக்கத் தெரிந்தவர்களேயன்றி ஆக்கத் தெரிந்தவர்கள் அல்ல என்பது தார்ஸ்டீன் வெப்ளன் (Thorstein veblen) என்ற அமெரிக்க அறிஞரின் கருத்தாகும். ஆனால் நாடோடிகள் எங்கெங்கு சென்றார் களோ அங்கெல்லாம் புதிய ரத்தத்தைப் பாய்ச்சி புதிய தெம்பையும் , ஊக்கத்தையும் கொடுத்து புதிய நாகரிகங்கள் உருவாக உறுதுணை புரிந்தார்கள் என்பது உண்மையாகும்

**e) துன்பம் நிறைந்த சூழ்நிலை**

துன்பம் நிறைந்த சூழ்நிலையில்தான் மனிதன் புதிய ஆற்றலையும் , ஆக்கத்திறனையும் வெளிப்படுத்தி புதிய நாகரிகத்தைப் படைக்கிறான் என்று அர்னால்ட் டாயின்பி என்ற ஆங்கில வரலாற்றாசிரியர் கருதுகிறார் . இயற்கையின் அருமை எங்கெல்லாம் வலுவுற்றிருந்ததோ அங்கெல்லாம் நாகரிகம் தோன்றியுள்ளது என்கிறார் டாயின்பி. இயற்கையின் சவாலை (Challenge) ஏற்று அதற்கு எதிர்மா ற்றம் (Response) தர முற்படும் போது நாகரிகம் தோன்றுகிறது என்று கூறுகிறார் டாயின்பி . இந்த கருத்தை பலர் மறுத்துக் கூறுகின்றனர் துன்பம் நிறைந்த சூழ்நிலையல்லாமல் இன்பமும் ஓய்வும் நிறைந்த சூழ்நிலையிலேயே நாகரிகம் உண்டாகக் கூடும் என்று பலர் கருதுகின்றனர்

நாகரிகம் ஓரிடத்தில் தோன்றி வளர்வதற்கு இதுதான் காரணம் என்று அறுதியிட்டுக் கூற முடியாது . பல்வேறு காரணங்களின் மொத்த விளைவாகவே நாகரிகங்கள் தோன்றுகின்றன மிதமான தட்ப வெப்ப நிலை , துறை முகங்களின் அண்மை. நீர்வளம், நிலவளம், கனிவளம் முதலிய புறச்சூழ்நிலைகள் நாகரிகம் தோன்றுவதற்கான காரணங்கள் என்பதில் ஐயமில்லை. ஆனால் இத்தனையும் இருந்து

மக்களிடம் படைப்பாற்றலும் ஊக்கமும் இல்லை யென்றால் ஒரு பயனும் இல்லை . மக்களிடையே படைப்பாற்றல் வளர வேண்டுமானால் படைப்பாற்றல் கொண்டிருக்கும் மற்றொரு மக்கள் கூட்டத்துடன் தொடர்பு இருப்பது அவசியம் ஆகும்

எகிப்து, சுமேரியா போன்ற இடங்களில் ஆதியில் மக்கள் நாகரிகம் அடைந்திருந்ததினாலயே் அவர்களுக்கு அருகில் வாழ்ந்த பாபிலோனியர்கள் , ஹீப்ருக்கள். போனிஷியர்கள், பாரசீகர்கள், கிரேக்கர்கள் ஆகியோர் பிற்காலத்தில் தமக்கே உரிய நாகரிகங்களைப் படைக்க முடிந்தது . கிரேக்க, ரோமானிய நாகரிகங்களின் தொடர்பாலயே இன்றைய ஐரோப்பிய நாகரிகம் பிறந்தது இந்திய நாகரிகத்திலும் பல்வேறு நாகரிகங்களின் சாயலைக் காணலாம் . நாகரிக மக்களின் தொடர்பின்றி உலகின் ஏதோ ஒரு மூலையில் தனித்து வாழ்கின்ற மக்களிடம் நாகரிகம் தோன்றவில்லை என்பதும், நிலையான நாகரிக வாழ்க்கை தோன்ற வேண்டுமானால் அதற்குரிய இயற்கைச் சாதனங்களுடன் ஓரளவேனும் நாகரிக மடைந்துள்ள மக்கள் கூட்டத்தினரின் தொடர்பும் செல்வாக்கும் பெரிதும் தேவை என்பது நன்கு புலப்படுகிறது இவ்வாறு ஒரு நாகரிகமானது தோன்றி வளர்வதற்குத் தக்கதொரு புறச் சூழ்நிலையுடன் நல்ல அகச் சூழ்நிலை யும் தேவை என்பது உண்மையாகும் . இந்த நூலில் மனிதன் தோன்றிய காலம் முதல் கி .பி. 1453-ம் ஆண்டு வரை குறிப்பிட்ட சில நாடுகளில் தோன்றி வளர்ந்த நாகரிகத்தின் அகக் கூறுகளும் , புறக்கூறுகளும், பற்றி விரிவாக விளக்கப்பட்டுள்ளன.

## 2. பழைய கற்காலம்

மனித இன வரலாற்றில் கற்களை ஆயுதங்களாகப் பயன்படுத்திய காலப்பகுதி வரலாற்றில், வரலாற்றுக்கு முற்பட்ட காலம் (Prehistoric age) என்றும், வரலாற்று அண்மைக்காலம் (Proto-historic age) என்றும், இரண்டாகப் பிரிக்கப்பட்டுள்ளது. இவைகளில் வரலாற்றுக்கு முற்பட்ட காலத்தினை பழையகற்காலம் (Old stone age) என்றும், புதிய கற்காலம் (New stone age) என்றும் அவர்கள் பயன்படுத்திய கற்கருவிகளின் அடிப்படையில் பிரிக்கப்பட்டுள்ளது . இந்தப் பரிவுகள் மனிதனின் தொன்மை . தொழிலறிவு பண்பாடு ஆகியவற்றின் அடிப்படையில் பிரிக்கப்பட்டுள்ளன. கற்காலத்தில் மனிதன் முதன் முதலில் கற்கரு விகளைப் பயன்படுத்தித் தன் சேவைகளையும் 'தன்மையையும் பாதுகாத்துக் கொண்டான் . உலக வரலாற்றில் கற்காலம் எல்லா நாடுகளிலும் ஒரே காலத்தில் தோன்றவில்லை . இக்காலம் இடத்திற்கு இடம்

காலத்தால் மாறுபட்டு காணப்படுகிறது . ஆனால் மேற்கு ஐரோப்பாவில் குறிப்பாக பிரான்ஸில் கண்டுபிடிக்கப்பட்ட கற்காலத்தின் தன்மைகளே உலகின் பிற பகுதிகளிலும் இருந்தன என்பது தொல்லியல் அறிஞர்களின் கருத்தாகும்

**கற்காலத்தைப் பற்றிய அறிஞர்களின் ஆய்வு**

கற்காலத்தைப் பற்றி முதன் முதல் இங்கிலாந்து நாட்டின் அறிவியல் அறிஞர் சர்ஜாண்லூபெக் (Sir John Lubback) என்பவர் ஆ ராய்ந்தார். இவர் வெண்கலக் காலம் , இரும்புக்காலம் ஆகிய இரண்டு காலங்களை விட கற்காலம் மிகுந்த நீண்ட காலங்களைக் கொண்டது என்று கண்டறிந்தார் . 1839-ல் ஜேக்கஸ் பவுச்சர்டி பெர்த்ஸ் (Jaques Boucher de Perths) என்பவர் பிரான்ஸ் நாட்டில் அபிவில்லி (Abbeville) என்ற பகுதியில் பழைய அகற்காலத்தில் நெருப்பு பற்றவைக்க பயன்படுத்திய சிக்கி முக்கி கல்லைக் (flints) கண்டு பிடித்தார். 1929-ல் சீனாவில் சோ கோ டீன் (chou How Tien) என்ற இடத்தில் கண்டு பிடிக்கப்பட்ட ஒரு மண்டையோடு கி .மு. பத்துலட்சம் ஆண்டுக்கு முன்புடையதாகக் கருதப்படு கிறது . 1911-ல் இங்கிலாந்து நாட்டிலுள்ள சுசக்ஸ் , பிரான்ஸ் நாட்டிலுள்ள செல்லஸ் , செயின்ட் அச்சுல் (Susses, Cholles, St.Acheul) ஆகிய பகுதிகளில் கண்டுபிடிக்கப்பட்டதொல் பொருட்களிலிருந்து அவை கி . மு. 1,25,000 ஆண்டுகளுக்கும் 75,000 ஆண்டுகளுக்கும் இடைப்பட்டவையாகக் கருதப் படுகிறது.

1907-ல் ஜெர்மனியிலுள்ள ஹிடல்பர்க் (Heidelberg) என்ற இடத்தில் வாழ்ந்த மனிதன் கி .மு. மூன்று லட்சம் ஆண்டைச் சேர்ந்தவன் என்று கணக்கிடப்பட்டுள்ளது . மேலும் டேனிஷ் நாட்டு தொல்லியல் அறிஞர்கள் கற்காலங்களின் தன்மைகளை வகுத்துள்ளனர். அவர்களில் முக்கியமானவ ர்கள் ஜே . கிறிஸ்டியான், தாம்சன், ஆஸ்முசன் வொர்சே (J. Christian, Thomsan. J.Asmussen worsaae) ஆகியோர் ஆவார் . இந்த அறிஞர்களின் கருத்து பிற்கால அறிஞர்களாலும் ஏற்றுக் கொள்ளப்பட்டது

**பழைய கற்காலம்**

**பழங்கற்கால மனிதர்கள்**

ஆதி மனிதர்களைப் பற்றிய உண்மைகளை தொல்பொருள் ஆராய்ச்சியாளர்களே முதன் முதலில் கண்டு வெளியிட்டார்கள் அவர்கள் முதன் முதலாகக் கண்டு பிடித்த ஆதி மனிதனின் எலும்புக்கூடுகள் மத்திய ஆப்பிரிக்காவிலுள்ள தங்கனிகா (Tanganyika) பகுதியில் கிடைத்தன. அந்த மனிதனின் மண்டை ஓட்டுப்பகுதி ஒன்றும், தாடை எலும்பு ஒன்றும், அவன் பயன் படுத்திய ஒரு சில கற்கருவிகளும் அங்கே கிடைத்தன . வேதியல்

முறைப்படி அவற்றின் காலத்தைக் கணக்கிட்ட போது அவை பதினேழு லட்சம் ஆண்டுகளுக்கு முற்பட்டவை என்பது தெரியவந்தது . பழங்கற்கருவிகளைப் பயன்படுத்திய இந்த மனிதர்கள் நன்கு நிமிர்ந்து நடந்தனர் . அவர்களுக்கு ஜின்ஜான்த்ரோப்ஸ் பாய்ச்சி (Jinjanthropus boisei) என்ற பெயர் சூட்டப்பட்டது . சில பழங்கற்கால மனிதர்கள் வருமாறு :

**A) பீகிங் மனிதன்**

1929-ல் இளம் சீன தொல்லியல் நிபுணரான பெய் (W.C.Pei) என்பவர். சீனத் தலைநகர் பீகிங்கிலிருந்து 37 மைல் தொலைவிலுள்ள சோ கோ டீன் என்ற இடத்தி ல் மிகப் பழமையான மனித மண்டை ஓட்டைக் கண்டுபிடித்தார் . இதன் அருகில் தீ பற்ற வைத்ததற்கான தடயங்களும் , பல கற்கருவிகளும் கண்டுபிடிக்கப்பட்டன . இவை 'முந்திய பிலிசுடோசின் ' (Early Pleistoncente) காலத்தைச் சேர்ந்தவை என்று கணிக்கப்பட்டது. இந்த பீகிங் மனிதனே நமக்கு கி டைத்த சான்றுகளின் அடிப்படையில் மிகப் பழைய மனிதன் என்று கருதப்படுகிறான் . பீகிங் மனிதர்களுக்கு சினாந்ரோபிஸ் பீகினென்ஸிஸ் (Sinanthropus Pekinensis) என்ற பெயர் தரப்பட்டுள்ளது

**B) பில்ட்டவுண் மனிதன்**

1911-ல் இங்கிலாந்தைச் சேர்ந்த டாசன் , வுட்வோர்ட் (Dawson and Wood ward) ஆகியோர் இங்கிலாந்தில் சுசெக்ஸ் என்ற இடத்திற்கு அருகே உள்ள பில்ட்டவுண் என்ற இடத்தில் மனிதனின் பலபகுதிகளைக் கண்டுபிடித்தனர் . இந்த மனிதன் பில்ட்டவுண் மனிதன் அல்லது 'தோன்று மனிதன் ' (Dawn man) என்று அழைக்கப்படுகிறான் . இந்த மனிதனின் காலம் கி .மு. பத்து ல ட்சம் ஆண்டிலிருந்து ஒரு லட்சத்து இருபத்தைந்தாயிரம் ஆண்டு வரை கணக்கிடப் பட்டுள்ளது

**C) ஜாவா மனிதன்**

1891-ல் ஜாவா நாட்டில் மனித மண்டை ஓடு , இரண்டு பற்கள் ஒரு தொடை எலும்பு ஆகியவை கண்டுபிடிக்கப்பட்டன . இந்த மனிதன் உயரம் 5அடி 6 அங்குலம். இவன் மனிதக் குரங்கு போன்றே காட்சியளித்தான் மனிதனுக்கும் , சிம்பான்சி குரங்குக்கும்ட (Chimanze) இடைப்பட்ட நிலையிலுள்ள மனிதனாகக் கருதப்படுகிறான் . இம் மனிதனின் பெயர் பிதிகாந்த் ரோபஸ் ஏரக்டஸ் {Pithecanthropus Erectus) என்பதாகும்.

**D) ஹிடல்பர்க் மனிதன்**

1907-ம் ஆண்டு ஜெர்மனியிலுள்ள ஹிடல்பர் க்கில் மனிதனின் தாடை பற்களுடன் மண்டை ஓடு கண்டுபிடிக்கப்பட்டது. இந்த பற்களை ஆராய்ந்த பார்த்ததில் அது தற்கால மனிதனின் பற்களைப் போன்றே காணப்படுகிறது . இந்த லட்சம் மூன்று மனிதன் கி.மு ஆண்டைச் சேர்ந்தவன் என்று மதிப்பிடப்பட்டுள்ளது

**E) நியாண்டர்தால் மனிதன்**

1857-ல் ஜெர்மனியிலுள்ள டசில்டார்ப் (Dusseldrf) அருகிலுள்ள நியாண்டர்தால் என்ற இடத்தில் கண்டுபிடி க்கப்பட்ட மனிதனின் எஞ்சிய பகுதி களிலிருந்து அவன் வலிமையான தாடையும் , நீண்ட நெற்றியும் , வலிமையான பற்களையும் கொண்டவனாக இருந்தான் என்று கண்டுபிடிக்கப்பட்டுள்ளது இந்த மனிதன் குட்டையாக அதாவது 5 அடி 3 அங்குலமே இருந்தான். இவன் குகைகளில் வாழ்ந்து வந்தான் . கற்களினால் செய்யப்பட்ட ஆயுதங்களைப் பயன்படுத்தி மிருகங்களை வேட்டையாடினான். மிருகங்களின் தோல்களை ஆடையாகப் பயன்படுத்தினான் . இவ்வகை நியாண்டர்தால் இனமனிதன் பெல்ஜியம் , பிரான்ஸ், ஸ்பெயின், பாலஸ்தீனத்திலுள்ள கலிலியோ கடற்பகுதிகள் ஆகிய இடங்களில் காணப்பட்டான் . நியாண்டர்தால் மனிதர்கள் 50,000 ஆண்டுகளுக்கு முன்பு வாழ்ந்தவர்கள் ஆவர்

**F) ரொடீஷிய மனிதன்**

1921-ம் ஆண்டில் ஆப்பிரிக்காவில்புரோக்கன் ஹில் (Broken Hill) என்ற இடத்தில் பண்டைய மனிதர்களின் எலும்புக்கூடுகள் கண்டுபிடிக்கப்பட்டன அவ்விடம் வாழ்ந்த மனிதன் ரொடீஷியமனிதன் என்று அழைக்கப்பட்டான் இவன் நியாண்டர்தால் மனிதனுக்கும், நவீனமனிதனுக்கும் இடைப்பட்ட மனிதனாக மானிடஇயல் வல்லுநர்கள் கருதுகிறார்கள். பிரான்ஸ் நாட்டில் கிரிமால்டி (Girimaldi) என்ற இடத்திலுள்ள குகைகளில் ஆதி மனிதர்களின் எலும்புக்கூடு கண்டுபிடிக்கப்பட்டுள்ளன . கிரிமால்டி மனிதர்கள் ஆப்பிரிக்கப் பழங்குடியினர் போன்று குட்டையாகவும் , கருப்பாகவும் இருந்திருக்க வேண்டுமென்று அறிவியலார் கருதுகின்றனர்

**G) குரோ மேக்னன் மனிதன்**

இந்த மனிதன் தான் தற்கால மனிதர்களின் முன்னோடியாகக் கருதப் படுகிறான் இந்த மனிதர்களின் எஞ்சிய பல சிதைந்த பகுதிகள் தெற்கு பிரான்சிலுள்ள டோர்டோன் (Dordogne) பகுதியில் உள்ள லாமெடலீன் (Lamadeleine) என்ற இடத்திலுள்ள செயற்கை

குகைகளில் (grotto) காணப்பட்டன. அவைகளை ஆராய்ந்து பார்த்ததில் , இந்தவகை மனிதன் 6 அடி உயரம் உடையவனாக இருந்தான் இவன் வலிமையான உடற்கட்டுடையவன் நியாண்டர்தால் மனிதர்களைப் போன்றே இந்த குரோமேக்னன் மனிதனும் குகைகளில் வாழ்ந்து வந்ததால் 'குகை மனிதன் ' (Caveman) என்று அழைக்கப்படுகிறான் இவர்கள் குகையிலேயே வாழ்ந்து அங்கேயே இறந்தனர்

தற்கால ஆராய்ச்சியின் படி இந்த குகை மனிதன் மத்திய ஆசியாவிலிருந்து ஆப்பிரிக்கா வழியாக ஐரோப்பா வந்தடைந்ததாகக் கருதப்படுகிறது . இவர்களது எஞ்சிய பகுதிகளை வைத்து (fossils) ஆராய்ந்த போது இந்த குரோமேக்னன் மனிதர்கள் நியாண்டர்தால் மனிதர்களுடன் ஐரோப்பாவில் ஆதிக்கம் கொள்வதற் காக பல நூற்றாண்டுகள் போராடி வந்ததாகத் தெரிகிறது . இவ்வாறு ஜெர்மனிக்கும் (நியாண்டர்தால்) பிரான்சுக்கும் (குரோமாக்னன்) இடையே ஏற்பட்ட போராட்டமானது மிகப்பழமை வாய்ந்தது! குரோமேக்னன் மனிதர்கள் ஹோமோ சேபியன்ஸ் (Homo Sapiens) வகையைச் சேர்ந்தவர்கள் . இவர்கள் தான் தற் கால நாகரிகத்தின் அடிப்படையை அமைத்துத் தந்தவர்கள் . இவர்கள் இன்றைக்கு ஏறக்குறைய 25,000 ஆண்டுகளுக்கு முன்பு வாழ்ந்தவர்கள் ஆவர்.

1991-ம் ஆண்டு இத்தாலிய - ஆஸ்திரிய நாடுகளின் எல்லைப் பகுதியில் உள்ள ஆல்ப்ஸ்மலைத் தொடர் பகுதியில் நன்றாகப் பாதுகாக்கப்பட்ட முழுமையான பழங்கற்காலமனிதர் ஒருவரின் உடல் கண்டெடுக்கப்பட்டது . இந்த உடலை உலக விஞ்ஞானிகள் ஆராய்ச்சி செய்து , அது கி.மு.4000 ஆண்டு காலத்தைச் சேர்ந்த உடல் என்று மதிப்பிட்டுள்ளார்கள்.

**பழைய கற்கால கருவிகள்**

பழங்கற்காலத்தில் மனிதன் இயற்கையாகக் கிடைத்த பெரிய கற்பாளங்களையோ, உருண்டை வடிவ கூழாங்கற்களையோ எடுத்து அவற்றிலிருந்து சில பெரிய சில்லுகளைப் (Flakes) பெயர்த்துக் கூரிய முனையாக்கிக் கருவிக ளாகப் பயன்படுத்தினான். இக்கருவிகள் கரடு முரடானவை இவை பொதுவாகப் பம்பர வடிவம் உடையவை அடிப்பகுதி குறுகியும் மேற்பகுதி திரண்டும் இக்கருவிகள் காணப்படுகின்றன. பல சில்லுகளைப் பெயர்த்து கற்கருவியாகப் பயன்படுத்தியதும் உண்டு. இதனை பட்டடைத் தொழில் நுட்பம் (Block –on Block Technique) என்று கூறுவர். இக்கருவிகள் இருபக்க ஓரங்களில் கூர்மையான அமைப்பைக் கொண்டிருந்தன .

இக்கருவிகள் வெட்டவும் சிதைக்கவும் சீவவும் பயன்படுத்தப்பட்டன. கருவிகளின் உருவ அமைப்பை வைத்தும் அவற்றைச் செய்ய எவ்வகைத் தொழில் நுட்பம் பயன்படுத்தப்பட்டது என்பதை வைத்தும் கற்கருவிகளுக்கு இக்கால தொல்லியல் அறிஞர்கள் பெயரிட்டனர் . மிகத் தொன்மையான நிலையில் கற்கருவிகள் பெரிய சில்லுகளிலிருந்து சில மாற்றங்களுடன் செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டதால் அவற்றை சில்லுக்கருவிகள் (Flaketools) என்றழைத்தனர். சில்லுகளிலிருந்து கருவிகளை செய்யாமல் பெரிய உருண்டை வடிவ மூலக்கற்களை கருவிகளாக உருவாக்கி பயன்படுத்தினான் எனவே இவ்வகைக் கருவி மூலக்கருவிகள் (Coretool) என்று கூறப்படுகின்றன இவ்வகைக் கருவிகள் ஆப்பிரிக்க ஐரோப்பிய நாடுகளிலும் , சீனா, பர்மா, ஜாவா ஆகிய பகுதிகளிலும் கிடைத்துள்ளன

கற்கருவிகளில் புதிய தொழில்நுட்பம் வளர ஆரம்பித்தது . சுரண்டுக் கருவிகள், துளைக்கருவிகள், சில்லுக்கருவிகள், வட்ட சில்லுக்கருவிகள், கைக் கோடாரி போன்ற கருவிகள் செய்யப்பட்டன. கற்கருவிகளைத் தவிர மரம், எலும்பு ஆகியவற்றிலிருந்தும் கருவிகள் செய்யப்பட்டன. பழைய கற்காலம் கடைசிப் பகுதியில் மனிதனின் தொழில் நுட்பத்திறன் பெருமளவில் வளர்ந்தது . பாலஸ்தீனத்தில் இருபக்கமும் கூர்மையுடைய பட்டைக் கத்திகள் (Blades) கண்டுபிடிக்கப்பட்டன. அப்பட்டைக் கத்திகள் நீண்ட சில்லுக் கருவிகளாகும். இருபக்க ஓரங்களும் மிகக் கூர்மையான வெட்டுப் பகுதியைக் கொண்டுள்ளன. இக்கருவிகளைச் செய்வதற்கு ஒரு தட்டையான கருங்கல் பயன்படுத்தப்பட்டது.

மேலும் பழங்கற்காலத்தின் கடைசிப் பகுதியில் புதிய கருவிகள் செய்யப்பட்டன. மீன்களைப் பிடிக்க கொக்கிகளும் , ஈட்டிமுனைக் கருவிகளையும் செய்தனர் . சிறிய நுண்ணிய கருவிகளை இக்காலத்தில் நுட்பமாகச் செய்யும் கலையை மனிதன் அறிந்தான். எலும்பினால் செய்யப்பட்ட கூர்முனைக் கருவிகள் , சிறு கத்திகள் ஆகியவை முக்கியமானவை

**பழைய கற்கால விலங்குகள்**

பழைய கற்கால முந்திய பகுதியில் யானை , நீர்யானை, காண்டா மிருகம் கொடுவாள் வடிவிலான பற்களையுடைய பூனை வகைகள் வாழ்ந்தன . மேலும் பல்வகைக் குதிரைகள் , மான்வகை, அயர்லாந்து காட்டுமான் (Elk), கடமான், நீண்ட கொம்புகள் கொண்ட காட்டெருதுகள், காட்டுப்பன்றி போன்ற விலங்குகளும் வாழ்ந்தன.

குகைவாழ் புலிகள் , காட்டுப்பூனை, சிறுத்தைப் புலி , ஒட்டகச்சிவிங்கி இனவகை போன்றவைகளும் வாழ்ந்தன . இன்னும் சிறிது காலத்துக்குப்பிறகு முடிகள் அடர்ந்த காண்டாமிருகம், குகைவாழ் கரடி , கொறிக்கும் சிறு விலங்கினங்கள் , யானையினப் புதைவடிவ விலங்குகள் , கத்தூரி மணமுடை ய எருது இனங்கள் வாழ்ந்தன . குளிர்மிகுந்த சூழல் ஏற்பட்ட பின்னர் சில விலங்கினங்கள் அழியத் தொடங்கின

**பழங்கற்கால மனிதனின் வாழ்க்கை நிலை**

பழங்கற்கால முதற்பகுதியில் நாடோடியாக ஓடியலைந்த மனிதன் முதன் முதலில் மலை அடிவாரங்களிலும் வாழ ஆரம்பித்தான் . அவர்கள் உபயோகித்த கருவிகளை வைத்து ஓரளவே அவர்கள் வாழ்க்கை நிலையைப் பற்றி அறிய முடிகிறது கற்கருவிகளைக் கொண்டு மனிதன் மரத்தைச் சீவவும் , வெட்டவும், இறைச்சியை வெட்டவும், தோலைச் சுரண்டவும் பயன்படுத்தினான். வேட்டையாடுதலே பழங்கற்கால மனிதனின் முக்கிய தொழில் ஆகும் . விலங்கின் தோல்களையும் மரப்பட்டைகளையும் மனிதன் ஆடையாக அணிந்து கொண்டான்

பழங்கற்கால இறுதிப்பகுதியில் மனிதன் குளிர் காலத்தில் தங்குவதற்கான கூடாரங்களை அமைத்துக் கொண்டான் . இக்கூடாரவீடுகள் மூங்கிலால் கட்டப்பட்டு விலங்கின் தோலால் முடப்பட்டிருந்தன . பின்னர் மனிதன் சமவெளிகளில் வாழ ஆரம்பித்தான். வேட்டையாடுதல் குறைந்து மனிதன் மீன் பிடிக்கும் தொழிலைச் செய்வதில் ஆர்வம் உடையவனாக இருந்தான் . பழங்காலத்தின் கடைசிப்பகுதியில் மனிதன் கலைகளில் நாட்டம் கொண்டான் கல்லில் சிலை செய்தல் , ஓவியம் வரைதல், செதுக்குகலை போன்றவற்றில் சிறந்து விளங்கினான்

**நெருப்பை பற்றிய அறிவு**

பழங்கற்கால மனிதனின் மிகப்பெரிய சாதனை தீயைப்பற்றி அவன் அறிந்து கொண்டதாகும். எரிமலையிலிருந்து வெளிவந்த தீப்பிழம்புகளி லிருந்து தீயைப்பற்றி மனிதன் அறிந்து கொண்டிருக்கலாம் என்ற மாபெரும் அறிவியல் மேதை டார்வின் கருதுகிறார். நியாண்டர்தால் மனிதன் அ ழிந்த பகுதிகளுக்கு அருகே எரிந்த எலும்புகளும், கரித்துண்டுகளும் கிடைத்துள்ளன. எனவே கி.மு. 40,000 ஆண்டுகளுக்கு முன்பே நெருப்பின் பயனை மனிதன் அறிந்து கொண்டான் என்று அறிகிறோம் . குரோமேக்னன் மனிதன் விளக்குகளை உபயோகித்திருந்தான் என்றும் அறியப்படுகிறது

மேலும் நெருப்பை அதிக குளிரான தட்பவெப்பநிலையிலிருந்து தன்னை காத்துக் கொள்ளவும், பயங்கரமான விலங்குகளிலிருந்து தன்னைக் காப்பாற்றிக் கொள்ளவும் , இருளிலிருந்து வெளிச்சத்தைப் பெறவும் பயன் படுத்திக் கொண்டான் . பொதுவாக நெருப்பை உருவாக்குவதற்கு சிக்கிமுக்கி கற்களே பயன்படுத்தப்பட்டன.

**பழங்கற்கால ஓவியம்**

கலைகளில் நாட்டம் கொண்ட பழங்கற்கால மனிதன் கல்லிலும் எலும்பிலும் பல வரைபடங்களை வரைந் ததுடன் குகைச் சுவர்களில் ஓவியங் களைத் தீட்டினான். வடக்கு ஸ்பெயின் நாட்டில் வாழ்ந்து வந்த சட்டாலா (Sautuola) என்பவர் 117 ஆண்டுகளுக்கு முன்னர் அல்ட்டமிரா (Altamira) என்ற தனது பண்ணைப் பகுதியில் ஒரு குகையை கண்டு பிடித்தார். அந்தக் குகையின் சுவர்களிலும், உள்கூரைப் பகுதியிலும் பல ஓவியங்கள் வரையப்பட்டிருப் பதைக் கண்டுபிடித்து, அதனைப் பற்றிய ஆராய்ச்சிக் கட்டுரை ஒன்றை 1880-ல் வெளியிட்டார். இந்த அல்ட்டமிரா ஓவியங்கள் கி.மு. 16,000 ஆண்டைச் சேர்ந்தது என்று நிரூபிக்கப்பட்டுள்ளது

குரோமேக்னன் மனிதர் மாபெரும் யானை (mammoths), ஒரு வகைக் கலைமான் (reindeers), குதிரைகள், காட்டுப்பன்றி, (boars) கரடி (Bears) ஆகிய விலங்குகளை ஓவியமாக வரைந்தார்கள். ஒரு வித விலங்குகளின் உடம்பில் அ ம்பு பாய்ந்ததைப்போன்ற ஓவியங்களும் காணப்பட்டுள்ளன . பிரான்ஸ் நாட்டில் லாசல் (Lausel) என்ற இடத்திலுள்ள குகையில் பழங்கற்கால ஓவியம் காணப் படுகிறது. மேலும் லூயி பீஜின் (Louis Begouen) என்பவர் பிரான்சில் ஏரிஜ் (Ariege) என்ற குகையில் வரையப்பட்ட மான் உருவங்களைக் கண் டுபிடித்தார். இவை மிகத்திறமையாக வரையப்பட்ட நேர்த்தியான ஓவியங்களாகும். எகிப்து, கிரீட், இத்தாலி, ஸ்பெயின் ஆகிய நாடுகளில் ஒரு குட்டையான பெண் ஓவியம் காணப்படுகிறது . செக்கோஸ்லோவேகியாவில் ஒரு குதிரை, மான் மற்றும் பெரியவகை யானை உருவங்கள் கண்டெடுக்கப் பட்டுள்ளன . இவை கி.மு 30,000 வருடத்தைச் சேர்ந்தவை என்று கணக்கிடப் பட்டுள்ளது. இவ்வாறு பழங்கற்கால மனி தர்கள் ஓவியக்கலையிலும் சிற்பக் கலையிலும் திறமை பெற்றிருந்தார்கள்

**இடைக்கற்காலம்**

பொதுவாக பழைய கற்காலம் என்பது கி .மு. மூன்று லட்சம் ஆண்டிலிருந்து கி.மு. 16,000 ஆண்டு வரை என்று கருதப்படுகிறது இக்காலத்தின் இறுதிகட்டத்திலேயே

மனிதன் பல நிலைகளிலும் வளர்ச்சியடைந் தவனாகக் காணப்படுகிறான் . வாழ்க்கை நிலையிலும், கலை வளர்ச்சியிலும் குறிப்பிடத்தக்க முன்னேற்றம் ஏற்பட்டது . பழைய கற்காலத்திற்கும் புதிய கற்காலத்திற்கும் இடைப்பட்ட காலம் இடைக்க ற்காலம் (Mesolithic) எனப்படுகிறது. இக்காலம் கி .மு. 16,000 முதல் கி .மு.7,000 ஆண்டுக்கு இடைப்பட்ட காலமாகக் கருதப்படுகிறது.

இந்த இடைக்கற்காலத்தில் கடுங்குளிர் மறைந்து ஈரப்பதம் தோன்றியது . பல்வகைக் காட்டு மரங்கள் செழிப்பாக வளர்ந்தன . புதிய பண்பாடுகள் தோன்றின . மக்கள் தட்டையான ஈட்டிகளை எலும்புகளிலிருந்தும் மான் கொம்புகளிலிருந்தும் செய்தனர். இவைகளுடன் வண்ணம் தீட்டப்பட்ட கூழாங் கற்கருவிகளையும் பயன்படுத்தினர். நுண்ணிய கற்கருவிகளும் இக்காலத்தில் பயன்பாட்டிற்கு வந்தன . இவை 'குட்டையான சிக்கிமுக்கி கற்கருவிகள் ' (Pygmy flints) எனப்பட்டது. வரி வடிவ அமைப்பில் இவ்வகை நுண்கருவிகள் செய்யப்பட்டன . இக்கருவிகள் மரத்தாலான குச்சிகளிலோ எலும்புகளிலோ செருகிப் பயன்படுத்தினர்

மான் கொம்பால் செய்யப்பட்ட சம்மட்டி, கோடாரிகள், வாய்ச்சிகள் போன்றவை இவர்களின் குறிப்பிடத்தக்க கருவிகளாகும் . இவர்கள் கருவிகளை மிகவும் நேர்த்தியாகவும் கூர்மையாகவும் செய்து பயன்படுத்தினர். கத்தி, குத்துவாள், தூண்டில், ஈட்டி, முனைக்கருவிகள் போன்றவை எலும்புகளால் செய்யப்பட்டன . இந்த இடைக்கற்கால மக்கள் கடல்வாழ் உயிரினங்களை உணவாகக் கொண்டனர் . வேளாண்மை செய்யவும் மக்கள் முயற்சித்தன ர் என்று கருதப்படுகிறது . இறந்தவர்களைப் புதைக்கும் பழக்கம் இக்காலத்தில் தோன்றியது . நாய் வீட்டு விலங்காக வளர்க்கப்பட்டது . மட்கலங்கள் செய்ய அறிந்து கொண்டனர் . நீள்வட்ட வடிவக் குழிகளை வெட்டி அதன்மீது கூம்பிய வடிவில் மரத்துண்டுகளை அமைத்து புதர் குச்சிகள் ஆகியவற் றைப் பரப்பி மண்ணால் பூசிய குடிசைகளில் இம்மக்கள் வசித்தனர். இவர்களே புதிய கற்காலத்தின் முன்னோடிகள் ஆவர்

### புதிய கற்காலம்

புதிய கற்காலம் என்பது வரலாற்றுக்கு முற்பட்ட காலத்தின் வளர்ச்சி யடைந்த காலப்பிரிவினைக் குறிக்கும் புதியகற்காலம் என்பது கி .மு. 7000 ஆண்டுக்கும் கி .மு. 5000 ஆண்டுக்கும் இடைப்பட்ட காலத்தைக் குறிக்கிறது. புதிய கற்காலத்தின் முடிவில்

தான் உலோக காலம் தோன்றியது . புதிய கற்காலத்தில் மக்கள் கரடுமுரடான கற்கருவிகளை விட்டுவிட்டு வழவழப்பான கற்கருவிகளைத் தயாரித்தனர் . அக்கருவிகளின் பயன்பாட்டுப் பகுதி (Working edge) கூர்மையாக்கப்பட்டது. புதிய கற்கால மனிதன் இந்த மேம்பட்ட கருவிகளை பயன்படுத்தியதுடன் நாகரிக வளர்ச்சியடைந்த சில தொழிற் கூறுகளையும் அக்காலத்தில் அறிந்திருந்தான் . தொல் பழங்காலத் தின் திருப்பு முனை என்று இப்புதிய கற்காலத்தைக் கூறலாம்

**புதிய கற்கால தடயங்கள்**

புதிய கற்காலத்தைச் சேர்ந்த சமையற்கூடங்களின் கழிவுப் பொருள் குவியல்கள் பிரான்ஸ், சார்டீனியா, போர்ச்சுக்கல், பிரேசில், ஜப்பான், மஞ்சூரியா ஆகிய நாடுகளில் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. முக்கியமாக டென் மார்க்கில் அதிகமாக காணப்படுகின்றன . சிப்பிகள், நிலம் மற்றும் க டலில் வாழ்ந்த விலங்குகளின் எலும்புகள் , கொம்புகளில் செய்யப்பட்ட ஆயுதங்கள் , கருவிகள், உடைந்த மட்பாண்டங்கள் , பாதி எரிந்த நிலையிலுள்ள கரிக்கட்டைகள், சாம்பல்கள் ஆகியவை கண்டுபிடிக்கப்பட்டன இவைகள் பெரிய சமையற் கூடங்களாக (Kitchen-middens) இருந்திருக்கலாம் என்று நம்பப்படுகிறது.

மேலும் 1854-ம் ஆண்டில் ஸ்விட்சர்லாந்து நாட்டில் மழை வறண்டு போனதால் பல ஏரிகள் வற்றி விட்டன. அப்போது வரலாற்றுக்கு முந்திய கால வரலாற்றில் புதிய அத்தியாயம் தொடங்கியது . ஆம், பல சிறிய சிறிய கிராமங்கள் அமைந்திருந்த சுவடுகள் தெரிந்தன . இந்த கிராம வாழ் விடங்கள் நிலப் பரப்புடன் சிறிய பாலத்தால் இணைக்கப்பட்டு இருந்தன . அந்த பாலங்களின் அடித்தளங்கள் சில இன்றும் காணப்படுகின்றன. இந்த அழிவுகளின் மத்தியில் தான் வழவழப்பான கல்லினால் செய்யப்பட்ட ஆயுதங்கள் கண்டுபிடிக்கப் பட்டன. இதுவே புதிய கற்காலத்தைக் குறிப்பதாகும். இதேபோல எஞ்சிய அழிவுப் பொருட்கள் மிசிசிப்பி நதிப் பகுதிகளிலும் கண்டெடுக்கப்பட்டுள்ளன. பிரான்ஸ், சீனா ஆகிய நாடுகளிலும் புதிய கற்கால தடயங்கள் கண்டுபிடிக்கப் பட்டுள்ளன.

புதிய கற்கால மனிதன் வாழந்த தடயங்கள் இந்தியாவில் கோதாவரி ஆற்றுக்குத் தெற்கே வடகர்நாடகப் பகுதி யில் பெருமளவில் கிடைத்துள்ளன தமிழ்நாட்டில் சேலம் , தர்மபுரி, வட ஆர்க்காடு மாவட்டங்களில் அதிக அளவில் புதிய கற்கால மனிதன் பயன்படுத்திய கற்கருவிகள் கிடைத்துள்ளன. இக்கருவிகளுள் கோடாரி குறிப்பிடத்தக்க ஒன்றாகும்.

**புதிய கற்காலத்தின் முக்கிய அம்சங்கள்**

புதிய கற்கா லத்தில் மட்பாண்டங்கள் செய்தல் , சக்கரத்தின் உபயோகம் , பயிற்சுழற்சி முறையிலான விவசாயம், வீடுகட்டுதல், கருவிகளை பளபளப் பாக்குதல், பெரிய அளவிலான விவசாயம் , வில்அம்புவின் உபயோகம், நூல் நூற்றல், நெய்தல் ஆகியவை சிறப்பு அம்சங்களாகக் கருதப்படுகின்றன அவைகளை விரிவாகக் காணலாம்

**1) விவசாயம்**

புதிய கற்காலத்தில் மனிதன் வேட்டையாடியதிலிருந்து விவசாயத் திற்கு மாறியதும், நவீனகாலத்தில் விவசாயத்திலிருந்து தொழிற் துறைக்கு மாறியதும் மனிதகுல வரலாற்றில் தோன்றிய இரண்டு பெரிய புரட்சிகளாகும் விவசாயத்தின் கண்டு பிடிப்பு புதிய கற்காலத்தின் சிறப்பு அம்ச மாகக் கருதப்படுகிறது. புதிய கற்கால மக்கள் முதலில் விதைகளை சிறிய குழிகள் தோண்டி அதில் இட்டனர் . பின்னர் விதைகளை வரிசைவரிசையாக நடக்கக் கற்றுக் கொண்டனர் . கோதுமை, பீன்ஸ், பார்லி, ஓட்ஸ் போன்ற உணவுப்பயிர்களை பயிரிட்டனர் . இவைதவிர சுமார் 120 வகையான பழங்கள் பயிரிட்டனர். சில பயிறு வகைகளும் சாகுபடி செய்தனர்

மரத்தினால் செய்யப்பட்ட கலப்பைகளைக் கொண்டு , இரண்டு காளை மாடுகளைப் பயன்படுத்தி நிலங்களை உழுவதற்கு அறிந்திருந்தனர் . இது வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த கண்டுபிடிப்பாகும் . விளைந்த தானியங் களை அரைத்து உண்பதற்கும் அறிந்திருந்தார்கள் . மேற்கு ஆசிய நாடுகளில்தான் மனிதன் முதன் முதலில் பயிர் செய்தான். இவ்வாறு புதிய கற்கால மக்கள் உணவை உற்பத்தி செய்யக் கற்றுக் கொண்டனர்.

**2) பழக்கப்பட்ட வீட்டு விலங்குகள்**

புதிய கற்கால மனிதன் நாகரிகத்தின் இன்னொரு அடிப்படையும் ஏற்படுத்தினான். அதுதான் விலங்குகளைப் பழக்கப்படுத்தியதும் அவைகளை இனவிருத்தி செய்ததுமேயாகும். வீட்டு விலங்குகளாகப் பழக்க முதலில் நாய் , ஆடு ஆகிய விலங்குகளை கற்கால மக்கள் தேர்வு செய்தனர் . பின்னர் தங்கள் வீடுகளில் குரங்குகள் மற்றும் கிளிகளை வளர்த்தனர் . கொடிய விலங்குகளைக் கூட பழக்கப்படுத்தினர். பன்றிகளையும் நரிகளையும் கூட வளர்த்தனர். பழங் கற்காலத்தில் உணவுக்காக மட்டுமே பயன்பட்ட குதிரை, புதியகற்காலத்தில் மனிதனால் பழக்கப்பட்டு பல வழிகளில் உதவி செய்தது . மனிதன் தன் ஓய்வு நேரம் , சக்தி, வசதி

ஆகியவைகளை நல்லமுறையில் பிரயோஜனப்படுத் திக் கொண்டான் . பசுமாட்டின் பாலை உணவுக்காக பயன்படுத்திக் கொண்டான் புதிய கற்கால மனிதன்

3) புதிய கற்கால தொழில் நுட்பம்

புதிய கற்கால மனிதன் கருவிகள் மற்றும் ஆயுதங்கள் செய்வதில் புதிய தொழில் நுட்பத்தைக் கற்றுணர்ந்தான் கப்பிகள் , நெம்புகோல், மாவரைக்கும் கல் இயந்திரம், குத்தூசி, சமணம் அல்லது இடுக்கி, கோடாலி, மண்வெட்டி, ராரி, உளி, நூல் சுற்றும் கதிர், நெசவுத்தறி, அறுவடை செய்யும் வளைந்த கத்தி, ரம்பம், மீன்கொக்கிகள், வழுக்கி ஓடும் உருளைகள், வாசிகள், புரோக்கள், குண்டூசி (pul loys, levers, grindstones, awls, pincore, aNGS, hoon, ladderschisels, spindles, looms, sickles, saws, fish hooks, states, needlo, broches, and ping) ஆகியவைகளை மிக நேர்த்தியாக செய்திருந்தார்கள்

சக்கரங்கள் (wheels) செய்யப்பட்டன இது மனித நாகரிகம் மற்றும் தொழிற்துறை சம்பந்தப்பட்ட முக்கிய கண்டுபிடிப்பா கும் கற்களினால் ஆயுதங்கள் மிகவும் வழவழப்பாக செய்யப்பட்டன நெருப்பை உண்டாக்கும் சிக்கிமுக்கி கற்கள் அதிக அளவில் உபயோகப்படுத்தப்பட்டன . மான் கொம்பில் செய்யப்பட்ட ஒருவகை கடப்பாறை (Picks of deerhorn) ஐந்து இங்கிலாந் திலுள்ள பிராண்டன் என்ற இடத்தில் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. அவைகளை உபயோகித்த மனிதனின் கைரேகை கூட அதில் காணப்படுகிறது. பெல்ஜியத்தில் சுரங்கம் ஒன்றில் புதிய கற்கால மனிதரின் எலும்புக்கூடு கிடைத்துள்ளது . சுரங்கவேலை செய்தபோது மண்சரிந்து இவர்கள் இறந்திருக்கக்கூடும், சுரங்கத்தொழில் நுட்பமும் புதியகற்கால மனிதர் அறிந்திருந்தனர்.

4) நெசவுத் தொழில்

தையல் ஊசிகளையும் குண்டூசிகளையும் கண்டுபிடித்த புதிய கற்கால மனிதன் நெசவுத் தொழிலையும் அறிந் து கொண்டான் . விலங்குகளின் தோலை யும், உரோமங்களையும் ஆடைகளா க உபயோகித்த மனிதன் ஆட்டுரோமத்தி லிருந்து உடைதைக்க கற்றுக்கொண்டான் . இதிலிருந்து தான் நாகரிக உடைகள் தோன்ற ஆரம்பித்தன. செடிகளின் சாருகளிலிருந்து சாயங்கள் செய்யப்பட்டு பலவிதமான வண்ண ஆடைகள் செய்யப்பட்டன. விலங்குகளின் தோலில் துளையிடப்பட்டு பின்னல் முறையில் (plaited) ஆடைகள் செய்யப் பட்டன . நூலினால் தைப்பது பெண்களின் கலையாகவே மாறியது. கல்லினால் செய்யப்பட்ட நூல் சுற்றும் கதிர் புதிய கற் கால

நாகரிக வளர்ச்சியை பறைசாற்று கிறது. முகம்பார்க்கும் கண்ணாடி கூட உபயோகிக்கப்பட்டது.

**5) மட்பாண்டங்கள்**

மட்பாண்டங்கள் செய்ய ஆரம்பித்தது எப்போது என்று தெரிய வில்லை . பழங்கற்கால கல்லறைகளில் மட்பாண்டங்கள் காணப்பட்டன. புதிய கற்கால மனிதர்கள் மட்பாண்டங்களைச் செய்யக்கற்றுக் கொண்டனர் . ஆறு, குளம், நீர்த்தேக்கம் ஆகிய பகுதிகளின் கரைகளில் கிடைத்த களிமண்ணைக் கொண்டு பானைகள் செய்யக் கற்றுக் கொண்டனர் மெசபட்டோமியா, ஆசியா மைனர், மற்றும் மத்திய தரைக்கடல் பகுதியில் வாழ்ந்த மக்கள் உயர்ந்த வகை மட்பாண்டங்களைச் செய்ய கற்றிருந்தனர். வட்டமான அடிப்பகுதியைக் கொண்ட குடுவைகள் செய்தனர். அந்தக் குடுவையின் மேற்பகுதியில் சுடுவதற்கு முன்னர் குறியீடுகளை பொறித்தனர் . அக்குறியீடுகள் கோடுகளாகக் காணப்படுகின்றன. இத்தகைய மட்பாண்டங்கள் ஆப்பிரிக்கா ஸ்பெயின் , மொராக்கோ ஆகிய பகுதிகளில் கிடைத்துள்ளன

சீனா, ருமேனியா, ஈரான் ஆகிய நாடு களின் புதிய கற்கால மக்கள் பயன் படுத்திய மட்பாண்டங்கள் ஏறக்குறைய ஒன்று போல் காணப்படுகின்றன சீனாவிலுள்ள தா-ஓ (Tao-ho) என்ற ஆற்றின் கரையில் புதிய கற்கால மட்பாண்டங்கள் கிடைத்துள்ளன அவை சுடுவதற்கு முன் செய்தவை மட்பாண்டங்கள் சுடுவதற்கு முன் அவற்றின்மீது சிவப்பு கருப்பு ஆகிய வண்ணங்கள் பூசப்பட்டுள்ளன . மட்பாண்டங்கள் செய்வது ஒரு தொழிலாக மட்டும் இல்லாமல் அது ஒரு கலையாகவே பின்பற்றப்பட்டது

**6) கட்டிடங்கள்**

புதிய கற்கால மனிதன் தான் தங்கி வாழ்வதற்கு ஆற் றின் கரைகளையும் , குளங்களின் அருகில் உள்ள பகுதிகளையும் தேர்ந்தெடுத்தான். முதலில் அப்பகுதிகளில் வீடுகளை குழிகள் (Pit) போன்று அமைத்து வந்தனர் . அவ்வகை வீடுகள் வட்டம் , நீண்டவட்டம், சதுரம் ஆகிய வடிவில் அமைக்கப் பட்டன . அதற்கு மண்சுவர்கள் மண்செங்கற்களாலான சுவர்கள் எழுப்பி உள்ளனர். இந்த கூரைப்பகுதியைத் தாங்கிநிற்க எடுக்கப்பட்ட கால்ஊன்று குழிகள் (Post holes) கிடைத்துள்ளன. மூங்கிலால் செய்யப்பட்ட தட்டியின் மேல் மண் பூசப்பட்டு சுவர்களாகப் பயன்படுத்தப்பட்டன . தரைப் பகுதி நன்றாக மொழுகப்பட்டி ருந்தது. சில இடங்களில் கருங்கற்க ள் தரையில் பாவப்பட்டிருந்தன. கட்டிட வேலைக்கான பொருட்கள் சக்கரங்கள் மூலமாகவும் ,

கப்பிகள் மூலமாகவும் ஒரு இடத்திலிருந்து மற்றொரு இடத்திற்கு எடுத்துச் செல்லப்பட்டன.

**7) பிற அம்சங்கள்**

புதிய கற்கால மக்கள் இறப்புக்கு பிறகு வாழ்வு உள்ளதாக நம்பினர் இறந்தவர்களைப் புதை க்கும் பழக்கம் இருந்தது . புதிய கற்காலத்தின் பிற்பகுதியில் கல்லரைமீது மண்டபம் போ ன்ற நினைவுச் சின்னங்கள் எழுப்பப பட்டன. ஆனால் பழைய கற்கால மக்களைப் போல புதிய கற்கால மக்கள் கலையில் சிறப்புபெற்று விளங்கவில்லை. இவர்களது ஓவியம் எங்கும் கிடைக்கவில்லை. புதிய கற்கால மக்கள் மத நம்பிக்கை கொண்டிருந்தனர் . அவர்கள் மத்தியில் பல புராணக் கதைகள் (myths) நிலவிவந்தன. சந்திரன் மூலம் பூமியில் பல நிகழ்ச்சிகள் நடப்பதாக நம்பினர் . சூரியனைப் பற்றிய பல புராணக் கதைகள் நிலவின

புதிய கற்கால மக்களிடம் அறிவியல் அறிவும் காணப்பட்டது மண்டை ஓட் டை ஒருவகை துளையிடும் ரம்பத்தால் திறந்து சிகிச்சை செய்யும் முறை (trephine) இருந்துள்ளது தெரிய வருகிறது . பல எலும்புக் கூடுகளை ஆராய்ந்தபோது உடைந்த எலும்புகளை ஒன்று சேர்த்து சிகிச்சை செய்யப்பட்டதாகவும் தெரிய வருகிறது . இவ்வாறு புதிய கற்கால மக்கள் உலோகம் , எழுத்துமுறை, அரசாங்க முறை ஆகியவைகளை மட்டும் அல்லாமல் பிற வாழ்க்கை முறை அனைத்தையும் தெரிந்து கொண்டு பிற்காலத்தில் தோன்றிய சிறப்பான நாகரிகங்களுக்கு அடித்தளம் அமைத்துச் சென்றனர்.

## உலோக காலம்

மனிதன் உலோகங்களைப் பற்றி எப்போது தெரிந்து கொண்டான் எப்படி தெரிந்து கொண்டான் என்பது பற்றிய முழுமையான உண்மைகள் , தெரியவில்லை. ஆனால் அவர்கள் விட்டுச் சென்ற பொருட்களை வைத்து ஆராயும்போது புதிய கற்காலத்தின் இறுதியில் அதாவது கி .மு. 4000 ஆண்டில் உலோக காலம் தொடங்கியது என்று கூறலாம். செம்பு பயன்படுத்தப்பட்ட இக்காலத்தில் மக்கள் கல்லின் உபயோ கத்தை உடனடியாக விட்டுவிடவில்லை. இதனால் இக்காலத்தை ‘செம்புக் கற்காலம்' என்றும் கூறுவர். பின்னர் இரும்பைப் பயன்படுத்திய காலத்தை ‘இரும்புக்காலம்' என்பர். மனிதன் முதன்முதலாகப் பயன்படுத்திய உலோகமான செம்புக்கருவிகளும் , பொருட்களும் ஸ்விட்சர் லாந்திலுள்ள ரோபன்ஹாச ன் (Robenhausen) என்ற

பகுதியிலுள்ள ஏரி குடியிருப்புகளிலிருந்து (Lake-Dewellings) கண்டுபிடிக்கப்பட்டுள்ளது மேலும் எகிப்திலுள்ள படேரியன் (Badarian) குகைகளிலும் செம்பினாலான பொருட்கள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன

**செம்புகாலம்**

உலோக காலம் என்பது உலோகங்கள் கண்டுபிடிக் கப்பட்ட காலத்தி லிருந்து தொடங்கவில்லை. நெருப்பை உபயோகித்து உலோகங்களை மனிதன் தனது உபயோகப் பொருட்களாக மாற்றிய காலத்திலிருந்து தொடங்குகிறது . இக்காலத்தின் ஆரம்பத்தை கி.மு.4500 ஆண்டாக கருதலாம். மனிதன் பாறைகளின் மேல் நெருப்பை பற்ற வைத்து குளிர்காயும் போதோ அல்லது வேறு உபயோகத்தின் போது மண்ணிலுள்ள செம்புத் தாது உருகியதைக் கண்டான். பின் அதையே தனக்கு உபயோகமான கருவிகளாகவும், ஆயுதங்களாகவும் மாற்றியமைத்தான். ஆனால் இப்படி செய்யப்பட்டவை கரடு முரடாக இருந்தன. ஆனால் கி .மு.3500-ல் கிழக்கு மத்திய தரைக்கடல் பகுதியில் வாழ்ந்த மனிதன் உலோகங்களை தாதுப்பொருளிலிருந்து உருக்கி பிரித்தெடுக்கும் (smelting) கலையைத் தெரிந்து கொண்டான்

பின்னர் கி மு 1500-ம் ஆண்டுகளில் மனிதன் களிமண்ணால் செய்யப் பட்ட அச்சு அல்லது வார்ப்புகளில் உருக்கிய செம்புக்குளம்பை ஊற்றி குளிர வைத்து தனக்கு வேண்டிய கோடாலி , ஈட்டிமுனை போன்றவைகளைச் செய்து கொண்டான் இம்முறையில் மற்ற உ லோகங்களையும் உபயோகப்படுத்த ஆரம் பித்தான். இதுவே மனிதன் இந்த பூமியையும், நீர் மற்றும் காற்றையும் வெற்றி கொள்ள அடிப்படையாக அமைந்தது கிழக்கு மத்திய தரைக்கடல் பகுதியில் , இந்த செம்பு தாதுப்பொருட்கள் அதிகமாகக் கிடைத்ததால்தான் கி மு 4000-ம் ஆண்டுகளில் ஈளம் , மெசபடோமியா, எகிப்து (Elam, Mesopottomia, Egypt) ஆகிய இடங்களில் புதிய நாகரிகங்கள் தோன்றின என்று கருதப்படுகிறது.

**வெண்கல காலம்**

செம்பு உலோகம் மிருதுவாகவும் , வளையும்தன்மை (pliable) கொண்டதாகவும் இருந்ததால் போர் களில் உபயோகிக்க கூடிய அளவுக்கு கடினத்தன்மையுடைய கருவிகள் செய்ய முடியவில்லை . எனவே அதை கடினப்படுத்துவதற்கு வேறு உலோகத்துடன் உலோகக் கலப்பு (alloy) செய்ய வேண்டியதிருந்தது. எனவே செம்புடன் வெள்ளீயம் அல்லது துத்தநாகம் கலந்து (Tin or Zinc) வெண்கல உலோகத்தை (br onze)

உருவாக்கினான். இது மனிதனின் தேவைகளை பூர்த்தி செய்தது. இப்படிச் செய்யப்பட்ட வெண்கல உலோகம் கிரீட் தீவில் கி .மு. 3000-ம் ஆண்டில் உபயோகப்பட்டிருப்பது கண்டுபிடிக்கப் பட்டுள்ளது. கி.மு. 2000-ல் எகிப்திலும், டிராய் நகரத்திலும் வெண்கலம் உபயோகத்திலிருந்ததாக அறியப்படுகிறது.

இப்படி வெண்கல பொருட்கள் உபயோகிக்கப்பட்ட காலத்தை வெண்கல காலம் (Age of Bronze) என்று கூற முடியாது . காரணம் வெண்கலம் பல இடங்களில் உள்ள மக்களால் வெவ்வேறு காலங்களில் உபயோகிக்கப் பட்டது . எனவே வெண்கல காலத்தை கால நிர்ணயம் செய்வது கடினம் . மேலும் பின்லாந்து , வடக்கு ரஷ்யா , மத்திய ஆப்பிரிக்கா, தென்னிந்தியா, வடஅமெரிக்கா, ஆஸ்திரேலியா, ஜப்பான் ஆகிய நாடுகளில் மக்கள் கற்காலத்தி லிருந்து வெண்கல காலத்திற்கு வராமல் , நேரடியாக இரும்பு காலத்திற்கு (Age of Iron) வந்துவிட்டார்கள். ஏனெனில் இப்பகுதிகளில் வெண்கலமானது மதகுருமா ர்கள், உயர் குடியினர் , அரசர் ஆகியோர் உபயோகப்படுத்தும் ஆடம்பர உலோகமாகவே இருந்து வந்தது. அப்போது பொதுமக்கள் கற்களையே உபயோகித்து வந்தனர்

**இரும்புக்காலம்**

வெண்கலம் வலிமையாகவும், நீடித்து உழைக்கும் உலோகமாகவும் இருந்தது . ஆனால் அவற்றை உருவாக்கத் தேவைப்படும் வெள்ளீ யமும் துத்தநாகமும் தேவையான அளவு கிடைப்பது அரிதாக காணப்பட்டது . எனவே உலோக காலம் தொழிற்துறைக்கும், போருக்கும் தேவையான வேறொரு வலிமையான உலோகம் தேவைப்பட்டபோது மனிதனுக்கு கிடைத்த உலோகம்தான் இரும்பு ஆகும் . அதிக அளவில் கிடைத்த இரும்புத்தாது , வெண்கலம், செம்புக் காலத் துக்கு முன்பு ஏன் மனிதனுக்கு தெரியாமல் போய்விட்ட டது என்பது வரலாற்றில் உள்ள முரண்பாடு (anomaly) என்றே கருதலாம்

இரும்புத்தாதைக் கண்டுபிடித்த மனிதன் அவற்றை உருக்கி தனக்கு வேண்டிய கருவிகளைச் செய்து கொண்டான். எகிப்திய கல்லரை சிலவற்றில் பிரகாசமான இரும்பு பகுதிகள் (Meteoric Iron) காணப் படுகின்றன. சில பாபிலோனிய கல்வெட்டுகளில் இரும்பு மிக மதிப்புள்ள உலோகம் என்று குறிப்பிடப்பட்டுள்ளது. கி.மு.4000 ஆண்டைச் சேர்ந்த இரும்பை உருக்கும் வார்ப்புபட்டரை (Foundary) ஒன்று வடக்கு ரொடீசியாவில் கண்டுபிடிக்கப் பட்டுள்ளது.

மிகப்பழமையான, அடித்து உருவாக்கப்பட்ட (wrought iron) இரும்புக் கத்திகள் பாலஸ்தீனத்தில் ஜெரார் (Gerar) என்ற இடத்தில் கண்டுபிடிக்கப் பட்டுள்ளன . இவை கி.மு.1350-ம் வருடத்தைச் சேர்ந்தவை . இதற்கு ஒரு நூற்றாண்டு காலத்திற்கு பிறகு எகிப்தில் இரண்டாம் ரமசஸ் (Rameses II) காலத்தில் இரும்பு அறிமுகம் ஆனது . கி.மு.900-ல் மேற்கு ஐரோப்பாவிலுள்ள ஆஸ்திரியாவில் இரும்பின் உபயோகம் தெரிய வந்தது. இவ்வாறு இரும்பு உலகம் முழுவதும் பரவி உலகத்தையே வெற்றி கண்டது . இரும்புகாலத்தின் - தொடர்ச்சியே எகிப்திய , சுமேரிய, பாபிலோனிய நாகரிகத்தின் ஆரம்ப காலங்கள் ஆகும்.

இந்த உலோக காலத்தில் மனிதனின் வாழ்க்கை முறையிலும் பல குறிப் பிடத்தக்க மாற்றங்கள் ஏற்பட்டன . மக்களின் மத நம்பிக்கைகள் வளர்ந்தன . பெருங்கட்டிடங்கள் கட்டி தெய்வ வழிபாட்டு முறையுடனும் , சடங்குகள் நடத்தியும் வாழ்ந்தனர். இறந்தவர்களின் நினைவாக கற்சின்னங்க ள் அமைக்கப் பட்டன. ஈமப் பொருட்கள் அடங்கிய ஒரு பெரிய தாழி பெரும் பள்ளத்தில் வைத்து மணலால் மூடப்பட்டது. இதுவே 'முதுமக்கள் தாழி ' ஆகும். மேலும் இக்காலமக்கள் எழுதும் கலையிலும் ஓரளவு வளர்ச்சியடைந்தனர். பட எழுத்து முறையானது (Hieroglyphics) கி.மு.3600-ம் ஆண்டிலேயே சுமேரியா எகிப்து ஆகிய பகுதிகளில் வளர்ச்சியடைந்திருந்தது . அகரவரிசையின்படி எழுதும் முறை கி .மு.3000-ல் எகிப்தில் வளர்ச்சி யடைந்தது . பழங்கால எழுத்து முறை ஆரம்பித்த காலமே வரலாற்றின் ஆரம்பமாக கருதலாம்

## UNIT – 2

## மெசபட்டோமிய நாகரிகம்(MESOPOTAMIAN CIVILIZATION)

எகிப்திய நாகரிகம் போன்றே மெசபட்டோமிய நாகரிகமும் ஆற்று பள்ளத்தாக்கு பகுதிகளில் தோன்றிய நாகரிகமாகும். மெசபட்டோமியா டைக்ரிஸ், யூப்ரட்டிஸ் (Tigris, Euphrates) என்ற பாரசீக வளைகுடா பகுதியிலுள்ள இரண்டு ஆறுகளுக்கு இடைப்பட்ட பகுதியாகும். 'மெஸ்பாட்' என்ற சொல் லுக்கு இரு ஆறுகளுக்கு இடைப்பட்ட பகுதி என்று பொருள்படும். எனவேதான் இந்தபகுதியில் ஏற்பட்ட நாகரிகம் 'மெசபட்டோமிய நாகரிகம்' என்று அழைக்கப்படுகிறது. மெசபட்டோமியாவின் வடபகுதி அசிரியா என்றும் தென்பகுதி பாபிலோனியா என்றும் அழைக்கப்பட்டது . இங்குதான் ஒன்றன் பின் ஒன்றாக பல நாகரிகங்கள் தோன்றின. மெசபட்டோமிய நாகரிகம் என்பது சுமேரியர்கள், அக்காடியர்கள், பாபிலோனியர்கள், அசிரியர்கள் சுமோ ரைட்டுகள் , காஸைட்டுகள் போன்ற மக்கள் தோற்றுவித்த நாகரிகங்களின் இணைப்பாகும் . இவைகளில் சுமேரிய நாகரிகம், பாபிலோனிய நாகரிகம் அசிரிய நாகரிகம் ஆ கியவைகளை விரிவாக ஆராயலாம்.

**சுமேரிய நாகரிகம் (SUMERIAN CIVILIZATION)**

டைக்ரிஸ், யூப்ரட்டீஸ் நதிகளுக்கு இடையிலான மெசபட்டோ மியாவின் கீழ்பகுதிதான் பாபிலோனியா என்று அழைக்கப்பட்டது. இந்த பாபிலோனியாவில் சுமர், அக்காட் (Sumer, Akked) என்ற இரண்டு மாநிலங்கள் இருந்தன. இதில் சுமர் பகுதி மக்கள் சுமேரியர்கள் என்றழைக்கப்ட்டனர் அவர்களது நாகரிகமே சுமேரிய நாகரிகம் ஆகும்

கடுமையான ஆராய்ச்சிக்குப் பிறகும் கூட சுமேரியர்கள் எந்த இனத்தைச் சேர்ந்தவர்கள் என்பதையும் , எந்த வழியாக வந்தவர்கள் என்பதையும் அறிய முடியவில்லை. ஆனால் சுமேரியர் கள் செமட்டிக் பிரிவைச் சேராதவர்கள் என்று கூறப்படுகிறது. ( செமட்டிக் பிரிவு என்பது ஹீப்ரு . அராபிக், போனிசியன் அசிரியன் ஆகியோா் உட்பட்டது ) சுமேரியர்கள் மத்திய ஆசியா காகஸ் (Caucasus) அல்லது ஆர்மீனியா ஆகிய பகுதிகளிலிருந்து வட மெசபட்டோமியா வழியாக வந்திருக்கலாம் பெர்சிய வளைகுடா எகிப்து ஆகிய பகுதிகளிலிருந்து கூட வந்திருக்கலாம் மங்கோலியா கூட பூர்வீக இடம் என்று கருதலாம் இவர்கள் கிமு 4000க்கும் கி மு

3000க்கும், இடைப்பட்ட காலங்களில் பாபிலோனியாவின் கீழ்பகுதியில் வந்து குடியேறி இருக்கலாம்.

சுமேரிய மக்கள் உயரமாகவும், வாட்டசாட்டமாகவும் இருந்தார்கள் தாடி மீசை இல்லாமல் சுத்தமாக ம ளித்திருந்தார்கள் அருமையான உல்ல ன் நூலினால் நெய்யப்பட்ட ஆடையை அணிந்திருந்தார்கள் ஆண்கள் மேலாடை அணியும் பழக்கம் இல்லை மிகவும் வசதியாக வாழ்ந்தார்கள் . இவாகள் ஒவ்வொரு சமுதாயக் கூட்டங்களாக வாழ்ந்து நகர நாடு கள் உருவாகுவ தவதற்கு காரணமானார்கள் சுமேரியர்களின் இந்த நகர நாடுகளே நாகரிகத்தின் ஆரம்பமாக அமைந்தது . சுமேரிய நாகரிகம் வெள்ளத்தால் அழிக்கப்பட்டது என்பது அகழ்வாராய்ச்சி மூலம் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது

**சுமேரிய நாகரிகத்தின் வரலாற்றுப் பின்னனி**

சுமேரியாவிலுள்ள நி ப்பூர், கிஷ், உர் (Nippur, Kish, Ur) நகரங்களின் நாகரிகம் முறையே கி.மு. 5262, கி.மு. 4500, கி.மு. 3500 என்று வரலாற்றா சிரியர்களால் கால நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது சுமேரியாவில் ஆண்டு வந்த ஒரு சில அரசர்களைப் பற்றிய செய்தி நமக்குக் கிடைத்துள்ளது

சுமேரிய இனத்தி லிருந்து ஒரு பகுதி மக்கள் முதலாம் சர்கான் (Sargon) என்பவர் தலைமையில் அக்காட் (Akkad) ராஜ்யத்தை சுமேரியப் பகுதியிலிருந்து நூறுமைலுக்கு வடமேற்கில் அமைத்தனர். சுசா (Susa) வில் காணப்படும் சர்கானின் உருவம் கையில் ஆயுதம் ஏந்தியபடி கம்பீரமாக காட்சியளிக்கிறது. அரச பரம்பரையில் பிறக்காத சர்கான் தனது திறமையின் மூலமாகவே அரசரானார். இவர் பல போர்களில் பங்கு கொண்டு பல நகரங்கள் மீது படை டயெடுத்தார். ஏராளமான கொள்ளைப் பொருளைப் பெற்றார். எனவே தான் வரலாற்றாசிரியர்கள் இவரை மகா சர்கான் என்று அழைக்கிறார்கள்

இவருக்கு அடுத்தபடியாக முக்கியமான சுமேரிய அரசர் லுகல் சகிசி (Lugal Saggisi) என்பவராவார். இவர் 55 ஆண்டுகள் ஆட்சி செய்தார் கடவுளுக்கு இணையாக போற்றப்பட்டார். இவர் ஆட்சிக்காலத்தில் சுமேரியாவில் புரட்சி ஏற்பட்டது. கி.பி. 1847ல் சுசாவில் இவரது உருவச்சிலை கண்டுபிடிக்கப்பட்டது. இவர் காலத்தில் லகாஷ் நகரம் செழித் தோங்கியது இதன்பின் குடியா (Gudea) என்ற அரசர் சிறப்பாக ஆண்டார். இவர் தனது ஆட்சிக் காலத்தில் சமய , இலக்கிய நடவடிக்கைகளில் ஈடுபட்டார் . பல கோவில்களைக் கட்டினார். இவரும் மக்களால் கடவுளாக வணங்கப்பட்டார்

சுமேரியாவிலுள்ள உர் (Ur) நகரம் கி.மு. 3500லிருந்து கி.மு. 700 ஆண்டு வரை மிகவும் புகழ் பெற்று விளங்கியது. இதன் ஆட்சியாளர்களில் உர்-எங்கர் (Ur-Engur) என்பவர் மிகவும் புகழ் பெற்றவர். மேற்கு ஆசியாவிலிருந்த எல்லா பகுதிகளையும் தன்வசம் கொண்டு வந்தார். சுமேரியாவில் முதன் முறையாக சட்டத் தொகுப்பு முறையைக் கொண்டு வந்தார். இவர் உர் நசரை அழகுபடுத்தினார். இந்த நகர் கடல் கடந்த வாணிபத்தால் மிகவும் புகழ் பெற்று விளங்கியது. இவர் தான் லார்சா, உருக், நிப்பூர் நகரங்களை நிர்மாணித்தார் இவரது மகன் துங்கி (Dungi) தந்தையின் பணிகளைத் தொடர்ந்தார்.

ஆனால் போர்க் குணம் கொண்டாளம் பகுதியைச் சேர்ந்தவர்கள் (Elamites) கிழக்கிலிருந்தும், அமேரியர்கள் (Amorites) என்பவாள் மேற்கிலிருந்தும் சுமேரியா மீது படையெடுத்து அழித்தனர் உர் நகரம் அழிக்கப் பட்டது அங்கிருந்த இஸ்தர் (Ishtar) என்ற கடவுள் சிலை நொறுக்கப்பட்டது ஆனால் வடக்கில் பாபி லோனியாவில் ஆட்சி புரிந்த ஹமுராபி என்ற மன்னர் ஈளம் நாட்டவரிடமிருந்து உருக், இசின் (Uruk, Isin) ஆகிய நகரங்களை மீட்டார் இப்பகுதிகளையும் சேர்த்து ஒரு பேரரசை நிறுவினார்

**சுமேரிய நாகரிகத்தின் சிறப்பு அம்சங்கள்**

**1) அரசாங்கம் (Government)**

சுமேரியா பல 'நகர அரசு' களைக் (City States) கொண்டதாக விளங்கியது. இந்த நகர அரசுகள் சுதந்திரமாக இயங்கின உர், லார்சா, எரிடு, உம்மா, லகாஷ் ஆகியவை சில முக்கியமான நகர அரசுகளாகும். இந்த நகர அரசுகளின் தலைவர் படேசி (Patesi) என்று அழைக்கப்பட்டார். இந்த நகர அரசு களை மன்னர்கள் தோற்கடித்து அரசிய ல் மற்றும் பொருளாதார ஒற்றுமையை ஏற்படுத்தினர். அரசர் 'மதகுரு அரசர்' (Priest King) என்று அழைக்கப்பட்டார். அதாவது அரசுடன் மதம் ஐக்கியமானது என்று உணர்த்தவே இவ்வாறு அழைக்கப்பட்டார். அரசர் மிகவும் பாதுகாப்பான யாரும் போகமுடியாத அரண் மனையில் வசித்தார். ஒரு ஆள் மட் டுமே நுழையக் கூடிய அளவு வாயில்கள் அமைக்கப்பட்டன. உள்ளே போகும் ஒவ்வொருவரும் நன்கு பரிசோதனை செய்யப்பட்ட பின்னரே அனுமதிக்கப்பட்டனர். அரசன் வணங்கும் கோவில்களும், அரண்மனையில் மறைவான் இடத்தில் அமைக்கப்பட்டன

அரசர் சாரட்டு வண்டியில் அமர்ந்தே போர்க்களம் சென்றார் வி ல், அம்பு, ஈட்டி ஆகியவை போர்கருவிகளாக இருந்தன பொதுவாக போர்கள் பொருள் மற்றும்

வியாபாரப் பாதைக் கட்டுப்பாட்டை ஏற்படுத்தவே நடைபெற்றன . அக்காடை ஆண்ட மனிட்சு (Manistusu) என்ற அரசர்கள் மீது படை எடுத்த போது அங்குள்ள வெள்ளிச் சுரங்கங்களை (To Secure diorite Stone) கவர்ந்து வருவதற்காகவே படையெடுப்பதாக வெளிப்படையாகக் தோற்கடிக்கப்பட்டவர்கள் அடிமையாக விற்கப்பட்டார்கள் நல்லவிலை கிடைக்கவில்லையென்றால் கொல்லப்பட்டனர்.

படைமானியமுறை மூலம் பேரரசில் சமுதாய ஒழுங்கு நிலை நாட்டப் பட்டது . போரில் வெற்றியடையும் அரசன் மகிழ்ச் சியால் தளபதிகளுக்கு நிலம் பரிசளிப்பது பழக்கமாக இருந்தது . அப்படி கொடுக்கப்பட்ட நிலங்களுக்கு வரி விலக்கு அளிக்கப்பட்டது. அந்த தளபதிகளே அப்பகுதியில் சட்ட ஒழுங்கா நிலை நாட்டினர் . அரசனுக்குத் தேவைப்படும் போது படை உதவியளித்தனர் . நாட்டில் வரியானது பொருட்களாகப் பெறப்பட்டு அரசா சகானியக்காவதி யங்களில் சேகரித்து வைக்கப்பட்டது. அது பின்னா அதிகாரிகளுக்கும் ஊழியர்களுக்கும் சம்பளமாக விநியோகிக்கப்பட்டது.

**2) சுமேரியர் சட்டம் (Sumerian Law)**

நாட்டின் நிர்வாக அமைப்பில் சட்ட ஒழுங்கு முறை புகுத்தப்பட்டது லகாசை (Lagash) ஆண்ட உருகா ஜினா என்ற அரசனின் கல்வெட்டுகளில் , நாட்டின் நல்ல பழக்கவழக்கங்கள் பாதுகாக்கப்பட வேண்டும் என்றும் ஏழை மக்கள் அரசாங்க அதிகாரிகளாலும் மத குருக்களாலும் கொடுமைப்படுத்தப் படுவதை தடுக்க வேண்டும் என்றும் குறிப்பிட்டுள்ளார் உா எங்கர் மற்றும் துங்கி ஆட்சி காலங்களில் உர் நகரின் சட்டங்கள் தொகுக்கப்பட்டன இந்த சட்டத் தொகுப்புகள் (Codes) மிகவும் புகழ் பெற்றவை ஹமுராபியின் சட்டத் தொகுப்புக்கு முன்னோடியாக விளங்கின

சுமேரிய சட்டங்கள் மிகவும் கடுமையானதாக இல்லை உதாரணமாக செமட்டிக் (Semitic) சட்டப்படி நெறியற்ற பெண்களுக்கு ம ரண தண்டனை வழங்கப்பட்டது ஆனால் சுமேரிய சட்டப்படி அவளது கணவன் வேறொரு பெண்ணை திருமணம் செய்ய அனுமதிக்கப்பட்டான். வியாபாரம், பாலியல் தொடர்பு , வாங்குவது, விற்பது, சரக்கு எடுப்பது சம்பந்தப்பட்ட சட்டங்கள் சுமேரிய சட்டத்தில் உள்ளடங்கின . பொதுவாக நீதி மன்ற நடவடிக்கைக ள் கோவில்களில் நடைபெற்றன . மதகுருவே நீதிபதியாக செயல்பட்டார் பெரிய நீதி மன்றங்களில் படித்த நீதிபதிகள் பணிபுரிந்தனர் . சுமேரியச் சட்டத்தின் சிறப்பு அம்சமாகக் கருதப்படுவது , வழக்கு தொ டுப்பதை தடுக்க வழி

செய்யப்பட்டுள்ளதே ஆகும் அதாவது ஒவ்வொரு வழக்கும் முதலில் அரசாங்க மத்தியஸ்தர் (Arbitrator) ஒருவரிடம் சமர்பிக்கப்பட வேண்டும் அவர் கூடிய மட்டும் பிரச்சனைகளை பேச்சு வார்த்தையின் மூலம் தீர்க்க முயற்சி செய்வார் இதில் தீர்க்கப்படாமல் போகும் வழக்குகளே நீதிமன்றத்தில் விசாரிக்கப்படும்

**3. மதமும் பொது ஒழுக்கமும்**

சுமேரியாவின் உாளங்கர் (Urnammu) அரசர் தனது சட்டத் தொகுப்பை பிரகடனப்படுத்திய போது ஷாமாஷ் (Shamash) என்ற ஒளிக்கடவுளின் (god of light) பெயரிலேயே வெளியிட்டார் சுமேரியாவின் ஒவ்வொரு நகர அரசுகளிலும் மற்றும் எல்லா மக்களின் நடவடிக்கைகளிலும் சமயம் முக்கிய பங்காற்றியது . ஒவ்வொரு ந கர அரசிலும் வெவ்வேறு கடவுளர்கள் வழிபாடு செய்யப்பட்டனர்

1. நீப்பூர் நகர அரசில் 'என்லின், நின்லில் (Enlil, Ninlil) ஆகிய கடவுள்கள் வணங்கப்பட்டனர். இவர்களுக்கு கோவில் கட்டப்பட்டது
2. உருக் (Ur) மக்கள் இணினி (Inanni) என்ற கன்னி கடவுளை வணங்கினர்
3. கிஷ், லாகஷ் நகர அ ரசுகளில் நிங்கர்சாக் (Ninkarsag) என்ற சோகக் கடவுளை வணங்கினர். இந்த கடவுளின் சோகத்திற்கு மனிதர்கள் கள் சந்தோஷமில்லாமல் இருந்ததேயாகும்!
4. இந்த கடவுள்கள் தவிர நிங்கிர்சு (Ningirsu, god of irrigation) என்ற பாசனக்கடவுளும், தம்மஸ் (Tammuz, god of vegetation) என்ற தாவரக் கடவுளும் வணங்கப்பட்டனர்.

எல்லாத் தெய்வங்களும் கோவில்களில் வாழ்ந்து வந்தனர் அவர்களுக்கு பணம், உணவு ஆகியவை படைக்கப்பட்டன. மனைவியும் கொடுக்கப்பட்டது! குடியா (Gudea) என்ற அரசரின் எழுத்துப் பொறிக்கப்பட்ட ஒரு கற்பலகையிலிருந்து (Stone tablet) கடவுளுக்கு சுமேரியர்கள் படைத்த பொருட்களைப் பற்றி நாம் அறிய முடிகிறது . காளைமாடு, செம்மறி ஆடு , புறா, வெள்ளாடு, கோழி, வாத்து, மீன், பேரிச்சம்பழம், வெண்ணை, எண்ணை ஆகியவை படைக்கப்பட்டன . இந்த தெய்வங்கள் முதலில் மனித இறைச்சியையே விரும்பினவாம் . ஆனால் நாகரிக வளர்ச்சியின் காரணமாக மனிதனுக்குப் பதில் விலங்குகளுடன் திருப்திப்பட்டுக் கொண்டன

இப்படிப்பட்ட மத நம்பிக்கையுள்ள சுமேரிய சமுதாயத்தில் மத குருமார்கள் அதிக செல்வாக்குப் பெற்றனர். மக்களை அடிமைப்படுத்தினர். உருக்ககாஜினா (Urukagina) என்ற அரசர் குருமார்களின் நடத்தையும், அவர்களின் ஒழுக் கக் கேடுகளையும் கண்டித்தார் .

பலசட்ட திட்டங்கள் மூலம் மதகுருமார்களின் அதிகாரங்களைக் கட்டுப்படுத்தினார் . ஆனால் அவர் இறந்த பிறகு குருமார்கள் மீண்டும் இழந்த அதிகாரங்களைப் பெற்றுக் கொண்டனர்.

சுமேரியாவில் பலவகையான மத நம்பிக்கைகளும் , அதன் அடிப்படையில் புராணக்கதைகளும் (Myths) நிலவின இறந்தபின் வாழ்க்கை உண்டு என்பதில் நம்பிக்கை வைத்தனர். இதனை அவர்களின் கல்லறைகளில் கண்டுபிடிக்கப்பட்ட உணவு மற்றும் சில கருவிகளை வைத்து முடிவு செய்யப்பட்டது . ஆனால் சொர்க்கம் , நரகம், மறுமையில் தண்டனை போன்றவற்றை அறிந்திருக்கவில்லை . கடவுள் மனிதனை படைத்தார். மனிதன் சந்தோஷமாக அலைந்து பாவங்களைச் செய்ததால் வெள்ளத்தின் மூலம் மனிதர்களைத் தண்டித்தார் . ஆனால் டேக்டக் (Tagtug) என்ற ஒரு மனிதன் மட்டும் தப்பினான். அவனும் தடைசெய்யப்பட்ட மரத்தின் பழத்தைத் தின்று பாவம் செய்ததால், அவனது வாழ்வுக்காலம் குறைக்கப்பட்டது. இதுவும் சுமேரியாவில் நிலவிய ஒரு புராணக்கதையாகும்.

**4. கல்வி முறையும் எழுத்தும்**

மதகுருமார்களே கல்வியையும் , புராணக் கதைகளையும் போதித்தார்கள் . பொதுவாக பள்ளிக் கூடங்கள் கோவில்களிலேயே அமைக்கப்பட்டன . அங்கு சிறுவர்களுக்கும், சிறுமிகளுக்கும் கணிதம் , தேசப்பற்று, மதநம்பிக்கை ஆகியவை போதிக்கப்பட்டன. பள்ளிகளில் பயன்படுத்தப்பட்ட பலகைகள் நமக்கு கிடைத்துள்ளன . அதில் பெருக்கல், வகுத்தல் மற்றும் சதுர குறியீடுகள் காணப்படுகின்றன . சில பாடப் பகுதிகளும் காணப்படுகின்றன. 'மனித இனம் முதலில் உண்பதற்கும் உடுத்துவதற்கும் அறிந்திருக்கவில்கள் தரையில் ஊர்ந்து நடந்தார்கள் இலை தழைகளை உண்டார்கள் குட்டைகளில் தண்ணீர் குடித்தார்கள்' போன்ற பாடப்பகுதிகள் காணப்படுகின்றன

**எழுத்து**

சுமேரியர்கள் முதலில் சித்திர எழுத்துக்களையே எழுதினர் ஆனால் பின்னர் 250 வகையான குறியீ டுகளை எழுதினர் எழுத்து க்களை களிமண்ணால் செய்யப்பட்ட பலகைகளில் எழுதி வெயிலில் உலர்வைத்தார்கள் . இவ்வகை களிமண் பலகைகள் நமக்கு பல கிடைத்துள்ளது நமது அதிர்ஷ்டமே , இவ்வகை களிமண் பலகைகள் கி .மு. 3600ஐச் சேர்ந்தவை இவர்களது எழுத்துக்கள் ஆப்புவடிவத்தில் (Wedge shaped) இருந்ததால் அது கூனிபாம் (Cuneiform) லத்தீனில் ஆப்பு என்பதற்கு Cuneus என்று பெயர்) எழுத்து முறை என்ற பெயர்

பெயர் பெற்றது . இந்த கூனிபாம் எழுத்து முறை சுமேரிய நாகரிகத்தின் சிறப்பம்சமாகும்.

இந்த எழுத்து முறையிலிருந்து இலக்கியத்திற்கு மாறி வர பல நூறு ஆண்டுகாலமானது வாணிபத்தில் எழுத்து மு றை ஒரு கருவியாக பயன்பட்டது ஒப்பந்தங்கள், சொத்து ஆவணங்கள் , தீர்ப்புகள், வியாபார மற்றும் விற்பனை ஒப்பந்தங்கள் ஆகியவை களிமண் பலகைகளில் எழுதிவைக்கப்பட்டன கி 2700-ல் சுமேரியாவில் பெரிய நூலகங்கள் உருவாயின . குடியா அரசரின் காலத்தைச் சேர்ந்த சுமார் 30,000 களிமண் பலகைகளை டிசர்சக் (De[illegible]c) என்ற ஆய்வாளர் டெலோ (Te[illegible]) என்ற இடத்தில் கண்டுபிடித்தார். இவை ஒன்றின் மீது ஒன்றாக மிக நேர்த்தியாக அடுக்கி வைக்கப்பட்டிருந்தன. கி.மு. 2000-ல் 'சுமேரியர்கள் அதற்கு முந்திய கால வரலாறுகளை தொகுத்து எழுத முற்பட்டார்கள் . நிகழ்கால நிகழ்ச் சிகளையும் எழுதிவைத்தார்கள். நிப்பூர் என்ற இடத்தில் கில்காமெஷ் (Gilgamesh) என்ற காவியம் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது

**பெண்கள்**

பெண்கள் கோவில்களில் வேலை செய்வதற்காக அமர்த்தப்பட்டனர் அவர்கள் இந்த உலகத்தில் கடவுளின் பிரதிநிதியாக செயல்பட்டனர் . சிலர் கடவுளுக்கு வைப்பாட்டியாக (Co[illegible]) அமர்த்தப்பட்டனர் சுமேரியர்கள் இப்படி பெண்களை கோவில்களில் வைப்பதை (Temple Prostitutes) பரிபோனதுக் குறைவாக நினைக்கவில்லை. பெண்களை கோவிலுக்கு கொடுப்பதை புனிதமானதாகவும் , தியாகச் செயலாகவும் அந்த பெண்ணின் தந்தை கருதினார் பெண்ணிற்கு கொடுப்பதற் காக சேர்த்து வைத்திருந்த வரதட்சணை பணத்தையும் கோவிலுக்குக் கொடுத்தார். தந்தை திருமண முறை சட்டத்தால் ஒழுங்கு படுத்தப்பட்டிருந்தன தனக்கு கொடுக்கப்பட்ட வரதட்சணை பணத்தின் மீது முழு உரிமையைப் பெற்றிருந்தாள் பெண் . அப்பணம் கணவருடன் சேர்ந்து வைக்கப் பட்டிருந்தாலும் அப்பணம் பற்றிய முடிவு செய்யும் உரிமை பெண்ணுக்கே கொடுக்கப்பட்டிருந்தது பிள்ளைகள் மீது கணவருடன் சம உரிமை பெற்றிருந்தாள் கணவர் இல்லாத போது வீட்டு நிர்வாகத்தைக் கவனித்தாள் . சுதந்திரமாக வியாபாரம் செய்யவும் அனுமதிக்கப்பட்டாள் ஷப் -எட் (S[illegible]ub) என்ற ஒரு பெண் நக ர அரசை ஆட்சிபுரியும் நிலைக்கு உயர்ந்தாள் . ஆனாபல ஒழுக்கக்கேடு உள்ள பெண்களுக்கு . மரண தண்டனையும் அதே தவறை செய்யும் ஆண்களுக்கு மன்னிப்பு அளிக்கப்பட்டது

பெண்கள் எத்தனை பிள்ளைகளையும் பெற்றுக் கொள்ள உரிமை உண்டு. குழந்தை பேறு இல்லாத பெண்கள் விவாகரத்து செய்யப்பட்டார்கள் சில சூழ்நிலைசளில் கணவன் தனது மனைவியை அடிமையாக விற்று விடலாம். பிள்ளைகள் சரியாக பெற்றோருக்கு அடங்கி நடக்காவிட்டால் எல்லோருக்கும் முன்பாக பிள்ளையை வேண்டாம் என்று கூறி நகரத்தை விட்டே துரத்தி விடலாம்

பலவகையான பெண்கள் தங்களை அழகு சாதனங்களாலும், ஆபரணங்களாலும் அலங்கரித்துக் கொண்டனர். Sub என்ற அரசியின் கல்லறையில் பேராசிரியர் உல்லி (Wooly) என்பவர் அழகு சாதங்களைக் கண்டுபிடித்துள்ளார். பல நிறங்களில் ஹேர்பின்கள், தங்கத்தினால் செய்யப் பட்ட ஜரிகை இழைகள் (Filigree) அழகான ஸ்பூன், மேல் தோலை சொரிந்து கொள்ள உதவும் (cuticle) ஒரு உலோககுச்சி, புருவத்தை கோரிவிட ஒரு ஜோடி (Tweezers), தங்கமோதிரங்கள், நெக்லஸ்கள் ஆகியவை பெண்கள் தங்கள் அழகை மேலும் அழகூட்ட எவ்வளவு சிரத்தை எடுத்துக் கொண்டார்கள் என்பதைக் காட்டுகிறது

**6. பொருளாதார வாழ்க்கை**

**a) விவசாயம்**

சுமேரியாவில் நிலங்கள் வளமானதாக இருந்தன. இதற்கு காரணம் டைக்ரிஸ், யூப்ரடிஸ் நதிகளின் வெள்ளமே ஆகும். இந்த வெள்ளப் பெருக்கு அழிவையும் கொடுத்தது. கி.மு. 4000ல் காணப்பட்ட சுமேரிய நீர்பாசன முறை சுமேரிய நாகரிகத்தின் அடிப்படையாக அமைந்தது. தானியங்கள், பார்லி, பேரிச்சை, ஒருவகைக் கோதுமை (Spelt), பலவகைப்பட்ட காய்கறிகள் ஆகியவை விளைவிக்கப்பட்டன. காளை மாடுகளைக் (Oxen) கொண்டு உழவு செய்யப்பட்டது. நெற்கதிர்களை பெரிய மரக்கட்டைகளால் அடித்து தானியம் பிரித்தெடுக்கப்பட்டது.

**b) தொழில்**

சுமேரிய நாகரிகம் உலோகங்களைப் பொருத்த அளவில் வளர்ச்சியடையாத நாகரிகமாகும் வெள்ளீயம், செம்பு ஆகியவற்றின் உபயோகத்தையும், அவைகளை கலந்து வெண்கலம் செய்யும் முறையும் அறிந்திருந்தனர். சுமேரியர் தங்கள் கருவிகளை சிக்கிமுக்கி கற்களாலும் (Flints) செய்து கொண்டனர். அரசரின் ஆதரவுடன் நெசவுத் தொழில் வளர்ச்சியடைந்தது. அது அரசாங்கத்தின் கட்டுப்பாட்டில் இயங்கியது.

**c) வீடுகள்**

கோரை (Reed) போன்ற வலிமையற்ற பொருட்களால் வீடுகளின் கூறைகள் வேயப்பட்டிருந்தன. களிமண்ணையும் வைக்கோலையும் (Straw) கலந்து குழைத்து அதில் பூசி கடினமாக்கப்பட்டிருந்தது . குடிசைகளில் மரக்கதவுகள் பொருத்தப்பட்டிருந்தன . கல்லில் ஒரு குழி அமை க்கப்பட்டு அதில் நின்று சுழல்வது போன்ற கதவு அமைக்கப்பட்டிருந்தது. பசு, செம்மறி ஆடு, வெள்ளாடு, பன்றி ஆகியவை மக்களுடன் வாழ்ந்து வந்தன கிணற்றிலிருந்து தண்ணீர் எடுக்கப்பட்டது

**d) போக்குவரத்து**

கால்வாய் மற்றும் ஆறு மூலமாகவே பொருட்கள் ஒரு இடத்திலிருந்து பிற இடத்திற்கு எடுத்துச் செல்லப்பட்டன . கல் சுமேரியாவில் அதிகம் கிடைக்காத காரணத்தினால் அது ஆற்றுப்படுகைவரை எடுத்து வரப்பட்டு பல கால்வாய்கள் மூலம் நகரங்களுக்கு எடுத்துச் செல்லப்பட்டது. கிஷ் (Kish) என்ற நகரத்தில் சாலைப்போக்குவரத்து வளர்ச்சியடைந்தது. ஆக்ஸ்போர்ட் ஆராய்ச்சியாளர்கள் அங்கு மிகப் பழமையான சக்கர வாகனங்களைக் கண்டுபிடித்துள்ளார்கள்

**e) நாணயங்கள்**

நாணயங்கள் சுமேரியாவில் காணப்படவில்லை. எனவே பண்டமாற்று முறை (Barter) பழக்கத்திலிருந்து வந்த து. தங்கமும், வெள்ளியும் பொருட் களுக்குப் பதிலாக ஏற்றுக்கொள்ளப்பட்டன. பலகளிமண் ப லகைகளில் (Tablets) வியாபார குறிப்பு எழுதப்பட்டுள்ளன. கடன் வாங்கும் முறை சுமேரியர்கள் காலத்திலும் நடைமுறையில் இருந்தது. பொருட்கள், தங்கம், வெள்ளி ஆகியவை மாதத்திற்கு 15% முதல் 35% வரை வட்டிக்கு வழங்கப்பட்டன.

தங்கம், வெள்ளியால் செய்யப்பட்ட கருவிகள் , ஆயுதங்கள். அணிகலன்கள், பாத்திரங்கள் ஏராளமாகக் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. இவை சுமேரியர்களின் வாழ்க்கை நிலையை நமக்கு எடுத்துக் காண்பிக்கின்றன அடிமை முறை நிலவியது சொத்துரிமை புனிதமாகக் கருதப்பட்டது . பணக்காரர்களுக்கும் ஏழைகளுக்குமிடையே சிறிய வியாபாரிகள், கல்வியாளர்கள், மருத்துவர்கள், மதகுருமார்கள் ஆகிய மத்திய வர்க்கத்தினர் தோன்றினர் . மருத்துவம் பிரபலமாகவில்லை . ஆனால் பொதுவாக உடல்நலக் குறைவு கெட்ட ஆவியினால் தான் ஏற்படுகிறது என்று நம்பினர்

**7. கலையும் கட்டிடக் கலையும்**

எப்படி எழுத்து முறையில் சுமேரியர்கள் தங்களுக்கு ஆப்பு வடிவ முறையை (Cuneiform) உருவாக்கினார்களோ அதேபோல் கட்டிடக்கலையிலும் புதிய முறைகளை உருவாக்கினார்கள் வீடுகள், கோவில்கள் ஆகியவற்றில் வில்வடிவமான வளைவுகளை உருவாக்கினார்கள் சுமேரிய விவசாயிகள் தங்கள் வீட்டு முன்னால் கோரைகளை வளர்த்தனர் அவைகளின் முனைகளை வளைத்து கட்டி வளைவுகளை உருவாக்கினர். இதுவே மிகப்பழமையான வளைவு (Va...) ஆகும். நிப்பூரில் கி.மு. 5000-ல் உள்ள வளைவு காணப்படுகிறது. உர் நகரிலும் கி .மு. 3500 ஆண்டைச் சேர்ந்த வளைவு கதவுகள் காணப்படுகின்றன.

**b) மாளிகைகள்**

வசதி படைத்த சுமேரிய மக்கள் தங்களுக்கு மாளிகை போன்ற வீடுக ளை அமைத்துக் கொண்டனர். தரையிலிருந்து நாற்பது அடி உயரமான படத்தில் யாரும் எளிதில் போக முடியாத படி கட்டினர் . கல் கிடைக்காத காரணத்தினால் அனேகமாக செங்கற்களால் கட்டப்பட்டன வெளிச்சுவர் சிவப்புவர்ணத்தால் பூசப்பட்டிருந்தது . களிமண், மணல், பானை, ஓடுகள் ஆகிய மட்கலவையை க் கொண்டு (Terra...) வீட்டை அழகுபடுத்தினர். வீட்டின் மையப்பகுதி குளுமை யாக இருக்குமாறு அமைக்கப்பட்டது . ஆடம்பர ஜன்னல்கள் வைக்கப்பட்டன . சாக்கடை வடிகால் வைக்கப்பட்டது . வீட்டில் சாய்வு நாற்காலிகள் காணப்பட்டன.

**c) கோவில்கள்**

கோவில்கள் கட்டுவதற்கு கற்கள் இறக்குமதி செய்யப்பட்டன செம்பினால் அலங்கரிக்கப்பட்ட உர் என்ற இடத்திலுள்ள நன்னார் கோவில் (Nan...) மிகவும் சிறப்பு வாய்ந்தது. மெசபட்டோமியா கோவில்களுக்கு மாதிரியாக விளங்குகிறது. பல உயர்ந்த ஜாதி மரங்களினால் (Ceder cypre...) அலங்கரிக்கப்பட்டுள்ளது. கோவில்கள் உயர்ந்த அஸ்திவாரத்திற்கு (பீடங்கள்) மேல்தான் கட்டப்பட்டன . தெய்வங்களின் இருப்பிடமாகவும், அரசியல் நடவடிக்கைகளின் பாதுகாப்பான இடமாகவும் கோவில்கள் கருதப்பட்டது. இக்கோவில்கள் பல தெய்வங்களின் படங்களால் அலங்கரிக்கப்பட்டிருந்தது.

**d) சிற்பங்கள்**

அரசர் குடியாவின் சிற்பம் பழபழப்பான கல்லினால் செதுக்கப்பட்டு மிக அழகாக உள்ளது Tel U... என்ற இடத்தில் காணப்படும் வா காளைமாட்டின் சிலை இவ்வளவு

ஆண்டுகள் ஆகியும் உயிரோட்டத்துடன் காணப்படுகிறது வெள்ளியினால் செய்யப்பட்ட ஒரு பசுமாட்டின்தலை Shubad அரசியின் கல்லறையில் கண்டுபிடிக்கப்பட்ட பல பொருட்கள் சுமேரியக்கம், வளர்ச்சியை பறைசாற்றுகின்றன லகாவிலுள்ள அரசர் ானட்டம் (Eannaturn என்பவரின் "State of the Vultures" என்பவரின் "Porphyry Urn" Gallin de Humour மற்றும் Cattle Naram Sin Victory Stele ஆகியவை சுமேரியசிற்பக் கலைக்கு எடுத்துக்காட்டுகளாகும்

எரிடு(Eridu)வில் கண்டுபிடிக்கப்பட்ட மண்ணினால் செய்யப்பட்ட பாத்திரங்களில் பல சித்திர வேலைப்பாடுகள் காணப்படுகின்றன. தங்கத்தி' அழகிய வேலைப்பாடுகளுடைய பாத்திரங்கள் செய்யப்பட்டன 'They are tastefut in design and deligate in finish'. இவை தவிர கலைநயம்மிக்க வாள் கத்தி ஆகியவை உர் நகரில் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன

நமக்கு கிடைத்துள்ள ஆதாரங்களின் அடிப்படையில் ஆராயும் போது சுமேரிய நாகரிகம் படிப்படியாக வளர்ந்த நாகரிகமாக காணப்படுகிறது ஒழுங்கற்ற மட்பாண்டங்கள் முதல் மிக நேர்த்தியாக செய்யப்பட்ட நகைகள் வரை கிடைத்துள்ளன. சுமேரியர்களே வரலாற்றில் பல அம்சங்களில் முன்னோ டியாக உள்ளனர். நகர அரசு, பாசனமுறை, வியாபார ஒப்பந்தம் கடன்வழங்கும் முறை , சட்டதொகுப்பு முறை , எழுத்து முறை , இலக்கியம், அழகு சாதனங் களைப் பயன்படுத்துதல் , சிற்பக்கலை, மாளிகைகள் மற்றும் கோவில்க ள் கட்டுதல் ஆகியவைகளில் முன்னோடியாக உள்ளனர். அதே போல் நாகரிகத்தின் மறுபக்கமான அடிமைமுறை , எதேச்சதிகாரம், ஏகாதிபத்தியம், போர் போன்றவைகளிலும் சுமேரியர்களே முன்னோடியாக காணப்படுகிறார்கள் சுமேரிய நாகரிகமே மெசபட்டோமியா முழுவதும் பரவி நின்றது பின்னா எகிப்து, அரேபியா பகுதிகளுக்குப் பரவியது

## 2. பாபிலோனிய நாகரிகம்(Babylonian Civilization)

வரலாற்றுப் பூர்வமாகவும் , இனங்களியலின் அடிப்படையிலும் பார்த்தால் டைக்ரிஸ் யூப்ரடீஸ் நதிகள் பாயும் நிலப்பகுதிகளான சுமேரியாவும் , அக்காடும் (Akkad) சேர்ந்ததே கீழ் மெசபடோமியா என்று அ ழைக்கப்பட்டது. கீழ் மெசபடோமியாவின்

தலைநகர் பாபிலோனாக விளங்கியதால் அப்பகுதி பாபிலோனியா என்று அழைக்கப்பட்டது இங்கு தோன்றி வளர்ந்த நாகரிகமே பாபிலோனிய நாகரிகமாகும்

டைக்ரிஸ், யூப்ரடீஸ் நதிகளின் வளமான நீரின் மூலம் பாபிலோனியா மிக செழிப்பான நாடாக காணப்பட்டது. இங்கு வானவியலும், மருத்துவமும் விஞ்ஞானமும் வளர்ச்சியடைந்தன. கிரேக்கர்களுக்கு கணிதவியலையும் , இயற்பியலையும் தத்துவ இயலையும் போதித்தது பாபிலோனியாவே பாபிலோனியா அரசர் ஹமுராபியே உலகின் முதல் சட்ட தொகுப்பை வழங்கினார் . புராணக்கதைகளை யூதர்களுக்கு வழங்கியது பாபிலோனிய நகரிகமே கட்டிடக்கலை அறிவை அராபியர்களுக்கு அளித்தது பாபிலோனிய அரசர் நெபுகாட்நேசர் தான் உலக அதிசயங்களில் ஒன்றான தொங்கு தோட்டத்தை அமைத்தார்

**பாபிலோனிய நாகரிகத்தின் சிறப்பு அம்சங்கள்**

**1. ஹமுராபியின் சட்டத்தொகுப்பு(Code of Hammurabi)**

பாபிலோனியாவின் மிகச் சிறந்த அரசர் ஹமுராபி ஆவார். இவர் கி.மு. 2123 முதல் 2081ம் ஆண்டு வரைஆட்சிபுரிந்தார் . அமோரைட் வம்சத்தைச் சேர்ந்த இவர் மாபெரும் வெற்றியாளர். நாற்பத்தி மூன்று ஆண்டுகள் ஆட்சிபுரிந்த ஹமுராபி பெரிய சட்ட நிபுணர் ஆவார். இவர் சுமர், அக்காட் ஆகிய பகுதிகளில் இருந்து வந்த பழை ய சட்டங்களை தொகுத்து அதனுடன் புதிய சட்டங்களையும் இயற்றினார் . இவை மிக எளிமையாகவும், மக்கள் புரிந்து கொள்ளும்படியாகவும் இருந்தன . இந்த சட்டங்களை எட்டு அடி உயரமுள்ள பளபளப்பான கற்பாறையில் செய்யப்பட்ட உருளையில் பொறித்தார் அந்த உருளையை பாபிலோனிலுள்ள மார்டக் (Marduk) என்ற கடவுளின் கோவிலில் வைத்தார் . இது ஹமுராபியின் மாபெரும் சாதனையாகும் இவர் தொகுத்தளித்த சட்டங்கள் உலகத்திற்கே ஒரு முன்னோடியாக விளங்குகிறது

ஹமுராபியின் சட்டத் தொகுப்பு பொறிக்கப்பட்டுள்ள உருளை 19020 ஆண்டு சுசா (Susa)வில் கண்டுபிடிக்கப்பட்டது அந்த உருளை யின் ஒரு பக்கத்தில் இந்த சட்டத் தொகுப்புகளை சூரியக் கடவுளான ஷாமாசிடமிருந்து (Shamash) ஹமுராபி பெற்றுக் கொள்வது போல் பொறிக்கப்பட்டுள்ளது இது மோசஸ் பத்து கட்டளைகளை கடவுளிடமிருந்து பெற்றதற்கு ஒப்பாக அமைந்துள்ளது

**சட்டத் தொகுப்பின் முக்கிய கூறுகள்**

ஹமுராபியின் சட்டத் தொகுப்பு முதலில் தெய்வங்களை வழிபட்டு ஆரம்பிக்கிறது. சட்டங்கள் மிக விரிவாக கொடுக்கப்பட்டுள்ளன . சிறு குற்றங்களுக்கும் கடுமையான தண்டனை வழங்கப்பட்டது இவரது சட்டங்கள் கண்ணுக்கு கண், பல்லுக்கு பல் என்ற அடிப்படையில் அமைந்துள்ளது சட்டங்கள் அனைத்தும் மிக நே ர்த்தியாக, தனியார் சொத்து , நிலவியாபாரம், வாணிபம், குடும்பம் தொழிலாளர் போன்ற தலைப்புகளில் வரிசைப்படுத்தி விவரிக்கப்பட்டுள்ளது

ஹமுராபியின் சட்டங்கள் அசிரிய நாட்டு சட்டங்களை விட முற்போக்கானவை ஆனால் சில சட்டதிட்டங்கள் கற்காலத்தை நினைவு படுத்து கின்றன அதாவது ஒருவர் இன்னொருவருக்கு காயம் ஏற்படுத்திய குற்றச் செயலை செய்தால், அதே மாதிரியான காயத்தை அவருக்கோ அல்லது அவரது உறவினர் ஒருவருக்கோ ஏற்படுத்த வேண்டும் என்று ஹமுராபியின் சட்டம் கூறுகிறது

பதிலுக்கு பதில் (Vextalionis-equal )retaliation என்ற அடிப்படையி லேயே இச்ச ட்டங்கள் அமைந்துள்ளன ஒருவன் மற்றவனின் கையை வெட்டி விட்டால் பதிலுக்கு அவன் கை வெட்டப்பட வேண்டும் . வீடு இடிந்து விழுந்து அந்த வீட்டை வாங்கியவர் இறந்து விட்டால் அந்த வீட்டை கட்டியவர் கொல்லப்பட வேண்டும் . வீட்டை வாங்கியவர் மகன் இறந்து வீட்டால் கட்டியவரின் மகன் கொல்லப்பட வேண்டும். ஒரு மனிதன் இன்னொரு பெண்ணை கொன்று விட்டால் அவனது மகள் கொல்லப்பட வேண்டும்

மேலும் குற்றம் சுமத்தப்பட்டவர் குற்றவாளியா , இல்லையா! என்பதைப் பற்றி நிர்ணயிக்க கடுமையான பரிசோதனை முறையும் (Ordeal ) பின்பற்றப்பட்டது. ஒருவர் சூனியக்காரர் (Sorcerer) என்று குற்றம் சாட்டப் பட்டாலோ , அல்லது ஒரு பெண் ஒழுக்கம் கெட்டவள் என்று குற்றம் சுமத்திய பட்டாலோ , குற்றம் சுமத்தப்பட்டவர்கள் யூப்ரட்டீஸ் நதியைக் கடக்க வேண்டும் நன்றாக நீந்தத் தெரிந்தவர்கள் பக்கமே கடவுள் இருந்தார். அந்த பெண்ணோ சூனியக்காரரோ நதியைக் கடந்து உ யிருடன் வந்துவிட்டால், குற்றம் சுமத்தியவரின் சொத்துக்கள் குற்றம் சுமத்தப்பட்டவருக்குக் கொடுக்கப்படும் இதுவும் ஒரு பிற்போக்கான சட்டமே

ஹமுராபியின் சட்டத்தில் காணப்படும் இன்னொரு பிற்போக்குத்தனம் என்னவென்றால் அபராதம் அரசியல் மற்றும் சமுதாய அந்தஸ்தின் அடிப்படை , யிலேயே விதிக்கப்பட்டது. ஒருவன் கோவிலிருந்து விலங்கு ஒன்றை திருடிவிட்டால், அந்த விலங்கின் மதிப்பில் 30 மடங்கு தொகை அபராதமாக விதிக்கப்படும் . அதே

விலங்கை சமுதாயத்தின் கீழ் அந்தஸ்தில் உள்ள ஒருவனிடமிருந்து திருடிவிட்டால் அபராதமோ பத்து மடங்குதான்!

ஹமுராபியின் சட்டப்படி தந்தையை அடிக்கும் மகன் கை வெட்டப்பட வேண்டும். டாக்டரின் தவறான சிகிச்சையால் ஒருவன் தனது கண்ணை இழந்து விட்டால் டாக்டரின் விரல்கள் வெட்டப் பட வேண்டும். கடத்தல், கொள்ளையடித்தல், தகாத பாலுறவு (Incest), நாட்டின் எதிரிகளிடம் கோழைத்தனமாக 'நடந்து கொள்ளுதல், மது பானங்களில் கலப்படம் செய்தல் ஆகிய பார் குற்றங்களுக்கு மரண தண்டனை கொடுக்க ஹமுராபியின் சட்டத்தில் வகை செய்யப்பட்டுள்ளது. ஹமுராபியின் சட்டத்தொகுப்பில் காணப்படும் நாகரிகமான கூறு என்வென்றால், வழங்கப்படும் கொடிய தண்டனைகளுக்குப் பதிலாக (Substitute) அபராதம் செலுத்திக் கொள்ள வகை செய்யப்பட்டுள்ளதேயாகும்.

ஹமுராபியின் சட்டப்படி மருத்துவர்களின் சிகிச்சைக் கட்டணம் நிர்ணயிக்கப்பட்டது. தையல்காரர்கள், கட்டிட தொழிலாளர்கள், செங்கல் செய்பவர்கள் ஆகியோர்களின் கூலிகள் நிர்ணயம் செய்யப்பட்டது. கணவனை இழந்த பெண்களுக்கு வரதட்சணையும், அவரது திருமணபரிசுகளும் திருப்பிக் கொடுக்கப்பட்டன. மூத்த பிள்ளைக்கே தகப்பனின் எல்லா சொத்துக்களும் சொந்தம் (Primogeniture) என்ற உரிமை நீக்கப்பட்டு சொத்து எல்லாப் பிள்ளைகளுக்கும் சமமாக பங்கிட்டுக் கொடுக்கப்பட்டது. இது சொத்து ஒரு சிலரிடமே குவிந்து விடுவதை தடுத்துவிட்டது. இவ்வாறு ஹமுராபியின் சட்டத் தொகுப்பு பல அம்சங்களைக் கொண்டு முன்னோடியாக உள்ளது

**2. நெபுகாட்நேசரின் தொங்குதோட்டம்**

ஹமுராபிக்குப்பின் பாபிலோனிய அரசர்களில் மிகவும் புகழ் பெற்றவராக விளங்கியவர் நெபுகாட்நேசர் என்ற அரசராவார் இவர் மிகப் பெரிய போர்வீரர், ராஜதந்திரி. எகிப்தியப் படைகளை கார்ச்மிஷ் (Carchemish) என்ற இடத்தில் தோற்கடித்து ஒழித்துக் கட்டினார். பின்னர் பாலஸ்தீனம், சிரியா ஆகிய நாடுகள் இவருக்குப் பணிந்தன. பாபிலோனிய வணிகர்கள் பெர்சிய வளைகுடாவிலிருந்து மத்திய தரைக்கடல் பகுதிவரை தங்கள் வியாபார ஆதிக்கத்தை ஏற்படுத்தினர்.

வியாபாரம், சிறிய அரசர்கள் செலுத்திய கப்பம், வரி ஆகியவையும், கிடைத்த வருமானத்தை பாபிலோன் நகரை அழகுபடுத்துவதில் செலவிட்டா, தனது 43 ஆண்டு கால ஆட்சியின் போது பாபிலோன் நகரை முழுமையாக கட்டிமுடித்தார் ஒரு

நூற்றாண்டு கழித்து பாபிலோனை பார்த்த ஹெரா பாபிலோன் 53 மைல் நீளச்சுவரால் சூழப்பட்டிருந்தது என்று கூறினார் கட்டிடங்கள் எல்லாம் செங்கற்களால் கட்டப்பட்டன பாபிலோனில் தற்போது கிடைத்துள்ள ஒவ்வொரு செங்கலிலும் 'பாபிலோனின் அரசனாகிய நாக நெபுகாட்நேசர்' என்று பொறிக்கப்பட்டுள்ளதை காணலாம்

இவரது காலத்தில் பிரமி டுகளைவிட உயரமான 650 உயரமுள் 'Tower of Babal' என்ற கட்டிடம் கட்டப்பட்டது இது யெகோவா கடவள் இருப்பிடமாக கருதப்பட்டது . இந்த பேபல் கோபுரத்திற்கு அறுநூறு கொதாரம் தொலைவிலுள்ள காசர் (Kasr) என்ற குன்று பகுதியில்தான் மிகப் புகழ்பெற்ற தனது அரண்மனையைக் கட்டினார் . இந்த மாளிகையில்தான் 20அதிசயங்களுள் ஒன்றான தொங்குதோட்டத்தை அமைத்தார் நெபுகாட்'நேசர்.

Medes இந்த தொங்குதோட்டத்தை தனது மனைவிக்காக (மீட்ஸ் அரசர் சையாக்சரஸ் (Cyaxares) என்பவரின் மகள் ) ஏற்படுத்தினார் இந்த இளவரசியால் பாபிலோனியாவின் கடுமையான வெயிலையும் தூசியையும் தாங்கமுடியவில்லை. தனது சொந்த நாட்டில் காணப்படும் தாவரங்களில் பசுமையை (Verdure) நினைத்து கவலைப்பட்டாள் . எனவே நெபுகாட்நேச தனது மாளிகையின் உச்சியில் பல அடி ஆழம் வளமான மண்ணை நிரப்பி அதில் பலவகைப்பட்ட தாவரங்களையும் . பெரிய மரங்களையும் வளர்த்தார் அடிமைகளின் உதவியுட ன் ஹைடிராலிக் என்ஜின் மூலம் யூபரட்டீ நதியிலிருந்து தண்ணீர் ஊற்றி அவைகளை வளர்த்தார். தரையிலிருந்து 70 அடி உயரமுள்ள இந்த தோட்டத்தில் பலவகைப்பட்ட செடி , கொடிகளும் தோன்றி அரண்மனையைச் சுற்றி படர்ந்தன. குளிர்ச்சி நிலவியது அரன் மனையின் அந்தப்புரத்து அழகிகளும் , அரசியும் மிகக் குளுமையான இந்த நிழலில் வாழ்ந்தனர் . இதுதான் உலக அதிசயங்களில் ஒன்றாகக் கருதப்படுகிறது

**3. சமயம்**

அரசரின் அதிகாரங்கள் சட்டத்தின் படி மட்டுமல்லாமல் , சமயத்தில் அடிப்படையிலும் நிர்ணயிக்கப்பட்டது . அரசர் கடவுளின் ஏஜெண்டாகத்தான கருதப்பட்டார். வரி கடவுளி ன் பெயராலேயே விதிக்கப்பட்டன எனவே வரும் செய்யப்பட்டவுடன் கோவில் கருவூலத்திலேயே அவை சோக்கப்பட்ட அரசரின் அதிகாரங்கள் அனைத்தும் மத குருக்களால் அளிக்கப்பட்டதே எரை மக்கள் நம்பினர் .

எனவே அரசருக்கு எதிராக கிளர்ச்சி செய்வது தங்கள் ஆன்மாக்களுக்கே செய்யும் பாவம் என் று கருதினர் . இவ்வாறு பாபிலோனியா ஒரு மதசார்பான நாடாகவே இருந்தது.

பாபிலோனியாவில் கோவில்கள் செல்வம் நிறைந்தவைகளாக காணப் பட்டன . காரணம் கடவுளின் கருணையை பெருவதற்காக , அரசர்கள் கோவில் களை கட்டி அதற்கு அதிக வருமானம் தரும் நிலங்களையும் அளித்தார்கள் மேலும் போரின் போது கிடைக்கும் வி லை உயர்ந்த பொருட்களும் கோவில் களுக்கே அர்பணிக்கப்பட்டன எனவே கோயில் கருவூலத்தில் தங்கம் , வெள்ளி செம்பு , விலை உயர்ந்த மரச்சாமான்கள் குவிந்தன அவைகள் மீது மத குருமார்களே ஆதிக்கம் கொண்டிருந்தனர் இந்த மத குருக்கள் இவைகளை நேரடியாக செலவு செய்யாமல் வி வசாய நிலங்களிலும், தொழில்களிலும் முதலீடு செய்தார்கள் . ஏராளமான அடிமைகளை அல்லது கூலித தொழிலாளர்களை வைத்திருந்தனர் இதனால் பெரிய தொழிலதிபர்களாகவும், நிதி நிறுவனர்களாகவும் விளங்கினர்.

பாபிலோனியாவில் எண்ணற்ற சிறு தேவதைகள் காணப்பட்டனர் 1-9ம் நூற்றாண்டில் எடுக்கப் பட்ட ஒரு கணக்கின் படி பாபிலோனியாவில் ; 65,000 சிறு தெய்வங்கள் இருந்தனவாம் . இந்த தெய்வங்கள் ஒவ்வொரு நகரத்திலும் , கிராமங்களிலும், கோவில்களிலும் வாழ்ந்தனர்.

இஷ்தார் (Ishtar) என்ற கடவுள், போர் தேவதையாகவும், காதல் தேவதையாகவும் கருதப்பட்டது. இந்த தேவதை பாபிலோனி யர்களால் புனித கன்னிமாதா என்று அழைக்கப்பட்டது. மேலும் ஷாமாஸ் (Shamash) என்ற கடவுளும் உண்டு. பாபிலோனியர்களின் முதன்மையான கடவுள் மார்டக் {Marduk) என்பதாகும். இந்த கடவுளை வணங்கபோகும் ஒவ்வொருவரும் தன்னைப் போன்ற ஒரு சிறிய களிமண் உருவத்தை கோவிலில்விட்டு வா வேண்டு ம். இப்படி விட்டு வரப்பட்ட எண்ணற்ற சிறிய உருவங்கள் கோவில்களில் கண்டெடுக்கப்பட்டுள்ளன

இவைகள் தவிர பல குடும்ப தேவதைகளும் உண்டு. இந்த சிறிய கடவுள் அந்த குடும்பத்தின் நன்மை தீமைகளுக்கு காரணமாயின கோவில்களில் . வழிபாடுகள் ஒழுங்காக நடைபெற்றன . வழிப்பாட்டின் போது இசைக்கருவிகள் மூலம் பாடல்கள் பாடப்பட்டது. கடவுளுக்கு உணவும், நீரும் பொதுவாகப் இது படைக்கப்பட்டது . சில சமயம் செம்மறி ஆடு பலியிடப்பட்டது. எல்லா சடங்கு முறைகளும் கோவில் மதகுரு

மூலமே நடைபெற வேண்டும் . வழிபாட்டின் போது மந்திரங்கள் ஓதப்பட்டன . வருடத்திற்கு ஒரு மு றை மார்டக் கடவுள் நகரத்தின் ஒவ்வொரு தெருவிலும் வலம் வருவார். அப்போது மக்களும் உடன் செல்ல வேண்டும்

அஷூர் பனிபால் (Ashurbanipal) என்ற இடத்தில் கண்டெடுக்கப்பட்ட பல களிமண் பலகைகளில், பிசாசு, ஆவிகளை விரட்டும் மந்திர சூத்திரங்கள் காணப்படுகின்றன . ஜோதிட பலன்களும் குறிக்கப்பட்டுள்ளன. பாபிலோ னியாவில் எண்ணற்ற புராண கதைகள் காணப்பட்டன . மூட நம்பிக்கையின் பிறப்பிடமாகவே பாபிலோனியா காட்சியளித்தது. உதாரணமாக ஒரு அரசனின் தலைவிதி என்னவென்று ஒரு நாயின் இயக்கத்தை வைத்து கணிக்க முடிந்தது

பாதியை பாபிலோனிய கடைகளில் வியாபரத்திற்கு கொண்டு வந்து குவித்தார்கள் இந்தியா, எகிப்து, ஆசியா மைனர் ஆகிய நாடுகளிலிருந்து வணிகர்கள் வந்தனர்

**வாணிபம்**

அரசாங்கம் வாணிபத்தை கட்டுப்படுத்தியது நாட்டின் சாலைகளைப் பயன்படுத்துவதற்குக் கூட வரிகட்ட வேண்டியதிருந்தது நெடுஞ்சாலை களையும் , யூப்ரடீஸ் நதியையும் பய ன்படுத்துவதே வியாபாரி க களுக்கு பாதுகாப்பாக இருந்தது . அரேபியா, டையர் (Tyre) ஆகிய பகுதிகளை நெபுகாட்நேசர் அடக்கியதால் பாபிலோனிய வாணிபம் இந்தியா மற்றும் மத்தியதரைக்கடலில் செழித்தோங்கியது . கப்பல் மூலம் வணிகம் செய்வது பாதுகாப்பாக இல்லை. காரணம் கடற்கொள்ளைக்காரர்களின் ஆபத்து அதிகமாகக் காணப்பட்டது.

பணவரவு செலவுகள் நல்லமுறையில் ஒழுங்குபடுத்தப்பட்டிருந்தன பாபிலோனியாவில் நாணய முறை பழக்கத்தில் இல்லா விட்டாலும் தங்கமும் , வெள்ளியும் செலவாணி முறையின் அடிப்படை அம்சமாக வைத்துக் கொள்ளப்பட்டன . ஒரு ஷேக்கல் (Shekel) என்பது தான் குறைந்த அளவு மதிப்புள்ள நாணய முறை ஆகும் . 60ஷேக்கல்கள் கொண்டது ஒரு மினா (Mina) என்றும், 60மினா ஒரு டேலந்தாகவும் கருதப்பட்டது. கடன்கள் 20% முதல் 33% வட்டிக்கு கொடுக்கப்பட்டன . வங்கிகள் இல்லாவிட்டாலும் ஒரு சில குடும்பங்கள் பரம்பரை பரம்பரையாக பணம் வட்டிக்கு கொடுத்து வந்தன் நாம் ஏற்கனவே பார்த்த படி கோவில் குருமார்களும் வட்டிக்கு கடன் வழங்கினர்.

பாபிலோனியர் நாகரிகம் ஒரு வாணிப நாகரிகமாகவே கருதப் படுகிறது . விற்பனை, கடன் ஒப்பந்தங்கள் , பங்குதாரர்கள், கடன் பத்திரங்கள் ஆகியவை சம்பந்தப்பட்ட பாபிலோனியரின் ஆவணங்களே நமக்கு அதிகம் கிடைத்துள்ளன . இவைகள் மூலம் பாபிலோனிய மக்கள் எந்த அளவுக்கு செழிப்பாக வாழ்ந்து வந்தனர் என்று அறிய முடிகிறது.

**6. எழுத்தும் இலக்கியமும்**

பாபிலோனிய மக்கள் களிமண் பலகைகளில் ஆப்பு வடிவ எழுத்துக்களையே (Cuneiform) எழுதினர். பல இடங்களில் இந்த எழுதப்பட்ட பலகைகள் அடுக்கி வைக்கப்பட்டு பாதுகாக்கப்பட்டன. பாபிலோனிய நூலகங்கள் பல அழிந்து விட்டாலும் போர்ஷிப்பா (Borshipa) என்ற நூலகத்தி லுள்ள பலகைகள் அடுக்கி பாதுகாக்கப்பட்டு சுமார் 30,000 எண்ணிக்கை கொண்டவை இன்றும் அஷுர்பனிபால் நூலகத்தில் வைக்கப்பட்டுள்ளன இவையே பாபிலோனிய நாகரிகத்தைப் பற்றி நமக்குத் தெரியப்படுத்தும் ஆதாரங்களாக விளங்குகின்றன. பாபிலோனிய எழுத்துக்களை ஹென்றி ராலின்சன் (Henry Rawlinson) என்ற ஆங்கிலேயர் 1835ல் படித்து அறிய முயற்சித்தார். தனது 12 ஆண்டுகால முயற்ச்சிக்கு பிறகு 1847ல் பாபிலோனிய மற்றும் அசிரிய எழுத்துக்களைப் படித்தறிவதில் வெற்றியடைந்தார்.

நிப்பூரில் காணப்படும் கூனிபார்ம் முறையிலான பாபிலோனிய எழுத்துப் பலகை தற்போது இங்கிலாந்து மியூசியத்தில் வைக்கப்பட்டிருக்கும் 12 உடைந்த களிமண் பலகைகளில் காணப்படும் குறிப்புகளிலிருந்து கில்காமிஷ் (Epic of Gilgamesh) என்ற பெரிய பாபிலோனிய காவியத்தை நாம் அறிய முடிகிறது இந்த காவியமானது உருக் (Uruk) நகரை ஆண்ட கில்காமிஷ் என்ற மன்னனைப் பற்றிய புராணக் கதையாகும்

**7. கலையும் விஞ்ஞானமும்**

பாபிலோனியாவில் கண்டெடுக்கப்பட்ட பளபளக்கும் கற்கள் , செம்பு, இரும்பு, வெள்ளி, தங்கத்தினால் செய்யப் பட்ட ஆபரணங்கள் மக்களின் கலையுணர்வை வெளிப்படுத்துகின்றன. பாபிலோனில் இசைக்கு அதிக முக்கியத்துவம் கொடுக்கப்பட்டது. பலவகைப்பட்ட இசைக்கருவிகள் அங்கு கண்டெடுக்கப்பட்டுள்ளன . ஓவியத்திலும் எகிப்தியர்களைப் போல பாபிலோனியர்கள் அவ்வளவு திறமை பெற்றவர்களாகக் காணப்படவில்லை . எகிப்திய கல்லறைகள் அழகு படுத்தப்பட்டது போல பாபிலோனியாவில் காணப்படவில்லை

பாபிலோனில் வீடுகள் குழைத்த மண்ணினால் கட்டப்பட்டன செங்கற்கள் நடுவில் வைக்கப்பட்டன . மூன்று அல்லது நான்கு அடுக்கு மாடி வீடுகள் கூட கட்டப்பட்டிருந்தன. கோவில்கள் பெரிய பீடங்களின் மேலே க ட்டப் பட்டன. போர்சிப்பா (Borsippa) விலுள்ள பெரிய ஜிகுராத் (Ziggurat) என்ற கட்டிடம் குறிப்பிடத்தக்கது

பெரும்பாலான மக்கள் வாணிபத்தில் பாடுபட்டதால் கணிதம் வளர்ச்சி யடைந்தது வட்டத்தை 360 டிகிரி ஆகவும், வருடத்தை 360 நாட்களாகவும் பிரித்தனர் வானவியலிலும் பாபிலோ னியர்கள் கணிசமான ஞானம் பெற்றிருந் தார்கள் நட்சத்திரங்களின் இருப்பிடங்களை ஆராய்ந்தார்கள் சந்திர சூரிய கிரகணங்கள் நிகழும் நாட்களை கணித்தார்கள் கோள்களை தங்கள் கடவுளாக வழிபட்டனர்

இவ்வாறு பாபிலோனிய நாகரிகம் பல சிறப்பு அம்சங்களைக் கொண்டதாகவும் , பல நாகரிகங்களுக்கு முன்னோடியாகவும் விளங்கியது

### அசிரிய நாகரிகம்(Assyrian Civilization)

பாபிலோனுக்கு வடக்கே முன்னூறு மைல் தூரத்தில் தோன்றிய மற்றொரு நாகரிகமே அசிரியநாகரிகம் ஆகும் . இது மலைவாழ் பழங்குடியி னரின் நெருக்குதல்கட்கு உட்பட்டு தோன்றிய ராணுவ வாழ்க்கையுடன் கூடிய நாக ரிகமாகும் அசிரியா தனது தாய் நகரங்களான ஈளம் , சுமேரியா, அக்காட், பாபிலோனியா ஆகியவைகளை வென்றது. பொனிஷியா மற்றும் எகிப்து ஆகியவற்றின் மீது ஆதிக்கம் கொண்டது. சுமார் இரண்டு நூற்றாண்டு காலம் அண்மைக்கிழக்குப் (Near East) பகுதியில் ஆதிக்கம் கொண்டிருந்தது . இந்த நாகரி கம் சுமேரியா ஒரு புதிய நாகரிகத்தை அளித்தது. பாபிலோனியா அதை மேலும் வளர்ச்சியடையச் செய்தது . அசிரியா இந்த நாகரிகத்தின் சிறப்பைச் சிறிது அதிகரித்ததுடன் அதனைப் பாதுகாக்கவும் செய்தது

அசிரியா நான்கு நகரங்களை உள்ளடக்கியது ஆகும் . அவை அஹூர், அர்பேலா, கலாக், நினிவே (Ashur, Arbela, Kalah, Nineveh) ஆகியவையாகும். இவைகளில் நினிவே தலைநகராக விளங்கியது. நினிவேக்கு அருகே டெபோகௌரா (Tapogawra) என்ற இடத்தில் நடைபெற்ற அகழ்வாராய்ச்சியின் போது அசிரிய நாகரிகம் பற்றி தெரிய வந்தது . அசிரிய நாகரிகம் அஹூர் பனிபால் (Ashurbanipal) என்பவரின் காலத்தில் உச்ச நிலை அடைந்திருந்தது

**அசிரிய நாகரிகத்தின் சிறப்புக் கூறுகள்**

**1. அசிரிய ஆட்சியாளர்கள்**

சிதறிக்கிடந்த சிறுசிறு நகர அரசுகளை ஒன்று சேர்த்து ஒரு அரசை உருவாக்கியவர் முதலாம் ஷால்மனேசர் (Shalmaneser) என்பவராவார் இவர் கலாக் என்ற நகரை தலைநகராக்கினார். ஆனால் அசிரிய வரலாற்றில் முதலாவது குறிப்பிடப்படும் பெயர் முதலாம் திக்லத் பிலேசர் (Tiglath Pileser) என்பவராவார். இவர் 120 சிங்கங்களை நேருக்கு நேரும், 800 சிங்கங்களை ரதத்திலிருந்தும் கொன்றாராம். இவரது கல்வெட்டிலிருந்து பல செய்திகளை நாம் அறிய முடிகி றது. கும்மா (Qumanu) என்ற நகரைத் தாக்கி கொள்ளையிட்டார்.

சென்னா செரிப் காலத்தில் முப்பது மைல் தூரத்தில் தண்ணீர் எடுத்து வர வாய்க்கால் (Aqueduct) வெட்டப்பட்டது. இந்தக் கல்வாயின் ஆயிரம் அடிதூரம் சமீபத்தில் சிக்ககோ பல்கலைக்கழக ஈராக்கிய ஆராய்ச்சியாளர்களால் கண்டுபிடிக்கப்பட்டது.

தொழிற்துறை மற்றும் வங்கித்துறை ஆகியவற்றில் தனியார் மூலதனம் அதிக அளவில் காணப்பட்டது . செம்பு, வெள்ளி, தங்கம் ஆகியவை நாணயமாற்றாகக் பயன்பட்டன. கி.மு. 700-ல் சென்னா செரிப் காலத்தில் அரசு சார்பில் வெள்ளி நாணயம் (Half Shekel Piece) வெளியிடப்பட்டது இது மிகப் பழமையான அரசு வெளியிட்ட நாணயமாகும்

அடனாஷ், ஹிடைட், ஆர்மினியர், (Adanash, Hittites, Armenians) ஆகியோரை வென்றார் பாபிலோனையும் கைப்பற்றினார் தனது வெற்றிகளின் காரணமாக , அசிரியக் கடவுள்களுக்கு கோவில் கட்டினார்.

இரண்டாம் அஷுர் நசீர்பால் பன்னிரெண்டு சி றிய நாடுகளைக் கைப்பற்றினார் இரண்டாம் ஷால் மனேசர் டமாஸ்கஸ் வரை படையெடுத்தார் 16000 அசிரியர்களைக் கொன்று குவித்தார் மூன்றாம் திக்லத் பிலேசர் என்பவர் பல ராணுவ வெற்றிகளை அடைந்தார் காக்கசிலிருந்து எகிப்து வரை அசிரிய ஆதிக்கத்தை நிலை நாட்டினார்

சென்னா செரிப் (Sennacherib 705-681 BC) என்பவா பாரசீக வளைகுடாவில் தோன்றிய கிளர்ச்சிகளை அடக்கினார் 89 நகரங்கள் 820 கிராமங்களை வெற்றிகண்டார். 7200 குதிரைகள், 11,000 கழுதைகள், 8000 காளைகள், 8 லட்சம் ஆடுகள் , 2,08,000 கைதிகளைப் பிடித்து வந்தார் பாபிலோன் சுதந்திரத்தை விரும்பி கி ளர்ச்சியில் ஈடுபட்டதால் எரிச்சலடைந்த சென்னாசெரிப் பாபிலோனை தரைமட்டமாக்கினார் . மக்கள் கொன்று குவிக்கப்பட்டனர் . பாபிலோனியக் கடவுளான மார்டக் (Mardug) கும் சிறைபிடிக்கப்பட்டார். இந்தக்கடவுள் அசிரியக் கடவுளான அஷுருக்கு (Ashur) வேலைக்காரனாக்கப்பட்டார். நினிவே நகரை சிறப்பாகக் கட்டினார்.

அதன்பிறகு அவூர்பனிபால் (Ashurbanibal) நீண்ட காலம் ஆட்சி புரிந்தார் அப்போதுதான் அசிரியா புகழிலும் செல்வத்திலும் உச்ச நிலையை அடைந்தது . இவரைப் பற்றிய பல குறிப்புகள் நமக்கு கிடைத்துள்ளது. இவர் பல வெற்றிகளைப் பெற்றார். ஈளம் (Elam) அரசர் தோற்கடிக்கப்பட்டு அவரது தலை வெட்டி கொண்டுவரப்பட்டு நினிவே நகர வாசலில் குத்திவைக்கப்பட்டது ஈளம் படைத்தளபதி டானானு (Da) உயிருடன் தோலுரிக்கப்பட்டார். நாட்டின் அமைதிக்காக காட்டுமிராண்டித்தனமான நடவடிக்கைகளில் ஈடுபட்டனர் . மாளிகைகள் நல்ல வேலைப்பாடுகளுடன் கட் டப்பட்டன சுமேரியா , பாபிலோனியாவிலிருந்து நல்ல இலக்கியங்கள் தருவிக்கப்பட்டு நினிவே நூலகத்தில் வைக்கப்பட்டது.

**2. அசிரிய அரசாங்கம்**

அசிரிய அரசு ஏகாதிபத்தியக் கொள்கையின் அடிப்படையில் அமைக்கப்பட்டது . நாடுமுழுவதும் ஒரே மாதிரியான சட்டம் , பாதுகாப்பு முறை வாணிப முறை அமைக்கப்பட்டது. அஷுர்பனிபாலின் ஆட்சியின் போது அசிரியா , பாபிலோனியா, ஆர்மினியா, மீடியா, பாலஸ்தீனம், சீரியா, போனிஷியா, அமேரியா, ஈளம், எகிப்து ஆகிய நாடுகளை உள்ளடக்கியதாக இருந்தது . அசிரிய பேரரசு ஒரு தளர் கூட்டிணைவாகவே காணப்பட்டது ஒவ்வொரு நாடும் கப்பம் ஒழுங்காகச் செலுத்தி விட்டு அதனதன் சமயம் மற்றும் கொள்கைகளைப் பின்பற்றிக் கொள்ளலாம் . எனவேதான் மறுபடி கிளர்ச்சிகள் ஏற்பட்டன . எனவேதான் மூன்றாம் திக்லத் பிலாசர் கிளர்ச்சி செய்த மக்களை பல இடங்களுக்கு கொண்டு சென்று கலந்து வாழச் செய்தார். இதனால் அவர்கள் ஒற்றுமை பாதிக்கப்பட் டு மீண்டும் கிளர்ச்சியில் ஈடுபடாமல் இருக்கவே இவ்வித ஏற்பாடு செய்தார்.

**3. அசிரியப்படை**

படைதான் அசிரிய அரசாங்கத்தின் முக்கிய அங்கமாக இருந்தது அசிரியப்படை பலசிறப்பம்சங்களைக் கொண்டு விளங்கியது தேர்ப்படை , குதிரைப்படை, தரைப்படை ஆகியவை முக்கியப் பிரிவுகளாகும் ராணு வ தொழில் நுட்பபிரிவினரும் (Sappers) இருந்தனர். படையில் பல தொழில் நுணுக்கங்கள் பின்பற்றப்பட்டது. எதிர்பாராத தாக்குதல் முக்கிய அம்சமாக இருந்தது . இரும்பு, செம்புக்கவசங்கள், பெரியகேடயங்கள், தோல் ஆடை ஆகியவை பயன் படுத்தப்பட்டன. அம்பு, நீண்ட ஈட்டி (Lance) கொடுவாள், (Cutlass) கதாயுதம் (Maco) கனத்ததடி (Club) கல்எறியும் கவண் (Sling) கோடாலி ஆகியவை போரில் பயன்படுத்தப்பட்டன

அரசரே போரில் நேரடியாகத் தலைமைத் தாங்கினார் . ரதங்களிலிருந்து அரசர் போர் புரிந்தார் . அவூர்பனிபால் குதிரைப்படை மூலம் பல வெற்றிகள் பெற்றார் . முற்றுகையின் போது தீப்பந்து வீசப்பட்டது . பொதுவாக பிடிபட்ட நகரங்கள் தரைமட்டமாக்கப்பட்டன. கொள்ளைப் பொருட்கள் வீரர்களுக்குப் பங்கிட்டு கொடுக்கப்பட்டது. பிடிபட்டவர்கள் கொலை செய்யப்பட்டனர் . காது, மூக்கு, கை, கால்கள் வெட்டப்படுதல் , உயரத்திலிருந்து வீசி எறிந்து கொ ல்லுதல், உயிருடன் எரித்தல், குறைவான தீயில் வாட்டப்பட்டு கொல்லுதல் ஆகிய காட்டுமிராண்டித்தனமாக செயல்கள் காணப்பட்டன

**4. சமயம்**

அசிரியாவில் மதகுருமார்கள் முக்கியத்தவம் பெற்றனர் . நாட்டின் எல்லா நடவடிக்கைகளும் கடவுளின் பெயராலயே நடைபெற்றன . சட்டங்கள் எல்லாம் கடவுளின் விருப்பங்களேயாகும் வசூலிக்கப்படும் வரி கடவுளின் கருவூலத்திற்கே போய் சேரும். போரின் மூலம் பெரும் நிலப்பகுதி , புகழ் எல்லாம் கடவுளுக்கே அர்பணிக்கப்பட்டன. சூரியக் கடவுளான ஷாமாஷின் (Shamash) மறுபிறப்பாகவே அரசர் கருதப்பட்டார். பொதுவாக அசிரிய சமயக் கருத்துக்கள் பாபிலோனியா, சுமேரியாவிலிருந்து பெறப்பட்டவையே யாகும்

அசிரிய சமுதாயத்தில் காணப்பட்ட கொடூரத்தன்மைகளுக்கு சமயம் (ந்த தடையும் செய்யவில்லை . அசிரிய தேசியக்கடவுள் அவூர் (Ashur) ஆவார். இவரது பெயரிலேயே ஒரு நகரம் அமைக்கப்பட்டது. இந்தக் கடவுள் எனது பீடத்தில் கைதிகள் பலியிடுவதைக் கண்டு பரமதிருப்தியடைந்தார் . அசிரிய சமுதாயத்தில் சகுனங்கள் முக்கியப் பங்கு வகித்தன . சகுனங்களின் பட்டியல் ஒன்று நமக்கு கிடைத்துள்ளது . பேய்பிசாசுகள் பற்றிய செய்திகள் மயத்தின் அடிப்படையிலேயே அமைந்திருந்தன

**5. அசிரியசட்டம்**

சட்டப் அவூர் நகரில் கி மு 1300-ஐச் சேர்ந்த அசிரிய மூன்று பலகைகள் கண்டெடுக்கப்பட்டுள்ளது அசிரிய சட்டம் 90 பிரிவுகளைக் கொண்டது இச்சட்டங்கள் கொடூரத்தன்மை கொண்டதாகவும் இரக்கமற்ற தாகவும் , காட்டுமிராண்டித்தனமாகவும் காணப்படுகிறது கட்டாய வேலை 20முதல் 100 சாட்டையடிகள், நாக்கை பிடுங்குதல், கழுவேற்றுதல் (Impalement), விஷம் குடிக்கவைத்தல் , குற்றவாளியின் மகன் அல்லது மகளை

அவன் முன்பே உயிருடன் எரித்தல் , தலையை வெட்டுதல் போன்ற கொடூர தண்டனைகள் வழங்கப்பட்டன

**6. ஸ்தல ஆட்சி**

ஆரம்பத்தில் ஸ்தல ஆட்சி முறை உயர்குடியினரின் கையில் இருந்தது ஆனால் பின்னர் அர சரால் நியமிக்கப்பட்ட ஆளுநர்கள் , பிரிபெக்ட்கள் ஆகியோர் பொறுப்பில் வைக்கப்பட்டது இந்த மாதிரியான ஆட்சி முறை அசிரியாவிலிருந்து பெர்சியாவுக்கும் பின்னர் ரோமுக்கும் பரவியது . வரிவசூல் செய்வது, கட்டாய வேலை முறையை (Carvee) ஒழுங்கு செய்தல், படைதிரட்டிக் கொடுத்தல் ஆகியவை ஸ்தல ஆட்சி நிறுவனங்களின் கடமையாக இருந்தது இந்த அதிகாரிகளைக் கண்காணிக்க ஒற்றர் முறையும் இருந்தது

மொத்தத்தில் அசிரிய அரசாங்கம் ஒரு ராணுவ அரசாங்கமாகவே இருந்தது போர் மூலமே அரசு அதிக நன்மையடைந்தது . நாட்டின் சட்டம் ஒழுங்கு , தேசப்பற்று, அரச அதிகாரம், அமைதி ஆகியவை போர் மூலமே நிலை நாட்டப்பட்டது . ஆனாலும் வன்முறைகளினால் அரசர்களின் ஆட்சி வலுவிழந்தது . கலகங்களும், கிளர்ச்சிகளும் அடிக்கடி ஏற்பட்டன. ஒவ்வொரு ஆட்சி மாறும் போதும் வாரிசுரிமை பற்றிய பிரச்சனை ஏற்பட்டு குழப்பம் நிலவியது . அசிரிய அரசாங்கத்தில் காட்டு மிராண்டி த்தனமான (Barbarianism) தன்மைகளே அதிகம் காணப்பட்டது

**7.பொருளாதார நிலை**

அசிரியப் பொருளாதர நிலை பாபிலோனியப் பொருளாதா நிலையிலிருந்து அதிக வேறுபாடு இல்லை . காரணம் இவை ஒரு நாகரிகத்தின் தெற்கு வடக்கு பகுதியாகவே விளங்கின அசிரியாவில் விவசாயமே முக்கியத் தொழிலாக இருந்த து. பார்லி, தினை, சோழம், எள் (Sa...) ஆகியவை பயிரிடப்பட்டன. நினிவே வியாபாரத்தின் மைய இடமாக விளங்கியது ' நாட்டில் உலோகப் பொருட்கள் மூலம் அதிக வளம் ஏற்பட்டது. கி வெண்கலத்திற்குப் பதிலாக இரும்பு உபயோகம் அதிகரித்தது . ஆயுதப்பொருட் களுக்கும் , தொழிற்துறைக்கும் இரு ம்பே அடிப்படை உலோகமாக மாறியது. மு 700-ல் சென்னா செரிப் காலத்தில் முப்பது மைல் தூரத்தில் தண்ணீர் எடுத்து வர வாய்க்கால் (Aque...) வெட்டப்பட்டது. இந்தக் கல்வாயின் ஆயிரம் அடிதூரம் சமீபத்தில் சிக்ககோ பல்கலைக்கழக ஈராக்கிய ஆராய்ச்சியாளர்களால் கண்டுபிடிக்கப்பட்டது. தொழிற்துறை மற்றும் வங்கித்துறை ஆகியவற்றில் தனியார் மூலதனம் அதிக அளவில் காணப்பட்டது . செம்பு, வெள்ளி, தங்கம் ஆகியவை

நாணயமாற்றாகக் பயன்பட்டன. கி.மு. 700-ல் சென்னா செரிப் காலத்தில் அரசு சார்பில் வெள்ளி நாணயம் (Half shekel) வெளியிடப்பட்டது இது மிகப் பழமையான அரசு வெளியிட்ட நாணயமாகும்

**8. சமுதாய நிலை**

அசிரிய சமுதாயத்தில் ஐந்து வகையான பிரிவு மக்கள் காணப்பட்டனர் அவர்கள் உயர்குடியினர், கைவினைஞர்கள், குடியானவர்கள், விவசாய அடிமைகள், அடிமைகள் (Non-Persons) ஆகியோர் ஆவர். நாட்டில் குழந்தை பிறப்பு விகிதம் அதிகமாக இருந்தது. கருக்கலைப்பு செய்வது பெருங்குற்ற மாகக் கருதப்பட்டது. கருக்கலைப்புக்கு முயற்சித்து இறந்து விட்டால் கூட அந்த பெண் கழுவேற்றப் (Impaled) படுவாள். பாபிலோனைவிட அசிரியப் பெண்கள் நிலை இழிவானதாகவே இருந்தது முகத்திரை இல்லாமல் பெண்கள் வெளியே வரக்கூடாது. கணவர்களை அடிக்கும் பெண்களுக்கு கடுமையான தண்டனை வழங்கப்பட்டது கணவர் பிற பெண்களிடம் கள்ளத் தொடர்பு (Concubines) வைத்திருந்தால் கூட கணவரிடம் மனைவி விசுவாசமாக இருக்க வேண்டும்

அரசர் பல அழகான பெண்களைக் கொண்ட அந்தப்புரம் (Harem) வைத்திருந்தார். அந்தப் பெண்கள் தனியே ஒதுக்கப்பட்ட வாழ்க்கையே வாழ்ந்து வந்தனர்

மக்கள் வாழ்வில் காட்டுமிராண்டித்தனமே அதிகமாகக் காணப்பட்டது கண்களைத் தோண்டுதல், உயிருடன் தோலை உரித்தல், கழுவேற்றுதல் போன்ற கொடூரச் செயல்கள் சமுதாயத்தில் காணப்பட்டன அஷுர்பனிபால் சுமார் 3000 கைதிகளை எரித்தே கொன்று கடவுளை சந்தோஷப்படுத்தினாராம்

அரசர்களின் செயல்பாடுகள் எழுதிவைக்கப்பட்டன செய்திகள் தொகுக்கப்பட்டன. நாகரிக வரலாற்றில் அசிரியா சிறப்பிடம் பெற முக்கியக்காரணம் அதன் நூலகங்கள் ஆகும். பழைய இலக்கியங்களின் படிவங்கள் எடுக்கப்பட்டு பாதுகாக்கப்பட்டன பாபிலோனிய இலக்கியங்கள் அழியாமல் பாதுகாக்கப்பட்டன. அஷுர்பனிபாலின் 30 களிமண் பலகைகள் (Clay tablets) கிடைத்துள்ளன. ஜோதிடக் குறிப்புகள், மருத்துவக் குறிப்புகள் பக்திப்பாடல்கள், கடவுள் வணக்கப்பாடல்கள், அரசர்களின் வம்சாவழிக் குறிப்புகள் ஆகியவை பாதுகாக்கப்பட்டன அரசர் அஷுர்பனிபால் ஒரு புத்தகபிரியர் ஆவார்

**9. அசிரியக் கலை**

கலையில் மட்டுமே அசிரியா பாபிலோனியாவுடன் சமநிகள் வகிக்கிறது சில சமயம் மிஞ்சியும் எளது அஷா , கலாக, நிவின் கலைஞர்கள் பலவகைப்பட்ட

வேலைப்பாடுகள் மிகுந்த ஆபரணங்கள் செய்கனா ஆடம்பர வீட்டுப் பொருட்கள் விலை உயர்ந்த மரங்களினால் , செய்யப்பட்டன அசிரியர் ஓவியங்களில் முதலிடம் வகிக்கின்றனர்.

மனித உருவங்கள் , மிருக உருவங்கள் மிககச்சிதமாக வரையப்பட்ட அகன் அசைவுகள், உணர்வுகள் தெளிவாக வெளிப்படுத்தப்பட்டன இரண்டாம் , சாசோன்சால குதிரை ஓவியங்கள் புகழ் பெற்றவை சென்னா செ ரியாக காயமடைந்த பெண்சிங்க உருவம், அஷ்ர் பனிபாலின் இறந்து கொண்டிருக்கும் சிங்கம் ஆகிய ஒவியங்கள் புகழ் பெற்றவை. சிற்பக்கலையிலும் அசிரியர்கள் புகழ் பெற்று விளங்கினா மிருகம் களின் சிற்பங்கள் இயற்கையாக செதுக்கப்பட்டுள்ளன இங்கிலாந்து மியூசிய திலுள்ள அஷுர்பனிபாலின் பெரிய சிற்பம் பிரமாண்டமானதாக காட்சி யளிக்கிறது கொடூரமான கண்கள், தடித்த உதடுகள் , பெரிய பாதங்கள் ஆகியவை பார்ப்பதற்கு மிகவும் கடுமையானதாக உள்ளது

9. **அசிரியக் கலை Assyri an Art**

கலையில் மட்டுமே அசிரியா பாபிலோனியாவுடன் சமநிகள் வகிக்கிறது சில சமயம் மிஞ்சியும் எள து அஷா , கலாக, நிவின் கலைஞர்கள் பலவகைப்பட்ட வேலைப்பாடுகள் மிகுந்த ஆபரணங்கள் செய்கனா ஆடம்பர வீட்டுப் பொருட்கள் விலை உயர்ந்த மரங்களினால் , செய்யப்பட்டன அசிரியர் ஓவியங்களில் முதலிடம் வகிக்கின்றனர்.

மனித உருவங்கள் , மிருக உருவங்கள் மிககச்சிதமாக வரையப்பட்ட அகன் அசைவுகள், உணர்வுகள் தெளிவாக வெளிப்படுத்தப்பட்டன இரண்டாம் , சாசோன்சால குதிரை ஓவியங்கள் புகழ் பெற்றவை சென்னா செரியாக காயமடைந்த பெண்சிங்க உருவம், அஷ்ர் பனிபாலின் இறந்து கொண்டிருக்கும் சிங்கம் ஆகிய ஒவியங்கள் புகழ் பெற்றவை.

சிற்பக்கலையிலும் அசிரியர்கள் புகழ்பெற்று விளங்கினா மிருகம் களின் சிற்பங்கள் இயற்கையாக செதுக்கப்பட்டுள்ளன இங்கிலாந்து மியூசிய திலுள்ள அஷுர்பனிபாலின் பெரிய சிற்பம் பிரமாண்டமானதாக காட்சி யளிக்கிறது கொடூரமான கண்கள், தடித்த உதடுகள் , பெரிய பாதங்கள் ஆகியவை பார்ப்பதற்கு மிகவும் கடுமையானதாக உள்ளது

**அசிரிய நாகரிகத்தின் அழிவு**

அவூர் பனிபால் தனது மாளிகைக்குத் தீவைத்து விட்டு தானும் அதில் இறந்து விட்டார் என்று சொல்லப்படுகிறது இது அசிரியாவே அழிவதற்கு ஒரு அடையாளமாகக் கருதப்பட்டது. அசிரியாவின் செல்வம், புகழ் அனைத்தும் போர் மூலமே கிடைத்தது . ஆனால் ஒவ்வொரு போரிலும் வலிமையான எண்ணற்ற மக்கள் இறந்தனர் . போரில் பிடித்து வரப்பட்ட கைதிகளா நாட்டுவளம் , தேச ஒற்றுமை பாதிக்கப்பட்டது . பல இடங்களிலிருந்தும் கொண்டுவரப்பட்ட மக்கள் வெவ்வேறு இனத்தைச் சேர்ந்தவர்களாக இருந்தனா வர்கள் படையில் சேர்ந்ததால் படைவலிமை குன்றியது தேவையற்ற போர்களால் அசிரியர் வலிமை இழந்தனர்

அவூர் பனிபால் கி மு 626-ல் இறந்தார் அவர் இறந்த 14 ஆண்டுகளுக்குப் பிறகு நெபோபாலேசர் (Nabopolassar) தலைமையில் பாபிலோனியர் சையாக்ரசின் (Cyaxares) மீடிஸ் படையுடனும் காகசின் ஸ்கிதியப் படையுடனும் சேர்ந்து ஆசிரியாவின் வடபகுதியைப் பிடித் தனா எப்படி அசிரியர் சூசா , பாபிலோன் நகரங்களை தரைமட்டம் ஆக்கினார்களோ அதே போன்று அசிரிய தலைநகர் நினிவே தரைமட்டம் ஆக்கப்பட்டது . மக்கள் படுகொலை செய்யப்பட்டனர். மாளிகைகள், வீடுகள் தரை மட்டம் ஆயின . ஒரே அடியில் அசிரியா வரலாற்றிலிருந்தே மறைந்தது

200 ஆண்டுகளுக்குப்பின்னர் செனபோனின் (Sen[illegible]) பத்தாயிரம் படையினர் இந்த அழிந்து போன அசிரிய பேரரசின் தலைநகரான நினிவே வழியாக சென்றது . ஆனால் அவர்கள் அந்த இடமானது உலகத்தில் பாதிப் பகுதியை ஆட்சி புரிந்த ஒரு மாநகர் (Metropolis இருந்த இடம் என்று சிறிது கூட சந்தேகப்படவில்லை . காரணம் நினிவே நகரை அழகுபடுத்திய கோவில்களின் ஒரு கல்கூட காணப்படவில்லை . ஏன், என்றும் அழியா அசிரியக் கடவுள் அவூர் கூட இறந்து விட்டார்

மன்னர்கள் ஆட்சி புரிந்தனர் கி மு 1085-க்கும் 332 ம் வருடத்திற்கும் இன இடையில் எகிப்திய அரசு வம்சங்கள் வீழ்ச்சியடைந்தன. கி மு 525-ல் எகிப்து அராபிய ஆட்சிக்கு உட்பட்டது . அதற்கு இருநூறு ஆண்டுகளுக்குப் பிறகு எகிப்து அலெக்சாந்தரால் கைப்பற்றப்பட்டது . அத்துடன் எகிப்திய அரசு பரம்பரை முடிவுக்கு வந்தது.

**3) பாரோக்கள்**

பண்டைய எகிப்திய மன்னர்கள் பாரோக்கள் எனப்படுவர் . பெரோ (Per) என்றால் எகிப்திய மொழியில் பெரியவீடு (Great House) என்று பொருள். பெரிய வீட்டிலிருந்து அரசன் தனது நடவடிக்கைகளை மேற்கொண்டான் . அவனது அலுவல்களின் மைய இடமே இந்த பெரோ ஆகும் . அந்த பெரோ என்ற இடத்திலிருந்து செயல்பட்டு வந்த அரசனைக் குறிப்பிடும் போது யூதர்கள் பாரோ (Pharaoh) என்று மொழிமாற்றம் செய்து விட்டார்கள் . எகிப்திய அரசனுக்கு பாரோ என்ற பெயர் இப்படித்தான் வந்தது

பாரோ மன்னர் எல்லா மக்களுக்கும் கடவுளாக விளங்கினார் . அவர்கள் கடவுள் தன்மை கொண்டவர்கள் என்று கருதப்பட்டு வணக்கத்திற்கு உரியவர்களாக விளங்கினர் இவர்கள் பண்டைய எகிப்தின் வட தென்பகுதியை ஒன்றாக இணைத்ததை குறிக்கும் வகையில் ஒரு இரட்டை மகுடத்தை அணிந்தனர் . பகட்டான ஆடை அணிந்தனர் . ஆடையின் ஒரு பகுதிகளிலும் கழுகு , பாம்புசின்னம் காணப்படும். பாரோ மன்னர்கள் அளவற்ற அதிகாரம் பெற்றிருந்தனர் . மிக ஆடம்பரமான வாழ்க்கை நடத்தினர் . மாபெரும் அரண்மனை களில் வாழ்ந்தனர் . ஆயிரக்கண்க்கான அடிமைகளை வைத்திருந்தனர். பாரோ மன்னரின் முடிசூட்டு விழா மிக சிறப்புடன் நடைபெறும்

பண்டைய எகிப்திய மக்கள் மரணம் என்பது நீண்ட உறக்கம் என்றும் மீண்டும் உயிர் பெற்று நடமாடமுடியம் என்றும் உறுதியாக நம்பினர் . எனவே தான் இறந்தவர்களை அடக்கம் செய்து சுற்றி பெரிய கல்லறை எழுப்பினர் பாரோ மன்னர்களுக்கு எழுப்பப்பட்ட கல்லறைதான் பிரமிடுகள் எனப்படும் சோசர் என்ற பாரோ மன்னர்தான் முதல் முதலாக சக்கரா என்ற இடத்தில 'ஸ்டெப்பிரமிடு' ஒன்றை எழுப்பினார். அதற்குப்பிறகு பிரமிடுகள் கட்டுவதில் பாரோ மன்னர்கள் மிகுந்த ஆர்வம் காட்டினர். கீசே (Giza) என்ற இடத்தில் கூஃபூ என்ற பாரோவால் கட்டப்பட்ட பிரமிடுதான் மிகப் பெரியதாகும்.

பாரோ எல்லாம் வல்ல கதிரவக் கடவுளான இரா (Ra) என்பாரின் தனிப் புதல்வன் என்று தம்மைக் கூறிக் கொண்டார். குடிமக்களும் அதை ஏற்றக் கொண்டார்கள். அவரது பாதங்களை முத்தமிடுதல் கிடைத்தற்கரிய பேறாக கருதப்பட்டது . ஒரு சிலரே அச்சிறப்புரிமையைப் பெற்றிருந்தனர் . சாதாரண மக்கள் மன்னரின் கால் தூசியை மட்டுமே முத்தமிட அனுமதிக்கப்பட்டனர். பாரோ தனது தெய்வீகத்தன்மை கெடாமல் இருப்பதற்காக சொந்தக் குடும்பத்திலேயே மணந்து கொண் டார். பல நேரங்களில்

தங்கள் சகோதரிகளையே மணந்து கொண்டனர் . இது தவிர அந்தபுரத்தில் நூற்றுக்கணக்கான அழகான பெண்களையும் வைத்துக் கொண்டார்

**3) அரசாங்கம்**

**a) அரசர்**

நாட்டின் நிர்வாகத் தலைவர் . அரசரே பண்டைக்கால எகிப்திய அரசு சமயசார்பற்ற அரசாக (Theocracy) விளங்கியது. அதனை ஒரு தனி வல்லரசு என்று கூற முடியாது. கடவுளின் ஏஜெண்டாக இருந்து அவரது சார்பாக நீதியையும் சமுதாய ஒழுங்கையும் நிலைநாட்டுவதே. தம் கடமை என்று நம்பி அரசர்கள் செயல்பட்டனர் . அரசனுக்கு ஆலாசனை சொல்லுவதற்கு சாரு (Saru ) or Great என்ற சான்றோர் சபை இருந்தது. ஆனால் அதற்கு கீழ்படிய வேண்டுமென்ற கட்டாயம் அரசருக்கு இல்லை

பாரோவுடன் பிரபுக்கள் , எழுத்தர்கள், நகல் எடுப்பவர்கள் நாட்டில் சட்டம் ஒழுங்கை கவனித்து வந்தார்கள் . நாட்டில் சென்சஸ் எடுக்கப்பட்டது . வருமானவரி கணக்குகள் சரிபார்க்கப்பட்டன . நைல்நதியின் எழுச்சியை நிலோ மீட்டர் (Nilometer) என்ற கருவியைக் கொண்டு கணக்கிட்டனர் . வானிலை கணிக்கப்பட்டு மக்களுக்கு தெரிவிக்கப்பட்டது. அறுவடையின் அளவு , அரசின் எதிர்கால வருமானம் ஆகியவை பற்றி கணிப்பு செய்யப்பட்டன.

**b) நிர்வாகம்**

நிர்வாகம் சிறப்பான முறையில் சீரமைக்கப்பட்டிருந்தது . நிர்வாகத் தலைவராக வாசிர் (Vizier) என்பவர் விளங்கினார் . இவர் முதன் மந்திரி போல செயல்பட்டார் . நிதிக் கண்காணிப்பாளர், தலைமைக் கட்டிடக் கலைஞர் ஆகியோர் நியமிக்கப்பட்டனர் . நாடு நோம் (Nome) என்ற 42- மாநிலங்களாகப் பிரிக்கப்பட்டு ஒவ்வொன்றிற்கும் ஒரு ஆளுநர் நியமிக்கப்பட்டார். வாசிர் என்பவர் ஒவ்வொரு நாளும் காலையில் ஏழைமக்களிடம் விண்ணப்பங்கள் பெற்று அவர்களின் தேவைகளைக் கவனிப்பார் . அரச பதவி பரம்பரையாக வந்ததால் இளவரசர் அரியணை ஏறும் முன்பே நாட்டின் நிர்வாகத் துறையில் நல்ல பயிற்சி கொடுக்கப்பட்டது

**c) நீதிமுறை**

நீதி வழங்குவதற்கு அரசன் தனிப்பட்ட நீதிபதிகளை நியமிக்கவில்லை தானே உச்சநீதி மன்றமாக செயல்பட்டார். என்றாலும் நிர்வாக அதிகாரிகளுக்கு நீதி வழங்கும் அதிகாரமும் அளித்திருந்தார் . நாட்டில் ஆறு வகையான நீதி மன்றங்கள்

ஏற்படுத்தப்பட்டன. மெம்பிஸ், தீப்ஸ், ஹெலிகோபோலிஸ் ஆகிய இடங்களில் உயர்நீதி மன்றங்கள் அமைக்கப்பட்டன. சில சமயங்களில் பாரோவிடம் மக்கள் மேல் முறையீடு செய்ய அனுமதிக்கப்பட்டனர் தடியால் அடிப்பது , காது, கை, நாக்கு ஆகியவற்றை அறுப்பது. தூக்கிலிடுவது, தலைதுண்டிப்பது ஆகிய தண்டனைகள் வழங்கப்பட்டன ஒரு சில குற்றவாளிகள் தாங்களாகவே சாவதற்கு அனுமதிக்கப்பட்டது. குற்றவாளிகளிடமிருந்து உண்மையைப் பெற சித்திரவதை கையாளப்பட்டது . சிவில், கிரிமினல் சட்டங்கள் நல்ல வளர்ச்சி நிலையை அடைந்திருந்தன

**ஆ) படை**

எகிப்திய பேரரசில் அரசனுக்கென்று தனி நிலைப்படை இருக்கவில்லை உள்நாட்டுக் கலவரத்தை அடக்க ஒவ்வொரு மாவட்டத்திலும் சிறுசிறு படைகள் இருந்தன. வெளிநாட்டுப் படையெடுப்பின் போது இந்த மாவட்ட டப்படைகளையே ஒன்று சேர்த்து மன்னர் படையைத் தயாரித்தார் . நீண்ட நெடுங்காலமாக எகிப்து மீது எந்த நாடும் தாக்குதல் நடத்தாததால் தேசியப்படை ஒன்றை அமைக்க அரசர் தவறி விட்டார். எனவேதான் ஐக்கோஸ் (Hyk) என்ற நாடோடிகளிடம் எகிப்திய மன்னர் தோல்வியடைய நேரிட்டது

**இ) வருமானம்**

அரசனுடைய வருமானம் பெரும்பாலும் நிலவரியிலிருந்தே கிடைத்தது. வரிகள் பெரும்பாலும் தானியமாகவே அளிக்கப்பட்டதால் தலைநகரில் பலதானியக் கிடங்குகள் இருந்தன. குடியானவர்களிடம் வரிவசூல் செய்யும் பொறுப்பு மாநில ஆளுநர்களைச் சார்ந்தது. வசூலித்த தானியத்தில் ஒரு பகுதியை மன்னருக்கு கொடுத்து விட்டு மீதியை தாங்களே எடுத்துக் கொண்டனர் . எகிப்திய நிலங்கள் யாவும் மன்னருக்கே சொந்தம் . உழுது பயிரிட மட்டுமே உழவர்களுக்கு உரிமை இருந்தது . ஆண்டுதோறும் மக்கள் கைவசமிருந்த நிலங்கள், ஆடுமாடுகள் ஆகியவை கணக்கிடப்பட்டன

**4) சமுதாயநிலை**

**அ) ஜாதிமுறை**

எகிப்திய சமுதாயத்தில் ஜாதிமுறை இல்லை . ஆனால் பொருளாதர அடிப்படையில் பல வகுப்புகளாகப் பிரிந்திருந்தனர் . ஐம்பெரும் வகுப்புகள் அங்கு காணப்பட்டன. அவர்கள் முறையே அரசகுடும்பத்தினர் , சமய குருமார்கள். பிரபுக்கள், நடுத்தர வகுப்பினர் (எழுத்தர், வணிகர், உழவர்கள்). பண்ணை அடிமைகள் (Se) என்போர்

ஆவர். புதிய பேரரசு காலத்தில் போர் வீரர்கள் என்ற புதிய வகுப்பு தோன்றியது . பணக்காரர்களுக்கும் ஏழைகளுக்குமிடையே பெருத்த இடைவெளி காணப்பட்டது.

**b) திருமணம்**

எகிப்தியக் குடும்பத்தில் ஒருதார மணம் பெரிதும் வலியுறுத்தப்பட்டது . அரசர் கூட சட்டப்படி ஒரு அரசியை மட்டுமே மணக்கலாம். ஆனால் திருமணம் செய்யாமல் பல பெண்களை மனைவியாக வைத்துக் கொண்டார். மூன்றாம் அமனோடெப் (Amenhotep III) என்ற அரசன் நகாரியா இளவரசியின் மூத்த எகிப்திய நாகரிகம் மகளையும் தேர்ந்தெடுக்கப்பட்ட அழகான 300 பெண்களையும் பெற்றுக் கொண்டார். வசதியில்லாத சாதாரண மக்கள் ஒரு மனைவியுடனே திருப்திபட்டுக் கொண்டனர் . எகிப்திய மக்களிடையே தங்கள் சகோதரிகளையே மணந்து கொள்ளும் கெட்ட பழக்கம் காணப்பட்டது. அரசர்கள் தங்கள் அரச வம்சத்தின் தூய்மையை பாதுகாக்க சகோதரிகளை திருமணம் செய்யும் பழக்கம் இருந்தது. மக்கள் தாங்கள் சகோதரிகளை மணப்பதற்கு காரணம் தாய்பெயரில் உள்ள மகளுக்கு கிடைத்த சொத்துக்கள் , மற்றும் சுகபோகங்கள் பிறர்த்தியாருக்கு போய்விடக் கூடாது என்பதேயாகும் . இதனால் எகிப்தியர்களின் உள்ளம், உடல் இரண்டும் வளர்ச்சி குன்றியது

**c) குடும்ப வாழ்க்கை**

குடும்ப வாழ்க்கை நல்ல ஒழுக்க நெறியிலேயே இருந்தது . பொதுவான ஒழுக்கநெறி (Moral) எல்லோரிடத்திலும் காணப்பட்டது. மனைவியின் தவறான நடத்தையை கணவன் கண்டு பிடித்து விட்டால் விவகாரத்து செய்யலாம் . அதற்காக நஷ்டாடும் கொடுக்க வேண்டியதில்லை. ஆனால் வேறு காரணங்களுக்காக விவாகரத்து செய்தால் சொத்தில் பங்கு கொடுக்க வேண்டும் . திருமணத்துக்கு முன்பு உடலுறவு கொள்வது தவறாக கருதப்படவில்லை . பெண்குழந்தைகளைக் கொல்லும்முறை (Infanticide) பழக்கத்திலிருந்தது. ஆனால் அது கண்டுபிடிக்கப்பட்டுவிட்டால் சட்டப்படி , அந்தக்குழந்தையின் பெற்றோர் இறந்த குழந்தையின் உடம்பை மூன்று நாட்கள் இரவும் பகலும் தங்கள் கைகளில் தாங்கிப் பிடித்துக் கொண்டிருக்க வேண்டும்

**d) காதல்**

எகிப்தில் நமக்கு கிடைத்த காதல் கடிதங்களும், காதல் பாடல்களும் பொதுவாக பெண்கள் ஆண்களுக்கு எழுதியவைகளாகவே உள்ளன. ஒரு காதல் கவிதையில் 'ஓ!

எனதருமைக் காதலரே, நான் உமது மனைவியாக ஆசைப்படுகிறேன்'' என்று உள்ளது. இது நைல் நதிப்பெண்களின் தீவிர காதல் உணர்வை வெளிப்படுத்துகிறது . பெண்கள் பத்து வயதிலேயே பருவநிலை அடைந்தனர் . நடனமாதர்களும், கணிகையர்களும் நகரங்களில் நிறைந்திருந்தனர் . ஒவ்வொரு வீட்டிலிருந்தும் ஒரு அழகான பெண் கோவிலுக்கு தத்தம் செய்யப்பட்டாள் . இது Religious Prostitution எனப்படுகிறது அதாவது கடவுளை திருப்திபடுத்த பெண் கோவிலுக்கு அனுப்பப்பட்டாள் . ஆனால் நாளடைவில் அவள் பரத்தையாக மாறினாள்.

- **பெண்கள்**

பெண்கள் பொது இடங்களில் சுதந்திரமான நடமாடினர் . தொழிலிலும் வியாபாரத்திலும் ஈடுபட்டனர். திருமண ஒப்பந்தத்தின் போது கணவன் மனைவிக்கு தான் பணிந்து நடப்பேன் என்று உறுதிமொழி கூற வேண்டும்

பெண்கள் தங்கள் பெயரில் சொத்துக்கள் வைத்திருந்தனர் தனது நிலங்களை பிள்ளைகளுக்கு எழு திவைத்தனர் ஹெட்சப்ஷெட் , கிளியோபாட்ரோ (Hêtshepsut) போன்ற பெண்கள் அரசிகளாக உயர்ந்து ஆட்சியை நடத்தினர் . விரும்பியவர்களை காதலித்து வேண்டாதவர்களை மணவிலக்கு செய்யும் உரிமை பெற்றிருந்தனர்

- **ஆடை, அணிகலன்கள்**

எகிப்திய மக்கள் ஆடை அலங்காரங்களுக்கு முக்கிய த்துவம் அளித்தனர் . சாதாரண உடை முதல் பகட்டான ஆடைவரை அணிந்தனர். சிறு வயது முடியும் வரை ஆடை அணிவதில்லை. வேலைக்காரர்கள் விவசாயிகள் இடையில் மட்டும் ஆடை அணிந்தார்கள். பெண்கள் இறுக்கமான உடை அணியாமல் நெகிழ்வாக ஆடை அணிந்தனர். தோளிலிருந்து இடது பக்க மார்பு வரை சென்று ஒரு முடிச்சுடன் ஆடை அணிந்தனர். எம்பிராய்டரி மற்றும் ஃபிரில் (Frill) வைத்த புதிய பேஷன் ஆடைகள் அணிந்தனர்.

ஆண்களும், பெண்களும் ஆபரணங்களை விரும்பி அணிந்தனர் கழுத்து , மார்பு, கை, மணிக்கட்டுகளில் தங்கம் , வெள்ளியிலான ஆபரணம் அணிந்தனர் . ஒவ்வொரு மனிதனும் மோதிரமும் , ஒவ்வொரு பெண்ணும் அலங்காரச் செயினும் அணிந்தனர் . தற்போது இங்கிலாந்து மியூசியத்தில் இந்த அணிகலன்கள் வைக்கப்பட்டுள்ளன .

பலவகைப்பட்ட அணியும் சங்கிலிகள் (Chains) காணப்பட்டன. மூன்று இஞ்ச் நீளத்திலிருந்து ஐந்து அடி நீளம் வரை செயின்கள் காணப்படுகின்றன

முகபவுடர்களும், உதட்டுச்சாயங்களும் உபயோகித்தனர் தங்கள் நகரங்களுக்கு வண்ணம் தீட்டிக் கொண்டனர். வாசனை திரவியங்களையும் பூசிக்கொண்டனர்

**5. கல்வி**

நாட்டின் கல்விக்கு மன்னர் அதிக முக்கியத்துவம் கொடுத்தார் . அனைத்து வசதிகளையும் கொண்ட பல பள்ளிக்கூடங்கள் அமைக்கப்பட்டன . இலவசமாக பாடம் கற்பிக்க ஆசிரியர்கள் நியமிக்கப்பட்டனர். ஏழைக் குடும்பத்தில் பிறந்த பல மாணவர்கள் தங்கள் படிப்புத்திறனால் உயர்ந்த பதவிகளைப் பெற்றனர். கல்வி புனிதமானது என்றும் தனது தாயை விட கல்லியை நேசிக்க வேண்டும் என்றும் வற்புறுத்தப்பட்டது. வணிகப் பாடங்கள் போதிக்கப்பட்டது. மாணவர்கள் பார்த்து எழுதிய நோட்டுப்புத்தகங்கள் இன்றும் உள்ளன. அவைகளின் மார்ஜின் பகுதிகள் ஆசிரியர்கள் தப்புகளை திருத்தி எழுதியதும் காணப்படுகிறது. மாணவர்களை ஆசிரியர் அடிக்கும் பழக்கம் இருந்ததை கிடைத்த ஒரு கடிதம் சொல்லுகிறது . " நீங்கள் என்னை அடித்தீர்கள் உங்கள் பாடம் என் காதுக்குள் நுழைந்தது" என்று எழுதப்பட்டுள்ளது

எழுதுவதற்கு எகிப்தியர் ஐயாயிரம் ஆண்டுகளுக்கு முன் உபயோகித்த பேப்பர்கள் இன்னமும் குலைந்து போகமாமல் நமக்கு கிடைத்துள்ளது . பேப்பிரஸ் (Papyrus) என்ற தாள் எழுதுவதற்குப் பயன்பட்டது. இது எகிப்து உலகிற்கு அளித்த கொடையாகும். நாகரிகத்தின் சின்னமாகும் பேப்பர்கள் ஒன்றாக சேர்ந்து புத்தகங்களாக்கப்பட்டுள்ளன. ஒட்டி, ஒட்டி 40 முழம் நீளம் உள்ள பேப்பர் ஒன்று கிடைத்துள்ளது.

அழியாத கருப்புமை எழுதுவதற்கு உபயோக்கிக்கப்பட்டது . புகைக்கரி (Soot) தாவர கோந்து (Vegetable gum) ஆகியவற்றை கலந்து மை செய்யப்பட்டது . இதை வைத்துதான் பழங்கால எகிப்தியர்கள் இலக்கியங்களை எழுதினர்

**எகிப்திய சித்திர எழுத்துக்கள்**

எகிப்தியர்கள் சித்திர எழுத்துக்களை முதலில் எழுதினார்கள். உதாரணமாக வீடு என்பதற்கு, நீள் சதுரமான நடுவில் ஒரு திறப்பு கொண்ட படம் வரையப்பட்டது. படங்கள் மூலம் கருத்துக்கள் பரப்பப்பட்டது . உதாரணமாக, வலிமையைக் குறிக்க சிங்கம் வரையப்பட்டது . இதனை ideograph என்று அழைக்கலாம் . கடினமான வார்த்தைகளின்

உச்சரிப்புகள் (Syllables) பிரிக்கப்பட்டது. பின்னர் சிறிது சிறிதாக எழுத்துக்கள் கண்டுபிடிக்கப்பட்டன. 24 மெய்யெழுத்துக்கள் (Consonants) கண்டுபிடிக்கப்பட்டன. உயிரெழுத்துக்கள் (Vowels) கண்டுபிடிக்கப்படவில்லை.

வாய் என்பதற்கு எகிப்திய மொழியில் Ro அல்லது Ru ஆகும். இதனை R என்றே எழுதினர். பாம்பு என்பதற்கு 21 என்பதாகும் இதனை 2 என்று எழுதினர். ஏரி என்பதற்கு Shy என்பதாகும். இதனை sh என்று எழுதினர்.

**6. இலக்கியம்**

பண்டைக்கால எகிப்திய இலக்கியங்கள் ஹைரோகிளிபிக் முறையில், (Hieroglyphic) Picture figure of an object word) Syllable எழுதப்பட்டன. சில இலக்கியங்களே நமக்கு கிடைத்துள்ளன ஒரு வேளை எகிப்திய ஷேக்ஸ்பியர்களின் இலக்கியங்கள் அழிந்து போயிருக்கலாம் ஒரு கல்லறையில் "Scribes of House of boo என்று எழுதப்பட்டுள்ளது. இதிலிருந்து இவர் இலக்கியங்களைப் பாதுகாத்தவரா அல்லது அரசாங்க ஆவணங்களை மட்டும் பாதுகாத்தவரா என்பது தெரியவில்லை . கிமு 200 ஆண்டுகாலத்தைய ஒரு பேப்பிரஸ் ரோல் (Papyrus) ஒன்று ஜாடிகளில் சுற்றி வைக்கப்பட்டுள்ளது. அலமாரியில் வரிசைப்படுத்தி வைக்கப்பட்டிருந்தது கண்டு பிடிக்கப்பட்டுள்ளது.

பண்டைக்கால எகிப்திய கதைகள் சிந்துபாத் கதைகள் போன்று காணப்படுகிறது. சினுப் (Sinuhe) என்பவரின் வீரசாகசக் கதைகள் உள்ளன. சிறு கதைகள் ஏராளமாக உள்ளன. பேய் கதைகள், அற்புத செயல் பற்றிய கதைகள் துப்பறியும் கதைகள் , இளவரசர் இளவரசி, காதல் லீலை கதைகள், சின்ரல்லா மாதிரியான கதைகள் எழுதப்பட்டன. நீதி நெறிகளை விளக்கும் உவமைக் கதைகள் ஆகியவை காணப்படுகின்றன . இவற்றில் Anpu, Bata என்ற இரண்டு சகோதரர்களின் கதை குறிப்பிடத்தக்கது ஆகும்

பழங்கால எகிப்தியர்கதைகள் மத நம்பிக்கை அடிப்படையில் எழுதப்பட்டன . இந்த எகிப்திய இலக்கியங்களிலிருந்துதான் யூதர்கள் தங்களின் பைபிள் புத்தகத்தில் உள்ள சங்கீதங்கள் என்ற பகுதியில் சேர்த்துள்ளார்கள்

வரலாற்றைப் போலவே வரலாற்று வரைவியலும் மிகப் பழமை யானது . அரசர்களால் வரலாற்று ஆவணங்கள் பாதுகாக்கப்பட்டன . பரோக்க ளுடன் வரலாற்றாளர்களும் உடன் சென்று வரலாற்றை எழுதினார்கள் . கி.மு. 2500ல் அரசர்களைப் பற்றிய காலக்கணக்கு முறை எழுதப்பட்டது . மூன்றாம் தட்மோஸ் ஆட்சிக் காலத்தில் வரலாற்று ஆவணங்கள் முழுமையாக்கப்பட்டன

**7. விஞ்ஞானம்**

பழங்கால விஞ்ஞானத்தின் தோற்றமே எகிப்து தான் என்பது எல்லோராலும் ஏற்றுக் கொள்ளப்பட்டுள்ளது . எகிப்திய மரபுவழிக் கதையின் படி கி .மு. 18,000-ம் ஆண்டில் தோத் (Thoth) என்ற கடவுள் மூவாயிரம் வருடம் ஆண்டதாகவும் , அவர் விஞ்ஞானத்தைப் பற்றி இருபதாயிரம் நூல்கள் எழுதிச் சென்றதாகவும் கருதப்படுகிறது

a) கணிதம்: எகிப்தியர்கள் கணித அறிவு கொண்டிருந்தார்கள் . இதற்கு அவர்கள் கட்டிய பிரமிடுகளே சான்று . நைல் நதியின் போக்கு , நதியால் பாதிக்கப்பட்ட நிலங்களின் அளவு கண்டுபிடிக்கப்பட்டன . இதுவே ஜியோமிதி (Geometry) கணிதத்திற்கு வித்திட்டது தசம எகிப்திய நாகரிகம்

பின்னத்தைப் பற்றி (decimal) அவ்வளவாகத் தெரியவில்லை. சைபரைப் (Zero) பற்றியும் தெரியாது. பத்து டிஜிட்டுக்குள் எல்லா நம்பரையும் எழுதிவிடலாம் என்று தெரியவில்லை. உதாரணமாக 999-ஐ எழுத இருபத்திஏழு குறியீடுகளை (Signs) உபயோகித்தார்கள். தகுபின்னம் (Fraction) தெரிந்திருந்தது. ஆனால் 1.ஐ வைத்துதான் செய்தார்கள் உதராணமாக 3/4 என்ற எழுதுவதற்கு 1/2+1/4 என்று எழுதினார்கள். கி.மு. 2000-ம் ஆண்டைச் சேர்ந்த Ahmes Papyrus என்பதே மிகப்பழைய கணித நூலாகக் கருதப்படுகி றது. இதில் மிகச் சிறந்த அல்ஜீப்ரா சமன்பாடுகள் காணப்படுகிறது . Square, Circle ஆகியவற்றின் பரப்பவளவு புளந்து கூறப்பட்டுள்ளது . ( பை)யின் மதிப்பு 3.16 என்று றப்பட்டுள்ளது . கடந்த நாலாயிரம் ஆண்டில் மிக துல்லியமாக 3.1416 என்று இப்போது கணிக்கப்பட்டுள்ளது.

b) வானவியல் : வானவியலைப் பற்றி ஒரளவு எகிப்திய மக்கள் அறிந்து வைத்திருந்தனர். நைல்நதி எந்தெந்தக் காலங்களில் சீறிப்பாயும் என்று அறிந்திருந்தார்கள். கோளங்களின் இடப்பெயர்ச்சியையும், கோளங்களுக்கும் சிலையான நட்சத்திரங்களுக்குமுள்ள வித்தியாசம் தெரிந்திருந்தது . பூமியில் ஏற்படும் மாற்றங்களுக்கும் கோளங்களின் இடப்பெயர்ச்சிக்கும் சம்பந்தம் உண்டு என்று நம்பினார்கள்.

c) காலண்டர்: எகிப்தியர்கள் உருவாக்கிய காலண்டர் உலக நாகரிகத்திற்கும் அவர்கள் அளித்த சிறந்த நன்கொடையாகும் . நைல்நதி சைரஸ் (Sirius) என்ற நட்சத்திரத்தினால் சீரிப்பா ய்கிறது என்று நம்பினார்கள் . அதை வைத்தே மூன்று வகையாக காலநிலையைப் பிரித்தார்கள் அவை : நைல்நதி சீரிப்பாயும் காலம் நான்கு

மாதங்களைக் கொண்டது. ஒவ்வொரு மாதமும் 30 பாட்களைக் கொண்டது. 12 மாதம் முடிந்தவுடன் ஐந்து நாட்களைச் சேர்த்துக் கொண்டார்கள் . நைல்நதி அதிக அளவு சீரிப்பாயும் நாளை வருடத்தின் முதல் தாளாக வைத்துக் கொண்டார்கள் . அதாவது 3651/4 நாட்களுக்கு பதிலாக 365 காட்களாக கணக்கெடுத்தார்கள் . நான்கு வருடங்களுக்கு ஒரு முறை சைரஸின் (மூச்சி ஒரு நாள் தள்ளிப்போனது

இந்தக் காலண்டரைத்தான் கி மு . 46ல் ஜுலியஸ் சீசரின் ஆணைப்படி ரேக்க வானவியல் அறிஞர்கள் திருத்தியமைத்தார்கள் . ஒவ்வொரு நான்கு வருட முடிவில் ஒரு நாளைக்கூட்டி புது காலண்டர் உருவாக்கப்பட்டது கி.பி. 582-ல் போப் பதிமூன்றாம் கிரேகரி மிகத்துல்லியமான திருத்தத்தைக் கொண்டு பந்தார் . நான்காண்டுகளுக்கு ஒரு முறை பிப்ரவரி 29 நாட்களாக்கப்பட்டது. இதுவே இப்போது பழக்கத்திலிக்கும் காலண்டர் ஆகும். எனவே காலண்டர் முறை எகிப்தியர்களின் கொடையாகும்

அ) மனித உடற்கூறு : மனித உடற்கூறு பற்றிய அறிவியல் (கிப்தியர்கள் பின் தங்கியிருந்தார்கள். அவர்கள் ரத்த நாளங்கள் காற்று , தண்ணீர் சுற்று மற்றும் சில திரவத்தை எடுத்துச் செல்வதாக நினைத்தார்கள் மனித இதயமே உள்ளத்தின் இருப்பிடமாக கருதினர். நீண்ட எலும்புகளையும் தேடி உள்ளுருப்புகளைப் (Vicera) பற்றியும் தெரிந்து வைத்திருந்தனர் இதயமானது , உடலுறுப்புகளின் இயக்கத்திற்கு ஊக்கம் அளிப்பதாகவும், உள் இயக்கத்தின் மையப் பகு தியெனவும் உணர்ந்து கொண்டனர் இவைகளை பாறி Ebers Papyrus என்ற நூலில் எழுதப்பட்டிருப்பதை காணலாம் . ஆனால், இந்த உண்மைகளி லிருந்து முன்னேற்றம் ஏற்பட மூவாயிரம் ஆண்டுகளானது அதாவது லியோனர்டோ, ஹார்வி காலத்தில்தான் உடற்கூற்று இயலில் முன்னேற்றம் ஏற்பட்டது

ஆ) மருந்தியல்; மருந்துகளுக்கு எகிப்தியாகள புகழ்பெற்றவர்கள் மருந்து முறை மதகுருக்களிடமிருந்தே தோன்றியது எகிப்தியர்களைப் பொருத்த அளவில் நோய் என்பது பிசாசுகளின் நடவடிக்கைகளின் விளைவேயாகும் . எட்வின் ஸ்மித் (Edwin smith) என்பவராக, எகிப்தில் கண்டுபிடிக்கப்பட்ட கி .மு 1600ம் ஆ ண்டைச் சேர்ந்த 15 அடி நீளமுள்ள ஒரு பாப்பிரஸ் சுருள்தான் வரலாற்றிலேயே மிக பழமையான அறிவியல் ஆவணம் என்று கருதப்படுகிறது . அதில் 48 வகையான நோய்களும் அவைகளைக் கண்டுபிடிக்கும் முறைகளும், சிகிச்சை முறைகளும் கூறப்பட்டுள்ளது

) வேதியியல்: இறந்தோர் சடலங்களை கெடாமல் பதப்படுத்தும் கலையை (Embaiming) எகிப்தியர் அறிந்திருந்தனர் . மருத்துவம், வேதியல் ஆகியவற்றின் துணையின்றி அவர்கள் அத்தகைய முயற்சியில் வெற்றி பெற்றிருக்க முடியாது

**8. பொருளாதார நிலை**

தொழில்கள்: எகிப்தியப் பொருளாதாரத்தில் பெரும்பாலான தொழில்கள் அரசாங்கத்தின் கைகளிலேயே இருந்தன. முக்கியமாக சுரங்கத் தொழில் அரசாங்கத்தின் முற்றுரிமையாகவே இருந்தது எகிப்தில் கனிமம் மற்றும் தாதுப்பொருள்கள் (Minerals) குறைவாகக் கிடைத்ததால் அராபியா நுபியா , (Nubia) ஆகிய நாடுகளிலிருந்து பெற்றார்கள் செம்பும் குறைந்த அளவே கிடைத்தது செம்பையும் வெள்ளீயத்தையும் சேர்த்து வெண்கலம் செய்யும் தொழில் நுட்ப முறையை அறிந்திருந்தார்கள் வெண்கலத்தினாலான கத்தி வாள் , கேடயம், கம்பிகள், நெம்புகோல், சக்கரங்கள் வண்டிகள் ஆகியவை செய்தனர் . விலங்குகளின் தோலிலிருந்து உடை செய்தனர் கப்பல்கட்டும் தொழில் , கண்ணாடி செய்தல் , கட்டிடம் கட்டுதல் , துணி நெய்தல் சவப்பெட்டி செய்தல் ஆகிய தொழில்களும் காணப்பட்டன எகிப்தியர் செய்த சவப்பெட்டிகளைப் பார்க்கும் போது அது சாவதற்கு நம்மை விருப்பம் படவைக்கும் ! அந்த அளவுக்கு அதில் மர வேலைப்பாடுகள் காணப்படுகிறது எனாமல் பூச்சு, வார்னீஸ் பூச்சு தொழிலும் இருந்தன.

இங்கிலாந்து மியூசியத்தில் வைக்கப்பட்டிருக்கும் ஒரு Chalk தொழிலாளர்களின் வேலை, அவர்களது வேலை நிறுத்தம் ஆகியவை பற்றி குறிப்பிடப்பட்டுள்ளது . அடிக்கடி வேலை நிறுத்தம் நடந்தது . சம்பளம் ஒழுங்காகக் கிடைக்காவிட்டால் தொழிலாளர் முற்றுகைப் போராட் டம் நடத்தினர் . தொழிலாளர்கள் அனேகமாக சுதந்திரமாகவும் ஒரு சிலர் அடிமைகளாகவும் இருந்தனர்

வியாபாரம்: விவசாயத்திற்கு அடுத்தபடியாக எகிப்தியர்களின் முக்கியத் தொழில் வியாபாரம் (வாணிபம்) ஆகும். வியாபாரம் தந்தைக்குப் பிறகு மகன் என்று பரம்பரையாகச் செய்யப்பட்டது கோது மை, துணிமணிகள், மட்பாண்டங்கள் ஆகியவற்றை சிரியா, பாலஸ்தீனம் ஆகிய நாடுகளுக்கு ஏற்றுமதி செய்தனர் . தங்கம், வெள்ளி, தந்தம், மரம், இரும்பு, செம்பு, அரிசி போன்றவற்றை இறக்குமதி செய்தனர் இறக்குமதி பொருட்கள் மீது காப்புவரி விதிக்கப்பட்டது . இந்தியாவுடனும் எகிப்தியர்

வாணிபம் செய்ததாகத் தெரிகிறது . படகு. கப்பல், ஒட்டகம், கழுதை, வண்டி ஆகியவற்றை போக்குவரத்து கருவிகளாகப் பயன்படுத்தினர்

நாணய முறை எகிப்தில் உருவாகவில்லை பண்டமாற்று முறையே நிலவியது. வரிகள் தானியங்களாகவே கொடுக்கப்பட்டது . எனவே அரசு கருவூலம் விளை பொருட்களால் நிரம்பி வழிந்தது. எகிப்தியர்கள் கொடுக்கல் வாங்கல்களில் வல்லவர்கள், சொத்துரிமை பத்திரம், ஒப்பந்தப் பத்திரம் ஆகியவற்றின் பயனை உணர்ந்திருந்தனர் . பத்திர எழுத்தாளர்கள் (Scribes) எப்போதும் சுறுசுறுப்பாகக் காணப்பட்டார்கள்

### 9. கலைகள்

எகிப்திய நாகரிகத்தின் முக்கியகூறு அவர்களின் கலையே ஆகும் அக்கலையின் சிறப்பம்சமாகக் கருதப்படுவது கட்டிடக்கலையே ஆகும் . இக்கலை கல்லறையை அலங்கரிப்பதிலிருந்து வீட்டின் வெளிப்பகுதியை அலங்கரிப்பது வரை இருந்தது எகிப்தியர்களின் பிரமிடுகளு

பிரமிடுகளும், கல்லால் ஆன கோவில்களும் அவர்களது நாகரிகத்தின் சிறப்பம்சங்களாகும்.

அ) பிரமிடுகள்: எகிப்தியக் கட்டிடக்கலைக்கு பிரமிடுகள் சிறந்த எடுத்துக் காட்டாக விளங்குகின்றன. பிரமிட் (Pyramid) என்ற வார்த்தை Pi(A)mus என்ற எகிப்திய வார்த்தையிலிருந்து பெறப்பட்டதாகும் எகிப்திய பாரோக்கள் ஏன் இந்த பிரமிடுகளைக் க ட்டினார்கள் ? அவர்களைப் பொருத்த வரையில் கட்டிடக்கலை வளர்ச்சிக்காக அல்ல , சமய நம்பிக்கையின் அடிப்படையிலேயே ஆகும்

எகிப்தின் சமயக் கொள்கையின்படி மனிதனிடம் பா (Ba) என்ற ஆன்மாவும் கா (Ka) என்ற உடற்சத்தும் இருக்கின்றன மரணம் என்பது நீண்ட உறக்கமே ! மனிதன் இறந்த பின் பா என்ற உயிர்சத்து பறவை வடிவில் பறந்து போய் மேல் உலகை அடையும் கா என்ற உடற்சத்து உலகில் அலைந்து கொண்டிருக்கும் வினை களின் பயன்களை அனுபவித்த ஆன உடலுக்குள் வந்து விடும் என்று நம்பினர் எனவே தான் இறந்த 12கெடாமல் பார்த்துக் கொள்ள வேண் டும் என்று நம்பினா எனவே தங்கள் உடல்களை கெடாமல் பாதுகாப்பாக வைப்பதற்கு கட்டப்பட்ட கல்லறையே பிரமிடுகள் ஆகும்

**ஸ்பிங்ஸ் மற்றும் கிசா பிரமிடுகள்**

இறந்த உடல்கள் தார் , அமிலம் போன்ற பல்வேறு பொருட்கள் , ஊறவைத்து பதப்படுத்தப்பட்டன அவைகள் தான் மம்மிகள் (Mummy) என்று அழைக்கப்படுகின்றன .

நாலாயிரம் வருடத்திற்கு முன்பு பதப்படுத்தப் படம் பாரோக்களின் உடல்கள் இன்றும் கெடாமல் உள்ளன பாரோவின் உடலுடன் அவரது அணிகலன்கள் மற்ற உடமைகளும் அதற்குரிய அறைகளில் வைக்கப்பட்டிருக்கும் சில சமயம் பாரோக்கள் விரும்பி உண்ட பறவைகளும் எகிப்திய நாகரிகம் மிருகங்களும் கொல்லப்பட் டு வைக்கப்பட்டன பாரோக்களின் உதவியாளர்கள் பிரபுக்கள் மற்றும் பலரும் கொல்லப்பட்டு பிரமிடை சுற்றி புதைக்கப்பட்டனர் (Pyramid sought stability as a means to deathlessness).

பாரோ சோசர் (3150 BC) காலத்தில்தான் பிரமிடு கட்டப்பட்டது செங்கற்களை வைத்து அடுக்கு பிரமி டுகள் இவரால் சக்ரா என்ற இடத்தில் கட்டப்பட்டது அதற்குப் பின்னர் பாரோ மன்னர்கள் பிரமிடுகள் கட்டுவதில் ஆர்வம் காட்டினர் . பின்னர் கருங்கல்லால் பிரமிடுகள் கட்டப்பட்டன கூஃபூ (Khufu) என்ற பாரோவால் கிசா (Giza) என்ற இடத்தில் மூன்று பிரமிடுகள் கட்டப்பட்டன. கூஃபூ பிரமிடு மிகப்பெரிய பிரமிடு ஆகும் கிரேக்கர்கள் இப்பிரமிடுகளை உலகின் ஏழு அதிசயங்களில் ஒன்றாகக் கருதினர் 54000 சதுர மீட்டர் பரப்பளவில் கட்டப்பட்டது. 146 59 மீட்டர் உயரமும் ஒவ்வொரு பக்கமும் 230 38 மீட்டர் நீளமும் கொண்டது. இதிலுள்ள ஒவ்வொரு கல்லும் ? 1/2 டன் முதல் 150 டன் வரை எடையுள்ளது . ஹெரடோட்டஸ் கூற்றுப்படி ஒரு பிரமிடு கட்ட ஒரு லட்சம் அடிமைகள் 22 ஆண்டுகள் உழைத்தார்களாம் ! கூஃபூவுக்கு பிறகு காஃப்ரே இப்பிரமிடுக்கு அருகிலேயே பெரிய மிரமிடுலைக் கட்டினார் "இந்த உலகம் காலத்தைக் (Time) கண்டுபயப்படுகிறது என்பது அராபிய பழ மொழி. ஆனால் காலமோ இந்த பிரமிடுகளைக் கொண்டு பயப்படுகிறது

b) கோவில்களும், சிற்பக்கலையும்: பல்லாயிரம் ஆண்டுகளுக்கு முன்பே எகிப்திய பேரரசர்கள் கல்லினால் கோவில்களைக் கட்டினர் . காண்போர் வியக்கும் இக்கோவில்கள் லக்சார் , கர்னாக் போன்ற இடங்களில் இன்றும் காணப்படுகிற து. கர்னாக்கிலுள்ள கோவில் 1300 அடி நீளமுள்ளது . பரப்பளவில் அதை மிஞ்சக் கூடிய கோவில் தமிழ்நாட்டில் ஒன்று கூட இல்லை எனலாம் இக்கோவிலில் காணப்படும் தூண்கள் மிகமிக பெரியவை. அவற்றுள் ஒன்று 70 அடி உயரமும் 20 அடி சுற்றளவும் கொண்டது. கண்கவர் சிற்பங்கள் ஒவ்வொரு தூணையு ம் அலங்கரிக்கின்றன . தூண்களின் உச்சி பகுதி பல்வேறு அலங்காரங் களுடன் உள்ளன

எதிலும் பெரிய அளவில் இருக்க வேண்டுமென்ற விருப்பம் எகிப்சிய சிற்பங்களிலும் காணப்படுகிறது. கோவில்களில் உள்ள சிலைகள் 60 அடியாக 70 அடி

உயரமுடையவை ஸ்பிங்ஸ் (Sp) என்ற காவல் தெய்வத்தின் உயாம் 70 அடி, நீளம் 160 அடி. சிங்கத்தின் உடலையும் மனித முகத்தையும் அது விளங்குகிறது அதன் தலைமட்டும் 33 அடி நீளமும் 13 அடி அகலமும் உடையது கா்ப்ரே (Kha) என்ற அரசனின் சிலை ஒன்று கொடா மியூசியத்தில் உள்ளது . அதை போன்ற அழகிய சிற்பம் உலகில் எங்குமே இல்லை என்று கருதப்படுகிறது. மரத்தால் செய்யப்பட்ட ஒரு எழுத்தரின் சி மிக அழகானது . அதன் வழுக்கத் தலையும் தளர்ந்த உடையும் தடித்த கால்களும் உண்மையில் அச்சிலை ஒரு ஆளை நேரில் காண்பது போலவே உள்ளது பியோப்ஸ் (Phiops மற்றும் அவரது மகன் ஆகியோரின் செம்புச்சிலை கண்கவர் அழகுடன் உள் ளது. தங்கத்தால் செய்யப்பட்ட ராஜாளிப் பறவை தலைசிறக்க வேலைப்பாடுகள் கொண்டது

¢ ஓவியங்கள்: எகிப்திய ஓவியங்கள் மிகவும் புகழ் பெற்றவை ஆனால் அவைகளில் உள்உணர்ச்சியும் அழகும் காணப்படவில்லை ஆனால் ஓட்டம் வேகம் ஆகியவை நன்கு கட்டப்பட்டுள்ளன லக்சார் கோவிலுள்ள ஓவியங் களில் இதைக் காணலாம் மிரண்ட காளை ஒன்று சதுப்பு நிலத்தில் தலைதெறிக்க ஓடுவது , வாத்துக்கள் குளத்தில் நீந்துவது ஆகியவை உணர்ச்சி மேலிட வரையப்பட்டுள்ளன கல்லறைச் சுவர்களில் மக்கள் பேரம் செய்து பொருள் வாங்கல், அடிமைகளை அடித்து வேலை வாங்குதல் போன்ற அன்றாட காட்சிகள் நன்கு காட்டப்பட்டுள்ளது இவை எகிப்திய சமுதாய வாழ்க்கையை அறிய நமக்கு உதவி செய்கிறது

**10. சமயம்**

சமயம் எகிப்தியர்களின் வாழ்வில் எல்லாத் துறைகளிலும் ஆழமாக ஊடுருவி நின்றது சயத்துக்காகவே அவர்கள் வாழ்ந்தார்கள் என்றால் மிகையாகாது அவர்களது நம்பிக்கைப்படி மரணத்திற்குப் பிறகு மனிதன் வாழ்கிறான் என்பதே எனவே மறுமையில் வாழப்போகும் வாழ்க்கைக்காக பெரிதும் உழைத்தனர் . இதனால்தான் பாரோக்களால் பிரமிடுகளும் பிரபுக்களால் பெரிய கல்லறைகளும் கட்டப்பட்டது இது தற்கால கிறிஸ்தவ மதக் கொள்கைக்கு ஒப்பானது

எகிப்தியர்கள் முதலில் ஏராளமான தெய்வங் களை வணங்கினர் முதலில் அவர்கள் பசு , ஆடு, பூனை. நாய், பாம்பு, முதலை ஆகியவைகளை வணங்கினர் அவைகளுக்கு கோவில்கட்டி சுதந்திரமாக அலையவிட்டனர் பின்னர் ரா (Ra என்ற கதிரவக் கடவுளை வணங்கினர் . சூரியனே சக்திகளுக்கெல்லாம் உறைவிடம் என்று

நம்பினர். நைல்நதியை இசிரிஸ் (Osiris) என்ற தேவதையாக வணங்கினர். இதனைப் பற்றிய ஒரு புராணக்கதையும் உண்டு செட் (Set) என்ற கொடுங்கோல் கடவுள் தனது உஷ்ணக் காற்றால் இசிரிசை. அதாவது நைல்நதியை வற்றவைத்து விட்டான். எனவே இசிரிசின் சகோதரி இசிஸ் (Isis) தனது மகன் ஹோரசின் (Horus) உதவியுடன் கொடுங்கோல் கடவுளை வென்று இசிரிசை மீண்டும் எழுச்சியடையச் செய்ததாக புராணக்கதை கூறுகிறது இவ்வாறு Ra, Osiris ஆகியோர் எகிப்தியரின் பெரிய கடவுளாவா Shu, Nut, Keb ஆகியோர் சிறிய கடவுளாவர்

பண்டைய நாகரிகம் அழிந்தாலும் அது விட்டுச் சென்ற சின்னங்கள் அதன் பறை சாற்றுகின்றன. எகிப்திய நாகரிகம் அழிந்து போனது . ஆனால் அதுவிட்டுச் சென்ற நாகரிகச் சின்னங்கள் உலகிற்குப் பயனளி யங்களாக உள்ளன . எண்ணையும் எழுத்தையும் பழங்காலத்திலே பௌர்த்த பெருமை எகிப்தியருக்கு உண்டு . கல்வியின் பெருமையை உணார்ந்திருந்தார்கள் . நீர்பாசனமுறை, ஒப்பந்தம், உயில் போன்ற வாணிகச் செயல்முறைகள் கண்ணாடி, காகிதம். நகைகள் செய்தல், காலண்டா முயை போன்றவற்றில் எகிப்தியர்களே முன்னோடியாக விளங்கினர்

கற்களைக் கொண்டு கட்டிடம் எழுப்புதல் , விட்டம், தூண், தூண்வரிசைகள், வளைவுகள் ஏற்படுத்துதல் அவைகளில் பல கணிகள் அமைத்தல் பெரி ய தாழ்வாரம், மண்டபம் அமைத்தல் போன்ற உத்திகளை எகிப்தியர்களிடமிருந்தே பிற நாட்டினர் கற்றுக் கொண்டனர். ஆன்மீகம், அரசியல், சமூக அமைப்பு போன்ற வற்றிலும் சிற்பம், ஓவியம் முதலிய கலைகளிலும் அவர்கள் பல நாகரிகங்களுக்கும் முன்னோடிகளாகவே விளங்கினர். எனவே எகிப்தை 'பண்டைய நாகரிகங்களின் தொட்டில் ' என்று (Cradle of Ancient Civiliza கருதலாம்!

சீனரின் சிற்பமும் , கட்டிடக்கலையும் பௌத்த சமயத்தால் பெரிதும் மதிக்கப்பட்டன. டுன் குயாங், யுன்சுங் (Tun Huang, Yun Kang) போன்ற இடங்களில் உள்ள பௌத்த சிற்பங்களில் இந்திய சாயை தென்படு கிறது. புத்தர் ஒரு கடவுளாக மதிக்கப்பட்டார் . அவரது சீடர்களான லோகன்களும் தெய்வங்களாக வணங்கப்பட்டனர் . சொர்க்கத்தின் தலைவரான அமிதபா (Amitabha) என்பவரும், கருணைமாதாவான குயான்யுவும் (Kuan yin) பௌத்தக் கடவுளரே ஆவர்.

**5. கலைகள்**

a) இலக்கியம்: சீனாவில் டாங்வம்ச ஆட்சிக்கா லத்தில் பல அரிய கவிஞர்கள் தோன்றினர். லிபோ (Lipo) என்ற கவிஞர் மது , மங்கை, போர், நாடுகடத்தல் ஆகியவை பற்றி பல கவிதைகள் எழுதினர் . அவரது "வு நாட்டு மடந்தை '' (The Man...) என்ற கவிதை மனிதாபிமானத்தை வெளிப்படுத்துகிறது. டாங்சியன் (Tao...) என்ற கவிஞர் ஆங்கிலகவிஞர் வேர்ட்ஸ் வொர்த்தைப் போன்று இயற்கையின் அழகை கவிதையில் வடித்தார். டு்ஃபு (Tufu) என்பவர் மிகப் பெரிய கவிஞர். அவர் மக்களின் துயரம் பற்றியே அதிகமான பாடல்கள் இயற்றினார். பொதுவாக சீனக்கவிதைகள் சுருக்கமானவை . ஆனால் ஆழ்ந்த கருத்துடையவை. உட்பொருள் நிறைந்தவை . உணர்ச்சி நிரம்பியவை . இளமையின் வனப்பையும், முதுமையின் வாட்டத்தையும், காலத்தின் கோலத்தையும் அவை நன்கு சித்தரிக்கின்றன.

b) இசை: சமயம் பற்றிய பல பாடல்கள் பாடப்பட்டன. நாடகங்களிலும் பாடல்கள் இசைக்கப்பட்டன. அவற்றுடன் குழல் , யாழ், மத்தளம் போன்ற இசைக்கருவிகளும் பெரிதும் பயன்படுத்தப்பட்டன. மங்கோலியர், கிரேக்கர், பாக்டீரியர் ஆகியோரின் இசை நயங்கள் சீனப்பாடல்களில் விரவிக்கிடப்பதைக் காணலாம்

c) நாடகம் : சீன சமுதாயத்தின் நாடக நடிகர்கள் மதிக்கப்படவில்லை பொதுவாக நன்னெறிகளை வற்புறுத்தும் கருத்துக்களைக் கொண்ட -நாடகங்களே அதிகம் வரலாறு பற்றிய நாடகங்களும் இருந்தன . தீமை அழியும் நன்மையே வெல்லும் என்ற உண்மையை பல நாடகங்கள் வலியுறுத்தின. நடிகர்கள் மேடையில் முகமுடி அணிந்து நடித்தனர். நடனமாடுவதிலும், வித்தைகள் செய்வதிலும் அவர்கள் நல்ல பயிற்சி பெற்றிருந்தனர். : .

d) அச்சுக்கலை : சுங் வம்சத்தாரின் ஆட்சிக் காலத்தில் அச்சிடும் கலை கண்டு பிடிக்கப்பட்டதும் காகிதம் , மை, எழுதுகோல் போன்றவை நடைமுறைக்கு வந்தன . எனவே நூல்கள் ஏராளமாக வெளியிடப்பட்டன . ஆரல்ஸ்டீன் (Aurel Stein) என்பவர் 1907 –ல் பௌத்த குகைகளிலிருந்து 15,000 நூல்களைக் கண்டுபிடித்தார் . சூதாடப் பயன்படும் சீட்டுக் கட்டுகளை சீனர்களே முதலில் உண்டாக்கினர் . தொகைநூல்கள், அகராதிகள், கலைக்களஞ்சியங்கள் போன்றவை வெளியிடப்பட்டன . கன்பூசியசின் நூல்களும் ஏராளமாக வெளியிடப்பட்டன.

**e) அழகுக்கலை**

சங்வம்சகாலத்தில் அழகு தெய்வமாக வழிபடப்பட்டது. கலைகள் அனைத்திலும் அழகு கொழிக்கலாயிற்று. டாங் வம்சத்தினரும் அழகைப் போற்றினர். அழகிய சித்திரங்கள் நிறைந்த துணிகளும் உலோகம் பாத்திரங்களும், இரத்தினங்களும் இவர்கள் காலத்தில் தோன்றின. மேதை நாற்காலிகள், ஆபரணங்கள் அழகாக செய்யப்பட்டன மரத்தின் மெருகெண்ணெய் பூசி அதை அழகுபடுத்தும் கலை (Lacquer) சீனாவில் தால் முதுலில் தோன்றியது. பின்னர் அது ஜப்பானுக்குப் பரவியது. விலை உ உயர்ந்த நீல மணிக்கற்களை (Jade) சாணை பிடித்து ஒளியூட்டுவதில் சீனர்கள் வல்லவர்களாக இருந்தனர்

6. **சிற்பக்கலை**

செம்பாலும், பித்தளையாலும், வெண்கலத்தலும் அழகிய பல உருவங்கள செதுக்கப்பட்டன. அவை பொதுவாக சமய சம்பந்தமாகவே அமைந்திருந்தன. விலங்குகளின் உருவங்களே அதிகமாக செய்யப்பட்டன போதி சத்துவர்கள் பற்றிய ஏராளமான உருவங்கள் செய்யப்பட்டன. அவற்றில் காந்தாரக்கலையின் சாயல் நன்கு தென்படுகிறது. ஷான்சி (Shansi) மாவட்டத்திலுள்ள யுன்கான் (Yun kan) குகைக் கோவில்களில் இத்தகைய சிற்பங்கள் அதிகமாகக் காணப்படுகின்றன. இது டாங் வம்சத்தார் காலத்தில் ஏற்பட்டதாகும். டாங் வம்ச காலத்திற்குப் பிறகு சிற்பங்களில் உலகியல் தன்மை புலப்படுகின்றன. காம உணர்ச்சிகள் அவைகளில் வெளிப்படுத்தப்பட்டுள்ளன

7) **ஓவியக்கலை**

டாங் வம்சத்தாரின் ஆட்சிக் காலத்தில் ஓவியம் நன்கு வளர்ச்சியடைந்தது டாங் மன்னர்கள் ஒவியர்களைப் பொன்னும் பொருளும் கொடுத்துப் போற்றினர். பண்டைய சீன ஒவிய முறை இரண்டு வகைப்படும். ஒன்று பழமை (Classic) சார்ந்தது. மற்றது. புத்துணர்ச்சி (Romantic) நிறைந்தது. மிங் ஹியாங் என் ற மன்னரது அரண்மனையில் வாழ்ந்த லி-ஷி-ஷன் (Li Ssu) என்பவர் பழமை சார்ந்த ஒவியத்தின் தந்தையாவார். இவரது ஒவியங்களில் பொருள்கள் உள்ளது உள்ளபடியே சித்தரிக்கப்பட்டன. அவை தெளிவாகவும், துல்லியமாகவும் வரையப்பட்டன

வு-டாய்-டிசே (wu Tao) என்ற ஒவியர் டாங் வம்ச மன்னரால் ஆதரிக்கப்பட்டார். இவர் புத்தர், பிற தெய்வங்கள், விலங்குகள், பறவைகள் ஆகியவற்றை தனது ஒவியங்ளில் சித்தரித்தார். பட்டு, காகிதம், சுவர் ஆகியவற்றின் மீது அவர் வரைந்தார். பௌத்த ஆலயங்களில் அவர் முன்னூறுக்கும் மேற்பட்ட ஓவியங்களை வரைந்துள்ளார்

அவரால் வரைய ப்பட்ட புத்தர்களின் முகங்களில் ஆழம் காண முடியாத ஒருவித தெய்வீக ஒளி வீசுகிறது

## 3.சீன நாகரிகம்

சுங் மன்னர்களும் ஓவியங்களை பெரிதும் விரும்பினர் . ஹுய் சுங் (Hui) என்ற சுங் பேராசர் ஒரு ஓவியப் பித்தர் . அவரே பல படங்களை வரைந்துள்ளார் . அவர் காலத்தில் எண்ணூறு ஓவியர்கள் சீன நாட்டில் வாழ்ந்தனர் . அவர்களை எல்லாம் சேர்த்து ஒரு ஓவியக்கலைக் கூடத்தை ஏற்படுத்தினார் . லி-லங்-மியன் (Li Lun) என்பவர் அக்கால அவைக்கள ஓவியராகத் திகழ்ந்தார். கு-கெய்-சிஹ் (Ku) K என்பவர் தலைசிறந்த ஓவியர்களில் ஒருவர் ஆவார். டாவோயிசம், பௌத்தம் ஆகிய இரண்டு சமயங்களும் அவரது ஓவியங்கள் மீது பெரிதும் செல்வாக்கு செலுத்தின

**கட்டிடக் கலை**

பழங்கால சீன் கட்டிடங்கள் கற்கள் , மரம், செங்கல் மற்றும் களிமண் ஆகியவற்றால் கட்டப்பட்டன. சீனர்கள் சிறிய சிறிய கட்டிடங்களையே கட்டினர் . சுங் வம்ச ஆட்சிக் காலத்தில் எழுதப்பட்ட எட்டு கட்டிடக்கலை நூல்களும் மரக்கட்டிடங்கள் கட்டுவதைப் பற்றியே விவரிக்கின்றன . புத்தரது ஆலயங்களே சீனக் கட்டிடங்களில் சிறந்தவை. பீகிங் நகருக்கருகில் உள்ள 'தூங்கும் புத்தரின் கோவில் (Temple Sleeping Bhuddha) பண்ணப்பட்டு சீனக் கட்டிடக் கலையின் சிற ப்புக்கு சிறந்த சான்றாகும் . கி.பி. 523 -ல் கட்டப்பட்ட கோபுரம் ஒன்று சுங்-யுச்-சு என்ற நகரில் கம்பீரமாக நிற்கிறது. எண்கோண வடிவத்தில் அமைந்த அது பதின்மூன்று மாடிகளைக் கொண்டதாகும் . பீகிங் நகரில் கட்டப்பட்ட கோடைகால அரண்மனையும் கன்பூசியஸ் ஆலயமும் அக்கால கட்டிடங் களுள் புகழ்பெற்றவையாகும்

சீனக் கட்டிடங்கள் எல்லாம் ஒரு கோட்டைக்குள்ளேயே கட்டப்பட்டன . வெளியிலுள்ளவர்கள் அவற்றைப் பார்க்க முடியாது . சீன அரண்மனை என்பது பல கட்டிடங்களைக் கொண்ட ஒரு கட்டித் தொகுதியாகும் . சாதாரணமக்களின் * வீடுகள் எளிமையாகவே தோன்றின. சீனக் கட்டிடங்களில் வலிமை இல்லை. எளிதாக இடிந்து விடக் கூடியதாகவே அமைந்திருந்தன . அவற்றில் அழகு இல்லை . தெய்வீகமும்

இல்லை. பார்ப்பவர் கண்களுக்கு சாதாரணமாகவே தோன்றின. சீனப் பெருஞ்சுவர் சீனக் கட்டிடக்கலைக்கு மிகச் சிறந்த உதாரணமாகத் திகழ்கிறது

**சீனப்பெருஞ்சுவர்**

பண்டைய சீன அரசர்கள் தங்களின் பாதுகாப்பிற்காக வலிமை மிக்க கோட்டைகளையும் சுற்றுச் சுவர்களையும் உருவாக்கினர் . இதற்கு எடுத்துக்காட்டாக நிற்பது உலக அதிசயங்களில் ஒன்றான சீனப்பெருஞ்சுவர் ஆகும் . இது உலகின் மிக நீளமான சுவராகும். இதன் நீளம் 2410கி மீ ஆகும் சீனாவின் வடபகுதியிலுள்ள கிழக்கு கடற்கரை பகுதி ஊரான ஷான்ஹைகூன் {Shan Hai Kuan} என்ற ஊரிலிருந்து மத்திய ஆசியாவிலுள்ள கான்சு (Kansu) பகுதி வரை நீண்டு செல்கிறது. சீனப் பெருஞ்சுவரின் உயரம் 8 மீட்டர் தம் ஒவ்வொரு 200 மீட்டர் இடைவெளியில் 1 முதல் 11 மீட்டர் உயரமுடைய சிறுகோபுரங்கள் கட் டப்பட்டுள்ளன. சுவரின் அடிப்பகுதியின் அகலம் 8 மீட்டரும், மேற்பகுதியின் அகலம் 5 மீட்டரும் ஆகும் சுவரின் இடையில் மன செங்கல், கருங்கல் ஆகியவற்றை நிரப்பி பாதைபோல் செய்துள்ளனர். சுவரில் மேல் உள்ள இருப்புப் பாதை குதிரை வீரர்கள் செல்வதற்கு ஏற்றவாறு அமைக்கப்பட்டுள்ளது.

சீனப்பெருஞ்சுவர் பல்வேறு அரச வம்சங்களின் ஆட்சியின் கீழ் பல ஆண்டுகளாக கட்டப்பட்டது. இச்சுவரைக் கட்ட நூறு ஆண்டுகளுக்கும் மேற்பட்ட காலம் பிடித்ததாகக் கூறுப்படுகிறது . இச்சுவரின் சில பகுதிகள் கி .மு நான்காம் நூற்றாண்டிலேயே எழுப்பப்பட்டன. சின் வம்சத்தைச் சோ ந்த ஷிகுவாங்டி (Shi Huang Ti) என்பவர் தனித்தனியே நின்ற சுவர்களை இணைக்கும் இணைப்பு சுவர்களைக் கட்டினார் . சூய் மரபு (Sui 589-618) காலத்தில் சீனப்பெருஞ்சுவரின் நீளம் மேலும் விரிவு படுத்தப்பட்டது மிகப்பெரிய விரிவு மிங் (Ming) வம்சகாலத்தில் நிகழ்ந்தது.

**சீன அறிவியல்**

பண்டைக்கால சீனர்கள் வானவியல் , கணிதம், ரசவாதம், மருத்துவம் ஆகியவற்றில் சிறந்து விளங்கினர்

அ. வானவியல்: சீனர்கள். கணிதத்தை அடிப்படையாகக் கொண்டு வானவியல் ஆய்வில் சிறந்து விளங்கினர் . வால் நட்சத்திரங்களின் (Comets) தன்மை பற்றியும் சூரிய சந்திரகிரகணங்கள் பற்றிய குறிப்புகளையும் பழங்கால சீனாவின் ஆவணங்கள் குறிப்பிடுகின்றன. கூசி, சீசென் (Hsi Shen) போன்ற வானவியல் மற்றும் கணித மேதைகள் பண்டைய சீனாவில் சிறப்பு பெற்றிருந்தனர்

b) ரசவாதம்: (Alchemy) பழங்கால சீனாவில் ரசவாதம், சிறப்புற்றிருந்தது. உலோகங்களைத் தங்கமாக மாற்றும் முறைக்கு ரசவாதம் என்று பெயர் இம்முறையில் மனிதனின் ஆயுளை நீட்டிக்க உலோகங்கள் மற்றும் தாவரங்களைக் கொண்டு பல காய கல்ப மருந்துகள் தயாரிக்கப்பட்டன பழங்கால சீனர் நீண்ட நாட்கள் வாழ விரும்பி இந்த ரசவாத முறையை ஊக்குவித்தனர். ஹன் (Han.BC 206–220) வம்ச காலத்தில் எழுதப்பட்ட 'Tsan Tung' என்ற நூலில் ரசவாத முறை பற்றி விரிவாக விளக்கப்பட்டுள்ளது Pao Tzu என்ற கி.பி நான்காம் நூற்றாண்டைச் சேர்ந்த நூலும் ரசவாத முறைபற்றி எழுதப்பட்ட சிறந்த நூலாகும்.

c) மருத்துவம்: வரலாறு தெரியும் காலத்திற்கு முன்பாகவே சீனாவில் மருத்துவம் பிரசித்தி பெற்று விளங்கியது. ஹிப்பாகிரட்டஸ் காலத்திற்கு முன்பாகவே சீனாவில் சிறந்த மருத்துவர்கள் இருந்தார்கள். சௌ (Chou) வம்ச காலத்தில் மருத்துவப்பட்டம் பெறுவதற்கு வருடாந்தரத் தேர்வு முறை இருந்தது மருத்துவர்களின் வருடச் சம்பளம் நிர்ணயம் செய்யப்பட்டது. கி.மு. இரண்டாம் நூற்றாண்டில் சங்கங்நிங் (Chang Chung Ching) என்பவர் நீரழிவு மற்றும் காய்ச்சல் பற்றிய சிறந்த நூல் ஒன்று எழுதினார். இது அடுத்த ஆயிரம் ஆண்டுகள் வரை சிறந்த நூலாகக் கருதப்பட்டது சீன மருந்துவகைகள் இன் (Yin), யாங் (Yang) என இருவகையாகப் பிரிக்கப்பட்டன. அனைத்து மருந்துவகைகளும் இப்பிரிவில் அடங்கின.

ஹீவாடோ (Hua To) என்பவர் அறுவவை சிகிச்சை (Surgery) பற்றிய நூல் ஒன்று எழுதினார். திராட்சை ரசத்திலிருந்து (Wine) தயாரிக்கப்பட்ட ஒரு வகை மயக்க மருந்தை (anaesthetic) தயாரித்து அறுவை சிகிச்சை செய்தார் 'வாங்ஷிடோ' (Wang Shu Ho) என்பவர் நாடித்துடிப்பு (Pulse) பற்றிய நூல் ஒன்று எழுதினார். சீனாவில் 24 வகையான நாடித்துடிப்புகள் பற்றியும் பத்தாயிரம் வகையான காய்ச்சல்கள் பற்றியும் குறிப்புகள் காணப்படுகின்றன. டாவோ ஹங்சிங் (Tao Hung Ching) என்பவர் 750 வகையான மருந்துப் பொருட்கள் (Drug) பற்றி விளக்கி உள்ளார்.

சீனாவில் பழங்காலத்திலிருந்தே அக்குபஞ்சர் முறை இருந்துவருகிறது. உடலில் அதிகமாக இருக்கும் திரவங்களின் வெளியேற்றமும், அத்திரவங் களினால் ஏற்படும் உடல் நலக்குறைவைப் போக்க தோலில் துளையிடும் முறைதான் 'அக்குபஞ்சர்' முறையாகும். உடலில் 22 இடங்களில் அக்குபஞ்சர் முறையைப் செயல்படுத்தி குணப்படுத்த முடியும்.

d) திசைகாட்டும் கருவி: (Magnetic Compass) சீனர்களின் கண்டுபிடிப்புகளில் சிறப்பானது 'காந்த சக்தி கொண்ட திசைகாட்டும் கருவி'யாகும். இதனை பேரரசர் (Cheng Wang, BC 1115–1075) என்பவர் காலத்தில் சௌ (Chou) என்பவர் கண்டுபிடித்தார். கி.பி. ஐந்தாம் நூற்றாண்டில் எழுதப்பட்ட சங்ஷூ (Sung) என்ற நூலில் திசைகாட்டும் கருவி பற்றிய குறிப்புகள் காணப்படுகிறது. சங்ஹங் (Chung Heng) என்பவரால் அந்த திசைகாட்டும் கருவி கி.பி. 139ல் திரும்பவும் திருத்தியமைக்கப்பட்டதாக அந்த நூல் தெரிவிக்கிறது. கி பி. 1190ல் தான் ஐரோப்பாவில் திசைகாட்டும் கருவியைப்பற்றிய குறிப்பு காணப்படுகிறது

டாங் (Tang) கி.பி 618–906) வம்ச காலத்தில் சீனாவில் வெடிமருந்து (Gun Powder) கண்டுபிடிக்கப்பட்டது. முதலில் அது பட்டாசுகள் தயாரிக்கவே பயன்படுத்தப்பட்டது. சங் (Sung) வம்ச காலத்தில் தான் கி பி 1161ல் கைக் குண்டுகளாகத் தயாரிக்கப்பட்டு போரில் உபயோகப்படுத்தப் பட்டது

e) கணிதம்: சீனாவில் கிமு 752–ல் சங் சாங் (Chang Tsang) என்ற கணித வல்லுநர் அல்ஜீப்ரா, ஜாமட்ரி பற்றிய நூல் எழுதினார். மேலும் இந்த நூலில் Negative Quantity பற்றி குறிப்பிட்டுள்ளார். சூசங்சி (Tsu Chung Chi) என்பவர் 'பை'யின் (π) சரியான மதிப்பை ஆறு தசம்பின்னத்தில் (Six decimals) வரை செய்தார். கி.பி. 132–ல் சங்ஹெங் (Chang Heng) என்பவர் பூகம்பத்தின் பலம், காலம், இடம் முதலியவற்றைக் காட்டும் கருவி (Seismograph) ஒன்றைக் கண்டுபிடித்தார்.

f) சீன ஆண்டுக் கணக்கீடு : சீனரின் பண்டைய கால ஆண்டுக் கணக்கீடு நிலவுக்கும் கதிரவனுக்கும் ஒருங்கே தொடர்பான (Lunar Solar) கணக்கீடாக இருந்தது. சாதாரணமாக ஓராண்டு 12 மாதங்களாக நிலவைச் சார்ந்து பிரிக்கப்பட்டது. அதனை கதிரவன் கணிப்புடன் இசைவு செய்ய 13வது மாதம் ஒன்றைச் சேர்த்து அதனை ஒரு ஞாயிறு ஆண்டு (Solar year) என்று கூறினர். சீனர்கள் தங்கள் ஆண்டுத் தொடக்கத்தை மதிநிலை மாதத்தில் தொடங்கு கின்றனர். அச்சமயம் கதிரவன் வான் நிலையில் மீனம் (Pisces) ராசிக்குள் நுழையும் போது புத்தாண்டை தொடங்குகின்றனர். சீனர்கள் வரலாற்று நிகழ்ச்சிகளைக் குறிக்க 60 ஆண்டுகள் கொண்டது ஒரு கால மண்டலம் என்றனர் இக்கால மண்டலம் ஆட்சி செய்யும் அரசன் அரியணை ஏறியதிலிருந்து கணக்கிடப்பட்டது.

**சீனத்தத்துவம்**

சீனத்தத்துவம் மிகச் சிறந்த உலகத்தத்துவங்களுள் ஒன்று என்று கருதப்படுகிறது. சீனாவில் தத்துவ சாஸ்திரத்தை கி.மு. 551 முதல் 479 வரை வாழ்ந்த கன்பியூசியஸ் (C) என்பவர் முதல் முதலாக விளக்கம் செய்தார்

**கன்பியூசியனிசம்**

சீனாவிலுள்ள மக்கள் பிற நாடுகளிலிருந்த மக்களைப் போல இயற்கையில் ஏற்படுகின்ற மாறுதல்களும் , மக்களின் செயல்களும் கடவுளின் செயல் என்று கருதினார்கள். மேலும் உலகிற்கும் , மக்களுக்கும் நெருங்கிய தொடர்பு இருப்பதாக நினைத்தார்கள். இத்தகைய நம்பிக்கையை தனது கருத்துக்களால் மாற்றினார் கன்பியுசியஸ். இரண்டாயிரம் ஆண்டுகளாக அவரது உபதேசங்களை சீனமக்கள் பின்பற்றினர். அவரது உபதேசங்களில் சிறப்பாக கருதப்படுவது அன்பேயாகும்

ஆவிகள் மீதும், சடங்காச்சாரங்கள் மீதும் அவர் நம்பிக்கை வைக்க வில்லை . கடவுள் ஒவ்வொரு மனிதனுக்குள்ளே தான் இருக்கிறார் . தேவைப்படும் மக்களுக்கு உதவி செய்ய வேண்டும் மனிதனுக்கு உத வி செய்யாமல் ஆவிகளுக்கு உதவி செய்து என்னபயன் என்றார் கன்பியூசியஸ் . முதலில் மக்கள் தாங்கள் இப்போது வாழும் வாழ்க்கையை புரிந்து கொள்ள வேண்டும் . இறப்பிற்கு பிறகு உள்ள வாழ்க்கையைப் பற்றி இப்போது சிந்திக்க வேண்டிய அவசியமில்லை . ஒவ்வொரு மனிதனும் மனதில் சுத்தமாகவும். நல்ல பழக்க வழக்கங்களை கடைபிடிப்பவராகவும் இருக்கவேண்டும் என்றார். காலந்தவறாமை கன்பியூசியசின் முக்கியமான கொள்கையாகும் . கன்பியூசியசின் கருத்துக்களை அவரது சீடர்கள் நாடு முழுவதும் பரப்பினார்கள்

கன்பியூசியசின் புகழ் பெற்ற தத்துவம் என்னவென்றால் 'மற்றவர்கள் உனக்கு எதைச் செய்யக்கூடாது என்று நினைக்கிறாயோ அதனை நீ மற்றவர் களுக்குச் செய்யாதே' என்பதாகும் (What you do not like done to you) கன்பியூசியஸ் கிட்டத்தட்ட பல நூல்களை எழுதியுள்ளார். அவை, 1) The Book of Hstry, 2) Spring and autumn Annals, 3) Book of Odes, 4) Book of Changes, 5) Book of Rites ஆகியவை ஆகும்.

**டாவோயிசம்**

சீன மக்களின் தீவிரவாத எண்ணங்களைப் பிரதிபலிப்பதே டாவோயிசமாகும் . இந்த டாவோ (Tao) தத்துவத்தை விளக்கியவர் லாஒட்சா கி.மு. 372-289) என்பவராவார். இவரது கொள்கை 'தாவோதே-இங்கு - என்ற நூலில் காணப்படுகிறது. டாவோயிசம் என்ற இயற்கைக் கொள்கை மிகவும் வல்லமையுடையது நிலையானது . அக்கொள்கையின்படி இயற்கை மிகவும் அழகு வாய்ந்தது . மட்டுமல்லாமல் நன்மை பயப்பதும் ஆகும். ஆகையால் மக்கள் இயற்கையான வாழ்வு வாழ வேண்டும்

இவர்களைத் தவி ர சாவுண்ட்சே , மென்ஷியஸ், குயஷி, மோட்சே. கான்பெயிட்சே (Chau Mencius, Mozi, Hanfeize) ஆகிய தத்துவஞானிகளும் தங்களது கருத்துக்களை மக்களிடையே பரப்பினர்.

சீனாவில் தோன்றிய தத்துவ சாஸ்திரங்களில் பெரும்பாலானவை அகத்தில் ஞானி, புறத்தில் அரசன் என்ற கொள்கையை உடையன. அவை மனிதனின் ஒழுக்க குணங்கள் எவை என்று சிந்தித்தன . நூலறிவிற்கு சிறப்பிடம் தரவில்லை . ஒழுக்கத்திற்கே சீனதத்துவம் சிறப்பிடம் அளிக்கிறது

இவ்வாறு பண்டைக்கால சீனநாகரிகம் பல சிறப்பு அம்சங்களைக் கொண்டு விளங்கியது. பிற்கால பல நாகரிகக் கூறுகளின் முன்னோடியாக விளங்கியது.
மீட்டரும், மேற்பகுதியின் அகலம் 5 மீட்டரும் ஆகும் சுவரின் இடையில் மன செங்கல், கருங்கல் ஆகியவற்றை நிரப்பி பாதைபோல் செய்துள்ளனர் . சுவரில் மேல் உள்ள இருப்புப் பாதை குதிரை வீரர்கள் செல்வதற்கு ஏற்றவாறு அமைக்கப்பட்டுள்ளது

## UNIT–III

## பாரசீக நாகரிகம்

**பண்டைக்காலம் (Ancient Persian Civilization)**

அசிரிய நாகரிகத்தின் அழிவுக்குக் காரணமானவர்களில் ஒரு பிரிவினரான மீட்ஸ் (Medes) இன மக்கள் பற்றிய சரியான குறிப்புகள் வரலாற்றில் காணப்படவில்லை. அசிரிய அரசர் மூன்றாம் சால்மனேசர் பர்சுவா (Parsua) என்ற பகுதி மீது படையெடுத்த அங்கு 27 ராஜாக்கள் இருபத்தி ஏழு குறைந்த மக்கள் தொகை உள்ள நாடுகளை ஆட்சி புரிந்து வந்தனர். அவர்கள் அமாடை, மாடை, மீட்ஸ் (Amadai, Madai, Medes) ஆகிய இனத்தைச் சேர்ந்தவர்கள் ஆவர். இந்தோ ஐரோப்பியர்களான அவர்கள் கிறிஸ்து பிறப்புக் கு 1100 ஆண்டுகளுக்கு முன்பு காஸ்பியன் கடற்பகுதியிலிருந்து மேற்கு ஆசியாவுக்கு வந்திருக்கலாம். மீட்ஸ், பொக்ரா, சாமர்கண்ட் ஆகிய இடங்களில் அலைந்து திரிந்து இறுதியில் பாரசீகம் வந்து சேர்ந்தனர். அப்பகுதியில் காணப்பட்ட தாது வளங்களினால் அங்கேயே தங்கி விட்டனர். மலைச்சரிவுகளில் வீடுகள் கட்டி வாழ்ந்து வந்தனர். இந்த மக்கள் தான் பழமையான பாரசீக நாகரிகம் தோன்றக் காரணமாயினர். தங்களது ஆதிக்கத்தை சிறிது சிறிதாக விரிவுபடுத்தி ஒரு பேரரசை நிறுவினர்

**பாரசீகத்தின் ஆரம்பகால வரலாறு**

பாரசீகர்களின் முதல் அரசரான டயோசஸ் (Deioces) என்பவர் எக்பதனா (Ecbatana) என்ற இடத்தில் (தற்கால ஹமதான்) தனது தலைநகரை நிறுவினார். அங்கு ஒரு பெரிய அரச மாளிகை ஒன்றைக் கட்டி அதிகாரம் , செலுத்தி வந்தார் வரலாற்றாசிரியர் ஹொடோட்டஸ் இந்தடயோசஸ் பற்றி குறிப்பிடுகிறார் "அரசரை யாரும் நேரில் பார்க்க முடியாது ஒரு தூதுவர் மூ லமே பார்க்க வேண்டும் அரசர் முன்பு சிரிப்பதோ , எச்சில் துப்புதலோ கூடாது இந்த அரசரின் கீழ் மீட் ஸ் மக்கள் வலிமை பெற்றனர் இவருக்குப் பிறகு பதவியேற்ற சியாக்சரஸ் (Cyaxares) அசிரியா மீது படையெடுத்தார் நினிவே அழிக்கப் பட்டது பின்னர் மேற்கு ஆசியாவிலுள்ள சார்டிஸ் (Sardis) என்ற இடத்தைத் தாக்கினார் தான் இறப்பதற்கு முன்பாக அசிரியா, மீடியா, பெர்சியா ஆகிய பகுதிகளை இணைந்து ஒரு பேரரசை நிறுவினார்.

சியாக்சரஸ்க்குப் பின் பதவியேற்ற அஸ்டியாஜஸ் (Astyages) காலத்தில் நாடு சீர்குலைந்தது. ஒழுக்கநெறியை மறந்தது. அப்போது பெர்சியாவில் அன்ஷான் (Anshan) என்ற இடத்தில் மீடியன் சார்பு நிலை ஆட்சியாளராக இருந்த சைரஸ் (Cyrus) என்பவர் எக்பதனா ஆட்சியாளரை எதிர்த்து கிளாச்சி செய்தார் மக்கள் ஆதரவுடன் எவ்வித எதிர்ப்பும் இன்றி ஆட்சியைப் பிடித்தார் இதன் மூலம் பாரசீகத்தில் மீடியாவின் ஆதிக்கம் ஒழிந்தது . பாரசீகம் மீடியாவின் மீது ஆதிக்கம் கொண்டதுடன் அண்மைக் கிழக்குப் பகுதி முழுவதிலும் (Near East) தனது ஆதிக்கத்தை ஏற்படுத்தியது |

**பாரசீக அரசர்கள்**

சைரஸ்: ( Cyrus) சைரஸ் பதவியேற்றது முதல் பாரசீகத்தின் பெருமை வளர ஆரம்பித்தது. மக்கள் மகிழ்ச்சியடைந்தனர் . சைரஸின் முழுமையா ன வரலாற்றை ஹெரடோட்டஸ் மற்றும் செனோபன் மூலம் நாம் அறிய முடியவில்லை. மிக அழகாக தோற்றம் உடைய சைரஸ் சிறந்த போர்வீரர் இவர் தனது வெற்றிகளின் மூலம் அசிரியா, பாபிலோனியா, லிடியா, சார்டிஸ் ஆசியாமைனர் ஆகிய பகுதிகளை பாரசீகப் பேரரசுக்குள் கொண்டு வந்தார் நல்ல ஆட்சி முறையை ஏற்படுத்தினார் . மிகவும் பெருந்தன்மை மிக்கவர் . எல்லா மக்களுக்கும் மத சுதந்திரம் அளித்தார் . இவர் அலக்சாந்தரைப் போல ஒரு பேரரசை அமைத்தாரேயொழிய அதனை ஒழுங்கப்படுத்த உயிருடன் இல்லை மசாக்கட்ஸ் (Massagetae) இன மக்களுடன் போர் புரிந்த போது கொல்லப்பட்டார்

கேம்பிசஸ்: (Cambyses, 521 BC) இவர் தனது சகோதரரும் அரியணைக்குப் போட்டியாளருமான சமர்டிஸ் (Smerdis) என்பவரைக் கொலை செய்தே ஆட்சியிலமர்ந்தார். எகிப்திய நாட்டில் காணப்பட்ட செல்வத்தின் காரணமாக அதன் மீது படையெடுத்தார். மெம்பிஸ் பிடிக்கப்பட்டது இதனால் பாரசீகப் பேரரசு நைல்நதி வரைவிரிவடைந்தது. ஆனால் இவர் எகிப்தில் இரக்கமற்றும், மனிததன்மையற்றும் நடந்து கொண்டார். எகிப்தியர் வணங்கும் கடவுளான காளைமாட்டை (Bull) வாளினால் வெட்டினார். கோவில்களை இடித்தார். ஆனால் நாடு திரும்பும் முன்பு இறந்து விட்ட

டாரியஸ்: (Darius, 521-485 BC) கேம்பிசசுக்குப்பிறகு நாட்டில் குழப்பம் நிலவியது. எகிப்து, லிடியா, சூசியானா, பாபிலோனியா, மீடியா, அசிரியா, சசியா ஆகிய மாநிலங்களில் புரட்சி ஏற்பட்டது. ஆனால் உயர் குடியினரால் தேர்ந்தெடுக்கப்பட்ட டாரியஸ் என்பவர் இப்புரட்சியை கடுமையாக அடக்கினார். நீண்டகால முற்றுகைக்குப்பிறகு பாபிலோனியா வீழ்ச்சி யடைந்தது. ஆனாலும் போரினாலேயே இவ்வளவு பெரிய பேரரசைக் கட்டிக் காக்க முடியாது என்று கருதி புத்திசாலித் தனமாக அமைதியான முறையிலேயே ஆட்சி புரிய முற்பட்டார். நல்ல நிர்வாகத்தை வழங்கி பேரரசில் அமைதியை நிலை நாட்டினார். வெற்றியடைந்த நாடுகளைத் தக்க வைத்துக் கொள்ள மட்டுமே போர் புரிந்தார். தெற்கு ரஷ்யா, பாஸ்பரஸ், டான்யூப், வோல்கா நதிவரை தனது ஆதிக்கத்தை ஏற்படுத்தினார். ஆனால் கி.பி 490-ல் மாராத்தன் (Marathon) என்ற இடத்தில் கிரேக்கர்களிடம் தோல்வியடைந்தார்.

டாரியசுக்குப் பின் வந்த செர்க்சஸ் (Xerxes, 485–465) காலத்தில் பாரசீகத்தின் வீழ்ச்சி வேகமாக வந்தது. கி.மு. 331 – ல் அலக்சாந்தரின் படையெடுப்பின் விளைவாக பாரசீகத்தின் புகழும், வலிமையும், பெருமையும் வீழ்ச்சியடைந்தது

**பாரசீக வாழ்க்கை**

**அ. பேரரசு**

பேரரசர் டாரியசின் (Darius) காலத்தில் தான் பாரசீகம் பேரரசின் எல்லை அளவில் விரிவடைந்து காணப்பட்டது. இவரது அரசு தனிமனித அரசாகக் காணப்பட்டது. இவர் எதேச்சதிகாரியாக விளங்கினாலும். மனிதத்தன்மையுடன் ஆட்சி புரிந்தார். இவர் எகிப்துக்கும், பாபிலோனியாவுக்கும் தன்னை அரசராக்கிக் கொண்டார். மீதி உள்ள நிலப்பகுதிகள் 20 மாநிலங்களாகப் பிரிக்கப்பட்டன. அவை சத்ரப்புகள் (Satraps) என்று அழைக்கப்பட்டன. அவை பாலஸ்தீனம், சிரியா, போனிஷியா, லிடியா, பிரிஜியா,

அயோனியா கெப்படோசியா , சிலிசியா, ஆர்மீனியா, அசிரியா, காகசஸ், மீடியா, பெர்சியா, ஆப்கானிஸ்தானம், பலுசிஸ்தானம், சிந்து நதிக்கு மேற்குபகுதி ,சாக்டியானோ, பாக்டீரியா போன்றவையாகும். வரலாற்றில் இதற்கு முன்பு இவ்வளவு பெரிய பகுதிகள் ஒரு குடையின் கீழ் ஆளப்பட்டது கிடையாது

இந்த சத்ரப்புகள் அரசருக்கே பொறுப்பானவையாகும். அரசரின் செயலர் ஒருவர் எல்லா சத்ரப்புகளிலும் நியமிக்கப்பட்டிருப்பார் . நாடு முழுவதிலும் 'அரசரின் கண்ணாகவும், காதாகவும்' செயல்பட்ட ஒற்றர் படை காணப்பட்டது . படைப் போக்குவரத்துக்கு வசதியாக பேரரசு முழுவதும் ரோடு போடப்பட்டது தபால் முறையும் நல்ல முறையில் செயல்பட்டது . பாரசீகர்கள் பல கோட்பாடுகளை பாபிலோனியர் , அசிரியர், எகிப்தியர் ஆகியோர்களிட மிருந்தே கற்றுக் கொண்டனர்.

**b) மக்கள்**

பாரசீகப் பேரரசில் நான்கு கோடி மக்கள் வாழ்ந்து வந்தனர் . சுமார் இருநூறு வருடம் ஆட்சிபுரிந்த பாரசீகம் அப்போது பாரசீகம் என்ற பெயரில் அழைக்கப்படவில்லை. பாரசீக வளைகுடாவுக்கு கிழக்குப்பகுதி பார்ஸ் (Parsa) என்று அழைக்கப்பட்டது. இப்பகுதி ஒரு மலைப்பிரதேசமாகும். நதிகள் கிடையாது . கடுங்குளிரும், கடும் வெயிலும் காணப்பட்டது . இந்த மக்கள் கடினமான மலை வாழ்க்கை வாழ்ந்தனர். இந்தோ ஐரோப்பியர்களான இவர்கள் தெற்கு ரஷ்யாவிலிருந்து வந்தவர்கள். இவர்களது மொழியும் சமயமும் ஆரியர்களுடன் தொடர்பு கொண்டிருந்தது

நாஷ்-இ-ரஸ்தம் (Naksh-i-Rustam) என்ற இடத்திலுள்ள ஒரு கல்வெட்டில் முதலாம் டாரியஸ் தன்னை "A Persian, son of a Persian, an Aryan of Aryan descent" என்று கூறுகிறார். சொரஷ்டிரர் பாரசீகர்களின் புராதன பூமி ஆரியானா வேஜோ ' (Airyana) என்கிறார். ஸ்டிராபோ (Strabo) என்பவர் இந்த ஆரியானா என்பதுதான் ஈரான் என்கிறார்

அண்மைக் கிழக்குப் பகுதியிலுள்ள மக்களில் பாரசீகர்கள் மிகவும் அழகானவர்கள். நல்ல உடற்கட்டு உடையவர்கள் . கிரேக்கர்களைப்போல அழகான மூக்கு உடையவர்கள் . தாடி வைத்திருந்தனர் . நீண்ட சுருள் முடி கொண்டவர்கள் . சிலபேர் அழகான வி க் வைத்துக் கொண்டனர் . அழகு சாதனங்களை அதிகமாக உபயோகப்படுத்தினர். 'அலங்காரம் செய்பவர்கள் ' என்ற ஒரு பிரிவினர் இருந்தனர் . இவர்கள் காஸ்மெட்டே (Kosmetae) என்று அழைக்கப்பட்டனர் . நறுமணப் பொருட்களை

அதிகமாக உபயோகித்தனர். போர் புரியச் செல்லும் போது கூட விலை கூடிய ஒருவகை நறுமணத் தைலம் (Perfume) கொண்டு சென்றனர்.

பாரசீக மக்கள் பல மொழிகளைப் பேசினர். ஆனால் 'பழைய பாரசீக மொழி' (Old Persian) என்ற மொழியே அதிகமான மக்களால் பேசப்பட்டது. இந்த மொழி சமஸ்கிருத மொழியுடன் தொடர்பு கொண்டது. இந்த மொழி பின்னர் Zend என்ற மொழியாகவும், Pahlavi என்ற மொழியாகவும் வளர்ச்சியடைந்தது. கல்வெட்டுகளில் ஆப்புவடிவ மான (Cuneiform) எழுத்துக்கள் காணப்படுகிறது. ஆவணங்கள் தயாரிக்க அராமைக் (Aramaic) எழுத்துக்கள் பயன்படுத்தப்பட்டன. மொத்தத்தில் பாரசீக எழுத்துக்கள் நல்ல முறையில் [illegible]வில்லை.

**) குடியானவர்கள்**

பாரசீகக் குடியானவர்கள் படிப்பறிவு அற்றவர்கள். நிலங்களில் வேலை செய்தனர். பாரசீக வேதநூலான சென்ட் அவஸ்தா (Zend Avesta) விவசாயத்தொழிலை உயர்வாகக் கருதுகிறது. பெரிய நிலங்களில் கூட்டுறவு முறையில் விவசாயம் நடைபெற்றது. நிலப்பிரபுக்கள் தங்கள் நிலங்களை குத்தகைக்கு விட்டு பயிரிட்டனர். அந்நிய அடிமைகள் விவசாயத்தில் ஈடுபடுத்தப்பட்டன மரஏரில் இரும்பு கொழு மாட்டப்பட்டு உபயோகிக்கப்பட்டது. உழவுக்கு காலை மாடு பயன்படுத்தப்பட்டது. மலைகளிலிருந்து வயல்களுக்கு நீர் பாய்ச்ச, பட்டது. பார்லி, கோதுமை ஆகியவை பயிரிடப் பட்டன. மக்கள் இறைச்சியை அதிகமாக உண்டனர். மதுபானம் அதிகமாகப் பயன்படுத்தப்பட்டது. சைடி, ஒருமுறை தனது படைவீரர் அனைவருக்கும் திராட்சை ரசம் (Wine) கொடுத்தாராம்! ஹோமா (Homa) என்ற மதுபானம் கடவுளுக்கும் படைக்கப்பட்டது.

**) தொழிற்துறை**

பாரசீகத்தில் தொழிற்துறை அதிகமாக வளர்ச்சியடையவில்லை. செய்தித் தொடர்பு மற்றும் போக்குவரத்தில் அதிக முன்னேற்றம் காணப்பட்டது முதலாம் டாரியஸ் பல்வேறு தலைநகரங்களை இணைத்து சாலைகள் அமைத்தார். சாலைகள் சிறந்த பொறியியலாளர்களால் அமைக்கப்பட்டது. சூசாவிலிருந்து சார்டிஸ் நகர்வரை ஐநூறு மைல் நீளச்சாலை அமைக்கப்பட்டது ஒவ்வொரு 3.4மைல் தூரத்தில் பாராசங் (Parasang) என்ற தங்குமிடம் ஒன்று அமைக்கப்பட்டது. சாலை பாதுகாப்புடன் விளங்கியது. ஒவ்வொரு தங்குமிடத்திலும் தபால்கள் எடுத்துச் செல்ல குதிரை தயார் நிலையில் இருந்தது. சாதராரணமாக ஒரு தபால் சென்றடைய 40 நாள் ஆகும். ஆனால் இந்த சாலை மூலம் ஒரேவாரத்தில் சூசாவிலிருந்து சார்டிஸ் சென்றடையும் நதிகள் மீது படி

பாலங்கள் கட்டப்பட்டன. இந்தச் சாலைகள் அரசின் மையக் கட்டுப்பாட்டை ஏற்படுத்த உதவியாக அமைந்தது. வியாபார வளர்ச்சிக்கும், கலாச்சா பரிமாற்றத்திற்கும் உதவி செய்தது. இந்தச் சாலை வழியேதான் தேவதைகளும் பிசாசுகளும் பாரசீகத்திலிருந்து யூத, கிறிஸ்தவ புராணக்கதைகளுக்கும் சென்றன!

**c) வாணிபம்**

தரைப்போக்குவரத்து வளர்ச்சியடைந்ததைப் போல கப்பர் போக்குவரத்து வளர்ச்சியடையவில்லை. பாரசீகர்களிடம் கப்பற்படை இல்லை தேவைப்பட்ட போது போனீஷியர்களிடமிருந்தும், கிரேக்காகளிடமிருந்தும் பெற்றுக் கொண்டார்கள். டாரியஸ் பாரசீகத்திற்கும், மத்தியதரைக்கடல் பகுதிக்கும் இடையே செங்கடல் வழியாக ஒரு பெரிய கால்வாய் வெட்டினா ஆனால் அவருக்குப்பின் வந்த அரசர்களால் அது சரியாக பராமரிக்க படாததால் மணலில் முங்கிப்போய் விட்டது . பாரசீகர்கள் வெளி நாட்டவருடன் வாணிபம் செய்யவில்லை. சந்தைப்பகுதியை 'பொய் பேசும் இடங்கள்' என்ற 'வர்ணித்தனர். வசதியானவர்கள் தங்களுக்குத் தேவையானவற்றை தாங்கப் உற்பத்தி செய்து கொண்டனர் . நாட்டில் கொடுக்கல், வாங்கல், வட்டி ஆகியன பொருட்கள் மூலமே நடைபெற்றன. நாணயமுறை லிடியா தேசத்திலிருந்து வந் தது. டாரியஸ் தங்க, வெள்ளி நாணயங்களை வெளியிட்டார் . அதில் அவரது உருவம் பொறிக்கப்பட்டது. பொன், வெள்ளி பரிமாற்று விகிதம் (Bimetallism) இவர் காலத்தில் தான் தோன்றியது. வெள்ளியும், தங்கமும் 135.1 என்ற விகிதத்தில் பரிமாற்றம் செய்யப்பட்டது.

**அரசாங்கம்**

**a) அரசர்**

பாரசீக அரசாங்கத்தின் தலைவர் அரசரேயாவார் அவர் ஒரு ஷத்ரா {Kshathra) ஆக இருந்தார். இது பாரசீக முடியரசரின் குண இயல்பை வெளிப்படுத்துகிறது . பாரசீகப் பேரரசில் பல சிற்றரசுகள் இருந்ததால் 'அரசர்களின் அரசர்' (King of Kings) என்று அழைக்கப்பட்டார் அரசரது சொல்லே இறுதியான தீர்ப்பு ஆகும் அவர் விசாரணையின்றி யாரையும் கொல்லலாம். எந்த தண்டனையும் கொடுக்கலாம். அவரது கருத்துக்களை விமர்சிக்கும் உரிமை யாருக்கும் கிடையாது. அரசர் தனது வாரிசை நியமனம் செய்து

கொள்ளலாம். ஆனால் பொதுவாக வாரிசுரிமை புரட்சி மற்றும் கொலைச் செயல்களில் ஈடுபடுவது மூலமே நிர்ணயம் ஆனது

அரசருக்கும் மக்களுக்குமிடையே உயர்குடியினர் இருந்தனர் அரச சபையிலுள்ள இந்த உயர் குடியினர் அரசருடன் நெருங்கிய தொடர்பு கொண்டிருந்தனர் . இவர்களது ஆலோசனைகளுக்கு அரசர் மதிப்பளித்தார் போர் நடைபெறும் போது அரசருக்கு படை உதவி செய்தனர். இந்த உயர் குடியினர் தங்கள் கீழ் உள்ள நிலமானியப் பகுதிகள் (Fiefs) மீது முழு அதிகாரம் செலுத்தினர். தங்களுக்கென தனிப்படை ஒன்றையும் அமைத்துக் கொண்டனர்.

**b) படை**

அரசாங்க அதிகாரங்கள் அனைத்திற்கும் அடிப்படையான வலிமையை அளித்தது படையே ஆகும். 15 வயது முதல் 50வரை உள்ள அனைத்து ஆண் களும் போர்ப்பணி செய்வது அவசியம். ஒருமுறை டாரியசிடம் ஒரு தகப்பன் வந்து தனது மூன்று மகன்களில் ஒருவனுக்கு மட்டும் விலக்கு அளிக்கும்படி கேட்டார் . இதனால் மூன்று மகன்களையும் கொலைசெய்ய உத்தரவிட்டார் டாரியஸ் . மற்றொரு முறை செர்க்சசிடம் (Xerxes) ஒரு தகப்பன் வந்து தனது நான்கு மகன்களைப் போருக்கு அனுப்பி விட்டு ஐந்தாவது மகனை மட்டும் வீட்டுப்பொறுப்புகளைக் கவனிக்க விட்டுவிடும்படி கேட்டார். ஆனால் அந்த ஐந்தாவது மகன் இரண்டாக வெட்டப்பட்டு சாலையின் இரு பக்கங்களிலும் போடப்பட்டார்!

'அரசகாவலர் (Royal Guard) படையில்' ஆயிரம் குதிரை வீரர்களும் இரண்டாயிரம் காலாட்படையினரும் இருந்தனர். அரசாங்க நிலைப் படையில் – பாரசீகர்களும், மீட்ஸ் மக்களுமே அதிகமிருந்தனர் . நாட்டின் முக்கியப்பகுதிகளில் நிலைப்படை நிறுத்தி வைக்கப்பட்டது. படையில் பல வகைப்பட்ட ஆயுதங்கள் உபயோகிக்கப்பட்டன . அம்பு, வில், எரியும் ஈட்டி , கத்தி ஈட்டிக்கோல் (Pikes) கவண் (Sling) கேடயம், தலைக்கவசம் ஆகியவை பயன்படுத்தப்பட்டன போர் புரியப்போகும் போது விலைமாதர்களும் , வீரர்களின் வைப்பாட்டிகளும் (Concubines) உடன் சென்றனர் செர்க்சஸ் காலத்தில் பதினெட்டு லட்சம்பேர் பாரசீகப்படையில் இருந்தனர்.

**c) சட்டம்**

அரசரின் விருப்பங்களே சட்டங்களாக செயல்பட்டன . மேலும் அரசரின் வலிமைக்கு முன்பு எந்த அதிகாரங்களும் எடுபடவில்லை 'அரசரது ஒவ்வொரு

ஆணையும், தீர்ப்பும் அகுர மஸ்தா (Ahura Mazda) என்ற கடவுள் மூலமே வருவதாக கருதப்பட்டது எனவே இவை கடவுளின் விருப்ப மாகவே {Divine Will} கருதப்பட்டது. அரசரின் ஆணைகளை மீறுவது கடவுளின் விருப்பங்களை மீறுவதாக பொருள்பட்டது

அரசரே தலைமை நீதிமன்றமாகச் செயல்பட்டார். சில நேரம் தனது அதிகாரங்களைச் சில கற்றறிந்த உயர் குடியினரிடம் விட்டுச் செய்யச் சொன்னார். அதற்குக் கீழே ஏழு உறுப்பினர்களைக் கொண்ட உயர் நீதி மன்றங்கள், மற்றும், தல நீதி மன்றங்கள் செயல்பட்டன. மதகுருமார்களே சட்டங்களை இயற்றினர் அவர்களே நீதிபதிகளாகவும் பணியாற்றினர் குற்றவாளிகளுக்கு ஜாமீன் வழங்கும் முறை இருந்தது விசாரணை நேர்மையாக நடைபெற்றது. தவறுகளின் தன்மையின் அடிப்படையிலேயே தீர்ப்பு வழங்கப்பட்டது. வழக்கறிஞர்கள் (Speakers of Law) வழக்கை நடத்த கட்சிக்காரர்களுக்கு உதவி செய்தனர். நேர்மையான தீர்ப்பு வழங்கப்பட்டது. நேர்மையற்ற தீர்ப்பு வழங்கிய நீதிபதி ஒருவரை காம்பிசஸ் தோலுரிக்க உத்தரவிட்டார்.

**d) தண்டனைகள்**

சிறிய குற்றங்களுக்குத் த ண்டனையாக ஐந்து முதல் இருநூறு கசையடிகள் வழங்கப் பட்டன. நீதித்துறை நிர்வாகமானது நீதிமன்றங்களில் விதிக்கப்படும் அபராதத் தொகை மூலமே நடத்தப்பட்டது பெரிய குற்றங்களுக்கு உறுப்புகளை வெட்டுதல், குருடாக்குதல், சிறையிலடைத்தல் ஆகிய தண்டனைகள் வழங்கப்பட்டன. தேசத்துரோகம், கற்பளிப்பு, ஒரினச் சேர்க்கை (Sodomy) கொலை, அரசரின் தனிமையில் தலையிடுதல், அரசரின் வைப்பாட்டிகளுடன் கள்ளத் தொடர்பு வைத்தல், தெரியாத்தனமாக அரசரின் அரியணையில் அமர்ந்துவிடுதல் ஆகிய குற்றங்களுக்கு மரணதண்டனை வழங்கப்பட்டது. மரண தண்டனைகள், நஞ்சுகொடுத்தல், கழுவேற்றுதல், தூக்கிலிடுதல், கல்லெறிதல், சுடுசாம்பலில் போட்டுவிடுதல் ஆகியவை மூலம் நிறைவேற்றப்பட்டன. இந்த தண்டனைகள் மனிதத்தன்மையற்றவையாகவும், காட்டுமிராண்டித்தனமாகவும் உள்ளன.

**e) மாகாண நிர்வாகம்**

பேரரசை பசர்கடீயா, பெர்சிபோலிஸ், எக்பதனா, சூசா (Pasargadea, Persepolis, Ecbatana, Susa) தலைநகரங்கள் மூலம் ஆட்சி செய்தார் அரசர். நிர்வாக வசதிக்காக பேரரசு 20 சத்ரப்புகளாக பரிக்கப்பட்டது. இந்த மாகாணங்களின் நிர்வாகம் அரசராலயே கண்காணிக்கப்பட்டது. மாகாண நிதி த்துறை, மற்றும் ஆவணங்கள் திடீர் என்று

சோதனை செய்யப்பட்டன . அதிகாரிகள் தி றமையாகச் செயல்பட்டனர் . மாகாண அதிகாரிகளுக்கு அந்த மாகாண மக்களே போதுமான சம்பளம் வழங்கினர் . ஒவ்வொரு சத்ரப்பும் அரசருக்கு வரியாக பணமோ , பொருளோகொடுக்க வேண்டும் . அரசரின் தனிப்பட்ட தேவைக்கும் கொடுக்க வேண்டும் . இதனால் அரசகருவூலத்தில் ஏராளமான பணம் சேர்ந்தது. 150 ஆண்டுகளுக்குப் பிறகு அலக்சாந்தர் படையெடுப்பின் போது கூட அரச கருவூலத்தில் 270 கோடி டாலர் மதிப்புள்ள பணம் (talents) கிடைத்ததாம்.

இவ்வாறு பாரசீகர்கள் மிகச்சிறந்த ஆட்சிமுறையை அமைத்துக் கொண்டனர் . ஒவ்வொரு மாநிலமும் அதன் தனிமொழி , சட்டம், கலாச்சாரம், சமயம், பண்பாடு ஆகியவற்றின் அடிப்படையிலேயே ஆட்சியை அமைத்துக் கொண்டன . முதலாம் தாரியசின் பேரரசு அரசியல் நிறுவனங்களில் மிகப்பெரிய சாதனையாகும் . இந்த சாதனைகளை டிராஜன் , ஹாட்ரியன், அந்தோனி ஆகியோர்களே சமன் செய்ய முடிந்தது.

**பாரசீக சமயம்**

பாரசீகர்கள் சொராஸ்டிரிய சமயத்தைப் பின்பற்றின ர். இந்த சமயத்தை உருவாக்கியவர் சொராஸ்டிரர் ஆவார் . இவர் பிறந்தது கி .மு. 570 அல்லது ஆறாம் நூற்றாண்டின் பிற்பகுதியாக இருக்கலாம் என்று ஊகிக்கப் பா படுகிறது . இவர் பண்டைக்கால மீடியா என்ற நாட்டில் ராஜஸ் (Rhages) என்ற இடத்தில் பிறந்தார் . சொராஸ்டிரர் பிறந்த அன்றே வாய்விட்டு சிரித்தாராம். அப்போது அவரைச் சுற்றி நின்ற கெட்ட ஆவிகள் நடுநடுங்கி ஒடி ஒழிந்து கொண்டன . தாட்டுப்புற சூழலில் வளர்ந்த இவர் அமைதியை நாடி தியானம் செய்தார். கடுந்தவத்திற்குப்பிறகு அகுரமஸ்தா (Ahura mazda-Lord of Light) என்ற தெய்வம் தோன்றி 'அவஸ்தா' (Avesta) என்ற நூலைக் கொடுத்து (Book of knowledge and wisdom) மக்களுக்கு போதிக்கும்படி கூறிவிட்டு மறைந்தது

அவஸ்தாவின் கருத்துக்களை சொராஸ்டிரர் போதிக்க முற்பட்டபோது கடுமையான எதிர்ப்பு ஏற்பட்டது . ஆனால் வாஸ்தபா (Vistaspa) என்ற ஈரானிய இளவரசர் இக்கருத்துக்களை மக்களி டம் பர்ப்ப ஆதரவளித்தார் . இவ்வாறு சொராஸ்டிர சமயம் பிறந்தது. பாரசீக அரச குலத்தவர்களான அக்கமீனியர்கள் (Achaemenians) சொராஸ்டிரரின் சமயத்திற்குப் பேராதரவு அளித்தனர்

அக்காலத்தில் மீட்ஸ் மற்றும் பாரசீகர்கள் விலங்குகளையும் , தமது முன்னோர்களையும் தெய்வங்களாக வணங்கினர். மித்ரா (Mitra-god of Sun), அனைய்தா

(Amadda) ஹோமா (Haoma – ஒருவகைச்செடி), எருது கடவுள் (Bull) ஆகியவைகளை வணங்கினர். மாகி (Magi) என்பவர்தான் பலியிடுதல் போன்ற சடங்குகளை செய்து வந்தார். இவைகளை எல்லாம் சொராஸ்டிரர் கண்டித்தார்

அகுரமஸ்தா என்ற கடவுளின் ஏழு தன்மைகளான ஒளி , நல்ல எண்ணம் , நேர்மை, உறைவிடம், இரக்கம், நல்லமுறை, அழிவின்மை (Light, good mind, Right, Dominion, Piety, Immortality) ஆகிய தன்மைகளைப் பின்பற்றியவர்கள் அழிவற்ற புனிதத்தன்மை பெறுவார்கள் என்றார் . சொராஸ்டிரர், "அநீதிகளின் தலைவன் அரிமண் (Ahriman) ஆவார் இவரே இருளின் இளவரசர். தீமைகளின் பிறப்பிடம் , நல்லசக்தியான அகுரமஸ்தாவுக்கும் , தீயசக்தியான அரிமனுக்கும் இடையே இடைவிடாத போர் தொடரும் . இறுதியில் நன்மையே தீமையை வென்றிடும்" என்று கூறுகிறார் சொரால்டிரர்

இந்த சொராஸ்டிர சமயம் மக்களை நல்வழிப்படுத்தியது. புதிய ஒரு கடவுள் கொள்கையை" (Monotheism) வலியுறுத்தியது. பெருமளவிலான மக்கள் ) இந்தசமயத்தைப் பின்பற்றினர். ஆனால் பிற்கால பாரசீக அரசர்களின் காலத்தில் இச்சமயம் தனது புனிதத்தன்மையை இழந்து விட்டது. அலக்சாந்தரின் படையெடுப்பு இந்த சமயத் திற்கு பேரழிவைத் தந்தது. ஆனால் பின்னர் ) சசானியர்கள் காலத்தில் (Sassanids 226-651 AD) இந்த சமயம் ஓரளவு புதுப்பிக்கப்பட்டாலும் , டார்டர்கள் மற்றும் முஸ்லீம்களின் படையெடுப்பினால் அழிவுற்றது

**பாரசீக பண்புகளும் ஒழுக்க நடத்தைகளும்**

இப்படிப்பட்ட நல்ல சமய போதனைகள் இ ருந்தாலும் பாரசீக அரசர்கள் காட்டுமிராண்டித்தனமாகவே நடந்து கொண்டனர் . முதலாம் டாரியல் இரண்டாம் அர்டாக்சரஸ் ஆகியோர் முரட்டுத்தனமாகவே நடந்து கொண்டனர் . எல்லா இழி செயல்களுக்கும் அகுரமஸ்தாவின் ஆதரவு உள்ளதாக கூறிக் கொண்டனர் . ஆனால் அரசர்களை வைத்துக் கொண்டு மக்களை எடைபோட்டு விடக் கூடாது.

**சுகாதாரம்**

பாரசீக மக்கள் வெளிப்படையானவர்கள் பெருந்தன்மை மிக்கவர்கள் உபசரிப்பதில் உயர்ந்தவர்கள். ஒருவரை ஒருவர் சந்திக்கும் போது தழுலிக் கொண்டனர் சமநிலையில் உள்ளவர்களுக்கு உதட்டில் முத்தம் கொடுத்தனர் . கீழ்நிலையில் உள்ளவர்களுக்கு கன்னத்தில் கொடுத்தனர். பொதுமக்களுக்கு தலைகுனிந்து வணக்கம் செலுத்தும் பண்பு காணப்பட்டது . தெருவில் வைத்து குடிப்பது , சாப்பிடுவது இல்லை.

பொது இடத்தில் எச்சில் துப்புவதோ . மூக்கு சிந்துவதோ கிடையாது . மிதமான உணவுவகைகளையே உண்டனர். ஒரு நாளைக்கு ஒருவேளை மட்டுமே உண்டனர் . தண்ணீரைத் தவிற எதுவும் குடிப்பதில்லை. உடலையும், உள்ளத்தையும் தூய்மையாக வைத்துக் கொண்டனர். கைகழுவாமல் எந்த வேலையும் செய்வதில்லை தொற்றுநோய் பரப்புவர்களுக்கு கடுமையான தண்டனை வழங்கப்பட்டது

**பொது ஒழுக்கம்**

பாரசீகர்கள் பொது ஒழுக்கத்திற்கு அதிக முக்கியத்துவம் கொடுத்தனர் தவறான முறையில் உறவு வைத்திருக்கும் ஆண் , பெண்களுக்கு கொலைத் தண்டனை வழங்கப்பட்டது. சுய இன்பத்தில் (Onanism) ஈடுபட்டால் கசையடி கொடுக்கப்பட்டது . பெண்களைக் கவர்ந்து செல்தல் கொடூரத்தன்மை கொண்டதாக கருதப்பட்டது . ஓரினச் சேர்க்கை (Sodomy) பற்றி ஹொட்டோட்டஸ் குறிப்பிட்டுள்ளார். புனித நூலான அவஸ்தாவிலும் இதுபற்றி அடிக்கடி கூறப்பட்டுள்ளது . ஓரினச் சேர்க்கை மன்னிக்க முடியாத குற்றம் எனவும் , என்ன செய்தாலும் இப்பாவத்தைப் போக்க முடியாது எனவும் அதில் குறிப்பிடப் பட்டுள்ளது

சமுதாயத்தில் பலதார முறையும் , வைப்பாட்டிகள் வைத்து க் கொள்ளும் பழக்கமும் (Poligamy) (Concubinage) ஏற்றுக் கொள்ளப்பட்டது. சமுதாயத்தின் உயர்வான நிறுவனமாகக் கருதப்பட்டது குடும்பமே ஆகும் . நாய், குடும்பத்தின் இணைபிரியாத தோழனாகக் கருதப்பட்டது. நாய்க்கு பிடிக்காத உணவு கொடுத்தாலும் , சூடாக உணவு கொடுத்து விட்டாலும் தண்டனை நிச்சயம் உண்டு!

**பெண்கள்**

திருமணம் பெற்றோர்களால் நிச்சயிக்கப்பட்டு நடைபெற்றது . உயர்குடியினர் தங்களது பொழுது போக்காக வைப்பாட்டிகள் வைத்துக் கொண்டனர் . ஆனால் பிற்காலத்தில் பெண்களின் நிலை உயர்வடைந்தது . பொது இடங்களில் சுதந்திரமாக நடந்தனர். குடும்ப சொத்துக்களை மேற்பார்வை செய்தனர். நவீன காலப் பெண்களைப் போலவே காணப்பட்டனர். டாரியஸ் காலத்திற்குப்பிறகு பெண்களின் நிலை மீண்டும் மோசமடைந்தது. பழங்கால பாரசீக கல்வெட்டுகள் அல்லது நினைவுச் சின்னங்களில் பெண்கள் பற்றி குறிப்பிடவே இல்லை. குடும்பத்தில் ஆண் குழந்தை ஒரு சொத்தாகவே கருதப்பட்டன. ஆண்களை ராணுவரீதியிலான சொத்தாக அரசு கருதியது . ஆனால் பெண்குழந்தைகள் பொதுவாக விரும்பப்படவில்லை . கருக்கலைப்பு பெருங்குற்றமாகக்

கருதப்பட்டு தண்டிக்கப்பட்டது. கருக்கலைப்பு செய்யாமல் இருந்தால் திருமணமாகாத ஆண், பெண் பாலியல் உறவு (Fornication) கூட மன்னிக்கப்பட்டது.

குழந்தைகள் ஐந்து வயதுவரையில் தாயிடமும் . ஏழுவயது வரை தந்தையிடமும் வளர்ந்தன அதன்பின் கல்விக் கூடங்களுக்கு அனுப்பபு பட்டனர் வசதியானவர்கள் மட்டுமே கல்வி கற்க முடிந்தது மதகுருமார்கள் வீடுகளிலும் , கோவில்களிலும் பாடங்கள் நடத்தப்பட்டன . அவஸ்தாவில் காணப்பட்ட கருத்துக்கள் போதிக்கப்பட்டன பொதுவாக பாரசீக தந்தையர் தங்கள் பிள்ளைகளுக்கு மூன்று காரியங்களை சொல்லிக் கொடுத்தனர் . அலை குதிரை ஏற்றம் , வில் உபயோகம் , உண்மைபேசுதல் (to ride, to use bow, to speak truth) ஆகியவை ஆகும்.

**மருத்துவம்**

பாரசீக மதகுரு மார்களே மருத்துவம் செய்து வந்தனர் . நோய்களை உருவாக்குவது பிசாசுகளே (Devas) என்று மக்கள் நம்பினர். 99,999 நோய்களை பிசாசுகளை உருவர்க்கியுள்ளதாக நம்பப்பட்டது . இரண்டாம் அர்டாக்சரவு காலத்தில் அறுவை சிகிச்சை நிபுணர்கள் இருந்தனர் . அவர்களது சம்பளம் நிர்ணயம் செய்ய ப்பட்டது. ஹமுராபியின் சட்டங்கள் போன்று மருத்துவா களுக்கு ஒழுங்கு முறைகள் மற்றும் கட்டுப்பாடுகள் விதிக்கப்பட்டன . புதிய மருத்துவர்கள் ஆரம்பத்தில் வெளிநாட்டவர் , தேசவிரோதிகள் ஆகியோருக்கு மருத்துவம் செய்து தொழில் கற்றுக் கொள்ள வேண்டும்!

**கலை**

பாரசீகர்கள் போர்களிலு ம் பேரரசைப் பலப்படுத்துவதிலுமே கவனம் செலுத்தியதால் கலை வளர்ச்சியில் அதிகமாக ஈடுபடவில்லை . அழகான பொருட்கள் மீது ஆசைப்பட்டாலும் அவைகளை உருவாக்க வெளிநாட்டுச் கலைஞர்களையே நாடினர். அழகான வீடுகள் கட்டினர். ஆடம்பரமான தோட்டங்கள் அமைத்தனர். விலை உயர்ந்த வேலைப்பாடுகள் கொண்ட மேஜை கட்டில் , நாற்காலிகள் உபயோகித்தனர். கலைநயம் மிக்க தரை விரிப்புகள் பூச்சாடிகள் , தங்கத்தினால் செய்யப்பட்ட கிண்ணங்கள் (goblets) ஆகியவலை உபயோகித்தனர். பாரசீகர்கள் பாடல்களையும், திசையையும் விரும்பினா தங்கக் கொலுசு , முத்து, கோமேதகம் ஆகியவைகளை உபயோகித் தனர் அரசர்கள் கலைநயம் மிக்க தங்க சிம்மாசனமும், கீரிடமும், (Crowns) செய்து கொண்டனர்.

**கட்டிடக்கலை**

கட்டிடக்கலையில் மட்டுமே பாரசீகர்கள் தங்களுக்கென தனிப்பட்ட பாணியை (Style) அமைத்துக் கொண்டனர். சைரஸ், முதலாம் டாரியல் செர்க்ஸஸ் ஆகியோர்களின் சமாதிகள் (tombs), அரண்மனைகள் ஆகியலை பாரசீகக் கட்டிடக் கலைக்கு சிறந்த உதாரணங்களாகும். பெர்சிபோலிஸ் அருகிலுள்ள நாஷ் -இ-ரஸ்தாம் (Naksh-i-Rustam) என்ற இடத்திலுள்ள முதலாம் டாரியசின் சமாதி பாரசீகக் கட்டிடக்கலையில் அம்சங்களைக் கொண்டுள்ளது. அதன் கூரைப்பகுதியில் பாரசீக மக்கள் ஒரு மே டையைத் தாங்கிப் பிடித்திருப்பது போலவும் அதில் டாரியஸ் அகுரமஸ்தாவை வணங்குவது போலவும் செதுக்கப்பட்டுள்ளது முதலாம் செர்க்சஸ் கட்டிய செகில்மினார் (Chehalminar) ஒரு லட்சம் சதுரஅடி பரப்பளவில் கட்டப்பட்டதாகும். சூசாவில் பாரசீக அரசர்கள் கட்டிய கட்டிடங்களின் அழிவுகள் மட்டுமே எஞ்சி உள்ளன. ஓவியம் மற்றும் சிற்பக்கலை வளர்ச்சிக்கு அசிரியக் கலைஞர்களை பயன்படுத்திக் கொண்டனர்.

**பாரசீகத்தின் அழிவு**

பாரசீக அரசர்களான சைரஸ், டாரியஸ் ஆகியோர் ஒரு பாரசீகப் பேரரசை உருவாக்கினர். செர்க்ஸஸ் அதைப்பாதுகாத்து வளர்த்தார் ஆனால் அதன் பின் வந்தவர்கள் பாரசீகப் பேரரசு அழிவதற்குக் காரணமானார்கள் பேரரசின் பிற்காலத்தில் நாட்டில் ஒற்றுமையின்மையும், வன்முறையும், ஊழலும், ஒழுக்கக்கேடுகளும் தலைதூக்கின. பொது ஒழுக்கம் முற்றிலும் மறைந்து போய்விட்டது. ஆட்சியாளர்கள் ஒருவரை ஒருவர் கொலை செய்தே ஆட்சியைப் பிடிக்க வேண்டியதிருந்தது. மாறுபட்ட பழக்க வழக்கங்கள், மொழி, இனம் ஆகியவற்றைக் கொண்ட பேரரசின் ஒற்றுமை நீடிக்க முடியவில்லை.

இருநூறு ஆண்டுகாலம் ஒரு வன்முறைக் கூட்டமே (Mob) பாரசீகத்தை ஆட்சி செய்தது போலிருந்தது. ஒரு நாடாக, ஒரு பேரரசாக அது உருவாக வில்லை. அரசர்களின் வலிமை குறைந்த போது சத்ரப்புகளில் கிளர்ச்சிகள் தலைதூக்கின. படையோ வலிமையற்றுப் போனது. பயிற்சி இல்லை அது * கொள்ளையடிக்கும் கும்பலாகவே மாறியது. எனவேதான் அலக்சாந்தர் படை எடுத்த போது எந்த விதமான வலிமையான எதிர்ப்பும் ஏற்படவில்லை ஹெல்லஸ் பாண்ட் (Hellespont) என்ற இடம் வரை எதிர்ப்பில்லாமல் வந்தார் அதன்பின் இஸ்ஸஸ் (Issus) என்ற இடத்தில் மூன்றாம் டாரியசைத் தோற்கடித்து விரட்டினார். பின்னர் இறுதியாக காகமேளா (Gaugamela) என்ற

இடத்தில் நடைபெற்ற போரில் டாரியஸ் கொல்லப்பட்டார் . பாரசீகம் மாசிடோனியாவின் ஒரு மாநிலமானது

உலகநாகரிகத்திற்கு பாரசீகர்களின் கொடை சிறப்பிடம் பெறா விட்டாலும் அவர்களின் பொதுச் சேவை (Mission) குறிப்பிடத் தக்கதாகும் பாரசீகர்கள் அசிரியர்களின் அரசியல் நிறுவனங்களை மேலும் வளர்ச்சியடையச் செய்தார்கள் . சுமார் 200 ஆண்டு காலம் நாட்டில் அமைதியையும் , செழிப்பையும் ஏற்படு த்தினார்கள். அவர்கள் ஏற்படுத்திய அரசாங்கம் ரோமானிய அரசாங்கம் அமைக்கப்படும் வரை சிறப்புற்றதாகவே விளங்கியது. பாரசீகர்களின் சமயம் உலக நாகரிகத்திற்கு அவர்களின் மிகச் சிறப்பான பங்களிப்பாகக்கருதப்படுகிறது . பாரசீகர்களின் மிகச்சிறந்த சாதனையாகக் கருதப்படுவது என்னவெ ன்றால் பல நாகரிகங்களின் மையங்களை ஒன்று சேர்த்து ஒரு பரந்த நோக்குள்ள பண்பாட்டை (Cosmopolitan) உருவாக்கியதே ஆகும் . பாரசீகர்களால் தொடங்கப்பட்ட இந்த ஒருங்கிணைக்கும் பணி அலக்சாந்தரால் வெற்றிகரமாகத் தொடர்ந்து மேற்கொள்ளப்பட்டது

## 2. கிரேக்க நாகரிகம் (GREEK CIVILIZATION)

வரலாற்றுக்கு முற்பட்ட காலத்தைத் தொடர்ந்து ஆசியா , ஆப்பிரிக்கா போன்ற நாடுகளில் ஆற்றுப்பள்ளத்தாக்குகள் நாகரிகத் தொட்டில்களாக விளங்கின . அவை எகிப்திய, மெசபடோமிய, ஹரப்பா, சீன நாகரிகங்கள் என்று அழைக்கப்பட்டன . இவை கி.மு. 4000ம் ஆண்டுகளில் தோன்றி வளர்ந்தன என்று கண்டறியப்பட்டுள்ளது . கி.மு. 600க்குப் பிறகு மேலை நாடுகளின் நாகரிகங்கள் அண்மை கிழக்கு நாடுகளிலிருந்து விலகி ஐரோப்பாவின் கிரிஸ் , இத்தாலி ஆகிய நாடுகளில் உருவாகி வளர்ச்சியடைந்தன. தனிமனிதன் நலம் , மனித உரிமை போன்ற எண்ணங்களின் வாயிலாக வல்லாட்சி முறை யும், குழு ஆட்சி முறையும் ஒடுக்கப்பட்டன . தற்கால ஐரோப்பிய நாகரிக வளர்ச்சியில் கிரேக்க , ரோமானிய நாகரிகங்களின் செல்வாக்கு அதிகமாக காணப்படுகிறது . தற்கால நாகரிகத்தை உருவாக்கிய முன்னோடிகளாக கிரேக்க நாகரிகத்தையும் ரோமானிய நாகரிகத்தையும் கருதலாம் . முதலில் கிரேக்க நாகரிகத்தின் சிறப்பியல்புகளையும் , அது உலகிற்கு அளித்த நன்கொடையும் பற்றி அறிந்து கொள்ளலாம்

**கிரிஸ் நாட்டின் புவியியலமைப்பு**

கிரிஸ் நாடு ஐரோப்பாவின் தென்கிழக்குப் பகுதியில் உள்ள பால்கன் தீபகற்பத்தின் தென்கோடியில் உள்ளது. ஆசியா மைனர் பகுதியிலிருந்து ஈஜியன் கடல் கிரிஸைப் பிரிக்கிறது. மேற்கு எல்லையாக துருக்கி, பல்கேரியா நாடுகளும், வடகிழக்கு எல்லையாக யூகோஸ்லேவியாவும் , வடமேற்கு எல்லையாக அல்பேனியாவும் அமைந்துள்ளன. கிரிஸின் தலைநகர் ஏதேன்ஸ் ஆகும்

கிரிஸ் நாட்டின் பரப்பில் முக்கால் பகுதி மலைப்பகுதியாக இருப்பதால் மீதி உள்ள நிலப்பகுதியில் மட்டுமே விவசாயம் நடைபெறுகிறது . வரலாற்றுப் புகழ்பெற்ற எபிரஸ், மாசிடோனியா, திரேஸ் முதலிய பழங்கால நகர அரசுகள் வடகிரிஸில் உள்ளன. பிண்டஸ் மலைத்தொடர் வடக்கிலிருந்து மத்திய கிரிசுக்கு பரவியுள்ளது . கொரிந்து வளைகுடாவுக்கு வடக்கில் உள்ள நடுகிரிஸில், தெசலி, அட்டிகா, பொயோசியா முதலிய பகுதிகள் அடங்கும் . பெலப்பனோசிஸ் தென்கிரிஸில் உள்ளது . மத்தியதரைக்கடல், அயோனியன் கடல் , ஈஜியன் கடல் ஆகியவற்றில் உள்ள பலதீவுகள் கிரிஸின் ஏனைய பகுதியாகும்

கிரேக்கர்கள் இந்தோ ஐரோப்பிய இனத்தவராவர். அக்கோலியர்கள், தோரியர்கள், அயோனியர்கள், ஐடோலியர்கள் ஆகிய இனத்தவர்கள் கிரேக்க நாட்டில் வந்து தங்கினர் இவர்களே கிரேக்கர் எனப்பட்டனர்

**கிரேக்க நாகரிகத்தைப் பற்றி அறிய உதவும் ஆதாரங்கள்**

கிரிஸ் நாட்டில் மிகத் தொன்மைக் காலத்திலிருந்தே மனிதன் வாழ்ந்து வந்தான் இதன் வரலாறு ஏறக்குறைய ஒரு லட்சம் ஆண்டுகளுக்கு முற்பட்டது. இந்த நாட்டில் பல அகழாய்வுகளும் தொல்லியல் நடவடிக்கைகளும் இந்தகாலத்தில் மேற்கொள்ளப்பட்டதின் விளைவாக கிரீசின் தொன்மையான நாகரிகம் வெளிப்படலாயிற்று

1837ம் ஆண்டு கிரேக்க தொல்லியல் சங்கம் நிறுவப்பட்டது . அதன் பிறகு பிரான்சு, ஜெர்மனி, அமெரிக்கா, இங்கிலாந்து ஆகிய நாடுகளைச் சேர்ந்த தொல்லியலாளர்கள் கிரிஸில் புகழ்பெற்ற அகழ்வாய்வுகளை மேற்கொண்டனர் . ஒலிம்பியா, கிலேசு, தெல்பி, எபிடரஸ், கோரிந்து, அக்கராபா, லிசு போன்ற இடங்களில் செய்யப்பட்ட அகழாய்வுகளின் மூலம் கிரேக்க நாகரிகத்தை அறிய முடிந்தது . ஹென்றிச் ஸ்லீமென் (Heinrich Schliemann) என்ற ஜெர்மானிய தொல்லியல் அறிஞர் 1.868ல் இதூகா இதூகா பகுதியில் கள ஆய்வுகளை மேற்கொண்டார் . இவர்தான் திராய் (Troy) நகரத்தைக்

கண்டுபிடித்தவர். 1870ல், மைசீனியா பகுதியில் அகழ்வாய்வுகளை மேற்கொண்டு அப்பகுதியில் ஆபரணங்கள், பாத்திரங்கள், வாள்கள், பல புதைகுழிகள் கண்டுபிடிக்கப் பட்டன. இதன் பிறகு திரின்ஸ், ஆர்கோமினிஸ், பைலோஸ், தீப்ஸ், ஏதென்ஸ் ஆகிய பகுதிகளில் அகழ்வாய்வுகள் செய்யப்பட்டன. 1875ல் எர்னஸ்ட் கார்டியஸ் (Earnest Curtious) என்பவர் ஒலிம்பியாவில் நடத்திய அகழாய்வில் அரும் பொருள்கள் மிகுதியாகக் கிடைத்தன உலகின் ஏழு அதிசயங்களில் ஒன்றாகக் கருதப்பட்ட நானூறு அடி உயரமுடைய சீயஸ் கடவுளின் கோவில், ஒலிம்பிக் விளையாட்டு நடைபெற்ற திடல் பகுதி மற்றும் பல பகுதிகளில் கிரேக்க அறிஞர்கள் பல தொன்மையான கட்டிடங்களைக் கண்டு பிடித்தனர் அவைகளில் குறிப்பிடத்தக்கவை. 12001) முதல் 18000 மக்கள் வரை அமாந்து பார்க்கக் கூடிய கிரேக்க திறந்த வெளி அரங்கமாகும் இவ்வாறு அகழ்வாய்வுகள் மூலம் கண்டுபிடிக்கப்பட்ட பல வகைப்பட்ட பொருட்கள், கட்டிடங்கள் கிரேக்க நாகரிகத்தைப் பற்றி அறிய நமக்கு ஆதாரங்களாக உள்ளன. இவைதவிர ஹோமர் எழுதிய இலியட், ஒடிசி (Iliad, Odyssey) ஆகிய இரண்டு வீரகாவியங்களும் கிரேக்க நாகரிகத்தைப் பற்றி அறிய உதவுகின்றன.

**கிரேக்க நாகரிகத்தின் முக்கியக் கூறுகள்**

**1. நகர அரசுகள் (City States)**

முதன் முதலில் கிரேக்கர்கள் கிராமங்களில் வசித்தனர். நாளடைவில் சுமார் கி.மு. 300ல் பல நகர அரசுகள் ஏற்படலாயின கிரிசின் சிறப்பான நகர அரசுகளாக ஸ்பார்ட்டா, ஏதென்ஸ், தீப்ஸ், மாசிடோனியா, கொரிந்த், சமோஸ், மிலிடஸ் ஆகியவை விளங்கின. சில நகர அரசுகளில் மன்னராட்சியும், ஏனைய நகர அரசுகளில் குழு ஆட்சியும், கொடுங்கோலாட்சியும், மக்களாட்சியும் நடைபெற்றன எனவே கிரிஸ் மேற்கண்ட அரசியல் ஆட்சி முறைகளின் ஆய்வுக்கூடமாகத் திகழ்ந்தது. ஸ்பார்ட்டா, ஏதென்ஸ் ஆகிய இரு நகர அரசுகள் கிரேக்க வரலாற்றில் மிகவும் இன்றியமையாத பங்கு வகித்தன இரு அரசுகளும் மாறுபட்ட அரசியல் கலாச்சாரத்தைப் பின்பற்றின. ஸ்பார்ட்டா ராணுவ ஆட்சியை நிறுவியது மாறாக ஏதென்ஸில் மக்களாட்சி நிலவியது

**அ. ஸ்பார்ட்டா**

ஏறக்குறைய கி.மு. 1100ல் பெலப்பனீசஸ் என்ற பகுதியில் புகுந்த தோரிய (Dorisans) இனத்திய கிரேக்கர் ஸ்பார்ட்டா நகரை அமைத்து சிறிது சிறிதாக அதன் ஆதிக்கத்தைப் பெருக்கலாயினர். கி.மு. 6ம் நூற்றாண்டுக்குள் அந்த நகர் பெலப்பனீசியாவின்

தலைமைப் பதவியை அடைந்து கிரேக்க உலகிலேயே தலைசிறந்த ராணுவவலிமை பெற்ற நாடு என்ற புகழையும் அடைந்தது. ஸ்பார்ட்டா அரசின் இந்த அரசியல் பரிணாம வளர்ச்சியில் அப்பகுதியின் புவிஇயல் அமைப்பும் அங்கு அமைந்துள்ள மலைகள் அதை ஏனைய பகுதிகளிலிருந்தும் பிரிப்பதும் முக்கி ய காரணமாகும். இப்பகுதியில் ராணுவ ஆட்சி நிலவியது. ஸ்பார்ட்டா பகுதியில் குழந்தைகள் ஏழு வயதாக இருக்கும் போதே துன்பங்களைத் தாங்கிக் கொள்ளவும் , திறமையுடன் போர் புரியவும் பயிற்சியளிக்கப்பட்டு போர் புரியும் வீரர்களாக விளங்கினார் . எனவே ஸ்பார்ட்டா பல போர்கள் நடத்தி வெற்றிகள் பெற்று பெலப்பனீசிய நாடுகளின் கூட்டமைப்பு ஒன்றை ஏற்படுத்தி கி மு 550 முதல் கி.மு. 370வரை அதன் தலைவியாகத் திகழ்ந்தது

**b) ஏதென்ஸ்**

ஸ்பார்ட்டா அரசுக்கு முற்றிலும் மாறுபட்ட சூழ்நிலை ஏதென்ஸில் நிலவியது குடியாட்சியை மிகப் பண்டைக் காலத்திலேயே அமைத்து வழி காட்டிய புகழ் அந்த நகருக்கு உரி யது. கி.மு பதினோராம் நூற்றாண்டுக்குப் பிறகு அங்கு நிலவிவந்த அரசாட்சி மறைந்து மேன்மக்கள் ஆட்சி ஏற்படுத்தப்பட்டது அதுவும் கி .மு 7ம் நூற்றாண்டில் கொடுங்கோன்மையாக மாறியதால் கிளர்ச்சிகள் ஏற்பட்டன . அதன் விளைவாக கி. மு. 594ல் சோலன் என்பவர் அதிகாரத்தைப் பெற்று நாட்டில் குடியாட்சி முறைக்கு வித்திட்டார் ஒவ்வொரு குடி மகனும் நிர்வாகத்தில் பங்குபெற அனுமதிக்கப்பட்டனர் எல்லோருக்கும் சம நீதி வழங்கப்பட்டது. கி. 509ல் கிளைஸ்தனிஸ் என்ற மற்றொரு தலைவர் தோன்றி தனது புதிய சீர்திருத்தங்களால் நாட்டில் குடியாட்சியை உறுதியடையச் செய் தார் இவருக்குப் பிறகு கி மு 460ல் பெரிக்கிளிஸ் மிகச் சிறந்த அரசராக விளங்கினார் பெரிக்ளிஸின் ஆட்சிக்காலம் கிரேக்க வரலாற்றின் பொற்காலம் எனப்படுகிறது இவர்காலத்தில் கலை, இலக்கியம், தத்துவம், அறிவியல் ஆகிய துறைகளில் முன்னேற்றம் ஏற்பட்டது

**2) பெலப்பனீசிய போர்**

இவ்வாறு வளர்ச்சியடைந்த ஏதேன்ஸ் குடியரசுக்கு ஒரு பெரும் சோதனை ஏற்பட்டது தேரியஸ் (Darius) என்பவரின் கீழ் வலிமையடைந்த பாரசீகப் பேரரசு ஏதென்சுடன் போர் புரிந்தது . இதற்கு பெலப்பனீசியப் போர் என்று பெயர் போர் மராத்தன், தர்மாபிலே, சலோமிஸ், பிளாட்டியா ஆகிய இடங்களில் ந டந்தது. அதில் பெர்சியர்கள் தோற்கடிக்கப்பட்டனர் . மொத்தம் மூன்று பெலபனிசியப் போர்கள்

நடைபெற்றன. ( கி.மு. 459–446, கி மு 431 கிமு 405) இறுதிப் போரில் பெர்சியா ஸ்பார்ட்டா நகர அரசுடன் சேர்ந்து ஏதென்சை ஏகஸ்பொட்டாமி (Aegospotami) என்ற இடத்தில் தோற்கடித்தன இதிலிருந் து கிரேக்க நகர அரசுகள் வலிமை இழக்க அரம்பித்தன . கிரீஸின் மீது மாசிடோனியநாட்டை சேர்ந்த பிலிப் (கி.மு 329–336) படையெடுத்து பல நகர கைப்பற்றினார். அவருக்குப் பின் அவரது மகாஅலக்சாந்தரும் கிரீஸ் மீது போர் தொடுத்து தங்களுக்குள் சண்டையிட்டுக் கொண்டிருந்த பல நகர அர சுகளை கைப்பற்றினார். அதன் பிறகு பல நாட்டவர் படையெடுப்பினால் கிரிஸ் தனது அரசியல் ஆதிக்கத்தை இழந்தது

**2) கிரேக்க அரசியல் கருத்துக்கள்**

கிரேக்கர்களின் அரசியல் கருத்துக்கள் மனித நாகரிகத்திற்கு அளித்த சிறப்பான கொடையாகும். Politics என்ற வார்த்தையே Polis என்ற கிரே க்க வார்த்தையிலிருந்து பெறப்பட்டதாகும். பண்டைய கிரேக்கர்களின் அரசியல் கருத்துக்களை வெளியிட்டவர்கள் பிளேட்டோவும் அரிஸ்டாட்டிலும் ஆவர்.

**a) பிளேட்டோ (கி.மு. 427–347)**

மேலை நாட்டவரின் முதல் அரசியல் சிந்தனையாளர் என்று மதிக்கப்படுகிறார். ஏதென்ஸ் நகரத்தில் கி.மு. 427ல் பிறந்த இவர் 36 நூல்களில் எழுதினார். அவைகளில் குடியரசு என்ற நூல் புகழ் பெற்றதாகும் . பிளேட்டோ உன்னத சமுதாயம் என்ற கோட்பாட்டை தனது குடியாக என்ற நூலில் விவரிக்கிறார் . பிளேட்டோவின் கருத்துப்படி மிகச் சிறந்த அரசு முறை என்பது உயர்குடியினரின் ஆட்சியே ஆகும் ! இவ்வாறு கூறுவதால் அவர் ஒரு பரம்பரை உயர்குடியினரின் ஆட்சியையோ அல்லது முடியாட்சியையோ ஆதரிக்கவில்லை மாறாக நாட்டில் உள்ளவர்களில் அறிவிலும் திறமையிலும் மிகச் சிறந்தவர்களால் நடத்தப்படும் ஆட்சியை அவர் விரும்பினார் . ஆண் பெண் இருபாலோருக்கும் அடிப்படை சமத்துவம், குழந்தைகளுக்கு கல்வி மற்றும் உடற்பயிற்சி அளித்தல் , குடிமக்களுக்கு இருக்க வேண்டிய கல்வி பயிற்சி , அறிவுடையோர் ஆட்சி, குடிகள் எல்லோருடைய நலனே ஆட்சியின் நோக்கம் , சட்ட வரம்புக்குட்ட பட்ட ஆட்சி ஆகிய பிளேட்டோவின் அரசியல் கருத்துக்களை இக்கால அரசியல் சிந்தனையாளர்கள் ஒப்புக்கொள்கின்றனர். இவ்வாறு கிரேக்க அரசியல் கொள்கைகள் வரலாற்றில் சிறப்பான ஒரு இடத்தைப் பெறுகின்றன

**b) அரிஸ்டாட்டில் (கி.மு. 384–322)**

பண்டைய கிரேக்க அறிஞரான அரிஸ்டாட்டில் பிளேட்டோவின் மாணவர் ஆவார். கிரேக்க நாட்டின் தலைசிறந்த தத்துவஞானியாகவும் , விஞ்ஞானியாகவும் விளங்கினார். தத்துவ துறையின் அனைத்து துறைகளையும் வளப்படுத்தினார் அரசியல் கருத்துக்களைக் கொண்ட பல நூல்களை எழுதினார் . இவரது அரசியல் கருத்துக்கள் பிளேட்டோவின் அரசியல் கருத்துக்களிலிருந்து சிறிது வேறுபட்டவை ஆகும்

இவர், ' உடலுழைப்பைப் பயன்படுத்தும் மனிதன் அடிமைக்கு ஒப்பாவான் . உழைப்பானது அறிவை மழுங்கச் செய்து அரசியல் நடவடிக்கை களுக்கு ஒருவனை தகுதியற்றவனாக்குகிறது' என்றார். குடிமக்கள் எல்லோருக்குமே நாட்டை ஆளும் தகுதி கிடைத்து விடுவதில்லை . பிறக்கும்போதே மக்களில் பலர் அடக்கப்பட்டு கிடப்பவர்களாகவும், சிலர் ஆட்சி புரியத் தகுதியுடையவர் களாகவும் பிரிக்கப்பட்டு விடுகின்றனர். அரிஸ்டாட்டில் அரசை ஆறுபிரிவு களாகப் பிரித்தார் . அவை: 1) முடியாட்சி 2) மேல் குடியினரின் ஆட்சி , 3) நடத்தரவர்க்கத்தினரின் ஆட்சி , 4) கொடுங்கோலாட்சி, 5) பலம் பொருந்திய சிலரால் நடத்தப்படும் ஆட்சி , 6) ஜனநாயக ஆட்சி (Monarchy, Aristocracy, Rule of, Tyranny, Oligarchy, Democracy) ஆகியவை ஆகும் . மக்களுக்கு நன்மை செய்யும் அரசன் கிடைத்தால், முடியாட்சியே சிறந்த ஆட்சி முறை என்றார் . நடுத்தரவர்க்கத்தினரின் ஆட்சியையும் விரும்பினார் . மக்களுக்கு நன்மை செய் து சந்தோஷப்படுத்தும் அரசே நல்ல அரசு என்றார்.

4) கிரேக்கத் தத்துவம்

கிரேக்கத் தத்துவ மேதைகள் தனித்த மெய் பொருளியலை வளர்த்து வந்தனர் என்று கூறலாம் . அத்தத்துவ மேதைகள் பின்னாளில் வளர்ந்த மெய்பொருள் சார்ந்த அனைத்து சிந்தனை முறைகளுக்கும் அடிப்படை இட்ட தோடல்லாமல் ஐரோப்பிய நாகரிகத்தில் கடந்த இருபது நூற்றாண்டுகளில் இடம் பெற்ற அனைத்து சிக்கல்களையும் முறைப்படுத்தினார்கள். அவற்றிற்குரிய தீர்வுகளையும் கண்டடார்கள் கிரேக்கத்தின் தலைசிறந்த தத்துவ ஞானிகள் சாக்ரடீஸ் , பிளேட்டோ, அரிஸ்டாட்டில், எபிகூரஸ் ஆகியோர் ஆவர்.

அறவாழ்வு வாழ வேண்டுமானால் அறத்தின் தன்மை மயை அறிய வேண்டும் ' என்று சாக்ரடீஸ் கூறினார் மனிதர்களின் மகிழ்ச்சி நன்னடத்தை ஆகியவற்றிற்கு அறிவே வழிகாட்டி எனவும் , அறியாமை தீமையை விளைவிக்கும் என்றும் சாக்ரடீஸ் நம்பினார். ஆனால் சாக்ரடீஸ் இளைஞர்களின் மனதில் நஞ்சு புகட்டுகிறார் என்று

குற்றம் சாட்டப்பட்டு நஞ்சு கொடுத்து கொல்லப்பட்டார் பிளேட்டாவின் தத்துவ சாஸ்திரத்தின் அடிப்படை அவருடைய மனோதத்துவம் கொள்கையாகும் . விலங்குகளிடம் காணப்படுவது போன்ற வேட்கை அம்சம் , செயல் செய்யத் தூண்டும் ஆவி அம்சம் மனிதனுக்கே சொந்தமான அறிவு அம்சம் என மூன் று அம்சங்கள் மனிதனிடம் இருப்பதாக பிளேட்டோ கூறுகிறார்

"உண்மையான அறிவை அளிப்பது புலன்கள் மூலம் தெரிவது அல்ல வெறும் அபிப்பிராயமும் அல்ல அறிவதாக அறிந்து காரணங்கள் கூறக் கூடிய அறிவே உண்மையான ஞானத்தை அளிப்பதாகும். உண்மையிடம் பற்று ஏற்பட்டால் மட்டுமே . இது கைகூடு ம். தனித்தனிப் பொருள்கள் அல்லாமல் அவை அனைத்துக்கும் பொதுவான கருத்துக்களே அறிவு தருவன . நீதி என்பதின் இலக்கணம் அறிந்தால் மட்டுமே நீதிமானா நல்லவனா என்று கூற முடியும் . ஆனால் நீதி முதலிய கருத்துக்கள் புறத்தேயிருந்து வருவன அல்ல. அவை ஆன்மாவிடம் உறைந்து கிடப்பன என்பது பிளேட்டோவின் தத்துவமாகும் . மேலும் கிரேக்க தத்துவத்தை பின்வரும் நான்கு நிலைகளில் விளக்கலாம்

a) தொடக்க நிலை : கிரேக்க மெய்ப்பொருளியலின் தொடக்க நிலையில் இயலுலகப் பொருள்களைப் பற்றி ஒன்றுக்கொன்று தொடர்புடைய இரு சிக்கல்களைக் கருதியது அவற்றுள் ஒன்று பொருள் பற்றியது. இயற்கைப் பொருள்கள் எதனால் ஆக்கப்பட்டவை? அவற்றின் அடிப்படைப் பொருள் எது என்பதாகும் . மற்றொன்று மாற்றத்தைப் பற்றியது. அடிப்படைப் பொருள் எவ்வாறு புலனுக்குரிய பொருள் ஆகிறது என்பதாகும். ஹெராக்கிளிட்ஸ் பர்மனிடஸ் (Heraclitus, Parmenides) ஆகியோர் இக்கருத் தின் சிறந்த வல்லுநர்களாகத் திகழ்ந்தனர் இவர்கள் மாற்றமே முடிவு , நிலைப்பு வெறும் புறத்தோற்றமே என்றனர்

b) இரண்டாம் நிலை : கிரேக்க மெய்ப் பொருளியலின் இரண்டாம் நிலையில் மெய் விளக்கியலாரும் (Sophists) சாக்ரடீசும் இயலுலகத் தோற்றம் அதன் அமைப்பு பற்றிய உலகியல் (Cosmology) இருப்பியல் (Ontology) ஆகியவற்றின் ஆய்வுகளிலிருந்து தங்களின் கவனத்தை மனித நடத்தை, அறிவு பற்றிய ஆய்வுகளில் திருப்பினர் கி.மு. ஐந்தாம் நூற்றாண்டைச் சேர்ந்த மெய் விளக்கியலாரின் இயக்கம் மெய் பொருள் வரலாற்றில் ஒரு திருப்புமுனை ஆகும் . ஏனெனில் உலகச் சிக்க லைத் தீர்ப்பதில் மனித ஆற்றலின் நம்பிக்கையின்மையை அது காட்டியது . இவ்வியக்கம் ஐயப்பாடு (Scepticism) எதிர்ப்பு, புரட்சி,

புலன் கடந்த ஆய்வில் மனித கவனத்தை ஈர்த்தல் ஆகிய தன்மைகளைக் கொண்டதாக விளங்கியது.

c) மூன்றாம் நிலை: இதற்கு அடுத்த நிலையில் சாக்ரடீஸின் மாணவர் களான பிளேட்டோவும், அரிஸ்டாட்டிலும் மனித அறிவு, நடத்தை, இயலுலகில் அவனது இடம் ஆகிய மனித சிக்கல்களை ஆராய்ந்தனர் ஏதென்சை சேர்ந்த எபி கூரஸ் என்ற மெய்யறிஞர் (கி.மு. 341–270) எளிய வாழ்க்கையின் இன்றியமையாமையைப் பற்றியும் அச்சமற்ற வாழ்க்கையின் சிறப்பைப் பற்றியும் க ற்பித்தார். அவரது மாணவர்களால் எபிகூரிய தத்துவம் பலமாறுதல்களை அடைந்தது . சினிகர் என்ற குழுவினர் இன்பதுன்பத்தைப் பாராட்டாது நேர்மையான வாழ்வை மேற்கொள்ளுமாறு இன்பதுன்ப சம நோக்காளர் (Stoic) வற்புறுத்தினர்.

d) இறுதி நிலை: கிரேக்க தத்துவத்தின் இறுதி நிலை கி.மு. 320 முதல் Aபி.529 வரையிலான காலமாகும் . இக்காலத்தில் கிரேக்கதத்துவம் ஏதென்ஸ் , அலெக்சான்டிரியா, ரோம் ஆகிய நகரங்களில் மையம் கொண்டிருந்தது

**5) கிரேக்க இலக்கியம்**

புதய மேலை நாட்டு இலக்கிய வகைகள் பலவற்றை உருவாக்கிய வர்கள் கிரேக்கர்களே ஆவர். பெருங்காப்பியம், தன்னுணர்ச்சிப்பா, நாடகம், முல்லைப்பாடல் (The Pastoral) இலக்கியத்தரமுடைய வரலாறு , சொற்பொழிவு, புலப்பாட்டியல் (Rhetoric) ஆகிய அவர்கள் வளர்த்தவையே ஆகும்

**2) காவியங்கள்**

உலக புகழ் பெற்ற வீரகாவியங்களான இலியட் , ஒடிசி (Iliad, Odyssey) போன்றவை ஹோமர் என்பவரால் எழுதப்பட்டன . இவை வாய் மொழிப்பாடல்களாக வளர்ச்சி பெற்றவையாகும். அவை எப்பொழுது எழுதப்பட்டவை என்பதும் , ஹோமர் என்ற தனி நபரால் எழுதப்பட்டவைதானா என்பதும் உறுதியாகச் சொல்வதற்கில்லை . கிரேக்க மூலத்தில் இசை நயத்தோடு அமைந்த இப்பாடல்கள் வர்ணனைச் சிறப்பிலும் , மொழி பெயர்ப்பிலும் சிறப்பு பெற்றுள்ளன.

ஹீசியாத் (Hesiod) என்பவர் எழுதிய நீதி காப்பியங்கள் , கடவுளர்களின் வரலாறு கூறும் தியாகனி (Theogony) பற்றிய செய்திகள், உபதேசம். பஞ்சாங்கம் ஆகிய மூன்றும் கலந்த வேலைகளும் நாட்களும் என்பவை குறிப்பிடத்தக்கவை

**b) தன்னுணர்ச்சிப்பாக்கள்**

கி. மு. எட்டாம் நூற்றாண்டின் இறுதியிலிருந்து வீரம் , காதல் பற்றிய தன்னுணர்ச்சிப்பாக்கள் எழுதப்பட்டன. இந்தத் துறையில் மூன்று பெரும் புலவர்கள் தோன்றினர். அவர்கள் திர்தேயஸ், மிம்னர்மஸ், தியோகினிஸ் (Tyrtaeus, Mimnermus, Theognis) ஆகியோர் ஆவர். மிம்னர்மஸ் இரங்கள் , தோய்ந்த இன்பப்பாடல்களைப் பாடினார் பல புலவர்கள் தன்னுணர்ச்சி பாக்கள் எழுதிய போதிலும் மிகச் சிலவே இப்போது கிடை த்துள்ளன. பிண்டார் (Pindar 518-446) என்பவர் எழுதியவைகளுள் ஒலிம்பியாத்ஸ் (Olympiads என்ற நூல் ஒலிம்பிக் விளையாட்டு வீரர்களைப் பாராட்ட எழுதப்பட்டதாகும

**c) நாடகங்கள்**

அக்காலத்திய கல்வி உயர்வுக்குச் சான்றாக பல நாடக ஆசிரியர்கள் விளங்கினர் மொத்தம் எழுதப்பட்ட 300 நாடகங்களில் நமக்கு 32 மட்டுமே கிடைத்துள்ளன.

அசைலஸ் (Aeschylus கி.மு. 525-456) எழுதியதுன்பியல் நாடகங்கள் பொருட்செறிவும் கவிதைச் சிறப்பும் கொண்டவை . இவர் எழுதிய ஆரெசுதியா (Oresteia) என்னும் பெயரையுடைய மூன்று தொடர் நாடகங்கள் கடவுளரோ , மனிதனுக்குரிய தொடர்பை ஆராய்கின்றன.

சாபக்லீஸ் (Sophocles கி.மு. 496-406) என்பவர் தனிமனித போராட்டங்களில் கவனம் செலுத்தினார் குடும்பக்கடமைக்கும் அதிகாரத்துக்கும் இடையே சிக்கித்தவி க்கின்ற பெண்ணின் போராட்டத்தை ஆண்டிகனி (Antigone) என்ற நாடகம் சித்தரிக்கின்றது

யூரிபிடிஸ் (Euripides கி.மு. 480-406) என்பவர் அவரது காலத்தி லேயே சிக்கலுக்குரிய எழுத்தாளராக விளங்கினார். அவர் காதல் தோல்வியால் ஏற்படும் சிதைந்த உள்ளத்தை ஹீப்போலிதஸ் (Hippolytus) என்ற நாடகத்தில் அழகாகக் காட்டுகிறார்

அரிஸ்டோ போன்ஸ் (Aristophanes கி.மு. 450-385) என்பவரின் கைவண்ணத்தில் இன்பியல் நாடகங்கள் உயர்வு பெற்றன . அவர் ஏதென்சு நகர் மக்களின் வாழ்க்கையை மனித உணாவுடன் தம் நாடகங்களில் அங்கதத் தன்மை மிளிரபடைத்துக் காட்டினார் . அவர் எழுதிய தவளைகள் , மேகங்கள் லிசிஸ்டிராட்டா (The frogs, The clouds, Lysistrata) ஆகிய நூல்கள் குறிப்பிடத்தக்கவை

**d) வரலாற்று நூல்கள்**

வரலாற்று வரைவியல் என்பது வரலாற்றின் வரலாறு என்று கூறப்படுகிறது . வரலாற்றை வரலாற்றாசிரியர்கள் எவ்வாறு எழுதினர் என்பதை கூறுவதே வரலாற் று

வரைவியல் ஆகும் வரலாற்று வரைவியலில் முதலிடம் பெறுபவர்கள் கிரேக்க அறிஞர்களேயாவர்.

ஹெரடோட்டடஸ் (Herodotus கி.மு 484 – 420) என்ற கிரேக்க வரலாற்றாசிரியர் ஆதாரங்களை அலசிப்பார்த்து தொகுத்து தரும் வரலாற்றகிரேக்க நாகரிகம் முறைக்கு வித்திட்டவர் ஆவார். இவர் எழுதிய வரலாறுகள் (Histories) என்ற நூலானது ஒரு வரலாற்று நூல் எவ்வாறு அமைய வேண்டும் என்பதற்கு இலக்கணமாக அமைந்துள்ளது. ஹெரடோட்டடஸ் 'வரலாற்றின் தந்தை' என்று அழைக்கப்படுகிறார்.

தூசிடைடிஸ் (Thucydides கி.மு 471–420) என்பவர் ஹெரடோட்டடசுக்கு அடுத்தபடியாக புகழ் பெற்றவர். இவர் 'அறிவியல் பூர்வமான வரலாற்று முறையின் தந்தை' என்று அழைக்கப்படுகிறார். ஏதென்சுக்கும் பாரசீகப் பேரரசுக்குப் நடந்த போர்களைப் பற்றி தனது பிலப்பனேசியப்போர்கள் (Peloponnesian Wars) என்ற நூலில் விருப்பு வெறுப்பு இன்றி, ஆதாரங்களுடன் எழுதியுள்ளார். சுருங்கச் சொல்லி விளங்கவைக்கும் முறையை அவர்நடையில் காணலாம். சில வரலாற்றுப்பாத்திரங்கள் பேசுவதாக உணர்ச்சி மிகுதியான பேச்சுக்களையும் சேர்த்துள்ளார்.

e) சாக்ரட்டீஸ் நூலெதுவும் எழுதவில்லையென்றாலும் அவரது உரைகள் மக்களைக் காந்தம்போல் கவர்ந்தன. உரையாடலும், காரணம் காட்டி வாதிப்பதும் அவரது சொற்பொழிவு முறைகளாகும். இதையொட்டியே சாக்ரட்டீஸ் முறை என்ற சொற்றொடர் வழக்கத்திலுள்ளது. டெமாஸ்தானிஸ் (Demosthenes) என்பவர் தனது சொல்லாற்றலுக்காக இன்றும் மதிக்கப்படுகிறார். பிளேட்டோ எழுதிய தத்துவ நூல்கள் உயர்ந்த கவிதை நடையில் அரிய பல கருத்துக்களைக் கூறுகின்றன. அவரது மாணவரான அரிஸ்டாட்டில் இலக்கியத் திறனாய்வு, தத்துவம், அறிவியல் ஆகிய மூன்று துறைகளிலும் வலுவான அடித்தளம் இட்டார்.

**6. கிரேக்க அறிவியல்**

பண்டைய கிரேக்க நாடு வானவியல், கணிதம், மருத்துவம், உயிரியல் போன்ற துறைகளில் சிறந்திருந்தது. கி.மு. 600 முதல் 300 வரை அறிவியல் வரலாற்றில் ஒரு பெரிய புரட்சியே ஏற்பட்டது என்று கூறலாம்.

**a) வானவியல் (Astronomy)**

தேல்ஸ் {Thales கி.மு.625–542) என்ற கிரேக்க வானவியல் அறிஞர் எகிப்து பாபிலோனியா போன்ற நாடுகளுக்குப் பயணம் செய்து வானவியல் சம்மந்தப்பட்ட

ஆய்வுக்கான குறிப்புகளைச் சேகரித்தார். கி.மு.6-ம் நூற்றாண்டில் சூரிய கிரகணத்தைக் கண்டறிந்து பெருமை பெற்றார். எகிப்து நாட்டின் பிரமிடுகளின் நிழலை அளந்து அதன் மூலம் அவற்றின் உயரத்தைக் கணக்கிட்டார்

அனாக்சிமான்டர் (Anaximander கி.மு.611-547) என்ற வானவியல் அறிஞர் அண்டத்தின் (Universe) இயக்கம் பற்றிய ஆய்வுகளை மேற்கொண்டார். பூமியின் அமைப்பை ஆராய்ந்து பூமி நீள்வட்ட வடிவிலானது என்று கூறினார். உலகப்படத்தை இவர்தான் முதன்முதலில் வரைந்தார். சூரியக்கடிகாரம் ஒன்றைக் கண்டுபிடித்து அதன் மூலம் நேரத்தைக் கணக்கிடும் முறையைக் கண்ட டறிந்தார்

பிளேட்டோ தனது திமேயஸ் என்ற நூலில் பல அறிவியல் கருத்துக்களைக் கூறியுள்ளார். பிரபஞ்சத்தின் தோற்றம் பற்றியும், மனித இனத்திற்கும் பிரபஞ்சத்திற்கும் உள்ள தொடர்பு பற்றியும் விளக்கியுள்ளார் கவிதை வடிவிலான இந்த நூலில் படக்கதைகள் அடையாளங்கள் மூலம் படி அறிவியல் கருத்து க்களையும் விளக்கியுள்ளார். நிலம், நீர், நெருப்பு, காற்று, வானம் ஆகிய பஞ்ச பூதங்களால் பிரபஞ்சமும் மனித இனமும் ஆளப்படு கின்றன. இந்த அமைப்புகளில் எங்காவது ஏதேனும் மாறுதல் தோன்றினால், நிலநடுக்கம், வெள்ளம், எரிமலை வெடித்தல் போன்ற இயற்கை சீற்றங்கள் உலகில் ஏற்படுவது போல மனித உடம்பிலும் நோய்கள் ஏற்படுகின்றன என்றார் பிளேட்டோ, அரிஸ்டாட்டில் வானவியலிலும் வல்லுநராக விளங்கினார். கோள்கள், விண்மீன்களின் இயக்கம் பற்றி ஆராய்ந்தார். பூமி உருண்டையாக உள்ளது என்றும் அதுவே பிரபஞ்சத்தின் மையத்தில் நிலையாக நிற்கிறது என்றும் கூறினார். சூரியன், சந்திரன், நட்சத்திரங்கள்யாவும் பூமியை வெவ்வேறு தூரத்தில் சுற்றுகின்றன என்றார். உயரே எறியப்பட்ட பொருள் கீழ்நோக்கி விழுவதற்கு அதன் பொருள் திணிவு காரணம் எனவும், உயிருள்ள பொருள்கள் மட்டுமே நகரும் தன்மையுடையவை என்றார். உயிரற்றவை நகருவதற்கு மற்றொரு நகரும் பொருளின் துணை வேண்டும் என்றார். இடி, மின்னல், மழை, காற்று புயல், ஆறுகள், கடல் நீரின் உப்புத்தன்மை போன்றவை இயற்கையில் ஏற்படும் மாற்றத்தால் தோன்றுகின்றன என்றார்.

**b) கணிதம்**

பித்தகோரஸ் (Pythagoras கி.மு.582-500) என்பவர் கிரேக்க கணித அறிஞராவார். இவர் பித்தகோரஸ் கல்விமையம் ஒன்றை ஏற்படுத்தி கணித ஆய்வு பணிகளை

மேற்கொண்டார். ஒற்றை எண், இரட்டை எண், பகா எண் (odd, even, prime numbers) எண் ஆகியவைகளைச் கண்டறிந்தார். அறிவியல் பூர்வமான கணித முறைக்கு வித்திடப்பட்டது. வடிவி கணிதத்தில் (geometry) பித்தகோரஸ் தேற்றம் (theorem) மற்றும் தேற்றம் (pyramid) ஆகியவை சிறப்பானது ஆகும்.

ஈக்லிட் (Euclid கி.மு. 320-275) என்ற கணித அறிஞர் ஏதேன்சு நகரைச் சார்ந்தவர். இவர் வடிவ கணிதத்தின் மூலங்கள் (elementary geometry), அட்சர கணிதம் (Algebra), எண்கணக்கீடு கணிதம் (Arithmatic) போன்ற கணித நூல்களை எழுதினார். இவரது மூலங்கள் என்ற வடிவ கணித நூல் கணிதத்தின் அடிப்படை நூலாக இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு மேலாக பின்பற்றப்பட்டு வருகிறது. இந்த நூலில் புள்ளி, நேர்கோடு, இணைகோடுகள், முக்கோணம், வட்டம் எண்பட்டை, பிரமிடுகள், சிலிண்டர், கூம்பு, கோளம் போன்ற வடிவ கணித் முறைகளை விவரித்துள்ளார்.

ஆர்க்கிமிடிஸ் (Archimedes கி.மு.287-212) என்ற கிரேக்க அறிவியல் அறிஞர் ஆர்க்கிமிடிஸ் கோட்பாட்டையும் மிதத்தல் விதியையும் கண்டறிந்து வெளியிட்டார் ஆர்க்கிமிடிசின் கப்பி மற்றும் நெம்புகோல் கோட்பாடு அறிவியல் உலகின் மற்றொரு சாதனையாகும் இவ்விதியின்படி கனமான பொருட்களையும் எளிதில் தூக்கமுடியும் என்று நிருபித்தார்.

அப்பலோனியஸ் (Apollonius கி.மு. 263-200) என்ற மற்றொரு கணித மேதை கணிதத்தில் எழுதிய எட்டு நூல்களில் நமக்கு நான்கு தான் கிடைத்துள்ளது அவைகளில் கூம்புகளின் பாகுபாடுகள் (Conic section) என்ற நூல் இவருக்கு பெயரையும் புகழையும் தந்தது. நீள் வளைவு, பரவளைவு, மிகுபரவளைவு (Ellipse, Parabola, Hyperbola) போன்ற கணிதக் கலைச் சொற்களை தனது நூலில் பயன் படுத்தினார்.

**இ) மருத்துவம்**

ஹிபாகிரடஸ் (Hypocrates கி.மு. 460-377) என்பவர் பண்டைய கிரேக்க நாட்டில் மருத்துவத்தில் பல சாதனைகள் புரிந்து சிறப்பு பெற்றார் பண்டைய கிரேக்கர்கள் மனித இனத்திற்கு ஏற்படும் உடல்நலக் குறைவுக்கு ஆவிகளே காரணம் என்று நம்பினர். இத்தகைய மூடநம்பிக்கையிலிருந்து மக்களை விடுவித்து மருத்துவத்தின் சிறப்பை உணரச் செய்தவர் ஹிப்பாகிரடஸ் ஆவார். இவர் மருத்துவம் சம்பந்தமாக நான்கு நூல்களை எழுதியுள்ளார். அவைகளில் நோய்களைக் குணமாக்க அறிவியல் அடிப்படையில் அணுகுமுறையை வலியுறுத்தினார். மனித உடலில் உள்ள நான்கு

வகையான திரவங்களான ரத்தம், கபம், கரும்பித்தநீர், மஞ்சள் பித்தநீர் (Blood, Phlegm, Black bile, Yellow bile) ஆகியவை இருக்க வேண்டிய அளவு இருந்தால் உடல் நலக்குறைவு ஏற்படாது என்றார். உடல் நோய் மருந்துகளைவிட உணவுக்கட்டுப்பாடே சிறந்தது என்று வலியுறுத்தினார் . இவர் உடலின் உட்கூறுகளான இரத்த நாளங்கள் , தமணி, சிரை, நரம்புகள் ஆகியவை பற்றி தனது நூல்களில் குறிப்பிட்டுள்ளார் . மருத்துவத்தில் அறிவியல் பூர்வமான சிந்தனைக்கு வித்திட்டது இவரது சாதனையாகும்

கேலன் (Galen கி.பி.130–199) என்பவரும் மருத்துவத்தில் பல ஆய்வுகளை மேற்கொண்டு மருத்துவ வரலாறு , மருத்துவமுறை, அறுவை சிகிச்சை முறை , மருந்துகளின் தன்மைகள் ஆகியவற்றைப் பற்றி சிறந்த பல நூல்கள் எழுதினார் . இரத்தம் உடலின்பல பாகங்களுக்குச் செல்லும்போது ஏற்படும் மாற்றங்களை கண்டறிந்தார். சிரை ரத்த நாளங்கள் உணவை ரத்தத்துடன் கலக்கச்செய்கின்றன . இரத்தம் கல்லீரலை அடையும்போது இயற்கை குணத்தையும் , இதயத்தை அடையும் போது ஜீவா தார குணத்தையும் , மூளையை அடையும் போது மிருக குணத்தையும் பெற்று உடல் இயக்கத்திற்கு வழி செய்கிறது என்றார் . மேலும் இவர் தசைகளின் அசைவு பற்றியும் நரம்புகளின் செயல் பற்றியும் ஆய்வுகளை மேற்கொண்டார் தசைகள் சுருங்கி நீள்வதால் உடல் அசைவு ஏற்படுகிறது என்றும் அதற்கு நரம்புகள் காரணம் என்றும் கூறினார்.

இவ்வாறு மருத்துவத்துறையிலும் உலகம் போற்றும் பல சாதனை களைப் புரிந்தனர் பண்டைய கிரேக்கர்கள்

**ஈ) உயிரியல்**

உயிரியலிலும் கிரேக்க அறிஞர்கள் பல உண்மைகளைக் கண்டுபிடித்து வெளியிட்டனர். அனாக்சிமண்டர் என்பவர் உயிரினங்கள் பூமியிலிருந்து தோன்றியவை என்றும், அவ்வாறு தோன்றிய முதல் இனம் மீன் இனம் என்றார் மீன் இனம் பின் நீரைவிட்டு வெளியேறி நிலத்திற்கு வந்து பல மாற்றங்கட் குட்பட்டு பல்வேறு உயிரினங்களாக மாறின என்ற கருத்தை தனது ஆய்வு மூலம் வெளியிட்டார்

அரிஸ்டாட்டில் ஈஜியன் கடற்பகுதியில் ஏரா ளமான விலங்கினங்களை யும் தாவரங்களையும் சேகரித்து ஆய்வுகளை மேற்கொண்டார் . உயிரினங்களின் அமைப்பு, குணங்கள், இனப்பெருக்கம் இவற்றின் அடிப்படையில் உயிரினங் களை வரிசைப்படுத்தினார். விலங்குகளில் இயல்புகள் பற்றி இவர் எழுதிய விலங்குகளின்

வரலாறு, விலங்குகளின் வளர்ச்சி முறை, விலங்குகளின் பரம்பரை போன்ற நூல்கள் சிறப்புடவையாகும்.

தியோபிரஸ்டடஸ் (Theophrastus கி.மு 370–287) என்ற கிரேக்க அறிஞர் தாவரவியலின் தந்தை என்று போற்றப்படுகிறார். இவர் எழுதிய தாவரங்களின் வரலாறு'. தாவரங்கள் வளரவும் அழியவுமான காரணங்கள்' (On the history of plants, on the causes of growth and death of plants) ஆகிய நூல்கள் தாவரவியலின் அடிப்படை கூறுகளைக் கொண்ட சிறந்த படைப்புகளாகும். தனது தாவரவியலின் ஆய்வின் மூலம் ஏறத்தாழ ஐநூறு வகை தவார இனத்தைக் கண்டறிந்தார். மரங்களின் தன்மை, மண்வளம், தட்பவெப்ப நிலைகள் பற்றி கூறியுள்ளார். தாவரங்களுக்கு ஏற்படும் நோய்கள் அவற்றை தாக்கும் பூச்சிகள் பற்றியும் நோய்களைக் கட்டுப்படுத்தும் மருந்துகள் பற்றியும் கூறியுள்ளார். மறுமலர்ச்சிகாலம் வரை தாவரவியலில் இவரது கருத்துக்களே ஏற்றுக் கொள்ளப்பட்டு வந்தன

**7) கிரேக்க கலை**

கிரேக்கர்களின் கலைத்திறன் மிகவும் போற்றுதற்குரியது. பல உருவச் சிலைகளும், நீண்ட அரண்களும், கோவில்களும், பல்வேறு சிற்பவேலைகளும் அவர்கள் திறமைக்கு சான்றுகளாக உள்ளன

**a) கட்டிடக்கலை**

கிரேக்க கட்டிடக் கலையில் மூன்று வகையான பாணியை (Style) குறிப்பிடலாம். தோரியப்பாணி, அயோனிக்பாணி, கொரிந்தியபாணி (Doric, Ionic, Corinthian Style) ஆகியவையாகும். அதினா (Athena) என்ற பெண் தெய்வத்திற்காகக் கட்டப்பட்ட பார்த்தினான் கோவில் (Parthenon) கிரேக்கர்களின் கட்டிடக்கலைத் திறனுக்கு சிறந்த எடுத்துக்காட்டாகும். கி.மு. 477–438–ம் ஆண்டுகளில் கட்டப்பட்ட இக்கோவில் தோரிக் கட்டிடக் கலையின் உச்ச கட்டத்தைக் குறிக்கிறது. இக்கோவில் நூறு அடி அகலமும் 229அடி நீளமும் உடையது ஆகும். பார்த்தீனான் கோவிலுக்கு அருகே காணப்படும் யெர்ஸ்தேயன் கோவில் (Erechtheum) அயோனிக் கலைப் பாணியில் கட்டப் பட்டதாகும். ஏதென்ஸிலுள்ள லிசிக்ரட்டஸ் (Lysicrates) என்ற ஞாபகச்சின்னம் கொரிந்தியப்பாணியில் அமைந்துள்ளது. ஏதென்சின் கோவில்கள் யாவும் கிரேக்கரின் கட்டிடக்கலை உயர்வுக்குச் சிறந்த சான்றுகளாகும்

**b) சிற்பக்கலை**

பைடியஸ் (Pheidias கி.மு 490–432) என்ற கிரேக்க சிற்பி பொன்னாலும் தந்தத்தாலும் கிரேக்கக் கடவுளான சியஸ் (Zeus) என்பாருக்கு 60 அடி உயரத்தில் ஒரு சிலை செய்தார்.

அந்த உருவச்சிலை ஒலிம்பியா என்ற இடத்தில் பலரும் போற்றும் வண்ணம் வீற்றிருந்தது. பண்டைய பெரும் விந்தைகளில் இச்சிலையும் ஒன்று மெய்ரான்,பாலிகிளிடஸ் (Myron, Polyclitus) ஆகியோர் சிறந்த சிற்பி களாவர். பாலிகிளிடஸின் உடற்பயிற்சி விளையாட்டு வீரர்களில் சிலையமைப்பு உடம்பிலுள்ள தசைகளின் அமைப்பு களை அப்படியே படம் பிடித்துக் காட்டுகின்றன . ஸ்கோபாஸ் (Scopas, 395-350 BC) என்பவரின் சிற்பங்கள் மனித உணர்வுகளையும் உடம்பின் இயக்கம் அசைவு ஆகியவைகளை தத்ரூபமாக வெளிப்படுத்தியது. இவைதவிர Hermes, Dying Gaul ஆகிய சிற்பங்கள் கிரேக்க சிற்பக்கலையின் சிறப்பை காட்டுகிறது

இசையிலும் கிரேக்கர்கள் பல சாதனை படைத்தனர். ஹிசியோட் தர்பாந்தர் (Hesiod, Terpander) ஆகியோர் இசையில் புதிய கருவிகளை கண்டு பிடித்தனர். சிதாரா, புளுட் (Cithara, Flute) போன்ற கருவிகள் கண்டுபிடிக்கப்பட்டு புதிய வடிவில் இசை உருவாக்கப்பட்டது . சங்கீத நாடகங்கள் (Drama) அரங்கேற்றப்பட்டன.

இவ்வாறு கிரேக்கத்தின் சாதனை மனித பண்பாட்டு வளர்ச்சியில் முக்கிய அங்கமாக கருதப்படுகிறது . பேச்சுரிமை, எழுத்துரிமை, சிந்தனை செய்யும் உரிமை , நம்பிக்கை கொள்ளும் உரிமை , நம்பிக்கை கொள்ளாதிருக்கும் உரிமை , வாழ்வில் மகிழ்ச்சி கொள்ளும் உரிமை போன்ற உரிமைகளை அவர்கள் உலகிற்கு வழங்கினர் . கிரேக்கர்களின் அரசியல் தத்துவக் கொள்கைகள் தற்கால அரசியல் முறைக்கு அடித்தளமாக விளங்கின. அறிவியலின் அத்தனை துறைகளிலும் பல உண்மைகளை கண்டுபிடித்து மனித நாகரிக வளர்ச்சிக்கு பெருந்தொண்டாற்றியுள்ளனர் பண்டைய கிரேக்கர்

### 3. ரோமானிய நாகரிகம்(ROMAN CIVILIZATION)

ரோமானியப் பேரரசு பண்டைக்கால உலகப்பேரரசுகளுள் ஒன்று ஆகும் இத்தாலி நாட்டில் தைபர் (Tiber) ஆற்றங்கரையில் தோன்றிய ஒரு நகரமான ரோமாபுரி சிறிது சிறிதாக வளர்ச்சியடைந்து மத்திய தரைக்கடல் பிரதேசங்கள் , ஐரோப்பாவின் தென்பகுதி, ஆப்பிரிக்காவின் வடபகுதி கீழ்திசை நாடுகளின் சிலபகுதிகளைக் கொண்டதாக விளங்கியது. இப்பேரரசின் தலைமை யிடமாக இருந்தது இத்தாலி ஆகும் இத்தாலியின் வளத்தைப் பெருக்கிய ரோமானியர் பண்டைய எகிப்தியர் , கிரேக்கர்

முதலியோர்களின் நாகரிகங்களின் பயனை அனுபவித்தனர் . சொல்லப்போனால், ரோமானிய நாகரிகம் கிரேக்க நாகரிகத்தின் அடிச்சுவட்டைப் பின்பற்றி எழுந்த ஒன்றாகும். ஏனெனில் இனவகையிலும் மொழியிலும் கிரேக்கர்களுக் கு நெருக்கமான தொடர்புடையவர்கள் ரோமானியர்கள் ஆவர்

கலை, இடைக்காலத்திலும் தற்காலத்திலும் உலக நாடுகள் பல்வேறு வகைகளில் ரோமிற்கு கடமைப்பட்டுள்ளன. தற்கால உலகம் எவ்வகையில் இலக்கியம், குடியாட்சிக் கொள்கை ஆகியவற்றிற்கு முக்கியத்துவம் அளிக்கிறதோ அவ்வாறே பழங்காலத்து ரோமப்பேரரசும் முக்கியத்துவம் அளித்தது. ரோமானியரது எண்ணங்களும் செயல்களும் நவீனகா எனகாலத்து ஐரோப்பா , அமெரிக்கா ஆகிய நாடுகளின் மக்கள் எண்ணங்களுக்கும் செயல்களுக்கும் ஒத்து இருந்தன . ரோமானியர்கள் தங்கள் கருத்துக்களுக்கு மெருகேற்றி உன்னத நாகரிகத்தை உலகிற்கு அளித் தனர். பிற்காலத்தில் தோன்றிய ஏனைய நாகரிகங்கள் ரோமானிய நாகரிகத்தின் முக்கிய அம்சங்களை ஏற்றுக்கொண்டன.

**புவியிலமைப்பு**

ரோமானியப் பேரரசின் தலைநகராக விளங்கியது ரோம் ஆகும் . இத்தாலிய தீபகற்பத்தின் மேற்கு நடுப்பகுதியில் தைபர் ஆற்றங்கரையில் ரோம் அமைந்துள்ளது . மத்தியதரைக் கடலின் கால் போன்று அமைந்துள்ள திரனியன் கடலிலிருந்து 27 கி.மீ. தொலைவில் தைபர் ஆற்றங்கரையின் இரு மருங்கிலும் ரோம் அமைந்துள்ளது . இந்த மாநகரம் ஏறத்தாழ இருபது குன்றுகளின் மீது அமைந்துள்ளது . இக்குன்றுகளில் புகழ்பெற்ற அவன்டைம், காலியன், காபிடலைன், எஸ்கிலைன், பாலடைன், குரினல், விமினல் ஆகிய ஏழு குன்றுகளின் மீது தான் பண்டைய ரோம் கட்டப்பட்டது . எனவே ரோமை, ஏழு குன்றுகளின் நகரம் என்று கூறலாம் . மேலும் ரோம் நகரம் போர்கள் , கொடுநோய்கள், வெள்ளப் பெருக்குகள் , நில நடுக்கங்கள் போன்றவற்றை எதிர்த்து இன்னும் நிலைபெற்றுள்ளமையால் 'என்றுமுள்ள எழில் நகரம் ' (Eternal) என்றும் கூறப்படுகிறது.

ரோமானியப் பேரரசு மிதமான வெயிலும், அதிகமழையும், அதிக சூரிய ஒளியும், மக்கள் மகிழ்வுடன் வாழத்தக்க வெப்ப நிலையையும் கொண்டிருந்தது . எட்ரஸ்கர், இலத்தீனியர், இத்தாலியர், கிரேக்கர், காத்தேஜியர் மற்று ம் கால் இனத்தவரின் ணைப்பே ரோமானியப் பேரரசைத் தோற்றுவித்தது

**ரோமானியநாகரிகத்தைப்பற்றி அறிய உதவும் ஆதாரங்கள்**

இத்தாலியில் பழைய கற்கால புதிய கற்கால மக்கள் வாழ்ந்ததற்கான சான்றுகள் அகழ்வாராய்ச்சியின் மூலம் கண்டு பிடிக்கப்பட்டுள்ளன . மேலும் பண்டைக்கால நினைவுச் சின்னங்களான வெண்ணிறப் பளிங்கு கட்டிடங்கள், அரசர்கள் கட்டிய பொது மன்றங்களின் சிதைந்த நினைவு சின்னங்கள் , கலையரங்குகள், குளியலறைகள், நிலத்தடிக் கல்லறைகள் (ca)a ஆகியவை ரோமானியர்களின் நாகரிகத்தின் சிறப்பை நமக்கு உணர்த்துகின்றன. மேலும் பிளினி, ஹோரோஸ்; வர்ஜில், லிவி, பாலிபியஸ், டாசிடஸ் போன்றவர்கள் எழுதிய நூல்களும் ரோமானிய நாகரிகத்தை நமக்கு தெரியப் படுத்துகின்றன.

**ரோமானியப் பேரரசின் வரலாறு**

**a) ஆரம்பகால முடியரசு**

கிறிஸ்து பிறப்பதற்கு ஏறத்தாழ பன்னிரண்டு நூற்றாண்டுகளுக்கு முன்னரே இத்தாலியில் பல்வேறு மக்கள் கூட்டங்கள் வாழ்ந்து வந்தனர் . அவர்களுள் காலர் , கிரேக்கர், எட்ரஸ்கர், இலிகூரியர், இலத்தீனியர், செமினியர், யாப்பிசியர் முதலியோர் குறிப்பிடத்தக்கவர். ரோமானியர் ஆரிய இனத்தவர் . ரோம் நகரை கி .மு.753–ல் ரொமுலஸ், ரீமஸ் (Ro) Remus என்ற சகோதரர்கள் ஏழுகுன்றுகளின் மேல் ஸ்தா பித்ததாக மரபுவழிச் செய்தி கூறுகிறது . முதல் ஏழு மன்னர்கள் கி .பி.510 வரை ரோமாபுரியில் ஆட்சிபுரிந்து பல அருஞ்செயல்களைப் புரிந்ததுடன் அரசியல் , பொருளாதரம், சமயம், இனம் ஆகிய யாவற்றிலும் முன்னேற்றத்தை உண்டாக்கினர்

**b) இனப்போராட்டமும் ஆரம்பகால குடியரசும்**

ஆரம்பகால முடியரசின் இறுதிகாலத்தில் மக்கள் கலகம் செய்து முடியாட்சியை ஒழித்து குடியாட்சியை நிறுவினர் . ரோமானியக் குடியரசு போற்றத்தக்க அரசியலமைப்பைப் பெற்றது . ஆண்டு தோறும் தேர்ந்தெடுக்கப் பட்ட இரு ஆட்சித் தலைவர்கள் கான்சல் என்ற பட்டத்துடன் நிர்வாக அதிகாரி களாயினர் . ஆட்சி மன்றமும், மக்கள் சபையும் சட்டமியற்றி வந்தன . ஆனால் குடியரசின் உருவம் காணப்பட்டாலும் செல்வந்தர்களான பெட்ரீஷியர்களின் ஆதிக்கமே நிலவி வந்தது

ரோமானிய சமூகத்தில் பெட்ரீஷியர் (Pa)ns என்ற உயர் குலத்தவரும், பிளிபியர் (Plebiars) என்ற சாமானியரும் இருந்தனர். சிறுபான்மையான ஷியர்கள் பல அதிகாரங்களையும்,

உரிமைகளையும் பெற்று பெரும்பான்மை பிளிபியர் மக்களை அடக்கி ஆண்டு வந்தனர். பிளிபியர் வரிச்சுமையால் வாடினர். காரணமில்லாமல் தண்டனைகள் வழங்கப் பட்டன. இதன் விளைவாக இரு தரப்பினருக்கும் கி.மு.491 முதல் கி.மு.300 வரை இடைவிடாத போராட்டம் நிகழ்ந்தது. இதன் விளைவாக பிளிபியர்கள் பல உரிமைகளைப் பெற்றனர். எனவே இரு இனமக்களும் ஒத்துழைத்து குடியாட்சி முறையை பலப்படுத்திக் கொண்டனர்.

**c) பியூனிக் போர்களும் ரோமப் பேரரசின் ஆதிக்கம் பரவுதலும்**

இயல்பாகவே ரோமானியர் சிறந்த வீரத்தைப் பெற்றிருந்தன ர் குடியாட்சிமுறை அப்பேரரசை மேலும் வலுவடையச் செய்தது. ஆகவே ரோமாபுரி சிறிது சிறிதாக தனது ஆதிக்கத்தை பரப்பியது. பல ரோமானியக் குடியேற்ற நகரங்களைத் தோற்றுவித்தனர். அவை ரோமாபுரியின் ராணுவ நிலையங்களாக அமைந்தன . பல புதிய சாலைகளை அமைத்து அவற்றைப் படைவழியாகவும் தலை நகருடன் மற்ற பகுதிகளை இணைக்கும் பிணைப்புகளாகவும் ஆக்கினர். கி.மு.489 முதல் 266-ம் ஆண்டுக்குள்ளாக இத்தாலிய தீபகற்பம் முழுவதிலும் ரோமாபுரியின் ஆட்சி நிறுவப்பட்டது

இந்நிலையில் ரோமாபுரிக்கு அரசியலிலும், வியாபாரத்திலும் பகை நாடாக வட ஆப்பிரிக்காவிலுள்ள கார்த்தே ஜிய குடியரசு (Carthage) தோன்றியது. அவர்களின் ஆதிக்கம் விரிவடைந்து வந்ததைக் கண்டு அச்சமடைந்த ரோமானியர் கார்த்தேஜியர்களை அடக்க போரிட்டனர். இப்போர்கள் பியுனிக் போர்கள் என்று அழைக்கப்படுகிறது . கி.மு.264 முதல் 241 வரை முதல் பியூனிக் போரும் , கி.மு.219 முதல் 202 வரை இரண்டாம் பியூனிக் போரும் கி .மு. 149-ல் மூன்றாம் பியூனிக் போரும் நடைபெற்றது இப்போர்களில் கார்த்தேஜின் ஹனிபால் (Hunnibal) என்ற மிகப்பெரிய தளபதி தோற்கடிக்கப்பட்டார். கி.மு.146-ல் கார்த்தேஜ் நகர் ரோமானியர்களால் தீ வைத்து அழிக்கப்பட்டது. வட ஆப்பிரிக்கா முழு வதிலும் ரோமானியர் தங்கள் ஆதிக்கத்தை ஏற்படுத்தினர்.

**d) பிற்கால குடியரசு**

ரோமாபுரி அடைந்த மாபெரும் வெற்றிகள் காரணமாக அங்கே செல்வமும் பகட்டான வாழ்வும் தோன்றின . போர்களின் விளைவாக அடிமைகள் பெருகினர் . அடிமை வியாபாரம் அதிகரித்தது . வேளாண்மை புறக்கணிக்கப்பட்டது . ஆட்சி முறையிலும் சீர்கேடுகள் தலைதூக்கின. எனவே குழப்பங்கள் ஏற்பட்டு பல புரட்சிகள்

ஏற்பட்டது. மக்கள் ராணுவ ஆட்சியை கூட ஏற்றுக்கொள்ள முன்வந்தனர் . இச்சூழ்நிலையில்தான் ஜூலியஸ் சீசர் , பாம்பே, கிராசஸ் (Julius, Pompey, Crassus) ஆகியோர் சேர்ந்து மூவராட்சியை ஏற்படுத்தினர். இந்த ஆட்சிக்குழு கி.மு.53-ம் ஆண்டுவரை நீடித்தது.

ஜூலியஸ் சீசர் சிறந்த போர்வீரர் . பலகலையும் கற்ற அறிஞர் . இவர் தனது திறமையால் ரோமபுரியின் தலைமைக் கான்சல் ஆனார் . பின்னர் தலைமை தளபதியாகவும் ஆனார் . சீசர் பல போர்களில் வெற்றிபெற்று ரோமப் பேரரசின் பெருமையை உயர்த்தினார் . நாட்டில் பல சீர்திருத்தங்களைப் புகுத்தினார் . பேரரசை ஒழுங்கு செய்தார் . நாட்டை வளமாக்கும் திட்டங்கள் தீட்டப்பட்டன . ரோமானியச் சட்டங்கள் தொகுக்கப்பட்டன . மக்கள் கணக்கெடுப்புக்கு ஏற்பாடு செய்தார் . பொருளாதாரச் சீர்திருத்தங்களை மேற்கொண்டார் . இம்முறைகள்தான் ஐரோப்பா நாகரிகத்தை உருவாக்கின.

சீசரை பேரரசராக முடிசூட்ட சிலர் முயன்றனர் எனவே குடியரசு ஆதரவாளர்கள் சீசரின் பேராசையைக் கண்டு அஞ்சினர் . புருட்டஸ் என்பவர் சீசரின் நண்பரானாலும் சில சுயநலக்காரர்களுடன் சேர்ந்து வஞ்சனையாக கி .மு 44-ல் சீசரை ஆட்சிமண்டபத்தில் வைத்தே கொலைசெய்தனர். பின்னர் சீசரின் நண்பரான அந்தோணி, லெப்பிடஸ் மற்றும் ஆக்டேவியஸ் சீசர் ஆகியோர் சேர்ந்து இரண்டாம் மூவராட்சியை ஏற்படுத்தினர். ஆக்டேவியஸ் சீசரின் ஆட்சிக் காலம் பொற்காலம் எனப்படுகிறது. இவர் வரம்பற்ற அதிகாரங்களைக் கொண்டிருந்தாலும் அமைதி யையும் மக்கள் நலத்தையும் கருத்தில் கொண்டு ஆட்சி செய்தார்.

**❖ ரோமானியப் பேரரசின் வீழ்ச்சி**

அகஸ்டஸ் சீசருக்குப்பிறகு வந்த மன்னர்கள் குடியரசு முறையை நீக்கிவிட்டு முடியாட்சி முறையை நிறுவலாயினர் . கி.பி.476 வரை இப்பேரரசு நீடித்தது . இதில் கான்ஸ்டன்டைன் என்ற அரசரின் ஆட்சிக்காலம் (கி.பி.324–337) சிறப்பானது. பின்னர் ஏற்பட்ட உள்நாட்டுச் சீர்கேடுகளைப் பயன்படுத்தி பல அயலார் படையெடுப்புகள் ஏற்பட்டன. ஓடாசர் என்ற ஜெர்மானிய வீரர் ரோமானியப் பேரரசரான ரொமுலஸ் அகஸ்டசை கி .மு.476-ல் நாடு கடத்திவிட்டு தான் ஆட்சி பீடத்தில் அமர்ந்தார் . இத்துடன் பண்டைக்கால ரோமப் பேரரசு வீழ்ந்தது

**ரோம் உலகிற்கு அளித்த கொடைகள்**

நாகரிக வளர்ச்சிக்கு ரோமானியரின் தொண்டு அளப்பரியதாகும் . சாலைகள் அமைத்தல் வாணிபம் , சட்டங்கள் தொகுத்தல் , நீதிவழங்குதல், பேரரசு அமைத்தல் , இராணுவ அமைப்பு முதலிய பண்புகளைப் பொருத்த அளவில் பிற்கால உலகம் ரோமுக்கு மிகவும் கடமைப்பட்டுள்ளது . கிரேக்க கலைகளைப் போற்றியதுடன் கீழை நாட்டையும், மேற்கு உலகையும் இணைக்க ரோமானியர் முற்பட்டனர் . பண்டையக் காலத்திய இலக்கியம் , தத்துவம் பிற கலைகள் யாவும் ரோமானியப் பேரரசின் வழியாகவே புதியகாலத்தில் வளர்ந்து சிறப்புற்றன.

**1) குடியரசுக் கோட்பாடுகள்**

ரோமானியர்கள் தனிநபர் எதேச்சதிகாரத்தை வெறுத்தனர் . ரோமக் குடியரசு அமைப்பு மிகவும் புகழ் பெற்றது . குடியரசாகையால் அரசருக்குப் பதிலாக இரு கன்சல்கள் (Consuls) படைப்பொறுப்பு முழுவதையும் ஏற்று குடியரசின் தலைமை அதிகாரிகளாகப் பணியாற்றினர். இருவரும். ஒருவருக்கொருவர் தடையாக இருந்ததால் தம்விருப்பம் போல் அவர்களால் ஒன்றும் செய்ய முடியாது . மேலும் அவர்களது ஆட்சிக்காலமும் ஒரு ஆண்டு மட்டும் தான் . குடியரசு அமைப்பில் செனட் (Senate) என்ற ஆட்சிப் பேரவைதான் முதலிடம் பெற்றிருந்தது . நாட்டுக் காரியங் களில் பயிற்சியும் பழக்கமும் உடையவர்களே மேலோர் அவையில் ஆயுள் உறுப்பினர்களாக இருந்தனர் . அதிகாரிகளுக்கு அவ்வப்பொழுது அறிவுரைதருவதற்காக ஏற்பட்ட இப்பேரவை ஒரு சிறந்த ஆட்சி நிறுவனம் ஆனது. படை நிர்வாகம், அயல் நாட்டுறவு, அரசாங்கச் செலவு, மாகாண ஆட்சி முதலியன பேரவையின் கண்காணிப்பில் வந்தன

குடியரசு அமைப்பில் பணிபுரிந்த இரண்டு குடி மக்கள் அவைகள் குறிப்பிடத்தக்கன. கமிஷியா செஞ்சூரியோட்டா (Comitia Centuriata) என்ற அவை கான்சல்களைத் தேர்ந்தெடுத்தது. நாட்டுக்குத் தேவையான சட்டங்களை இயற்றியது . மேலும் கான்சல்களின் முடிவுகளை திரும்ப ஆராய்ந்து முடிவு காணும் நீதிமன்றமாக விளங்கி கமிஷியா டிரிபியூட்டா (Comitia Tributa) என்ற பிளெபியன் அவை பிளெபிய மக்களின் உரிமைக் காவலரான டிரிபியூன் (Tribune) என்ற அதிகாரியைத் தேர்ந்தெடுத்தது . எல்லா மக்களுக்கும் சட்டம் இயற்றும் உரிமை பெற்றிருந்தது நீதிமன்றமாகவும் பணியாற்றியது

இவ்வாறு ரோமானியப் பேரரசில் குடியரசுக் கோட்பாடுகள் வேரூன்றின . அரசு மக்கள் மீது இறைமை அதிகாரத்தைப் பெற்றிருக்கிறது என்ற கோட்பாடு முதலில் நடைமுறைப் படுத்தப்பட்டது . ஆயினும் அரசு எவ்வித தவறும் இழைத்தல் கூடாது

என்ற கோட்பாட்டினை ரோமானியர் வலியுறுத்தினர். இக்கோட்பாடு தற்போதும் பின்பற்றப்படுகிறது.

**2) ரோமானியச் சட்டங்கள்**

மரபுவழிப் பெறப்படும் ரோமானியச் சட்ட முறைகள் ரோம் உலகிற்கு அளித்த கொடை என்று சொல்லப்படுகிறது . பிற்காலத்தில் பல நாடுகள் ரோமானியச் சட்டங்களை அடிப்படையாகக் கொண்டே தங்கள் சட்டங்களை உருவாக்கின . கி.மு. 450ல் ரோமானியச் சட்டங்கள் பன்னிரெண்டு சட்டத் தொகுதிகளாக (Twelve Tables) தொகுத்து வெளியிடப்பட்டது. பாபினியன், பாலஸ், அல்பியன் போன்ற சட்ட வல்லுநர்கள் சட்டத் தொகுப்பிற்காக பெருந்தொண்டாற்றினர் . இந்த சட்டத்தொகுப்பு மனிதனின் குடும்ப வாழ்க்கை, சொத்துரிமைகள், உடன்படிக்கைகள், குற்றங்கள், நீதிமன்ற நடைமுறைகள் ஆகியவற்றைப் பற்றிய சட்டங்களைக் கொண்டிருந்தது . காலப்போக்கில் ரோமானியச் சட்டங்கள் மூன்று வகையாக ஒழுங்கு படுத்தப்பட்டது . அவை: 1) ரோமானிய குடி மக்களுக்கு மட்டுமே உரித்தான ஜஸ் -சிவிலிஸ், 2) ரோமப் பேரரசின் அனைத்து மாநிலங்களுக்கும் உரித்தான் ஜஸ் – கென்ஷ்யம், 3) அடிப்படை உரிமைகளைக் காக்கும் ஜஸ்–நேச்சுரல் ஆகியவையாகும்

ரோமானியச் சட்டங்கள் தனியார் சொத்துரிமைக்கு முதலிடம் அளித்தது . பொருளாதார ஒழுங்கு நடவடிக்கைகளில் தனியார் நலன்களைவிட பொது நலன்களுக்கு சிறப்பிடம் அளிக்கும் கோட்பாடு ரோமானியச் சட்டக் கூறுகளிலிருந்தே தோன்றியது என்று கூறப்படுகிறது . ரோமானியச் சட்டம் விலை , பணம், விற்றல் வாங்கல்கள் பற்றிய தகவல்களை அளிக்கிறது . ரோமானியச் சட்டங்களே தற்கால சட்ட தத்துவங்களுக்கும், முதலாளித்துவ பொருளாதர வளர்ச்சிக்கும் அடிப்படையாக விளங்குகிறது.

**3. உலகம் போற்றும் இலக்கியப் படைப்புகள்**

ரோமப் பேரரசு முழுவதிலும் கல்விக் கூடங்கள் பல நிறுவப் பட்டு கணிதம , நாட்டியம், இசை, உடற்பயிற்சி ஆகியவை கற்பிக்கப்பட்டன. லத்தீன் மற்றும் கிரேக்க மொழிகள் போதிக்கப்பட்டன . பிளினி என்பவர் மிகப்பெரிய நூலகம் ஒன்றை அமைத்தார்.

ரோமானியர்களின் இலக்கியப் படைப்புகள் அக்காலத்தில் மட்டுமின்றி நவீன காலத்திலும் போற்றப்படுகின்றன . சிசரோவின் (Cicero) சொற் பொழிவுகள் இன்றும் பள்ளிகளில் கற்பிக்கப்படுகின்றன . இவரது கடிதங்கள் இலக்கியச் சுவை பெற்று விளங்குவதுடன் வரலாற்று உண்மைகளையும் லிவி என்பவர் அயனிட் என்ற நூலை – படங்களான இலிட்ட ஒடிசி நடையில் எழுதியுள்ளார் தாஸிட்டல் 30 எனவா எழுதிய வரலாற்று நூல்கள் தற்கால வரலாற்று பாகககககாட்டிடாக விளங்குகின்றன அசாம்ன– – னதாகள் பேச்ச திறமையுடையவர்கள் காட்டலாகா ஆகியோர்களைப் பற்றி ஜுவனால் (Juvenal) என்பவர் கூறவது தற்காலத்திற்கும் பொருத்தமானதாகும்

**கலை, கட்டிடக்கலை**

பண்டைய ரோமானியர்கள் கலை ஆர்வம் மிக்கவர்களாக விளங்கினர் . அரண்மனைகளையும், கோட்டைகளையும் அழகுற அமைத்தனர் . கி.மு. ஆறாம் நூற்றாண்டில் ரோமாபுரியை ஆண்ட எட்ருஸ்கன் (Etruscan) அரசர்கள் கட்டிட க்கலைக்கு பெரிதும் ஆதரவு அளித்து பல கட்டிடங்கள் கட்டினர் கி.மு 509ல் ரோம் நகரில் ஜுபிடர் கடவுளின் கோவிலான கேப்பிட்டல் கோவிலை (Capitol) கட்டினர். இவர்கள் காலத்திய கிரேக்க கட்டிடக்கலையை போன்ற கட்டிடக்கலை ரோமில் வளர ஆரம்பித்தது . காலப் போக்கில் பல மாற்றங்களைப் பெற்று ரோமானியக் கட்டிடக்கலை வளர்ச்சியடைய ஆரம்பித்தது.

ரோமானியக் கட்டிடங்கள் கட்ட முதன் முதலில் இலேசான நுண்துளைகள் உள்ள பாறை வகைகள் கற்கள் பயன்படுத்தப் பட்டன மேற்பூச்சுக்கு சுண்ணாம்பு பயன்படுத்தப்பட்டது. பின்னர் பல வகைசாந்து வகைகளைப் பயன்படுத்தினர் . களிமண், மண், சுண்ணாம்பு ஆகியவை கலந்த கட்டிடங்கள் கட்ட சிமிண்டாகப் பயன்படுத்தப்பட்டது. பெலிஸ்டிரினாவிலுள்ள ‘போர்துனா ஆலயம் ' இவ்வகையைச் சேர்ந்தது ஆகும்.

ரோமில் அரைவடிவ நீள் சதுர மண்டபங்கள் பல கட்டப்பட்டன . இவை பெரும் தூண்களையுடையவை இவ்வகை மண்டபங்கள் பொது நிகழ்ச் சிகள் நடைபெறும் இடமாகவும், அங்காடிகளாகவும் விளங்கின . ரோம்நகரின் திரோசன் அங்காடி ('Trojan) Market இவ்வகை மண்டபமாகும் . கொலோசியம் (Colosseum) என்பது ரோமாபுரியின் மிகச் சிறப்பான கலையரங்கமாகும். இது கேளிக்கை வட்டரங்கம்' (Flavian Amphitheatre) என்றும் அழைக்கப்படுகிறது. இது அழைக்கப்படுகிறது. இது ஒரு கற்காரைக் கட்டிடமாகும் . இது மேலும் மிகப் பெரிய

அரைவட்டக் கலையரங்கமாகும். இதில் உருளைவடிவ கவிகைமாட நுழைவாயில்கள் இவ்வரங்கில் அமைக்கப்பட்டன . கொலோசியத்தில் பண்டைய ரோமானியர்கள் போராளிகள் கொடிய விலங்களுடன் போராடுவதைக் கண்டுகளித்தார்கள் ! மேலும் இங்கு சமயவிரோத செயல்களில் ஈடுபட்ட கிறிஸ்தவர்களை சிங்கங்கள் கொல்லுவதை பார்த்து மகிழ்ந்தார்கள்.

பழங்காலத்தில் பணக்கார ரோமானியர்கள் மட்டுமே பயன்படுத்தும் பலகுளியலறைகள் காணப்படுகின்றன. பெரிய சதுரவடிவிலான நீச்சல் குளங்களாகக் காட்சியளிக்கின்றன. குளியலறைகளைச் சுற்றி தோட்டங்களும், பளிங்குத்தூண்களைக் கொண்ட கட்டிடமுகப்புகளும் , நூலகங்களும் அமைக்கப் பட்டிருந்தன . நீராவி குளியலுக்கும் வசதி செய்யப்பட்டிருந்தது . கி.மு. மூன்றாம் நூற்றாண்டைச் சேர்ந்த தயாகிளிசியசின் குளியலறைகள் மிகப் பெரியவை . ஒரே சமயத்தில் 3000 பேர் குளிக்கலாம்!

ரோமில் பல நிலத்தடிக் கல்லறைகள் காணப்படுகின்றன . இவை இறந்த கிறிஸ்தவர்களைப் புதைக்கும் இடுகாடாகவும் , தொழும் இடங்களாகவும் கொண்ட ஒருவகை அமைப்பாகும் . இந்த கல்லறைகளின் சுவர்களையும் தளங்களையும் ஒவியங்களால் அழகு செய்தனர்.

**ரோமானிய அறிவியல்**

தொல்பொருள் சான்றுகளை யும், பண்டைய ரோமாபுரியில் தோன்றிய அறிஞர்களின் குறிப்புகளையும் கொண்டு ரோமின் அறிவியல் வளர்ச்சியை நாம் அறியலாம். பண்டைய ரோமாபுரியின் குறிப்பிடத்தக்க அறிவியல் அறிஞர் டியோஸ் கோரிடஸ் (Dioscorides) என்பவராவார். இவர் கிரிஸ், ஸ்பெயின், பிரான்ஸ் போன்ற நாடுகளுக்கு சென்று அங்கிருந்து மருத்துவ குணம் கொண்ட பல மூலிகைகளை சேகரித்து வந்து ஆய்வு செய்தார். அதன் அடிப்படையில் 'மருத்துவப் பொருட்கள்' (Materia medica) என்ற நூலை எழுதினார் இதில் 600 வகையான மூலிகை செடிகள் பற்றியும் அவைகளின் மருத்துவ குணங்கள் பற்றியும் வரிவாக விளக்கி உள்ளார்.

பழங்கால ரோமானியர் தொழில் நுட்பத்தில் சிறந்து விளங்கினர் அவர்கள் உருவாக்கிய நீண்ட அகலமான சாலைகள், வெற்றி சின்னங்கள், பெரிய விளையாட்டு அரங்குகள், நீண்டு அகன்ற கால்வாய்கள் . உயர்ந்த கலங்கரை விளக்கங்கள் ,

சுரங்கப்பாதைகள், குடிநீர் கொண்டுவரும் பெரிய மண் குழாய்கள் போன்றவை ரோமானியரின் தொழில் நுட்ப வளர்ச்சிக்கு சிறந்த சான்றுகளாகும்

இவ்வாறு ரோமானியப் பேரரசு பல வகைகளில் உலகிற்கு நன்மைகளைச் செய்து சென்றுள்ளது. ரோமப் பேரரசு ஆரம்பத்தில் பின்பற்றிய மக்களாட்சிக் கோட்பாடு தற்காலத்தில் புகழ்பெற்று விளங்குகிறது . ரோமானியர் ஏற்படுத்திய அமைதி நாட்டின் வளர்ச்சிக்குத் துணை நின்றதால் இன்றைய உலகம் அமைதியின் முக்கியத்துவத்தை உணர்ந்திருக்கிறது. சட்டங்கள் நன்கு செயல்பட்டால்தான் நாடு நலம் பெறும் . விவசாயமும், பொருட்களின் உற்பத்தியும் தன்னிறைவு பெற்றால்தான் நாட்டின் பொருளாதரம் உயரும், வாணிப வளர்ச்சி நாட்டின் செல்வத்தினை மேம்படுத்தும் , கலையும் கல்வியும் வளர்ச்சியடைந்தால் நாட்டின் பெருமை உயரும் . ரோமானியரின் இக்கருத்துக்களை இன்றைய உலகம் உணர்ந்து பயன் அடைந்து வருகிறது

## UNIT– IV

## பைசாண்டிய நாகரிகம்

**(Bizantine Civilization)**

மேலை ரோமானியப் பேரரசு பல காரணங்களால் நிலை குலைந்து பின்பும் அதன் கிழக்கு ப் பகுதி பல நூற்றாண்டுகள் வரை தொடர்ந்து இருந்து வந்தது . அந்த கிழக்குப் பகுதியே பைசாண்டியப் பேரரசு என்று அழைக்கப்பட்டது. அதன் தலைநகரம் பைசாண்டியம் என்ற பழைய இலக்க குடியேற்றப் பகுதியா கும். இங்குதான் கான்ஸ்டன்டைன் என்ற மாமானிய பேரரசர் ஒரு தலை நகரை தனது பெயரில் நிறுவினார். அதுவே கான்ஸ்டண்டிநோபிள் என்று அழைக்கப்பட்டது . பைசாண்டியப் பேரரசு என்று அழைக்கப்பட்ட இந்த கிழக்கு சாமானியப் பேரரசு கி .பி. 330-லிருந்து 1453-ம் வருடம் வரை ஐரோப்பிய , சிரியா ஆசியாமைனர் , பாலஸ்தீனம், ஆகிய நாடுகளையும் தன் கையகத் தே கொண்டிருந்தது . இப்பேரரசின் தலைநகர் கான்ஸ்டாண்டிநோபிள் ஆகு ம். இது உலகிலேயே அழகான நகரமாக விளங்கியது. செல்வத்திலும் பண்பாட்டிலும் இதற்கு இணையான நகரங்கள் அக்காலத்தில் உலகில் எப்பகுதியிலும் காணப்படவில்லை . மத்திய தரைக்கடல் நாடுகள் வீழ்ச்சிப்பதையில் சென்று கொண்டிருந்த நேரத்தில் பைசாண்டியம் செழிப்புடன் விளங்கியது . சிரியா, இந்தியா, சீனா, பாரசீகம், எகிப்து, ஆகிய நாடுகளுடன் வியாபாரம் செய் து மக்கள் செழிப்புடன் வாழ்ந்து வந்தனர் எனவே மக்கள் சிறந்த பண்பாட்டைக்கொண்ட வாழ்க்கை வாழ்ந்தனர். ரோமானியக் கலை , கிரேக்கக் கலை கள் பேணிப் பாதுகாக்கப்பட்டது . ஐரோப்பிய நாகரிகத்தில் சிறந்து விளங்கியது பைசாண்டியப் பேரரசு பேசாண்டியம் ஒரு கிறிஸ்துவ நாடாகையால் இறைவன் அந்த நாட்டினை ஆட்சி வந்ததாக எண்ணப்பட்டது.

**பைசாண்டியப் பேரரசின் அரசியல்வரலாறு**

மேற்கு ரோமானியப் பேரரசர் கான்ஸ்டன்டைன் (Constantine 324-337) பைசாண்டியம் (Byzantium) என்ற இடத்தில் புதிய தலைநகருக்கு கான்ஸ்டான்டி நோபிள் என் று பெயர் சூட்டினார். இந்த நகர்க்கு மேற்கு நாடுகளின் தொடர்புக்கும் வணிக முன்னேற்றத்திற்கும் இருந்தது. பரந்த ரோமானியப் பேரரசு முழுவதையும் ஆட்சி புரிந்த தியோடோசியஸ் (கி. பி. 379-395) என்பவராவார் அவருக்குபின் அவரது தலவர்கள் ஆர்கேடியசும், அனோரியசும் முறையே கிழக்கு ரோமானியப் பேரரசையும் (கான்ஸ்டாண்டி நோபிளை தலைநகராகக் கொண்ட கடசாண்டிய பேரரசு ) மேற்கு ரோமானியப் பேரரசையு ம் ஆட்சி புரிந்தனர் . அவை இரண்டும் தனித்தனி வரலாறுகளைப் பெறலாயின கி பி 330-முதல் 1453 வரை பைசாண்டியப் பேரரசை பன்னிரெண்டு வம்சங்களைக் சேர்ந்த மன்னர்கள் ஆட்சி

புரிந்தனர். கான்ஸ்டான்டி நோபிளை தலைநகராகக் கொண்டு ஆட்சி புரிந்த மன்னர்களில் கான்ஸ்டன்டைனுக்குப்பின் மிகவும் முக்கியமானவர் ஜஸ்டினியன் ஆவார். ஜஸ்டினியனுக்குப் (Justinian கி.பி. 527–565) பின்னர் ஆட்சிக்கு வந்தமன்னர்கள் வலிமையற்றவர்கள் 1453–ல் கான்ஸ்டாண்டி நோபிளை துருக்கியர்கள் பிடித்துக் கொண்டனர் அத்துடன் பைசாண்டியப் பேரரசு நிலை குலைந்தது

பைசாண்டியப் பேரரசு ரோமப்பேரரசு என்றே எண்ணப்பட்டது . அலக்சாந்தரின் படையெடுப்பில் தோன்றிய நாகரிகமும் , ரோமானிய நாகரிகமும் , கிறிஸ்தவ சமயத்தின் தத்துவங்களும் அடிப்படையாகக் கொண்டு பைசாண்டிய நாகரிகம் வளர்ந்தது.

**1) கான்ஸ்டாண்டி நோபிள்**

கான்ஸ்டான்டி நோபிளை நிர்மாணித்த கான்ஸ்டன்டைன் அந் த நகரத்தைச் சுற்றி மதில்சுவர் எழுப்பினார் . ஆனால் அது வளர்ந்து வந்த மக்கள் தொகைக்குப் போதுமானதாக இல்லாததால் மற்றொரு மதில் சுவரை பேரரசர் இரண்டாம் தியோடோசியஸ் (கி.பி. 408–450) கட்டினார். இச்சுவர் இன்று வரை அழியாமல் கான்ஸ்டாண்டிநோபிளின் செல்வத்தையும் அதிகா காரத்தையும் விளக்கும் சின்னமாகத் திகழ்கிறது.

இங்கு அமைக்கப்பட்டிருந்த அரண்மனைகள் , கடைகள், பொழுது போக்கு இடங்கள், குளிக்கும் குளங்கள் , அழகான கோவில்கள் கவர்ச்சியான சதுக்கங்கள் ஆகியவை இந்த நகரை ஒரு கலைக்கூடமாகத் திகழச் செய்தன. ஒரு குன்றின் மேல் அமைக்கப்பட்ட கான்ஸ் டன்டைன் பொது மன்றம் (Forum of Constantine) என்ற கூடம் சிறந்த கலைக்கூடமாக விளங்கியது. ஒரு ஆட்சிப் பேரவைக் கட்டிடமும் அதன் நடுவே 120 அடி உயரமுடைய தூணும் அப்பலோ (Apollo) வின் சிலைகளும் அமைக்கப் பட்டிருந்தன . இதன் அருகே கட்டப்பட்டிருந்த புனித சோபியா ஆலயம் (St. Sophia) வின்மிகு காட்சியை அளித்தது. ஸியுசிப்பஸ் (Xeuxippus) என்ற பொது மக்கள் குளிக்கும் குளத்தைச் சுற்றி பளிங்குக்கல், வெண்கலம் ஆகியவற்றால் செய்யப்பட்ட சிலைகள் நிறுவப்பட்டிருந்தன. ஹிப்போட்ரோம் (Hippodrome) என்ற அரங்கில் தேசிய விழாக்கள், குதிரைப்பந்தயம், தேர்ப்பந்தயம் ஆகியவை நடைபெற்றன. இங்கு வாழ்ந்த மக்கள் கிரேக்க, லத்தீன் மொழியையே பேசி வந்தனர்.

**2) இராணுவ நிலை**

பைசாண்டியப் பேரரசை ஆஸ்ட்ரோத்துக்கள், விசிக்கோத்துக்கள் போன்ற காட்டு மிராண்டி இனத்தவரும், அராபியர் துருக்கியர் ஆகியோரும் தாக்கிக் கொண்டிருந்ததால் இராணுவத்தை வலிமைப்படுத்த வேண்டிய அவசியம் ஏற்பட்டது எனவே ஒரு லட்சத்து இருபதாயிரம் போர் வீரர்களைக் கொண்ட ராணுவம் ஒன்று அமைக்கப்பட்டது . இந்த இராணுவம் சிறந்த பயிற்சி பெற்றபடை வீரர்களைக் கொண்டிருந்தது . அந்நியப்படையெடுப்புகளின் போது உலிப்படையும் அமர்த்தப்பட்டது . குதிரைப்படை வீரர்கள் அம்பும் வில்லும் தாங்கிப் போர்க்களம் சென்றனர் . காலாட்படை வீரர்கள் ஈட்டியை ஆயுதமாகப் பயன்படுத்தினர் . போர் வீரர்கள் அனைவரும் போர்க்கவசம் அணிந்து கொண்டனர். பைசாண்டியப் பேரரசு கப்பற்படை ஒன்றையும் பெற்றிருந்தது . மாநிலங்களின் ஆளுநர்கள் தங்கள் மாநில ராணுவத்துக்குத் தலைமை தாங்கினர்

**3) நிர்வாக முறை**

பைசாண்டிய அரசாங்கம் சமயத்தை அடிப்படையாகக் கொண்டது போரசர் தனது குடிமக்கள் மீது எல்லையற்ற அதிகாரத்தைச் செலுத்தினார் . ஏறக்குறைய ஒரு சர்வாதிகாரி போலவே விளங்கினார். தம்மைக் கடவுளின் பிரதிநிதி என்று அழைத் துக் கொண்டார். சமயத்துறைக்கும் அவரே தலைவராக விளங்கினார் . மக்கள் அவரது பாதங்களில் விழுந்து வணங்கினர். நடமாடும் தெய்வம் எனப் போற்றினர். நிர்வாகத்தில் அரசருக்கு உதவி செய்ய ஏராளமான அதிகாரிகள் இருந்தனர்

ஆயினும் மன்னர் மனம் போன போக்கில் அதிகாரம் செலுத்த முடியா து. நாட்டில் நிலவிய சட்டங்களுக்கு அவர் கட்டுப் பட்டு நடக்க வேண்டியதிருந்தது ரோமக் குடியரசுக் கோட்பாட்டைப் பின்பற்றி மன்னர் ஓடிக்டியதை ஆட்சிப் பேரவையும் , மக்களும், ராணுவமும் ஏற்றுக் கொள்ள வேண்டும் என இருந்தது . பேரரசர்கள் சட்டம் இயற்றவும், நிர்வாகம் செய்யவு ம், நீதி விசாரணை செய்யவும் அதிகாரம் பெற்றிருந்தனர். இவரது ஆணையினை அலுவலர்கள் ஏற்று நிர்வாகம் செய்தனர் . சமயத்திலும் பேரரசர் அதிகாரம் பெற்று விளங்கினார். இவர் கடவுளின் பிரதிநிதியாகக் கருதப்பட்டு ஒரு அப்போஸ்தலருக்குரிய அந்தஸ்து அளிக்கப்பட்டது

**4) சட்டம்: (ஜஸ்டினியனின் சட்டத் தொகுப்பு**

பைசாண்டியப் பேரரசின் சட்டங்களை புதிய நிலைக்கு தகுந்தவாறு திருத்தி அமைத்தவர் பேரரசர் ஜஸ்டினியன் ஆவார். ஏனெனில் பழைய ரோமானியப் பேரரசின் சட்டங்கள் புதிய பேரரசின் நிலைமைக்கு ஒத்துவர வில்லை . பைசாண்டியத்தில்

நிலவிய சிவில் சட்டங்களும் , கிரிமினல் சிட்டங்களும் முரண்பாடு உடை யனவாகக் காணப்பட்டன. எனவே சட்டங் களைத் தொகுப்பதற்கு அமைச்சர் திபோனியன் (Tribonian) என்பவரது தலைமையில் பேரரசர் ஜஸ்டினியன் ஒரு சட்ட வல்லுநர் குழுவை நியமித்தார்.

இந்த சட்டவல்லுநர்கள் ஹெட்ரியன் (Hadrian) காலத்திலிருந்து ஜஸ்டியனின் காலம் வரை வெளியிடப்பட்ட சட்டங்களைத் திருத்தி ஒரு சட்டம் தொகுப்பாக (Code) வெளியிட்டனர். இதுவே ஜஸ்டியனின் சட்டத் தொகுப்பு ஆகும் . பிறகு ஜஸ்டினியன் வெளியிட்டசட்டங்களும் அவரது வாரிசுகள் வெளியிட்ட சட்டங்களும் அடங்கிய புதுக்கட்டளைத் தொகுப்புடன் (8 vols) சேர்க்கப்பட்டன. கி.பி.532-ல் இந்த சட்டவல்லுநர் குழு ஏற்கனவே சட்ட வல்லுநர்கள் வெளியிட்ட நூல்களின் கருத்தினை எழுதிச் சட்டத் தொகுப்பாக (Digest) வெளியிட்டது. இந்த நான்கு சட்டத் தொகுப்புகளையும் இணைத்து இந்த சட்டவல்லுநர் குழு குற்ற இயல் சாராத சட்டத்தினை (Carpus Juris Civilis) வெளியிட்டது. ஜஸ்டினியன் காலத்தில் இச்சட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டது

ஜஸ்டினியனின் சட்டத் தொகுப்பு கத்தோலிக்க திருச்சபையின் தலைமையை ஏற்றுக் கொண்டது. சமயத்தைச் சேர்ந்த பணியாட்கள் அனைவரும் இச்சட்டத்திற்குக் கட்டுப்பட்டவர் ஆவர் . துறவிகள் நாட்டின் சிவி ல் சட்டத்திற்கு அடங்கி நடத்தல் வேண்டும். சமய அலுவலர்கள் சூதாடுதல் தியேட்டர்களுக்கு சென்று பொழுது போக்குதல் ஆகியவற்றில் ஈடுபட்டால் அவர்கள் தண்டிக்கப் படுவார்கள் , பிரிவினை வாதிகளுக்கு பதவிகள் வழங்குதல் கூடாது

ஜஸ்டினியனின் சட்டம் வகுப்புப் பிரிவினையை தடைசெய் தது ஆயினும் இச்சட்டம் மக்களை தரவரிசையில் பிரித்தது. சமுதாயத்தில் உயர் பிரிவினர் என்றும், சாதாரண மக்கள் என்றும் இரு பிரிவினரை இச்சட்டம் ஏற்றுக் கொண்டது சுதந்திரமான குடிமக்களுக்கு எல்லா உரிமைகளும் வழங்கப் பட்டன . ஜஸ்டினியனின் சட்டப்படி அடிமைப் பெண்ணைக் கற்ப ளித்தால் மரணதண்டனை வழங்கப்பட்டது . விவாகரத்து தடை செய்யப்பட்டது. பெண்களுடன் தகாத முறையில் நடந்து கொள்ளும் ஆண்களுக்கு மரண தண்டனை வழங்கப்பட்டது

சொத்துக்கள் பற்றிய சட்டங்களும் ஜஸ்டினியனின் சட்டத் தொகுப்பில் இடம் பெற்றன. உயில் எழுதிவைக்காமல் ஒருவர் இறந்து விட் டால் அவரது சொத்துக்கள் வாரிசுக்கு செல்லும் வாரிசுகள் இல்லையென்றால் சொத்துக்களை நன்கொடையாக

அளித்து விடுவதற்கு அனுமதி வழங்கப்பட்டது ஆலயங்கள் பெற்றிருந்த சொத்துக்களை அவைகள் விற்பதற்கு இச்சட்டம் தடை விதித்தது இதன் விளைவாக கிறிஸ்தவக் கோவில்கள் பெற்றிருந்த நிலங்களின் அளவு அதிகரித்துக் கொண்டே சென்றது

மேலும் ஜஸ்டினியனின் சட்டத்தின் படி உயர் நீதிபதியின் அனுமதியின்றி யாரையும் சிறையிடுதல் கூடாது . குற்றம் சுமத்தப்பட்டவர்கள் நீதிபதிகளின் முன்னிலையிலேயே விசாரணை செய்ய வேண்டும். குடிபோதையில் இருப்பவர்களைத் தண்டிப்பதற்கு அதிகாரம் வழங்கப்பட்டது உடல் உறுப்புகளை ஊனப்படுத்தித் தண்டிப்பதற்கான அதிகாரம் நீதிமன்றங்களுக்கு அளிக்கப்பட்டது. வரிவசூல் செய்பவர்கள் அதிகப்படியான வரி வசூலித்தால் அவர்கள் கைகள் வெட்டப்படும் . கீழ்நீதிமன்றங்களிலிருந்து மேல் பேக்குகள் உயர் நீதிமன்றங்களிலும், பின்னர் பேரரசர் முன்னிலையிலும் வாயீடு செய்வதற்கு இச்சட்டம் அனுமதி வழங்கியது இவ்வாறு ஜஸ்டினியன் சட்டங்கள் மைய ஆட்சிக்கு வலிமையைக் காடுத்தது . இதன் மூலம் மன்னர் தனது ஆதிக்கத்தை நிலைநாட்டிக்கொள்ள நடித்தது நீதிபதிகள் பேரரசின் பொது விவகாரங்களையும், தனியார் விவகாரங்களையும் கட்டுப்படுத்தினர்.

**5. மக்கள்**

பைசாண்டியப் பேரரசில் பல்வேறு நாடுகளைச் சேர்ந்த மக்கள் வாழ்ந்தனர் பெரும்பான்மையான மக்கள் கிரேக்கர், யூதர், ஆர்மீனியர், எகிப்தியர், பாசீகர் ஆகியோர் ஆவர். இவர்கள் தவிர மிலேச்சர்கள் , ஸ்லாவ்கள், ஆவார்கள், பல்கர்கள் மங்கோலியர்களும் வாழ்ந்தனர் . சில ஜெர்மானியர்களும் தங்கியிருந்தனர் . இதில் ஸ்லாவ்கள் ஆல்பைன் இனத்தவர்கள். எண்ணிக்கையில் இவர்கள் மற்றவர்களை விட சற்று அதிகமாகவே இருந்தனர் . பல்கர்கள், ஆவார்கள் (Avars) மங்கோலிய இனத்தைச் சார்ந்தவர்கள். அவர்கள் போர் உணர்ச்சி மிக்கவர்கள் . மேய்த்து வந்தார்கள் . மொத்தத்தில் மக்களின் பெரும் பகுதியினர் கிரேக்கர்களும் , கிரேக்க நாகரிகத்தைப் பின்பற்றிய கீழை நாட்டினருமே ஆவர் . இவ்வாறு பல்வேறு இனத்தவர்களையும் தன்னகத்தே விளங்கியது பைசாண்டியப் பேரரசு . இப்பேரரசில் கல்வி அறிவு படைத்தோர் இலத்தீன் மொழியை பேசினர். ஆரம்பத்தில் லத்தீன் மொழி ஆட்சிமொழியாக இருந்தது. ஆனால் பின்னர் கிரேக்க மொழி ஆட்சி மொழி ஆகியது

**6. பொருளாதர நிலை**

**a) தொழில்கள்**

பைசாண்டிய பேரரசில் பல்வேறு தொழில்களைச் செய்து வந்த மக்கள் வாழ்ந்து வந்தனர். அவர்களில் ஆவணங்கள் எழுதுவோர், நகைவணிகர், வங்கிகள் நடத்துவோர், பட்டாடைவிற்போர், பட்டு நூல் எடுப்போர் , நறுமணப் விற்போர் , தோல் வேலை செய்பவர்கள், ரொட்டி சுடுபவர்கள் , தச்சு வேலைகள் செய்வோர் ஆகியோர் முக்கியமானவர்கள். ஒவ்வொரு தொழிலைச் செய்து வந்தவர்களும் தனிச்சங்கத்தை அமைத்து வியாபாரம், உற்பத்தி (ஆகியவற்றைப் பெருக்குவதற்கு ஏற்பாடு செய்தனர்.

ஆனால் அரசாங்கம் மக்களது பொருளாதர வாழ்க்கையில் அதிகமாகத் தலையிட்டது. கூலிகளையும் விலை வாசியையும் அதுவே தீர்மானித்தது . பல தொழில்களை அது ஏற்று நடத்தியது . சுரங்கத்தொழில் மீன் பிடிக்கும் தொழில் பல தொழில்கள் அரசாங்கத்துக்கே சொந்த மாக இருந்தன . ஆனால் வியாபாரங்கள் தனிப்பட்ட குழுக்களிடம் (Guilds) போன்ற முக்கியமான ஒப்படைக்கப்பட்டன. இக்குழுக்களைக் கட்டுப்படுத்தும் அதிகாரம் பேரரசர்களிடமே இருந்தது

கி பி 552-ல் ஒரு சில நெஸ்டோரியச் சமயப் பிரிவைச் சேர்ந்த துறவிகள் சீனாவிலிருந்து பட்டுத் தொழி லைக் கற்றுவந்து பைசாண்டியப் பேரரசில் அறிமுகப் படுத்தினர். பின்னர் அரசாங்கத்தின் ஆதரவில் இந்தத் தொழில் நன்கு வளர்ச்சியடைந்தது. கிரேக்க நாட்டிலும் , சிரியாவிலும் பட்டுத் துணிகள் ஏராளமாக உற்பத்தி செய்யப்பட்டன . பிற்காலத்தில் தனிப்பட்ட வாணிபர்களும் இந்த தொழிலில் ஈடுபட்டனர்.

**b) உள்நாட்டு, வெளிநாட்டு வாணிபம்**

பைசாண்டியப் பேரரசில் உள்நாட்டு , வெளிநாட்டு வாணிபம் செழித்தோங்கியது . உலகின் பல்வேறு நாடுகளுடன் வாணிபம் செய்து வாணிகர்கள் நல்ல லாபம் சம்பாதித்தனர். பொதுவாக கருங்கடல் வழியாகவே பிற நாடுகளுடன் வாணிபம் செய்தனர். வியாபாரத்திற்கு சொலிடஸ் (Solidus) என்ற தங்க நாணயம் பயன்படுத்தப்பட்டது . குறைந்த வட்டிக்கு கடன் கிடைத்ததால் பலர் வாணிபத்தில் ஈடுபட்டு லாபம் சம்பாதித்தனர்.

வாணிபத்திலும் அரசாங்கம் தலையிட்டு பலவிதக் கட்டுப்பாடுகளை ஏற்படுத்தியது. துறை முகங்களையும் கப்பல்தளங்களையும் கண்காணித்தது. கடன்

கொடுக்கல் வாங்கலையும், காப்புறுதிப் பத்திரங்களையும் தணிக்கை செய்தது. நாடு முழுவதிலும் ஒரே மாதிரியான நாணயங்களை புழங்கச் செய்தது. ஒரு சில பொருட்களின் ஏற்றுமதியை அரசாங்கம் தடை செய்தது. ஏற்றுமதி, இறக்குமதி பொருட்களின் மீது வரி விதித்தது. அந்நிய நாட்ட வாணிபர்கள் பைசாண்டிய பேரரசுக்கு வந்து வாணிபம் செய்யுமாறு கேட்டுக் கொள்ளப்பட்டனர். பொருள்களை பல்வேறு நாடுகளுக்கு கப்பல் மூலமாகக் கொண்டு செல்லும் பணியை பிறநாட்டு வாணிபர்களே செய்து வந்தனர். வங்கிமுறை, அந்நிய செலவாணி முறை ஆகியவை கான்ஸ்டாண்டி நோபிளில் நன்கு வளர்ச்சியடைந்திருந்தது

**¢ விவசாயம்**

பைசாண்டியப் பேரரசில் விவசாயம் நன்கு செழித்தோங்கியது. பெரும் செல்வந்தர்கள் சிறிய நிலக்கிழார்களிடமிருந்த நிலங்களை விலைக்கு வாங்கி பெரும் பண்ணைகளை அமைத்தனர். அந்த நிலங்களில் செர்புகள் (Serfs) என்று அழைக்கப்பட்ட விவசாய அடிமைகளே பயிர் செய்தனர். அவர்கள் தாங்கள் விவசாயம் செய்து வந்த நிலத்தை விட்டு வேறு இடங்களுக்குச் செல்ல முடியாதபடி கட்டுண்டு கிடந்தனர். அவர்கள் ஏறக்குறைய அடிமைகள் போன்றே வாழ்ந்து வந்தனர். நிலவரியின் கடுமை காரணமாக சிறு குடியானவர்கள் தங்கள் நிலங்களை விற்று விட்டு நகரங்களில் குடியிருந்தனர். இதனால் பெரும் நிலப்பிரபுக்கள் பலர் தோன்றினர். சமயத்துறையில் ஈடுபட்டிருந்த மதகுருமார்களிடமும் ஏராளமான நிலங்கள் இருந்தன

**சமுதாய நிலை**

பைசாண்டியப் பேரரசில் வங்கி உரிமையாளர்கள், தொழிலதிபர்கள், பெருநிலக்கிழார்கள் ஆகியோர் உயர் குடிபெருமக்களாக விளங்கினர். இவர்கள் ஆடம்பர வாழ்க்கை வாழ்ந்தனர். கண்கவர் ஆடைகளை அணிந்து கொண்டு உல்லாசமாக வாழ்ந்தனர். கடற்கரை ஓரங்களில் கவன்மிகு மாளிகைகள் கட்டிக் கொண்டனர். அந்த மாளிகைகள் வண்ண ஓவியங்கள், அழகுமிகு சிற்பங்கள், பளிச்சிடும் பீங்கான் பாத்திரங்கள் ஆகியவற்றால் அழகு படுத்தப்பட்டன – உலகில் எந்தப் பாகத்தில் கண்டிராத அளவுக்கு உயர்குடி மகளிர் தங்கள் உடம்பை அழகு படுத்திக் கொண்டனர். வாசனைத் திரவியங்களையும், அழகிய அணிகலன்களையும், அலங்காரமான கொண்டைகளையும் பயன்படுத்தினர் இந்த உயர் குடிமக்கள் ஆண்டு முழுவதிலும் வரவேற்புகள், விளையாட்டுகள், ஊர்வலங்கள் என்று கோலாகலமாக கொண்டாடினர்

அதே சமயத்தில் துன்பத்திலும் , துயரத்திலும் ஆழ்ந்து கிடந்த மக்கள் பைசாண்டியப் பேரரசில் காணப்பட்டது . முக்கியமாக செர்புகள் என்ற விவசாயத் தொழிலாளர்கள், நகரத் தொழிலாளர்கள் ஆகியோர் வறுமையில் வாடினர். ஆசிரியர்கள், மருத்துவர்கள், வழக்கறிஞர்கள், கைவினைஞர்கள் போன்றோர் மிதமான வாழ்க்கை வாழ்ந்தனர். சமுதாயத்தில் மக்களிடையே அடிக்கடி சச்சரவுகள் ஏற்பட்டது . பைசாண்டியப் பேரரசில் விலைமகளிர் இல்லாத நகரங்களே இல்லை என்று கூறலாம். இதனைத் தடுக்க அரசாங்கம் பல சட்டங்களை இயற்றினாலும் அவை பலனளிக்கவில்லை. நாட்டில் ஒருசில செல்வந்தர்கள் மட்டுமே மருத்துவ மனைகள் , அனாதை இல்லங்கள் , பிரயாணிகள் தங்கும் இல்லங்கள் ஆகியவற்றை அமைத்து மக்களுக்கு தொண்டு செய்தனர்.

**7.கலைவளர்ச்சி**

கலைத்துறையில் பைசாண்டியர்கள் தலைசிறந்து விளங்கினார்கள் . கட்டிடக்கலை, சிற்பக்கலை, ஓவியக்கலை நன்கு வளர்ச்சியடைந்தது

**8) கட்டிடக்கலை**

கட்டிடக் கலையில்தான் பைசாண்டியர்கள் மிகச் சிறந்து விளங்கினார்கள் . பைசாண்டியக் கட்டிடங்கள் வலிமையும், அழகும், எளிமையும் வாய்ந்தவை

**பாசிலிக்கா முறையில் கட்டப்பட்ட கோவில்கள்**

பைசாண்டியப் பேரரசர்கள் தங்கள் திருக் கோவில்களை பாஸிலிக்கா (Basilica) முறைப்படியே அமைத்தனர். இந்த முறையில் கட்டப்பட்ட நெடுமாடக் கோவில்களில் தூண்கள் வரிசை வரிசையாக அமைந்த நீள் சதுர மண்டபம் ஒன்றும், அறைவட்டமான ஒதுக்கிடம் ஒன்றும் அமைந்திருக்கும் . கான்ஸ்டன்டைன் என்ற பேரரசர் வாடிகன் குன்றின் மேல் செயின்ட்பீட்டர் ஆலயத்தைக் கட்டினார் . அவர் செயின்ட்பால் என்ற மற்றொரு திருக்கோவிலையும் கட்டினார் . பின்னர் தன்னுடைய சகோதரியின் நினைவாக சான்டா கான்ஸ்டான்ஸா (Santa Constanza) என்ற அழகுமிக்க கட்டிடத்தைக் கட்டினார் . அது இன்றும் பழைய கம்பீரம் குறையாமல் அன்பின் உருவமாக விளங்குகிறது

நாளடைவில் பாஸிலிகா முறையில் பல மாற்றங்கள் ஏற்பட்டன டயக்னீஷியன் (Diocletian) என்ற பேரரசர் கட்டிய கட்டிடங்களில் பல புதிய முறைகள் புகுத்தப்பட்டன இதன்படி கட்டிடத்தின் வளைவுகள் தூண்களின் தலைப்பிலிருந்தே உற்பத்தியாகின்றன . அழகிய உருவங்களுக்குப் பதிலாக வளைவான கோடுகள் அவர்களின் மேற்புறத்தை

அலங்கரிக்கின்றன கிரேக்க அலங்கார முறைகளுக்குப் பதிலாக ஆசியாமைனர், எகிப்து போன்ற நாடுகளுக்கு உரித்தான அடையாள அலங்காரச் சின்னங்கள் (Symbolic Decoration) கட்டடங்களில் பொறிக்கப்பட்டன. அந்தச் சின்னங்கள் கண்கவர் வண்ணங்களில் தீட்டப்பட்டன

பிற்கால கட்டி டக் கலை ஞர்கள் நீள்சதுர பாஸிலிகா முறையைக் கைவிட்டு சிலுவை வடிவமான கட்டிடங்களை எழுப்பலாயினர் . சில சமயங்களில் திருக்கோவில்களின் அடிமட்டமானது . எண் கோணத்தில் அமைந்திருக்கும் . இந்த அமைப்பிலேயே ரேவன்னா என்ற இ டத்தில் கட்டப்பட்டுள்ள சான்விட்டாலி (San Vitale) என்ற திருக்கோவில் அமைந்துள்ளது . இத்தகைய கட்டிடங்களில் காணப்படும் வட்ட வடிவமான குவிமாடங்கள் சிறப்புமிக்கது ஆகும் . கோவில்களின் தளங்கள் வெவ்வேறு நிறங்களைக் கொண்ட கண்ணாடிக் துண்டுகளாலும் மொசைக் எனப்படும் பளிங்கு கற்களாலும் பாவப்பட்டுள்ளது. பல நிறங்களிலான கற்களும், கண்ணாடிகளும் தரையில் மட்டுமல்லாது படையில் மேடைகளிலும் (Alter) தூண்களிலும், சுவர்களிலும் பதிக்கப்பட்டுள்ளன. தரைமீது விரிக்கப்பட்டுள்ள கம்பளங்களிலும் ஜன்னல்களில் தொங்கும் படுதாக்களிலும் , பலிபீடத்தை அலங்கரி க்கும் பட்டு விரிப்புகளிலும் கண்ணுக்கினிய அழகான சிற்பங்கள் பல பொறிக்கப்பட்டுள்ளன

**செயின்ட் சோபியா ஆலயம்**

பைசாண்டியக் கட்டிடக் கலைக்கு ஒரு எடுத்துக் காட்டாகத் திகழ்வது பேரரசர் ஜஸ்டின் கட்டிய செயின்ட் சோபியா என்ற பெருங்கோவில் ஆகும் ஹேகியா சோபியா (Hagia Sophia) அல்லது 'தூய்மையான ஞானம்' என்ற தெய்வத்திற்கு அர்ப்பணிக்கப்பட்ட அந்தக் கோவில் உண்மையில் மனிதர்களால் கட்டப்பட்டதா அல்லது தேவதைகளால் கட்டப்பட்டதா என்று ஐயப்படும் அளவுக்கு பிரமாண்டமானதாகக் காட்சியளிக்கிறது . இக்கோவிலின் தரைமட்டம் சிலுவை வடிவத்தில் அமைந்துள் ளது. கோவிலின் நீளம் 250 அடி, அகலம் 225 அடி ஆகும் . இதன் அழகு மிக்க பிரமாண்டமான காண்போர்வியக்கத்தக்க முறையில் அமைந்துள்ளது . இந்த குவிமாடம் வானத்திலிருந்து ஒரு தங்கச் சங்கிலி மூலமாகத் தொங்க விடப்பட்டுள்ளது போன்றதோர் உணர்வை இதனைப் பார்ப்பவர்களுக்கு ஏற்படுத்துகி றது. இதுவே பைசாண்டியக் கலையின் மிகச் சிறந்த பண்பாகும்

செயின்ட் சோபியா திருக்கோவிலின் உட்பக்கம் ஒரு அரும் பொருட்காட்சி போலவே தோற்றமளிக்கிறது . வெள்ளை, சிகப்பு, மஞ்சள், உதா போன்ற பல்வேறு நிறங்களையுடைய கற்கள் அதன் சுவர்களிலும் தூண்களிலும் - பதிக்கப்பட்டுள்ளன. இதன் விளைவாக எங்கு பார்த்தாலும் அழகிய பூக்கள் பூத்திருப்பது போன்ற உணர்வு நமக்கு ஏற்படுகிறது ஆங்காங்கே வளைவுகளும் , உலோகத்தில் வார்க்கப்பட்ட சிலைகளும், சித்திர வேலைப்பாடுகளும் கட்டிடத்தின் உச்சியை அழகுபடுத்துகின்றன மாடத்தின் நடுவிலிருந்து நாற்பது கொத்து விளக்குகள் (Ch) அழகாகத் தொங்குகின்றன.

கோவிலின் சொற்பொழிவு மேடையானது (Pu) வெள்ளியாலும், தங்கத்தினாலும் மிக அழகாக செய்யப்பட்டுள்ளது. அவற்றில் விலை உயர்ந்த கற்கள் பதிக்கப்பட்டுள்ளன. பூசைக்குரிய பாத்திரங்கள் பொன்னாலும் வெள்ளியாலும் செய்யப்பட்டுள்ளன . பேரரசரும், அரசியும் அமர்ந்து கிறிஸ்துவிடமிருந்தும் , மரியன்னையிடமிருந்தும் ஆசீர்வாதங்களைப் பெறுவது போன்று அமைக்கப்பட்டுள்ள வெள்ளி சிம்மாசனம் இங்கே காணப்படும் பொருட்களில் எல்லாம் மிகச் சிறப்பானது ஆகும் . இதனைக்கண்ட பலர் “ஆதாம் பிறந்த காலத்திலிருந்து இதுவரையாருமே இத்தகைய பெருங்கோவிலைப் பார்த்திருக்க மாட்டார்கள். இனியும் பார்க்க மாட்டார்கள்” என்று கூறினர்.

**b) சிற்பக்கலை**

பைசாண்டியப் பேரரசில் சிற்பக்கலையும் வளர்ச்சியடைந்தது . பைசாண்டியர்களின் சிற்பங்களில் கிரேக்கர்களின் நயமும் , அசிரியர்களின் பகட்டும் பளிச்சிடுகின்றன. கல்லால் செய்யப்பட்ட சவப்பெட்டிகள் (Se) மீது செதுக்கப்பட்டுள்ள மனித உருவங்களில் பைசாண்டியச் சிற்பிகளின் கைவன்மையைக் காணலாம் . தந்தங்களைச் செதுக்கி சிற்பங்கள் செய்வதில் பைசாண்டியம் புகழ்பெற்று விளங்கியது . பிஷப் மாக்சிமியன் [Ma] என்பவருக்குச் செய்யப்பட்ட தந்த நாற்காலி சிற்பக்கலையின் சிகரமாக விளங்குகிறது.

**c) ஓவியக்கலை**

ஓவியக்கலையிலும் பைசாண்டியர்கள் சிறந்து விளங்கினார்கள் மரப்பலகைகளிலும் சுவர்களிலும் பெரிய ஓவியங்களுக்குப் பதிலாக சிற்றோவியங்கள் (Min) வரைவதிலேயே இக்கால ஓவியர்கள் ஈடுபட்டனர் . ' பொன்மயமான அல்லது நீல நிறமான பின்னணியில் வரையப்பட்ட சிற்றோவியங்கள் அழகு மிக்கவை . பேரரசர்

டயக்னீஷியன் கட்டிய கட்டிடங்களில் ஓவியங்கள் காணப்படுகின்றன . கிறிஸ்துவின் வாழ்க்கையும் மேரியின் துயரங்களும், துறவிகளின் வாழ்க்கையும் ஒவியங்களில் படம் பிடித்துக் காட்ட ப்பட்டுள்ளன. ஆனால் இத்தகைய ஆன்மீக ஓவியங்களில் கூட ஆடம்பரமே தலை தூக்கி நிற்கிறது. கிறிஸ்துவம், மரியன்னையும் கூட ஒரு பேரரசரை போலவும், அரசியைப் பேரலவும் வரையப்பட்டுள்ளன . மன்னர்களாலும் சமயத்தலைவர்களாலும் ஆதரிக்கப்பட்ட ஓவியர்கள் அவர்களுடைய ஆணையின் பேரில் அவர்களின் மனதுக்கேற்ற ஓவியங்களையே வரைந்தனர்

இவை தவிற பைசாண்டியர்கள் சாயம் தோய்த்த வண்ணக் கண்ணாடித் தொழிலிலும் வல்லுநராகத் திகழ்ந்தனர் பொன்னாலும் , வெள்ளியாலும் அழகிய ஆபரணங்கள் செய்யப்பட்டன அக்கால நெசவாளர்கள் மிக நுட்பமான மெல்லிய ஆடைகளை நெய்ததுடன் அவற்றை பல அழகிய ஜரிகைகளையும் பூக்களையும் கொண்டு அழகூட்டினர் . திரைசீலைகள், விரிப்புகள் போன்றவற்றிலும் இத்தகைய அழகிய வேலைப்பாடுகள் காணப்பட்டன பைசாண்டியர்களின் கலைத்திறன் நாளடைவில் இத்தாலிக்கும் ரஷ்யாவுக்கும் பரவியது . ரஷ்யர்களின் திருக்கோவில்கள் பைசாண்டிய முறையிலேயே கட்டப்ப ட்டன. நவீனகாலத்தில் இத்தாலியில் ஏற்பட்ட மறுமலர்ச்சிக்கு கான்ஸ்டான்டி நோபிளிலிருந்து சென்ற கலைஞர்களே பெரிதும் காரணமாவர்.

**8. கல்வி வளர்ச்சி**

பைசாண்டியப் பேரரசில் பள்ளிமாணவர்களுக்கு கிரேக்க இலக்கணமும் இலக்கியங்களும் பயிற்றுவிக்கப்பட்டன. மாணவர்களின் பதினான்காவது வயதிலிருந்தே அவர்களுக்கு சொல்லாற்றல் பயிற்சியும் , தத்துவ அறிவும் அளிக்கப்பட்டன . கணிதம், வானநூல், இசை ஆகியவையும் கற்றுக் கொடுக்கப் பட்டன . கிரேக்க குருமார்கள் வேதாகமத்தை மாணவர்களுக்கு புகட்டினர் . பேரரசின் பல இடங்களில் பள்ளிகள் செயல்பட்டு வந்தன அலக்சாந்திரி யா, ஏதென்ஸ், கான்ஸ்டாண்டிநோபிள், அந்தியோக் ஆகிய நகரங்களில் நிறுவப் பட்டிருந்த பல்கலைக்கழகங்கள் சட்டம் , தத்துவம், சமய சாஸ்திரம், கிரேக்க இலக்கியம் ஆகியவற்றைப் போதிப்பதில் புகழ் பெற்று விளங்கின கான்ஸ்டாண்டி நோபிளில் கி .பி. 425-ல் இரண்டாம் தியோடிஷியஸ் பல்கலைக்கழகத்தை தோற்றுவித்தார்

**9. இலக்கிய வளர்ச்சி**

கிரேக்க மொழியில் பல இலக்கியங்களும் , இலக்கண நூல்களும் , - வீரகாவியங்களும், வரலாற்று நூல்களும் எழுதப்பட்டன. இலக்கியச் சுவையுடன் பல பாடல்கள் இயற்றப்பட்டது. அதில் சிறப்பானது 'ஹீரோவும் லியாண்டரும்'' (Hero and Leander) என்பதாகும். இந்தக் கவிதையை இயற்றியவர் முசேயஸ் (Mu) என்பவர் ஆவார். இதில் லியாண்டர் என்ற வீரன் ஹீரோ என்ற தனது காதலியைக் காணக் கடலில் குதித்து வீரமாக நீந்தி வழியில் உயிர்விடுவதைச் சித்தரிக்கிறது

வரலாற்றுத்துறையிலும் பல நூல்கள் எழுதப்பட்டன. யூனாபியஸ் (Eunapius) என்பவர் 'அகில உலக வரலாறு ' (Universal History) என்ற ஒப்புயற்ற நூலை எழுதினார் . இந்த வரலாற்றுக் காவியத்தின் நாயகன் பேரரசர் ஜஸ்டினியன் ஆவார் . சாக்ரடிஸ் என்பவர் திருச்சபைவரலாறு (History of the Church) என்ற நூலை எழுதினார். இந்த நூலில் அக்காலத்தில் நிலவிய சமய நிலை . மூடப்பழக்க வழக்கங்கள் , பலகட்டுக்கதைகள் இடம் பெற்றுள்ளன . ஜோசிடிஸ் (Zosi dees) 'ரோமப் பேரரசின் வரலாறு என்ற நூலை எழுதினார் . புரோகோபியஸ் (Procopius) என்பவர் எழுதிய போர்களின் புத்தகங்கள் (Books of Wars) இரகசிய வரலாறு (Secret History) ஆகிய நூல்கள் மிகவும் புகழ் பெற்றவை. இந்த தங்களில் சகுனம் , குறி சொல்லல், விந்தைகள், கனவுகள் போன்றவை அதிகமாக இடம் பெற்றுள்ளன ஆனாலும் இந்த நூலாசிரியர்தான் நேரில் கண்ட நிகழ்ச்சிகளை உண்மையாக எழுதி வைத்துள்ளார் . மேலும் இந்த நூல்களில் எல்லாம் விதியின் செயல் ' என்ற விதிக் கோட்பாடும் , எதையும் நம்பக்கூடாது என்ற ஐயுறவாகக் கோட்பாடும் (Skepticism) இதில் பெரிதும் இடம் பெற்றுள்ளன.

**10. அறிவியல் வளர்ச்சி**

பைசாண்டியப் பேரரசில் அறிவியல் துறையில் குறிப்பிடத்தக்க வளர்ச்சி ஏற்பட்டது. மருத்துவத்துறையில் சிறந்த முன்னேற்றம் காணப்பட்டது . பேரரசர் ஜுலியனின் மருத்துவரான அரிபேசியஸ் (Oribasius) என்பவர் மருத்துவத்தில் கலைக்களஞ்சியம் ஒன்றைக் தயாரித்தார். ஜஸ்டினியனின் மருத்துவரான ஆக்டியஸ் (Actius) என்பவர் வாய், கண், காது, மூக்கு, தொண்டை முதலியவைப் பற்றிய நோய்களை ஆராய்ந்து அவற்றுக்கான இருந்துகளை உண்டாக்கினார்

நீர் அச்சநோய் , குரல்வளை சுப்பிநோய் , உள்நாக்கு அளர்ச்சி நோய் (hydrophobia, Diphtheria, Tonsillitus) ஆகியவை பற்றி ஆராய்ந்து பல உண்மைகளை வெளியிட்டுள்ளார் . டிராய்ஸ் நகரத்தைச் சேர்ந்த அலக்சாந்தர் என்பவர் குடல் கோளாறு . செரிமானச் சிக்கல் ,

நுரையீரல் ஆகியவை சம்பந்தப்பட்ட நோய்கள் பற்றி ஆராய்ச்சி செய்து வெளியிட்டுள்ளார். வெஜியஸ் என்பவர் கால்நடை மருத்துவத்தில் கை தேர்ந்தவராக காணப்பட்டார்.

மண்ணைப் பொன்னாக்கும் ரச வாத வித்தையை மக்கள் விரும்பிக் கற்றனர். அலக்சாந்திரிய நகரில் அத்தகைய விஞ்ஞானிகள் பலர் இருந்தனர். வானசாஸ் திரமும் ஜாதகக் கதையும் அறிவியல் முறையில் நன்கு கணிக்கப்பட்டன .ஹைப்பேஷியா (Hypatia) என்ற பெண்மணி இக்கால விஞ்ஞானிகளுள் தலைசிறந்தவர் ஆவார் . இந்த பெண் விஞ்ஞானி வெளியிட்டக் கருத்துக்களை ஏற்றுக் கொள்ள மறுத்த கிறிஸ்தவர்கள் இவனை சித்திரவதை செய்து கொன்று விட்டனர் . உண்மைக்காக உயிரைப் பறி கொடுத்த விஞ்ஞானியாக விளங்குகிறார் ஹைப்போஷியா

**11. சமயநிலை**

பைசாண்டியப் பேரரசில் சமயத்தில் அமைதி ஏற்படவில்லை . பலவகைப்பட்ட கோட்பாடுகள் தோன்றின. அவை பைசாண்டிய சமய வரலாற்றில் முக்கிய இடத்தை வகிக்கின்றன.

**அ) மோனோபிசைஸ்ட் இயக்கம்**

இயேசுகிறிஸ்துவின் திரு மேனியில் ஓரியல்புதான் உள்ளது என்ற கோட்பாடு நிலவியது. இக்கோட்பாட்டை பின்பற்றியவர்கள் இயேசு ஒரே பொருளிலால் ஆக்கப்பட்டவர் என்றும் அவலியற்பொருள் தெய்வீகமானது என்றும் நம்பினர் இல்லியக்கம் மந்தாவது நூற்றாண்டில் தொடங்கி ANAடியன் காலத்தில் கசநிலையடைந்தது இதுவும் ஒரு சமய இயக்கமாகும் இவ்வியக்கத்தினவலிமை பெற்று விளங்கினர் ஆனால் கி .பி ஏழாம் நாற்றாண்டில் இவர்கள் கிழக்கு திருச்சபையிலிருந்து பிரிந்து சென்று விட்டன்.

**ஆ) ஐக்கனோகிளாஸ்டிக் இயக்கம்**

உருவ வழிபாடு எதிர்ப்பு இயக்கமும் பைசாண்டிய வரலாற்றில் முக்கியமான இடத்தை வகிக்கின்றது. கிபி 725 ல் பேரரசர் மூன்றாம் லியோ (கோவில்களில் சிலை வைப்பரைத் தடுப்பதற்காகக் கொண்டு வந்த சட்டத்துடன் இந்த இயக்கம் தொடங்கியது கிழக்கு திருச்சபையில் வழிபாட்டின் போது சிலையைப் பயன்படுத்துவதை , கிறிஸ்தவர்களில் ஒரு பிரிவினர் ஏற்றுக் கொள்ளவில லை. ஏனெனில் சில துறவிகள் சிலைகளை விற்று அதிக செல்வம் சேர்த்தனர் சிலை வழிபாட்டை எதிர்த்தவர்கள்

பெரும்பாலும் துறவிகளாக இருந்து ஆன்மீகத்தைப் பற்றி பிரச்சாரம் செய்துகொண்டிருந்தனர். ஒன்பதாவது நூற்றாண்டு வரை தொடர்ந்து இந்த இயக் கம் நடைபெற்று வந்தது . கோவில்களிலிருந்த சிலைகள் அகற்றப்பட்டாலும் சிறிது காலத்தில் மீண்டும் சிலைகளும் ஓவியங்களும் ஆலயங்களில் தோன்றின பிற்காலத்தில் லூதர் , கால்வின் ஆகியோரது சமய இயக்கங்களுக்கு இந்த உருவ வழிபாட்டு எதிர்ப்பு இயக்கம் வழி வகுத்தது

**பைசாண்டிய நாகரிகத்தின் கொடை**

ஐரோப்பிய நாகரிகம் பைசாண்டியர்களு க்கு பலவகைகளிலும் கடமைப்பட்டுள்ளது. அலைஅலையாக எழுந்து ஐரோப்பாவினுள் நுழைய முயற்சித்த முஸ்லீம்களைத் தடுத்து நிறுத்தி ஐரோப்பிய நாகரிகத்தை இஸ்லாமிய ஆதிக்கத்திலிருந்து காத்த பெரும் பைசாண்டியர்களுக்கே உரியதாகும் . கிரேக்க ரோமானியப் பண்பாடுகளைப் பாதுகாத்து , செம்மைப்படுத்தி ஐரோப்பாவுக்கு அளித்தவர்கள் பைசாண்டியர்களே ஆவர் . இருண்டகாலம் என்று கருதப்படும் இடைக்காலத்திலும் ஐரோப்பியர் வெளிவருவதற்கு உதவி செய்தவர்கள் பைசாண்டியர்களே ஆவர் . கீழை நாகரிகத்தோடு கிரேக்க ரோமானியப் பண்புகளைக் கலந்து அந்தக் கலவையைக் கிறிஸ்தவ சமயத்தி ல் தோய்த்து ஒருபுதிய பண்பாட்டை உருவாக்கி ஐரோப்பியர்களுக்கு அளித்தார்கள் . அதன் திரண்டபயனே நவீன ஐரோப்பாவில் ஏற்பட்ட மறுமலர்ச்சி இயக்கமாகும்

பைசாண்டியர்கள் வாணிபத்தில் வல்லவர்களாக இருந்த காரணத்தினால் அவர்கள் கீழை நாடுகளுக்கும் . மேலைநாடுகளுக்கும் ஒரு கலாச்சார உறவை ஏற்படுத்தினர். கிரேக்க இலக்கியங்கள் இத்தாலியில் புகழடைந்தன . இந்த இரண்டு நாகரிகங்களின் இணைப்பு பாலமாக அவர்கள் விளங்கினர். பதினைந்தாம் நூற்றாண்டில் இத்தாலியில் கிரேக்க இலக்கியங்கள் பெரிதும் செல்வாக்குப் பெறுவதற்குரிய அடிப்படையை அளித்து உதவியவர்கள் பைசாண்டியர்களே ஆவர்.

கலைத்துறையில் பைசாண்டியர்களின் செல்வாக்கு ஐரோப்பாவில் பெரிதும் காணப்பட்டது. மொசைக்குகள் என்ற வண்ணக் கற்களைப் பதித்தல் , பலநிறம் வாய்ந்த கண்ணாடித்துண்டுகளைப் பதித்தல் , சிலுவையின் வடிவத்தில் திருக்கோவில்களை அமைத்தல், குவிமாடங்களை எழுப்புதல் போ ன்ற முறைகளை ஐரோப்பியர்கள்

பைசாண்டியர்களிடமே கற்றுக் கொண்டனர். மேலும் வெனிஸ் நகரத்து ஓவியங்களும், எல்கிரேக்கோ (El greco) என்ற ஓவிய முறையும் பைசாண்டிய ஓவியக் கலைக்கு பெரிதும் கடன்பட்டவை ஆகும் . பேரரசர் ஜஸ்டினியன் தொகுத்தளித்த சட்டத்தொகுதியே இடைக்கால, நவீனகால ஐரோப்பிர்களுக்கு சட்டத்துறையில் வழிகாட்டும் ஒழி விளக்காய் திகழ்ந்தது என்று கூறலாம்

இவ்வாறு பண்டைக்கால நாகரிகமான ரோமானிய நாகரிகம் சிதைந்து போன பின்னரும் அதனுடைய முக்கியக் கூறுபாடுகளை அழியாமல் பாதுகாத்து . அதே சமயத்தில் கீழை நாட்டுப் பண்புகளையும் ஓரளவு அதில் குழைத்து அதன் மூலம் இடைக்காலத்திற்கும் நவீன காலத்திற்கும் ஒரு பால்மாக அமைந்து வரலாற்றுத் தொடர்பு கெடாமல் பாதுகாத்த பெருமை பைசாண்டிய நாகரிகத்திற்கே உரியது என்று கூறலாம்.

## 2. கிறிஸ்தவ சமயம்(CHRISTIAN RELIGION)

உலகிலுள்ள முக்கிய சமயங்களில் கிறிஸ்தவ சமயமும் ஒன்று. இன்று நூறு கோடிக்கும் மேலான மக்களால் பின்பற்றப்பட்டு வரும் சமயமாகும் . மிகப் பெரியதும் உலகிலேயே மிக அதிகமாகப் பரவியுள்ளதுமான சமயம் கிறிஸ்தவ சமயமே என்று கூறலாம். ஏறக்குறைய இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்பு பாலஸ்தினத்திலுள்ள கலிலியோவில் நாசரேத் என்ற சிற் றூரில் வாழ்ந்த இயேசு போதித்த சமயமாகும் . இயேசுவின் போதனைகள் கி .மு.1491-ல் மோசே இஸ்ரேல் மக்களுக்கு அளித்த பிரமாணங்களின் முழுமையான விளக்கமே யாகும். மோசேயின் கட்டளைப்படி ஒரே தேவன் உண்டு . அவரே எல்லோருக்கும் பிதா . இந்த பரமபிதாவின் பிள்ளைகளே மக்கள். பரமபிதாவை அடைவதற்கு அன்பே ஆதாரம் என்று இயேசு கூறினார் . மக்கள் ஒவ்வொரு வரும் பரமபிதாவை நேசிப்பதாலும் , தம்மைப் போல பிறரையும் நேசிப்பதாலும் பரலோகத்தை அடைய முடியும் என்றார்

இயேசு கிறிஸ்துவின் வாழ்க்கை உலக வரலாற்றைப் பெரிதும் பாதித் துள்ளது. பல கடவுள்களை வணங்கி வந்த மத்தியத ரைக்கடல் நாடுகளிலும், பின்னர் உலகம் முழுவதிலும் கிறிஸ்துவ சமயம் பரவியது . அவரது பிறப்பை வைத்து தான் கி மு .

என்றும் கி.பி. என்றும் (கிறிஸ்துவுக்கு முன், கிறிஸ்துவுக்குப்பின்) என்றும் வரலாற்றின் காலம் கணிக்கப்படுகிறது. கிறிஸ்தவ சமயத்தைப் பின்பற்றும் மக்களின் எண்ணங்களும் செயல்களும் மாறி அவர்கள் புதிய வாழ்க்கை முறையைப் பின்பற்றுகின்றனர் . அது மக்களின் செயல்களுக்கு விளக்கம் கூறி தீமையிலிருந்து விலகி வாழ்வதற்கு வழிசெய்கிறது. இதனால் உலக பண்பாட்டில் மாற்றமும் நாகரிக வளர்ச்சியும் ஏற்பட்டு வருகிறது. கிறிஸ்தவ சமயமானது கிறிஸ்தவ சமுதாயம், கலை, இலக்கியம் அறநெறி, சமய தத்துவம் ஆகிய வற்றைத் தோற்றுவித்தது . கிறிஸ்தவர்களின் புனித நூல் விவிலியம் (Holy Bible) ஆகும்.

## இயேசு கிறிஸ்து

கிறிஸ்தவர்களின் புனித நூலான பைபிளின் புதிய ஏற்பாட்டிலிருந்து (New Testament) இயேசு கிறிஸ்துவின் வாழ்க்கை வரலாறு நமக்கு தெரிய வருகிறது தீர்க்க தரிசிகளான பரிசுத்த மத்தேயு, மாற்கு, லூக்கா, யோவான் ஆகியோர் அருளிச் செய்த நற்செய்திகளே இயேசு கிறிஸ்துவின் வாழ்க்கை வரலாறு ஆகும்

## இயேசு கிறிஸ்துவின் பிறப்பு

பாலஸ்தீனம் யூதர்களின் சொந்த நாடாகும். யூதர்களின் மிகப்பெரிய அரசனான தாவீது கி.மு.1055 முதல் 1015 வரை ஆட்சி செய்தார் . யூத தீர்க்க தரிசனத்தின்படி இயேசு கிறிஸ்து தாவீது (David) வம்சத்தில் பிறந்தவர் ஆவார் . அரசருக்குரிய செல்வம் யாவும் நாளடைவில் மறைந்த போதிலும் தாவீதின் சீரிய பண்பு அவரது குடும்பத்தில் நிலைநின்றது. இயேசுவின் தாய் மேரியை யோசேப்பிற்கு திருமணம் புரிய ஏற்பாடு செய்தார்கள். மேரி கன்னியாக இருக்கும்போதே இறைவனின் அருளால் கருத்தரித்தார். இயேசு ஜெருசலேம் நகருக்கு 10 கி.மீ. தெற்கே உள்ள பெத்லேகம் என்ற சிற்றூரில் புறநகர் பகுதிகளில் ஒரு மாட்டுத் தொழுவத்தில் பிறந்தார் . இயேசு அவதரித்த போது கிழக்கேயிலிருந்து ஒரு நட்சத்திரம் தோன்றியது அது வழிகாட்ட கிழக்கத்திய ஞானிகள் சிலர் இயேசுவை பார்க்கவந்தார்கள். பெத்லகேமில் இக்குழந்தையை கண்டு, பொன்னும் மணியும் அர்ப்பணித்து மகிழ்ந்தார்கள் . அப்போது பரலோகத்து தேவதூதன் ஒருவன் புதிதாக பிறந்த இக்குழந்தையை உலக ரட்சகர் என்று அறிவித்தார்

## இயேசு ஞானஸ்நானம் பெறுதல்

நாசரேத் என்ற ஊரில் இயேசு வளர்ந்து வந்தார் . அறிவும், ஞானமும் உடையவராக வளர்ந்து வந்தார். முப்பது வயது வரை இயேசு தன்னை மற்றவர்களுக்கு வெளிப்படுத்தவில்லை. அப்போது பாலஸ்தீனத்தில் யோவான் என்ற தீர்க்கதரிசி இருந்தார். அவர் அப்போது யூதர்கள் மத்தியிலும் , பாலஸ்தீனத்தை ஆண்டு வந்த ரோமானியர்கள் மத்தியிலும் காணப்பட்ட பாவங்களையும் , ஒழுங்கற்ற வாழ்க்கையும் கண்டித்தார். அவர் ஞானஸ்நானம் (Baptism) கொடுப்பவராகவும் இருந்தார். இயேசு அவரிடம் ஞானஸ்நானம் பெறச் சென் றார். அப்போது அவரே மேசியா அல்லது உலக ரட்சகர் என்று யோவான் அறிந்து கொண்டார் . அவர் ஞானஸ்நானம் பெற்றபோது வானத்திலிருந்து ஓர் ஒலி கேட்டது . 'மகனே உன்னைப்பற்றி நான் மகிழ்ச்சியடைகிறேன்' என்று ஒலித்தது.

சுமார் 4000 ஆண்டுகளாக யூதர்கள் மேசியா என்ற ரட்சகர் வருவார் எ ன்றும் முன்னுரைத்தோர் கூற்றுப்படி தங்களை அடிமைத்தன ஆட்சியிலிருந்து விடுவித்து இஸ்ரேல் தேசத்தை நிலைநாட்டுவார் என்றும் அவரது வருகைக்காக காத்து நின்றனர் எனவே இயேசுநாதர் யூதர்களை ரோமானிய ஆட்சியிலிருந்து விடுவிப்பார் என்று தவறாக நினைத்தனர் ஆனால் இயேசுநாதருக்கு அரசியலோடு எந்த தொடர்பும் இல்லை யோவான் இயேசுநாதரை உலகத்தின் பாவங்களைச் சுமந்து தீர்க்கிற தேவ ' ஆட்டுக்குட்டி என்று சுட்டிக்காட்டினார் இதனால் அநேக மக்கள் இயேசுநாதரை பின்பற்ற ஆரம்பித்தனர்

## இயேசுவின் நற்செய்தி ஊழியம்

இயேசுநாதர் பொது ஊழியம் ஆரம்பிப்பதற்கு முன்பாக சில காலம் சாத்தான் அவருக்கு ஆசைகாட்டி (Tempt) சோதித்தான். சுயதிருப்தி சுயநம்பிக்கை, சுயமகிமையைப் பின்பற்றும்படி தூண்டப்பட்டார் . ஆனால் இச்சோதனைகளில் எல்லாம் மயங்காமல் வெற்றி கண்டார் . தன்னைத்தான் தியாகம் செய்வதையும் , மற்றவர்களுக்கு ஊழியம், செய்வதையும், மனித பாவத்துக்கே தன்னை கிருபாதார பலியாக அர்ப்பணம் செய்வதையும், குறிக்கோளாகக் கொண்டு மக்களின் பாவங்களைப் போக்குவதற் காக

தன்னையே ஒப்பற்ற முறையில் தியாகம் செய்ய முன்வந்தார் . அவர் தனது ஊழியத்தை ஆரம்பித்து தேவனது ராஜ்யம் சமீபித்திருக்கிறது. உங்கள் பாவங்களுக்காக மனம் திருந்தி என்னை விசுவாசியுங்கள் . ஏனெனில் நான் உங்கள் பாவங்களை எடுத்துக்கொண்டு உங்களை விடுதலையாக்குவேன் என்றார்

யூதேயா மற்றும் கலிலியோ பகுதிகளில் உபதேசங்களை செய்து வந்தார் இயேசு இவரைப் பின்பற்றி இவரிடம் 12 சீடர்கள் சேர்ந்தனர் . சமயச் சடங்குகளைச் செய்வதைவிட நீதியான வாழ்க்கையே முக்கியமென்று வற்புறுத்தினார் இப்போதனை அக்காலத்து வைதீகம் நிறைந்த மதத்தலைவர் களின் உள்ளங்களைப் புண்படுத்தியது . தேவன் யூதமக்களுக்கு மாத்திரமல்ல எல்லோருக்கும் தகப்பன் என்று கூறினார் . நல்லொழுக்கமாக வாழ தேவனிடமிருந்து நம்பிக்கை கொண்டு வந் திருக்கிறேன் என்று கூறி தங்கள் தீய வழிகளிலிருந்து திரும்புமாறு மக்களைக் கேட்டுக்கொண்டார் . அப்போது நோயாளியைக் குணப்படுத்தினார் முடவனை நடக்க வைத்தார் குருடனுக்கு பார்வையளித்தார் குஷ்டரோகியைச் சுத்தமாக்கினார் . இறந்தவர்களை உயிரோடு எழுப்பினார். இயேசுவின் போதனைகளை கேட்ட, அவர் செய்த அற்புதங்களைக் கண்ட மக்கள் அவரைப் பின்பற்றினர் . இவர் மிக எளிய முறையில் பல உவமைக் கதைகளைக் கூறி உபதேசம் செய்தது மக்களை வெகுவாகக் கவர்ந்தது இவரது கெட்ட குமாரன் கதை மிகவும் புகழ் பெற்றது . மேலும் இயேசு பின்பற்றிய தாழ்மை, எளிமை, அன்பு, தர்மம், நேர்மை ஆகிய பண்புகள் மக்களை கவர்ந்தது.

**ஜெருசலேம் நகருக்கு வருகை புரிதல்**

யூதேயா ஆகிய நாடுகளில் பரபரப்பை ஏற்படுத்திய இயேசு ஜெருசலேம் நகர் வந்தார் யூதர்களின் மன்னரான தாவீதின் வழி வந்த ஒரு பாகுக்கு வரவேற்பளிப்பதை போல ஜெருசலேம் மக்கள் வரவேற்பளித்தனர். இவை ஒரு கோவேறு கழுதையின் மீது ஏற்றி, வழி நெடுக தங்கள் ஆடைகளை போட்டு மாக்கிளைகளை கையில் பிடித்து ஓசன்னா என்று ஒலி எழுப்பினர் . இயேசு ஜெருசலேம் நகரின் புகழ்பெற்ற யூத தேவாலயத்திற்குச் சென்றார். ஆனால் அது தேவாலயமாக இல்லை வணிகத்தலம் போல வாங்குபவர்களுமே நிறைந்திருந்தன ர். அனைவரையும் இயேசு பிடித்தார். இது யூதமத அறிஞர்களுக்கு ஆத்திரமூட்டியது

ஒரு சாதாரண தச்சன் மகனுக்கு இவ்வளவு பிரமாண்ட வரவேற்பா என்று பொறாமைப்பட்டனர். அவரை மேசி யா அல்லது உலகரட்சகர் என்று அவர்களுக்கு

கோபமூட்டியது. எல்லாவற்றிற்கும் மேலாக அவர் தமமை தேவகுமாரன் (Son of God) என்று கூறியது ஆத்திரமளித்தது. எனவே இயேசுவை சூழ்ச்சியால் பிடித்து கொலை செய்ய திட்டம் தீட்டினர்.

**இயேசு சிலுவையில் அறையப்பட்டு கொல்லப்படுதல்**

இயேசுவை எப்போதும் மக்கள்திரள் சூழ்ந்திருந்ததால் அவரைப் அடித்தால் கலகம் ஏற்படும் என்று கருதி ரகசியமாகப் பி டிக்க எண்ணினர். இதற்கு இயேசுவின் சீடர்களில் ஒருவனான யூதாஸ் காரியோத்து என்பவர் உதவி செய்ய முன்வந்தார். அவருக்கு முப்பது வெள்ளிக்காசுகள் லஞ்சமாக கொடுக்கப் பட்டது. இயேசு தாம் பாடுபடும் வேளை நெருங்கிவிட்டதை உணர்ந்தார். தான் இறப்பதற்கு முந்தினநாள் அதாவது வியாழன் இரவு தனது 12 சீடர்களுடன் உணவு அருந்தினார். இது அவரது கடைசி இரவு உணவு ! அன்றுதான் அவர் தற்கருணை (Holy Communion) என்ற திருவருட் சாதனத்தைப் படைத்தார் என்று கிறிஸ்தவர்கள் நம்புகின்றனர்.

இரவு உணவுக்குப் பிறகு இயேசு ஒலிவமலையிலுள்ள கெத்சமனே (Gethsemane) தோட்டத்திற்கு சென்று பிரார்த்தனை செய்து கொண்டிருந்தார். அவரிடம் யூதாஸ் ஆயுதம் தாங்கிய வீரர்களுடன் வந்தான். இயேசுவை முத்தம் கொடுத்து காட்டிக்கொடுத்தான் இயேசுவைப் பிடித்தவர்கள் முதலில் அவரை யூத மத தலைவரான கயபாவிடம் கூட்டிச் சென்றனர் தேவ குமாரன் என்று இயேசு தன்னைக் கூறியதை பெரியகுற்றம் என்று அவர் கூறினார். எனவே இங்கே சாகவேண்டியவர் என்று கூறினார்கள் கயவர்கள்.

அக்காலத்தில் பாலஸ்தீனநாடு ரோமானியப் பேரரசின் ஒரு மாநிலமாக இருந்தது. அதன் தலைநகரமான ஜெருசலேமில் ஒரு ரோமானிய ஆளுநர் இருந்தார். அவர் பெயர் பொந்தியு பிலாத்து (Pontius Pilate) என்பதாகும்.

மறுநாள் வெள்ளிக்கிழமை யூதசமய மூப்பர்களும் அவர்களது ஆதரவாளர்களும் இயேசுவை பிலாத்துவிடம் அழைத்துச் சென்றனர். இவன் தன்னை மேசியாவாகிய அரசர் என்று கூறுகிறான். நம் மக்கள் சீரழிவிற்கு காரணமாக இருக்கிறான் என்று குற்றம் சுமத்தி மரணதண்டனை கொடுக் க வேண்டும் என்று கோரினர். இயேசுவை நன்கு விசாரித்த பிலாத்து அவர் மரண தண்டனைக்குரிய குற்றம் புரியவில்லை என்று உணர்ந்து இயேசுவை விடுவிக்க முயன்றார். எங்கே பிலாத்து இயேசுவை விடுதலை செய்து விடுவாரோ என்று அஞ்சிய கூட்டத்தினர் இயேசு தன்மை யூதர்களின் அரசர்

என்று கூ றிக் கொள்கிறார் . ஆனால் எங்கள் அரசர் சீசர் . அந்த அரசருக்கு வரி செலுத்தக்கூடாது என்று கூறுகிறார் என்று அரசியல் ரீதியான குற்றச்சாட்டுகளைக் கூறினர். சீசரின் அதிகாரியான பிலாத்து இயேசுவுக்கு மரண தண்டனை அளிக்காவிட்டால் தம்மைப் பற்றி சீசரிடம் புகார் செய்து விடுவா ர்கள் என்று அஞ்சி இயேசுவுக்கு மரண தண்டனை அளித்தார்

கொலைவெறி பிடித்த அந்த கூட்டத்தினர் கொல்கதா என்ற கொலைக் களத்திற்கு இயேசுவின் முதுகில் சிலுவையை சுமத்தி இழுத்துச் சென்றனர் அங்கே சிலுவையில் இயேசுவை ஆணிகளால் அறைந்து நட்டி வைத்தனர் . மூன்று மணி நேர உபாதைகளுக்குப் பின் இயேசு கிறிஸ்து மரணமடைந்தார்

**இயேசு மூன்றாம் நாள் உயிர்தெழுதல்**

அரிமத்தயா என்ற ஊரைச் சேர்ந்த ஜோசப் என்பவர் பிலாத்துவிடம் சென்று இயேசுவின் உடலை அடக்கம் செய்ய அனுமதி பெற்றார் . அவர் அருகிலுள்ள பாறையில் வெட்டப்பட்ட புதிய கல்லறையொன்றில் இயேசுவை அடக்கம் செய்தார். இவையெல்லாம் நடைபெற்றது வெள்ளிக்கிழமை மாலை . மறுநாள் சனிக்கிழமை யூதர்களுக்கு ஓய்வுநாள். அதற்கு மறுநாள் ஞாயிறு அதிகாலையில் மேரி மகதவேன என்ற பெண்ணும் மரியா என்ற பெண்ணும் யூதமுறைப்படி இறந்த உடலுக்கு பரிமளத்தைலம் பூசுவதற்குக் கல்லறைக்கு வந்தனர் அப்போது கல்லறை திறந்திருப்பது கண்டு திகைத்து நின்றனர்.

அப்போது தேவ தூதர் ஒருவர் அவர்கள் முன்பு தோன்றி இயேசு தாம் கூறிய படியே உயிர்தெழுந்து விட்டார் ' என்று கூறினார். எனவே அவர்கள் மகிழ்ச்சி பொங்க இச்செய்தியை சீடர்களுக்கு சொல்வதற்கு விரைந்தபோது இயேசு கிறிஸ்து அவர்க ள் முன்பு தோன்றினார் . பின்னர் கலிலியோ மலையருகில் கூடியிருந்த தனது சீடர்கள் முன்பும் தோன்றினார் . ஏசுதாம் முன்னர் அறிவித்தபடி சிலுவையில் அறையப்பட்டு மரணமடைந்து கல்லறையில் புதைக்கப்பட்டபின் மூன்றாம் நாள் தாமே உயிர்தெழுந்ததன் மூலம் சர்வ வல்லமை உள்ள இறைவன் என்ப தை நிரூபித்துவிட்டார் என்று கிறிஸ்தவர்கள் நம்புகிறார்கள் . இயேசு பிறந்த நாளை கிறிஸ்துமஸ் நாளாகவும் அவர் உயிர்தெழுந்த நாளை ஈஸ்டர் பெருவிழாவாகவும் கிறிஸ்தவர்கள் மகிழ்ச்சிபொங்க கொண்டாடி வருகின்றனர்

**இயேசு கிறிஸ்துவின் போதனைகள்**

இயேசு கிறிஸ்துவின் போதனைகளைப் பற் றி பிற்காலத்தில் பரிசுத்த மத்தேயு , மார்க்கு, லூக்கா, யோவான் ஆகியோர் எழுதிய சுவிசேஷங்களிலிருந்து நாம் ஓரளவு தெரிந்து கொள்ள முடிகிறது . இவை பைபிளின் புதிய ஏற்பாட்டில் அடங்கி உள்ளது . மக்கள் செய்கின்ற பாவங்களுக்காகவே இயேசு தொல்லைகளை அனுபவித்து பாடுபட்டு இறுதியில் மரித்தார். அவரது தியாக பலி அவரிடம் விரும்பிச் செல்லும் எவரையும் பரிசுத்த தேவனுடன் தொடர்பு கொள்ளச் செய்யும் . அவரது பலியைத் தவிற மனித பாவத்திற்கு வேறெந்த பலியும் தேவையில்லை . இயேசு கிறிஸ்துவின் போதனைகள் எல்லோருக்கும் பொதுவானவையாகும்

a) "இறைவனை நேசிப்பது மட் டும் போதாது . மக்களையும் நேசிக்க வேண்டும் . அதுவும் மாற்றானை நேசிக்க வேண்டும்''
b) “மனந்திரும்புங்கள் பரலோக ராஜ்யம் சமீபத்திருக்கிறது (மத்தேயு 4:27)
c) “சாந்தகுணம் உள்ளவர்கள் பாக்கியவான்கள் . அவர்கள் பூமியை சுதந்தரித்துக் கொள்வார்கள்''. ( மத்தேயு 5:5)
d) " இரக்க மு ள்ளவர்கள் பாக்கியவான்கள் . அவர்கள் இரக்கம் பெறுவார்கள் . இருதயத்தில் சுத்தமுள்ளவர்கள் பாக்கியவான்கள் . அவர்கள் தேவனை தரிசிப்பார்கள். சமாதானம் பண்ணுகிறவர்கள் பாக்கியவான்கள் . அவர்கள் தேவனுடைய புத்திரர் எனப்படுவார்கள் (மத்தேயு 5:9)
e) ஐசுரியவான் தேவனுடைய இராஜ்யத் தில் பிரவேசிப்பதைப் பார்க்கிலும் ஒட்டகமானது ஊசியின் காதிலே நுழைவது எளிதாக இருக்கும் (லூக்கா 18 : 25)
f) 'நான் உலகத்திற்கு ஒளியாக இருக்கிறேன் . என்னைப் பின்பற்றுகிறவன் இருளிலே நடவாமல் ஜீவ ஒளியை அடைந்திருப்பான் (யோவான் 8:12)
g) 'நானே வழியும் சத்தியமும் ஜீவனுமாக இ ருக்கின்றேன் என்னாலேயல்லாமல் ஒருவனும் பிதாவினிடத்தில் வாரான் யோவான் (14:6)
h) ''எவனாகிலும் முதல்வனாக இருக்கவிரும்பினால் அவன் எல்லோருக்கும் கடையானவனும், எல்லோருக்கும் ஊழியக்காரனாகவும் இருக்கக்கடவன் . (மார்க்கு : 10 : 35)
i) “அன்பு நீடிய சாந்தமும் தயவும் உள்ளது. அன்புக்கு பொறாமை இல்லை. அன்பு தன்னைப் புகழா து. இறுமாப்பாய் இராது . அயோக்கியமானதைச் செய்யாது .

தற்பொழிவை நாடாது . சினமடையாது. தீங்கு விளையாது . அநியாயத்தில் சந்தோஷப்படாமல் சத்தியத்தில் சந்தோஷப்படும்' (1 கொரிந்தியர் 13:4)

j) "தன்னைத்தான் உயர்த்துகிறவன் எவனும் தாழ் த்தப்படுவான் தன்னைத்தான் தாழ்த்தப்படுபவன் உயர்த்தப்படுவான்" ( லூக்கா 14:11)

k) 'வாய்க்குள்போகிறது. மனிதனைத் தீட்டுப்படுத்தாது வாயிலிருந்து புறப்படுகிறவைகள் இருதயத்திலிருந்து புறப்பட்டுவரும் அவைகளே மனிதனைத் தீட்டுப்படுத்தும் (மத்தேயு 15:11)

இறைவனிடமும் பக்கத்து வீட்டுக்காரனிடமும் அன்பு செலுத்த வேண்டும் இறைவன் மீது இதயபூர்வமாக, மிகவும் உறுதியான அன்பு செலுத்த வேண்டும் பிறர் உனக்கு என்ன செய்யவேண்டும் என்று எண்ணுகிறாயோ, அதை நீ பிறருக்குச் செய்ய வேண்டும் உன்னுடைய பகைவனையும் நீ நேசிக்க வேண்டும் உனக்கு தீமை செய்தவர்களுக்காகவும் நீ ஆண்டவனிடம் வேண்டிக் கொள்ள வேண்டும்

இயேசுநாதர் கூறியது தீமைக்கு பதிலாக தீமை செய்யக்கூடாது தீமையை நன்மையால்தான் வெல்லலாம். தன்னைப் பின்பற்றுகிறவர்களுக்கு துன்பத்திலிருந்தும், துன்புறுத்து வதிலிருந்தும் பாதுகாப்பு அளிப்பதாக அவர் வாக்களிக்கவில்லை . ஆனால் தொல்லை சூழ்ந்த நிலையிலும்கூட மனோசமாதானத்தை அளிப்பதாக வாக்களித்தார் மதச் சடங்குகளிலிருந்து மக்களின் மனத்தை அகற்றி அதன் மூலமாய் செயல்படுகின்ற தேவன் மீதுள்ள விசுவாசத்தைக் கற்றுக் கொடுத்தார். மனித வாழ்வின் உயர்வு அநேகம் பொருளை சம்பாதிப்பதைப் பொறுத்தது அன்று தேவனையும் தன்னைச் சுற்றியுள்ளோரையும் நேசிப்பதைப் பொறுத்தே அது அமையும் . இயேசு இறைவனின் அரசை (Kingdom) பற்றி புறுத்தினார். ஒவ்வொரு மனிதனும் அதை அடையப்பாடுபட வேண்டும். உணவு, உடையைவிட அது முக்கியம் நல்ல செயல்களால் மட்டுமே அதை அடைய முடியும் . அந்த பேரரசு மனிதனின் ஆற்றலினால் அடைய முடியாதது இறைவனின் அருளினால்தான் அதை அடைய முடியும் என்றார் இயேசு கூறியது இந்த உலகத்திற்கு ஒரு முடிவு உண்டு. மனிதரது ஒழுக்கமும் சன்மார்க்கமும் நாளுக்குநாள் சீரழிந்து ஒரு பயங்கர நிலை ஏற்படும் . அப்போது நான் தோன்றி வந்து இந்த உ லகில் ஒரு பரிபூரண அரசை நிலை நாட்டுவேன் என்னை உண்மையாகப் பின்பற்றுகிறவர்களுக்கு அதில் ஒரு பங்கு உண்டு

இவ்வுலகிலுள்ள ஒவ்வொரு மனிதனும் உயிர்தெழுப்பிக்கப்பட்டு தனது வாழ்க்கைக்கு இறைவனிடம் கணக்கு ஒப்புவிக்க வேண்டும் . இயேசுவின் மரணத்தின் மூலமாய் அவரது ரட்சிப்பைப் பெற்றவர்கள் தேவனோடு சதாகாலமும் வாழ்வார்கள் தங்கள் பாவத்திலிருந்து மனந்திரும்பி இறைவனது மன்னிப்பை பெறாதவர்கள் நரகத்தில் தள்ளப்படுவர். கிறிஸ்தவ சமயத்தின் நம்பிக்கை மற்றும் சமய கோட்பாடுகள் எல்லாம் இயேசு கிறிஸ்துவின் இறப்பு மற்றும் உயிர்த்தெழுதல் ஆகியவற்றைத் தான் அடிப்படையாகக் கொண்டுள்ளன

**கிறிஸ்தவ சமயத்தின் வளர்ச்சி**

இயேசு கிறிஸ்து உயிர்த்தெழுந்தபின் விண்ணுலகை அடைந்தார் . அதன் பின் அவரது சீடர்கள் அவரது போதனைகளை கிறிஸ்தவ சமயக் கொள்கைகளை உலகில் பல்வேறு பாகங்களுக்கும் கொண்டு சென்றனர் . ரோமானியப் பேரரசில் பொதுவான மொழி வழக்கில் இருந்தாலும் போக்குவரத்து வசதி மிகுந்திருந்த தாலும் கிறிஸ்தவ சமயம் எளிதாகப் பரவியது . போதகர்கள் யூதர்களின் கோவில்களுக்குச் சென்று இயேசுவை மெசியா அல்லது உலக ரட்சகர் என்று கூறினர் . அவர்கள் உயிரையும் பணயம் வைத்து தங்கள் குருவாகிய இயேசுவின் போதனைகளைப் பரப்பி இறுதியில் அவர்பணிக்காகவே உயிர் நீத்து கிறிஸ்தவ சமயம் பரப்ப அடித்தளத்தை அமைத்துக் கொடுத்தனர்.

**புனித பவுல்**

கிறிஸ்தவ சமயத்தை உலகம் தழுவிய ஒரு பெரும் மதமாக மாற்றிய பெருமை பவுல், பீட்டர் என்ற இயேசுவின் இரண்டு சீடர்களையுமே சாரும் இதில் பவுல் என்பவர் யூதக் குடும்பத்தில் பிறந்தவர் . இவர் ஆரம்பத்தில் கிறிஸ்தவர்களை வேட்டையாடி கொல்லுவதையே வேலையாகக் கொண்டிருந்தார் . அப்படி கிறிஸ்தவர்களைக் கொல்லுவதற்காக தமாஸ்கஸ் செல்லும் போது வழியில் ஒரு பெரிய வெளிச்சம் ஏற்பட்டு அதில் இயேசுவின் காட்சியைக் கண்டார். கிறிஸ்தவர்களைத் துன்புறுத்துதலை கைவிட்டு கிறிஸ்தவ சமயத்திற்காக தம்மை உரிமைப்படுத்திக் கொள்ளுமாறு இயேசு கூறியதாக உணர்ந்தார் . இதன் பின் தனது இறுதிக்காலம் வரை இயேசுவின் கொள்கைகளை பரப்பி வந்தார் . சுமார் 12 ஆண்டுகள் ஆசியா மைனர் , சிரியா, கிரீசு மற்றும் மத்தியதரைக்கடல் பகுதிகளி ல் உள்ள நாடுகளில் கிறிஸ்தவ சமயத்தைப்

பரப்பிய பின் ஜெருசலேம் , ரோம் நகர் கொண்டு செல்லப்பட்டு ரோமானியப் பேரரசர் நீரோ (Ne) மன்னரால் இராஜதுரோகம், தெய்வநிந்தனை ஆகிய இரண்டு குற்றச்சாட்டுகள் சுமத்தப்பட்டு தலை துண்டிக்கப்பட்டார் இவ்வாறு பவுல் தனது 68-ம் வயதில் இறந்தார். கிறிஸ்தவ சமயத்தை உலகப் பொது சமயம் என்ற நிலைக்கு உயர்த்திவரும் இயேசுவை தெய்வீக மனிதராக்கியவரும் பவுலே ஆவார்

**புனித பீட்டர்**

இயேசுவின் சீடர்களில் ஒருவரான பீட்டர் ரோமில் கத்தோலிக்கத் திருச் சபை நிறுவினார். இதுவே பின்னர் கிறிஸ்தவ சமயத்தின் தலைமையிடமாக மா றியது. ரோமானியப் பேரரசரை வணங்க மறுத்ததால் இவரும் கொல்லப் பட்டார். ரோமானியப் பேரரசின் இப்படுகொலைக்கு எண்ணற்ற கிறிஸ்தவ சமயத்தினர் பலியானார்கள். இரக்க குணமும் அமைதியும் கொண்ட மார்க்கஸ் அரிலியஸ் (Marcus) என்பவரும் கூட . கிறிஸ்தவர்களைக் கொலை செய்வது அ வசியம் என்று கருதினார் . கிறிஸ்தவர்களின் ரத்தம் சிந்த சிந்த கிறிஸ்தவசபை மிகவும் வலுவடைந்தது இந்த தியாகிகளின் இரத்தமே கிறிஸ்தவ சமயத்தின் விதையாக மாறியது என்று கூறலாம்

**ரோமானியப் பேரரசில் கிறிஸ்தவ சமயம் பரவுதல்**

காலம் செல்ல செல்ல ரோமானியப் பேரரசர்கள் கிறிஸ்தவர் களை படுகொலை செய்வதில் சலிப்படைந்தனர். டயக்லீஷியன் (Di) என்பவர் தான் கிறிஸ்வர்களை வெறுத்த கடைசி ரோமானியப் பேரரசர் ஆவார் . அவர் கிறிஸ்தவர்களை வேட்டையாடினாலும் , மேலும் மேலும் மக்கள் கிறிஸ்தவ சமயத்தைப் பின்பற்றினர். டயக்லீஷியனுக்குப் பின் வந்த பேரரசர் கான்ஸ்டன்டைன் ஒரு முறை போர்க்களம் ஒன்றில் சிலுவைக் காட்சியினைக் கண்டார். அதன்பிறகு பல போர்க்களங்களில் வெற்றி கண்டார் . எனவே அவர் கிறிஸ்தவ சமயத்தைத் தழுவினார் . கி.பி. 313-ல் மிலான் ஆணையை (Edict of Milan) வெளியிட்டு கிறிஸ்தவர்களுக்கு சமய உரிமையை வழங்கினார் . கிறிஸ்தவர்கள் இனி புறமதக்கடவுள்களுக்கு வேள்வி செய்ய வேண்டாம் என்றும் , பேரரசரைத் தொழவேண்டாம் என்றும் கூறி சமயசுதந்திரம் அளித்தார் . அவருக்குப்பின் கிறிஸ்தவ சமயம் ரோமானியப் பேரரசில் வேகமாக வளர்ச்சியடைந்தது

**கிறிஸ்தவ சமயம் விரைவில் பரவக்காரணங்கள்**

இடைக்காலத்தின் முற்பகுதியில் கிறிஸ்தவ சமயம் ஏனைய சமயங்களை எல்லாம் வென்று வெற்றி நடைபோட ஆரம்பித்தது அதற்கான காரணங்கள் வருமாறு:

a) பலாத்காரமும் காட்டு மிராண்டித்தனமும் நிறைந்த ரோமானியப் பேரரசில் அன்பைப் பற்றியும் , சமாதானத்தைப் பற்றியும் பேசிய கிறிஸ்தவ மதத்தை மக்கள் பின்பற்ற ஆரம்பித்தனர்.

b) அக்காலத்தில் நிலவிய சமயப் பிரிவுகள் எல்லாவற்றையும் விட தெளிவான கருத்துக்கள் கிறிஸ்தவ சமயத்தில் தான் காணப்பட்டன . பாவத்தைக் கண்டித்ததுடன் பாவம் செய்தவர்களுக்கும் விமோசனம் உண்டு என்ற கருத்தைப் பரப்பியதால் மக்களிடம் செல்வாக்கு பெற்றது

c) தங்களையெல்லாம் துன்பப்படுகுழியிலிருந்து மீட்டு இரட்சிப்பைத்தர மெசையா' வருவார் என்ற கருத்தை பெண்கள், ஏழைகள் முக்கியமாக ஒடுக்கப்பட்டவர்கள் மிகவும் விரும்பி ஏற்றுக் கொண்டு கிறிஸ்தவ மதத்தைப் பின்பற்றினர் சமுதாயத்தில் நசுக்கப்பட்டுக் கிடந்த அத்தனை பேருக்கும் ஒரு நம்பிக் கை ஊட்டும் நல்ல மதமாக இந்த கிறிஸ்தவ மதம் திகழ்ந்தது

d) மேலும் பாரசீகர்கள், எகிப்தியர்கள், கிரேக்கர்கள் ஆகிய மக்களிடையே தொன்று தொட்டுக் காணப்பட்டு வந்த பல்வேறு பழக்க வழக்கங்களையும் சடங்குகளையும் கிறிஸ்தவ சமயம் ஏற்றுக் கொண்டுவிட்டதால் எந்த நாட்டவரும் ஏற்றுக் கொ ள்ளும் ஒரு புதுமையான மதமாக கிறிஸ்தவம் விளங்கலானது.

e) எல்லாவற்றிற்கும் மேலாக உயரிய ஒழுக்கம் , தன்னலமின்மை எதிரிகளையும் நேசித்தல் போன்ற நற்பண்புகளை வற்புறுத்தியதின் விளை வாக - கிறிஸ்தவ மதத்தை மக்கள் விரும்பி ஏற்றுக் கொள்ள ஆரம்பித்தனர்

**திருச்சபையின் தோற்றம்**

இயேசு கிறிஸ்துவின் மறைவுக்குப் பிறகு அவரது சீடர்களே கிறிஸ்துவின் கொள்கைகளைப் பரப்பினர். அவர்களது போதனைகளைப் பின்பற்றி கிறிஸ்தவர்களாக மாறிய அனைவரும் முதலில் சிறு சிறு தொழுகைக் கூட்டங்களை (Congregations) தங்களுக்குள் அமைத்துக் கொண்டனர். அவ்வப்போது யாரேனும் ஒரு கிறிஸ்தவர் இல்லத்தில் கூடி பிரார்த்தனை செய்தனர் . பின்னர் இவர்களில் இறைவனின் இரட்சிப்பைப் பெற்றவர்களும், பரிசுத்த ஆவியோடு நேரடிதொடர்பு கொண்டவர்களாக கருதப்பட்டவர்களும் மூத்தோர் என்று பொருள்படும் பிரிஸ்பிடர்கள் (Presbyters) என்று அழைக்கப்பட்டனர். இவர்களே பிரார்த்தனைக் கூட்டங்களுக்குத் தலைமை தாங்கினர்

பின்னர் திருக்கூட்டங்களைக் கண்காணிக்கவும், கிறிஸ்தவ சமயச் சடங்குகளில் ஒருமையை உண்டாக்கவும், கிறிஸ்தவர்களிடையே கட்டுப் பாட்டையும் ஒழுங்கையும் ஏற்படுத்தவும் பிஷப் (Bis) என்ற அதிகாரி நியமிக்கப்பட்டார். காலப் போக்கில் இந்த பிஷப் இறைவனால் நியமிக்கப்பட்ட பிரதிநிதியாக கருதப்பட்டார் . புனிதச் சடங்குகளைச் செய்வதற்கும், கிறிஸ்தவ சமயக் கொள்கைகளுக்கு சரியான விளக்கம் தருவதற்கும் பிஷப்புகள் மட்டுமே தகுதியானவர்களாகக் கருதப்பட்டனர் . ஒவ்வொரு நகருக்கும் இத்தகைய பிஷப் ஒருவர் தேர்ந்தெடுக்கப்பட்டார்.

கிறிஸ்தவ குருமார்கள் (Pr)es அனைவரும் பிஷப்பக்குக் கட்டுப்பட்டு நடந்தனர் . ஒரு பெரிய மாநிலத்தில் இருந்த பிஷப்புகள் அனைவரும் ஒன்று சேர்ந்து ' சினோட்' (Synod என்ற சபையை தமக்குள் ஏற்படுத்திக் கொண்டனர். இவர்கள் அடிக்கடி ஒன்றாகக் கூடி கிறிஸ்தவ சபைகளின் நிர்வாகம் பற்றிய சிக்கல்களை அலசி ஆராய்ந்தனர் . இவ்வாறு பிஷப்புகள் கிறிஸ்தவ சபையின் தொடக்கத்தில் மிக முக்கியமான அதிகாரிகளாக விளங்கினர். உலகியல் தலைவர்கள் பலர் பிஷப்புகளுக்கு பல அரசியல் , பொருளாதார சலுகைகளை வழங்கினர் . பிரார்த்தனைக் கூட்டங்களின் எண் ணிக்கை வளர ஆரம்பித்தது. அதன் விளைவாக பிஷப்புகளின் உரிமைகளும் , அதிகாரங்களும் அதிகரித்தன.

நாளடைவில் ரோம் நகர பிஷப் ஏனைய பிஷப்புகள் அனைவரையும் விட உயர்ந்தவராக மதிக்கப்பட்டார் . இதற்கு முக்கியக் காரணம் ரோம் நகரின் அரசியல் தலைமையே ஆகும் . ரோமானியப் பேரரசு கான்ஸ் டான்டிநோபிளுக்கு மாற்றப்பட்டபோது ரோம் நகர பிஷப்பின் செல்வாக்கு அதிகரித்தது . ரோம் நகரின் அமைதியையும், ஒழுங்கையும் ஏற்படுத்த வேண்டிய பொறுப்பு பிஷப் தலையிலேயே விழுந்தது. அரசியலைப் போன்றே சமயத்திலும் நிர்வாக அமைப்பு ஏற்பட்டது . டயோசீஸ் (Dio) அதன் ஆளுநராக ஆ ர்ச்பிஷப், அவருக்குக்கீழ் பிஷப்புகள் , சாதாராண குருமார்கள் என்ற அதிகார வர்க்கம் தோன்றியது. மாநில தலைநகர பிஷப்புகள் ரோம் நகர பிஷப்பைத் தங்கள் தலைவராக ஏற்றனர் . அவர் யாவரு க்கும் தந்தை என்ற பொருளில் போப் (P) என்று அழைக்கப்பட்டார்.

ரோம் நகர பிஷப் ஐரோப்பாவின் தலைமை குருவாக ஏற்றுக் கொள்ளப்பட்டதற்கு அரசியல் காரணங்கள் தவிற வேறு சில சமயம் சார்ந்த காரணங்களும் உண்டு இயேசுவின் தலைமை சீடரான புனிதபீட்டர் ஏற்படுத்திய முதல்

திருச்சபை ரோம் நகரில்தான் இருந்தது . எனவே கிறிஸ்தவர்கள் அதைத்தாய்த்திருச்சபை (Mother Church) ஆகக் கருதினர். மேலும் புனித பீட்டரும் , புனித பவுல் என்ற சீடரும் கிறிஸ்தவ சமயத்துக்காக தங்கள் உயிர்களைப் பலி கொடுத்த இடமும் ரோம் நகரமே ஆகும். மேலும் பைபிளில் "இயேசு தமது திருச்சபை என்ற கட்டிடத்தை பீட்டர் என்ற பாறையின் மீது கட்டுவதாகவும் , பரலோகத்தின் சாவியினை அவரி டம் ஒப்படைப்பதாகவும், யார்யாரை அவர் ஏற்றுக் கொள்கிறாரோ அவர்களெல்லாம் பரலோகத்தில் இடம் பெறுவார்கள் என்றும் (மத்தேயு -16:18) கூறப்பட்டுள்ளது.

முதலாம் லியோ (Leo-I) என்ற போப்பாண்டவர் மேலே கூறப்பட்ட கொள்கையை வலியுறுத்தி யாவரையும் ஒப்புக் கொள்ளுமாறு செய்தார் . இவ்வாறு இறைவனின் பிரதிநிதியாக இயேசுவும் , இயேசுவின் பிரதிநிதியாக பீட்டரும் , பீட்டரின் வழித்தோன்றல்களாக போப்பாண்டவர்களும் ஏற்றுக் கொள்ளப்பட்டனர் . பீட்டர் தமது தெய்வீகப் பொறுப்புகளையும் , பரலோகத்தின் சாவியினையும் போப்பாண்டவருக்கு ஒருபத்திரத்தின் மூலம் ஒப்படைத்து ச் சென்றார் என்று அனைவரும் நம்பினர் . இவ்வாறு தான் போப்பாண்டவர் உலகெங்கும் உள்ள கிறிஸ்தவசபையின் தனித்தலைவர் ஆனார் . அவரது அதிகாரத்தையும் தலைமையையும் உலகெங்கிலும் உள்ள கிறிஸ்தவர்கள் ஏற்றுக் கொண்டனர் திருச்சபை என்ற அமைப்பு இவ்வாறுதான் தோன்றியது.

**திருச்சபை சடங்குகள்**

இடைக்காலத்தில் திருச்சபை ஒன்றே மனிதனையும் இறைவனையும் இணைத்து வைக்கும் பாலமாக விளங்கியது . உலகியல் துன்பங்களைச் சமாளிக்கவும், அதன்பின் பரலோகம் சென்று மரணமில்லாப் பெருவாழ்வு வாழவும் மக்களுக்கு உதவிசெய்யும் இறைவனின் பிரதிநிதியாக திருச்சபை கருதப்பட்டது . இதற்காக திருச்சபை பல்வேறு சடங்குகளை ஏற்படுத்தியது அந்த சடங்குகளின் தொகுப்பு 'ஏழுவகைப் புனிதச் சடங்குகள் ' (Seven Sacraments) என்று அழைக்கப்பட்டன . அவை,ஞானஸ்ஞானம், திடப்படுத்துதல், இறுதி விருந்து சடங்கு , பிராயசித்தம் அல்லது பாவசங்கீர்த்தனம் , இறுதி எண்ணெய்பூச்சு, அபிஷேடகம், திருமணவினை (Ba[illegible]) ஆகியவையாகும்.

ஒவ்வொரு மனிதனும் பிறக்கும் போது ஆதாம் ஏவாள் ஆகிய ஆதிமனிதர்களால் செய்யப்பட்ட பாவத்தைச் சுமந்துகொண்டே பிறக்கிறான் ஞானஸ்

ஞானம் அல்லது பு னித முழுக்கு மூலம் அத்தகைய பாவங்கள் கழுவப்பட்டுவிடும் என்று கிறிஸ்தவர்கள் நம்புகின்றர் . இந்த சடங்கு குழந்தை பிறந்தவுடன் நடத்தப்படுகிறது. அத்தகைய பாவநீக்கத்தை உறுதி செய்யும்

திடப்படுத்துதல், இது குழந்தை பன்னிரெண்டு வயதை அடைந்தபின் நடைபெறும் இயேசுவானவர் இறுதியாகச் சாப்பிட்டவிருந்தில் அருந்திய ரொட்டியையும் திராட்சை ரசத்தையும் அருந்துவதும் அப்படி அருந்தும் போது இயேசுவின் இரத்தமும் , சதையுமாக அவை மாறிவிடுகின்றன என்று நம்புவது இறுதி விருந்து சடங்காகும் ஆன்மீக விழிப்புணர்வு பெறவும், மன உறுதியைப் பெறவும் இச்சடங்கு அவசியமாகிறது. அடுத்து, எப்படியோ செய்து விட்டபாவத்துக்குப் பரிகாரம் தேடுவதற்கு செய்யப்படும் சடங்கே பாவசங்கீர்த் தனம் ஆகும் இதன் மூலம் எத்தகைய பாவம் செய்தாலும் இறைவனின் மன்னிப்பைப்பெறலாம் என்று தட்டப்படுகிறது மரணப்படுக்கையில் கிடக்கும் ஒருவனது இதயத்தில் கிட க்கும் உலகியல் அழுக்கை புனித தைலத்தால் கழுவுவதே இறுதி எண்ணெய் பூச்சு ஆகும் குருமாராகப் பதவி ஏற்கும் போது செய்யப்படும் சடங்கு அபிஷே கம் ஆகும் ஒரு ஆணும் பெண் ணும் திருமணம் செய்து கொள்வதைப் புனிதப்படுத்திக் குழந்தைகளைப் பெற்றுக் கொள்வதற்கான உரிமையைச் சட்டமாக வழங்கும் சடங்கே திருமணச் சடங்காகும்

மேற்கண்ட திருச்சபை கோட்பாடுகளின் அடிப்படையாகத்திகழந்தவை பைபிளும் இயேசுவின் போதனைகளும் அவர்களது சீடர்களின் போதனைகளுமே யாகும். இந்த திருச்சபைக் கோட்பாடுகளுக்கு மக்கள் கட்டுப்பட்டு நடக்கலாயினர்

**அதிகாரப்பூர்வமாக நிலைநாட்டப்ப்பட கிறிஸ்தவக் கொள்கைகள்**

பின்வரும் கொள்கைகள் திருச்சபையால் அதிகாரப்பூர்வமான கிறிஸ்தவக் கொள்கைகளாக கி.பி. ஏழாம் நூற்றாண்டளவில் ஏற்றுக் கொள்ளப்பட்டவையாகும்

**திருத்துவக்கொள்கை**

இதன்படி எல்லோருக்கு ம் தந்தையான பரமபிதாவும் , அவரது குமாரனான இயேசுவும், பரிசுத்த ஆவியும் ஒரே பொருளால் ஆன இறைவன் ஆகும் அதே சமயம் அந்த மூன்றும் தனித்தனி ஆள்கள் என்பதும் ஆகும்

**அவதாரம்**

இதன்படி கடவுள் இயேசு கிறிஸ்துவின் வடிவில் மனித அவதாரம் செய்தார் என்பதாகும்.

**வீழ்ச்சி**

ஆதாம் ஏவாளின் பாவத்தால் மனிதர்கள் கடவுளின் சகவாசத்தை இழந்தனர்

**கன்னியின் மூலம் பிறத்தல்**

இயேசு பரிசுத்த ஆவியின் மூலமாக கன்னியின் வயிற்றில் கற்பம் தரித்து பிறந்தார்.

**இயேவின் இருவித இயற்கை**

இதன்படி இயேசு கடவுள் என்பதும் அதே சமயம் முழுமையான மனிதனாக இருந்தார் என்பதும் ஆகும்

**மீட்சி**

அதாவது கடவுள் இயேசுவாக வந்து மனிதனாகயிருந்து மனிதகுல த்தை இரட்சிக்க சிலுவையில் பாடுபட்டு மரித்தார் என்பதாகும்

**அருள்**

பாவத்திலிருந்து தப்பிக்க இறைவன் தனது அருளைத்தந்து உதவுவார்

**உயிர்த்தெழுதல்**

இயேசு கிறிஸ்து கல்லறையிலிருந்து மூன்றாம் உயிர்த்தெழுந்தார் . பரலோகத்தில் ஏறி சர்வ வல்லமை உள்ள பிதாவாகிய தேவனுடைய வலது பரிசத்தில் வீற்றிருக்கிறார். அவ்விடத்திலிருந்து உயிருள்ளோரையும், மரித்தோரையும் நியாயம் தீர்க்கவருவார்.

**திருச்சபை**

திருச்சபை தெய்வத்தால் ஏற்படுத்தப்பட்டது . அதாவது மனிதனுக்கும் தெய்வத்துக்கும் உள்ள உறவை மீண்டும் ஏற்படுத்துவதற்காக இயேசு மூலம் இறைவனால் தோற்றுவிக்கப்பட்டதே திருச்சபையாகும்

**இரண்டாம் முறை வருதல்**

இயேசு மீண்டும் ஒரு முறை இந்த உலகத்திற்கு வருவார் . அப்போது அவர் நல்லவரையும், பொல்லாதவரையும் பாகுபடுத்தி நியாயம் தீர்ப்பார் நல்லவர்கள் பரலோகத்திற்குள் சேர்க்கப்பட்டு தீயவர்கள் அவியாத அக்கினிக்குள் தள்ளப்டுவார்கள்.

கிறிஸ்தவ சமயம் என்ற ஆன்மீகப் பேரரசின் தலைநகரமாகவே ரோம் விளங்குகிறது. போப்பாண்டவர் கத்தோலிக்க கிறிஸ்தவ சமயத்தின் தலைவராக ரோம் நகரில் வீற்றிருந்தார் . கி.பி.16-ம் நூற்றாண்டில் ரோமானியத் திருச்சபையில் காணப்பட்ட குறைபாடுகளை எதிர்த்து குரல் கொடுத்த மா ர்டின் லூதரால் திருச்சபை இரண்டாகப் பிரிந்தது . புரட்டஸ்தாந்துகள் என்று தனியாக பிரிந்தனர் . பின்னர் இந்த புரட்டஸ்தாந்துகளிலும் பியுரிட்டன்கள், ஆங்கிலக்கன்கள், மெத்தாடிஸ்டுகள் எனப் பல பிரிவுகள் தோன்றலாயின. தற்போது ரோம் நகரில் கத்தோலிக்க கிறிஸ்தவ மதத்தின் போப்பாண்டவராக இருப்பவர் இரண்டாம் ஜான் பால் என்பவராவார்

**இந்தியாவில் கிறிஸ்தவ சமயம் பரவுதல்**

இயேசு கிறிஸ்துவின் சீடர்களில் ஒருவரான புனித தாமஸ் இந்தியாவுக்கு வருகை புரிந்தார் . இவர் கொண்டோபர்னஸ் (Ch)on P என்ற பார்த்திய அரசரின் சபைக்கு வந்து அந்த அரசரை கிறிஸ்தவ சமயத்திற்கு மாற்றினார் என்று கூறப்படுகிறது பின்னர் இவர் இந்தியாவின் கிழக்கு, மேற்கு கடற்கரைப் பகுதிகளில் பயணம் செய்து கிறிஸ்தவ சமயத்தை தென் இந்தியாவிலும் பரப்பினார் . இவர் சென்னையிலுள்ள பரங்கி மலையில் கொடூரமாக கொல்லப்பட்டார் என்று சொல்லப்படுகிறது இவரது உடல் சென்னையிலுள்ள சான்தோமில் அடக்கம் செய்யப்பட்டது . அங்கு இருக்கும் புனித தாமஸ் ஆலயம் இவராலேயே நிறுவப்பட்டதாக கருதப்படுகிறது . பின்னர் போர்த்துக்கீசியர்களும், டச்சுக்காரர்களும் அதன்பின் ஆங்கிலேயர் களும் இந்தியாவில் கிறிஸ்தவ சமயத்தைப் பரப்பினர்

**கலாச்சார வளர்ச்சி**

கிறிஸ்தவ சமயக் கோட்பாடுகளை விளக்குவதற்கு எழுத்தாளர்கள் முயன்றதன் விளைவாக சிறந்த இலக்கியங்கள் படைக்கப்பட்டன . பைபிளின் புதிய ஏற்பாடு மிக முக்கியமான கிறிஸ்தவ இலக்கியமாகும் . இதில் இயேசு கிறிஸ்துவின் வரலாறும் , அவரது கொள்கைகளும் விளக்கப்பட்டுள்ளன ஆன்டியாக் (An) என்ற இடத்தின் பிஷப்பான இக்னேஷியஸ் என்பவர் மக்களை நற்பண்புடையவர்களாக்குவதற்கு எழுதிய கடிதங்கள் இலக்கியத் தன்மை பெற்று விளங்குகின்றன. அவரது வழி வந்த அப்போஸ்தலர் களும் கிறிஸ்தவ சமயத்தின் கோட்பாடுகளை முறைப்படுத்துவதற்கு சிறந்த நூல்களைப் படைத்தனர்.

அலக்சாந்திரியாவைச் சேர்ந்த ஆரிகன் (Origen) என்பவர் பல்வேறு விதங்களில் எழுதப்பட்ட விவிலிய நூலைப்பற்றி திறனாய்வு செய்துள்ளார். கார்த்தேஜைச் சேர்ந்த தெர்துலியன் என்பவர் புறசமயங்களை விட கிறிஸ்தவ சமயம் மேலானது என்ற சிறந்த நூல் ஒன்றை எழுதினார். அம்புரோஸ் என்பவர் மிலான் நகரில் மேற்றிராணியராகப் பணியாற்றிக் கொண்டிருந்த போது எழுதிய இலக்கியங்கள் மக்களைக் கவர்ந்தன. ஜெரோம் (கி.பி. 340–420) என்பவர்: கிரேக்கம், எபிரேயமொழியிலிருந்த விவிலிய நூலை இலக்கியச் சுவையுடன் இலத்தீன் மொழியில் மொழி பெயர்த்தார். புனித அகஸ்டின் (St. Augustine 354–430) என்பவர் ஆப்பிரிக்காவில் ஹிப்போ என்னு மிடத்தில் கிறிஸ்தவ சமய போதனையை மேற்கொண்டு அந்த நகரை கிறிஸ்தவ சமய மையமாக மாற்றினார். இவர் எழுதிய இறைவனின் நகரம் (The) city of God என்ற நூலில் கிறிஸ்தவ சமயக் கோட்பாடுகளுக்கு விளக்கம் கொடுக்கப்பட்டுள்ளது. ஆரம்பகாலத்தில் கிறிஸ்தவர்கள் தங்கள் சமயக் கொள்கையான விசுவாசம், நம்பிக்கை, அன்பு ஆகியவற்றை வெளிப்படுத்துவதற்கு முயன்றதின் விளைவாக பல கலைச் சின்னங்கள் தோன்றின. கான்ஸ்டாண்டிநோபிள், ரோம் ஆகிய நகரங்களிலும் பின்னர் ராவன்னா * (Ravenna) விலும் கோவில்களின் அலங்காரங்கள் பீடங்கள், புனித பாத்திரங்கள் ஆகியவை கலை உணர்வுடன் செய்யப்பட்டன. ஆரம்பத்தில் ஆராதனையின்போது பொது வழிபாட்டு வாசகம் பாட்டு வடிவத்தில் கூறப்பட்டது. கி.பி.590 முதல் 604 வரை போப்பாண்டவராகப் பணியாற்றிய முதலாம் கிரேகரி என்பவர் தேவாலய ஆராதனையின் போது பாட வேண்டிய பாடல்களைத் தொகுத்து அளித்தார். இவர் இன்னிசையை வளர்ப்பதற்காக பாடகர் குழு ஒன்றை ரோமில் ஏற்படுத்தினார். இந்தப் பாடல்கள் பிற்காலத்தில் இசைக்கருவிகளின் துணையுடன் பாடப்பட்டன.

**திருச்சபையும் நாடும்**

இடைக்கால ஐரோப்பிய வரலாற்றில் திருச்சபைக்கும் நாட்டிற்கும் உள்ள உறவு முறையானது பலவகைகளில் முக்கியத்துவம் பெறுகிறது. திருச்சபையும் நாடும் எத்தகைய உறவு கொண்டிருக்க வேண்டும் என்பதை போப் கிளாசியஸ் (Clasius) என்பவர் கி.பி. 5-ம் நூற்றாண்டிலேயே வரையறுத்துக் கூறியிருந்தார். அவையிரண்டும் கடவுளால் உலகிற்கு அளிக்கப் பட்டவை. தத்தம் எல்லைக்குள் வரம்பில்லாத அதிகார உரிமை பெற்றவை ஆகும். ஆரம்பகாலத்தில் இந்த இரண்டு நிறுவனங்களும்

ஒன்றுக்கொன்று ஆதரவாகவும் பேருதவியும் புரிந்து வந்துள்ளன . இரண்டில் ஏதேனும் ஒன்று - வலிமை பெற்ற போது மற்றொன்று அதைக்கண்டு அஞ்சவும் இல்லை , பொறாமைப் படவும் இல்லை . ஆனால் ஒன்றையொன்று மிஞ்சும் வலிமை பெறத் தொடங்கிய போது அவைகளுக்கிடையே போட்டியும் போராட்டமும் தொடங்கின. இந்த போராட்டம் கி .பி.1050-க்கும் 1300-க்கும் இடைப்பட்ட காலங்களில் உச்ச கட்டத்தில் இருந்தது.

**திருச்சபைக்கும் அரசுக்கும் இடையே ஏற்பட்ட போட்டிக்கான காரணங்கள்**

a) பதினோராம் நூற்றாண்டின் மத்திய பகுதியில் அரசர்கள்தான் பிஷப்பு களைத் தேர்ந்தெடுப்பார்கள். அரசர்களின் கட்டுப்பாட்டில் தான் திருச்சபை குருக்கள் இருந்தார்கள். பிஷப்புகள், மாடாலயத் தலைவர்கள் , குருமார்கள் ஆகியோர் தங்கள் பதவிச் சின்னங்களை மன்னர்களிடமிருந்தே பெற்றுக் கொள்ளும் வழக்கம் இருந்தது . இவ்வாறு சமயம் சாராதவர்கள் சமய அதிகாரிகளை பதவியிலமர்த்துவதை திருச்சபை விரும்பவில்லை . எனவேதான் திருச்சபை சீர்திருத்தவாதிகள் போப்பாண்டவரின் ஆட்சியை வலுப்படுத்தி மன்னர்களின் வலிமையை ஒடுக்க எண்ணினர்

b) ரோமானிய நகரிலிருந்த திருச்சபையி னரும் லௌகிகர்களும் சேர்ந்தே போப்பாண்டவரைத் தேர்ந்தெடுத்தனர் . மன்னர் இதை உறுதிப் படுத்தினார் . பேரரசர் மூன்றாம் ஹென்றி போப்பாண்டவரான ஒன்பதாம் பெனடிக்டை பதவியிலிருந்து நீக்கிவிட்டு வேறொருவரை போப்பாக்கினார் . எனவே சீர்திருத்தவாதிகளான ஹிம்பர்ட் , ஹில்டிபிராண்ட் ஆ கியோர் பிரபுக்கள் மன்னர்கள் ஆகியோரின் ஆதிக்கத்திலிருந்து போப்பாண்டவரை விடுவிக்க முயன்றனர். மூன்றாம் ஹென்றி இறந்ததும் சீர்திருத்தவாதிகள் தாங்களாகவே போப்பாண்டவரைத் தேர்ந்தெடுக்க ஆரம்பித்தனர்

c) கி.பி.1059-ல் போப் இரண்டாம் நிக்கோலஸ் போப்பாண்டவரைத் தேர்ந்தெடுக்கும் முறையினை மாற்றியமைத்தார். ரோமுக்குப் பக்கத்தில் - பணியாற்றிய ஏழு மேற்றி ராணியர்கள், முதன்மையான மதகுருக்கள், டீக்கன்கள் (Deans) ஆகியோரின் ஆகியோரின் இசைவுடன் போப்பை தேர்ந்தெடுக்க வேண்டும் என்று தூய சபை (Holy Synod) ஒன்றைக் கூட்டி முடிவு செய்தார் . இதற்கு போப்பாண் டவரைத்

தேர்ந்தெடுக்கும் புதிய சட்டம் என்று பெயர் . இதன்படி மதகுரு அல்லாதவர் போப்பாண்டவர் தேர்தலில் தலையிடும் வழக்கம் அகற்றப்பட்டது

d) போப் ஏழாம் கிரேகரி (1073–85) கி.பி.1073–ல் போப்பாண்டவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார். இவர் கொண்டிருந்த கொள்கை தான் திருச்சபைக்கு ம் அரசுக்குமிடையே போராட்டத்தை ஏற்படுத்தியது . உலகிலேயே தலைசிறந்த நிறுவனம் திருச்சபையாகும். அது கடவுளிடமிருந்து நேரடியாக உரிமையைப் பெற்றுள்ளது. போப்பாண்டவர் இந்த உலகத்தின் பேரரச ர். ஈடிணையற்றவர் சமயத்துறையில், அரசியலில் பேரரசர்களுக்கும் அவரே தலைவர். அரசர்களைப் பதவியிலிருந்து விலக்கவும் போப்பாண்ட வருக்கு உரிமை உண்டு . இவ்வாறு எண்ணிய கிரேகரி திருச்சபையின் ஆதிக்கத்தை நிலைநாட்ட முயன் றார். இவரது சித்தாந்தங்களை சமய சார்பற்ற ஆட்சியாளர்கள் ஏற்றுக் கொள்ளவில்லை. இதனால் போப்பாட்சிக்கும் , பேரரசர்களுக்குமிடையே போராட்டம் ஏற்பட்டது.

**பதவி சின்ன போராட்டம்**

மேற்கண்ட காரணங்களால் 11,12,13–ம் நூற்றாண்டுகளில் புனித ரோமானியப் பேரரசர்களுக்கும் போப்பாண்டவர்களுக்குமிடையே பதவிச் சின்னப் போராட்டம் ஏற்பட்டது. அதாவது போப்பாண்டவர் உயர்ந்தவரா அல்லது அரசர் (Papacy) உயர்ந்தவரா என்ற வர்க்கப் போராட்டம் ஏற்பட்டது.

**போப்பாண்டவர் ஏழாம் கிரேகரிக்கும், பேரரசர் நான்காம் ஹென்றிக்கும் (1056-1106) இடையே ஏற்பட்ட போராட்டம்**

ஜெர்மானிய பேரரசராக கி .பி. 1056–ல் நான்காம் ஹென்றி தேர்ந்தெடுக் கப்பட்டார். இவருக்கும் போப் ஏழாம் கிரேகரிக்கும் கசப்பான போராட்டம் ஆர ம்பித்தது. போப் ஏழாம் கிரேகரி மதகுரு அல்லாதவர் மதகுருக்களை நியமிப்பதை எதிர்த்தார் . திருச்சபை அதிகாரிகள் அரசால் நியமிக்கப்பட்டனர் . அவர்களுக்கு அதிகாரச் சின்னங்களான மோதிரத்தையும் , செங்கோலையும் அரசர்களே கொடுத்து வந்தனர் . இதனை கிரேகரி எதிர்த்தார். பதவிச் சின்னங்களை வழங்குவதற்கும், போப்பாண்டவரை பதவியலமர்த்தவும் மன்னர் களுக்கு உரிமையில்லையென்றார்

எனவே கி .பி.1075-ல் லென்டன் (Lenten) என்ற இடத்தில் மதகுருமார்கள் சபை ஒன்றைக் கூட்டி ஆணை பிறப்பித்தார் . அதன்படி இனி பதவிச் சின்னங்களை திருச்சபையாரே அளிப்பர் . அதை மீறி பேர ரசரோ அல்லது வேறெந்த உலகியல் ஆட்சியாளர்களோ பதவிச் சின்னங்களை அளித்தால் , அவர்கள் சமயத்திலிருந்து விலக்கப்படுவார்கள் என்று அறிவிக்கப்பட்டது

**கனோசாவில் ஹென்றியின் கடுந்தவம் கி.பி.1077**

போப்பாண்டவரின் இந்த அறிவிப்பை எதிர்த்துப் போராடுவதைத் தவிர ஹென்றிக்கு வேறு வழி தெரியவில்லை. போப்பாண்டவரின் ஆணையை மதிக்காமல் தொடர்ந்து குருமார்களை நியமித்தும் பதவிச் சின்னங்களை அளித்தும் வந்தார் எனவே போப் நான்காம் ஹென்றியின் நடவடிக்கைகள் தொடர்ந்தால் அவர் சமயவிலக்கு செய்யப்படுவார் என்று எச்சரித்தார் கோபமடைந்த ஹென்றி போப்பை பதவியிலி ருந்து இறக்கி விட்டதாக அறிவித்தார் . அதற்குப் பதிலடியாக போப் பேரரசர் ஹென்றியை பதவியிலிருந்து நீக்கியதுடன் சமயத்திலிருந்தும் விலக்கினார்

ஆனால் ஜெர்மானியப் பேரரசில் பேரரசருக்கு எதிர்ப்பு இருந்ததாலும் ஜெர்மானியப் பிரபுக்கள் போப்பின் பக்கம் இருந்ததாலும் ஹென்றி பயந்தார். ஜெர்மனியில் எதிர்ப்பு சக்திகள் தனக்கு எதிராக திரண்டிருந்ததைக் கண்டார் . ஜெர்மனியில் சட்டமன்றத்தில் (டயட்) கூடிய கோமகனார்களும் , தேர்வாளர்களும் ஹென்றி போப்பினால் மன்னிக்கப்பட்டாலன்றி அவரது பதவிபறிக்கப்படும் என்று அறிவித்தனர். எனவே ஹென் றி தன்மானத்தை விட்டு பணிந்ததாகை யாலும் தம் பதவியை இப்போது காப்பாற்றிக் கொண்டு பிறகு பழி தீர்த்துக் கொள்ளலாம் என்று திட்டமிட்டார். எனவே ஆல்ப்ஸ் மலையைக் கடந்து போப் தங்கியிருந்த கனோசா (Canossa) அரண்மனைக் கோட்டைக்கு சென்று போப்பை சந்திக்க முயற்சித்தார் . ஆனால் ஹென்றியை சந் திக்க போப் மறுத்து விட்டார் . கி.பி.1077 ஜனவரி மாத குளிரில் கனோசா கோட்டை வாயிற்புறம் மூன்று நாள் இரவு பகலாக காத்து தவம் கிடந்தார் . இறுதியாக மாடில்டா என்ற சீமாட்டியின் தலையீட்டின் பேரில் போப்மனம் மாறினார் . பேரரசரும் போப்பாண்டவர் அடிபணிந்து மன்னிப்பு பெற்றார் . இதுவே கனோசா கடுந்தவம் என கிறிஸ்தவர்கள் பலர் நம்பினர். இந்த நம்பிக்கையின் விளைவாக பலர் உடலைவருத்துவதை ஓர் ஆன்மீகக் கடமையாக எண்ணினர் இதனால் பலர் மடாலயங்களில் சேர்ந்து துறவுவாழ்க்கையை மேற்கொண்டனர்

**போப் ஏழாம் கிரேகரி ஹென்றியினால் வீழ்த்தப்படுதல்**

ஜெர்மனிக்குத் திரும்பிய பேரரசர் ஹென்றி பிரபுக்கள் மற்றும் குருமார்களின் ஆதரவைப் பெற்று போப்புக்கு எதிராகச் சூழ்ச்சி செய்தார் கி .பி 1081-ல் போப்பாண்டவரை பதவி நீக்கம் செய்யும் பொருட்டு இத்தாலி மீது படையெடுத்துச் சென்றார். ரோம் முற்றுகையிடப்பட்டது. ஆனால் நார்மானியர்களின் தலைவர் ராபார்ட் கிஸ்கார்ட் போப்பிற் கு உதவினார் . பேரரசரின் முற்றுகை யிலிருந்து ரோமை விடுவித்தார். ஆனால் ரோம் நகர் இந்த நார்மானியர்களால் சூறையாடப்பட்டது . ரோம் அழிக்கப்படுவதைக் கண்டு மனம் நொந்து போன போப் ஏழாம் கிரேகரி சலர்னோ என்ற இடத்திற்குச் சென்று அங்கு 1085-ல் இறந்தார் . அதன் பிறகு மூன்றாம் கிளர்மண்ட் என்பவர் போப்பாண்டவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார் . அவர் ஹென்றியை புனிதரோமானியப் பேரரசராக முடிசூட்டினார்

**வோர்ம்ஸ் ஒற்றுமை பத்திரம்(Concordat of worns, 1122)**

ஏழாம் கிரேகரி இறந்தபின் நான்காம் ஹென்றியின் மகன் ஐந்தா ம் ஹென்றி (1106-1122) போப்பாண்டவர்களுடன் தொடர்ந்து போரிட்டார் . திருச்சபைக்கும் அரசுக்குமிடையே உள்ள தொடர்பு பற்றி பொதுமக்கள் விவாதங்களில் ஈடுபட்டனர்

இதற்கிடையே போப்பாண்டவருக்கும் பேரரசுக்குமிடையே ஒற்றுமையும் சமரசத்தையும் ஏற்படுத்த பல முயற்சிகள் மேற்கொள்ளப்ப ட்டன. இதன் விளைவாக ஜெர்மானிய சிற்றரசர்களும், போப்பாண்டவரின் பிரதிநிதிகளும் பேசி வோர்ம்ஸ் என்ற இடத்தில் ஒற்றுமை பத்திரம் ஒன்றை தயாரித்தனர் இதன்படி குருமார்களின் அதிகாரம் ஆன்மீகத்தைப் பற்றியது என்றும் உலகியல் பற்றியது என்றும் இரண்டாகப் பிரிக்கப்பட்டது. இதன்படி

a) குருமார்களைத் தேர்ந்தெடுக்கும் பொறுப்பு திருச்சபையிடம் ஒப்படைக்கப்பட்டது
a) அவர்கள் பதவிச் சின்னங்களான கணையாழியையும் , புனித செங்கோலையும் போப்பாண்டவரிடமிருந்து பெற்றுக் கொண்டு பதவியேற்க வேண்டும்
b) ஆனால் அவர்கள் மன்னர் அல்லது அவர்களது பிரதிநிதிகள் முன்னிலையி ல் தேர்தெடுக்கப்படவேண்டும்
c) குருமார்கள் தேர்தலில் பிரச்சனை ஏற்பட்டால் அதில் தீர்ப்பு வழங்கும் அதிகாரம் மன்னருக்கே அளிக்கப்பட்டது

d) குருமார்களுக்கு நிலங்கள், நிர்வாகம், நீதி ஆகியவை பற்றிய அதிகாரங்களை மன்னர் அளிப்பார் . ஆனால் இந்த உடன்படிக்கைப்படி நிலையான தீர் வு ஏற்படவில்லை.

**இங்கிலாந்தில் பதவி சின்ன போராட்டம்**

இங்கிலாந்து மன்னர் முதலாம் வில்லியம் காலத்தில் ஸான்பிராங்க என்பவர் காண்டாரியின் தலைமை மதகுருவாக இருந்தார் . மதகுருமார்களின் மீது தனக்கு உரிமை உண்டு என்று அரசர் வாதாடினாலும் லான்பிராங்கின் பரந்த மனப்பான்மையால் குழப்பம் ஏதும் ஏற்படவில்லை. அதன் பின்னர் பதவியேற்ற இரண்டாம் வில்லியம்ஸ் காலத்தில் ஆன்ஸெல்ஸ் என்பவர் காண்டர்பரி தலைமை மதகுருவானார் . இவர் மன்னரிடமிருந்து கணையாழியையும் புனித செங்கோலையும் பெற மறுத்துவிட்டார் . மேலும் காண்டர்பரியின் சொத்துக் கணக்குகளை ஆன்ஸெல்சிடம் மன்னர் கேட்டபோது அவர் ரோம் சென்று விட்டார்.

பின்னர் பதவியேற்ற முதலாம் ஹென்றி ஆன்ஸெல்சை மீண்டும் காண்டர்பரியின் தலைமை குருவாக நியமித்து அழைத்தார் . அவர் திரும்பி வந்து பதவியேற்றுக் கொண்டார். ஆனால் பதவியேற்பு வைபவம் நடத்திவைக்க அரசர்களுக்கு உரிமையில்லையென்று கூறினார் . எனவே 1107-ல் சமயத் தலைவர்களுக்கும் மன்னருக்குமிடையே உடன்பாடு ஒன்று ஏற்பட்டது

**புனித ரோமானியப் பேரரசர் பிரட்ரிக் பார்பரோசாவும் திருச்சபையும்**

புனித ரோமானியப் பேரரசர் பிரடரிக் பார்பரோசா (1152-90) சார்லிமென், ஆட்டோ போன்ற அரசர்களைப் போல சிறந் து காணப்பட்டார். போப்பாண்டவருக்கும் பேரரசுக்குமிடையே 1122-ல் வோர்மஸ் ஒற்றுமைப் பத்திரத்தின்படி வெற்றி தோல்வியின்றி முடிந்திருந்தாலும் அப்போது போப்பாண்டவரே வலிமை பெற்றிருந்தார். பேரரசின் ஆதிக்கம் குறைந்தி ருந்தது. ஆனால் திருச்சபையில் மிகவும் செல்வாக்கு பெற்று விளங்கிய போப் புனித பெர்னார்ட் (1091-1153) கி.பி.1153-ல் இறக்கவே பிரடரிக்பார்பரோசா தனது செல்வாக்கை பயன்படுத்த முற்பட்டார்

அவர் மதகுருமார்களைத் தேர்ந்தெடுக்கும் தேர்தலை முற்றிலும் கட்டுப் படுத்தினார். தனக்கு நம்பிக்கை உள்ளவர்களை மட்டுமே தலைமை குருக்களா க நியமித்தார். திருச்சபையின் அலுவலர்கள் சமயம் சாராதபணிகளையும் செய்ய ஆணையிடப்பட்டன. போப்பாண்டவரின் ஆதிக்கத்தைக் கட்டுப்படுத்துவதற்காக

கி.பி.1154ல் பிரடரிக் பார்பரோசா இத்தாலி வந்தார் . ஆனால் பல காரணங்களால் போப்பாண்டவருக்கும் பார்பரோசாவுக்குமிடையே உடன்பாடு ஏற் பட்டது. 1159-ல் போப் நான்காம் ஹாட்ரியன் இறந்து விடவே புதிய போப்பாண்டவரைத் தேர்ந்தெடுப்பது பற்றிய பிரச்சனை எழுந்தது . பேரரசரை எதிர்த்தவர்கள் ஒன்று கூடி மூன்றாம் அலக்சாந்தரை போப்பாக தேர்ந்தெடுத்தனர் மன்னரை ஆதரித்தவர்கள் நான்காம் விக்டர் என்பவரை போப்பாக தேர்ந்தெடுத்தனர்.

இதன்பின் போப் மூன்றாம் அலக்சாந்தர் பிரடரிக் பார்பரோசாவை சமயத்திலிருந்து விலக்கினார். மேலும் பார்பரோசாவின் பெரும்படையை இத்தாலிய மன்னர்கள் தோற்கடித்தனர் . தனது பதவிக்கு ஆபத்து ஏற்படும் சூழ்நிலை ஏற்பட்டுவிட்டதைக் கண்ட பிரடரிக் அப்போது வெனிசில் இருந் த போப் மூன்றாம் அலக்சாந்தர் காலில் விழுந்து மன்னிக்கும்படி வேண்டினார் . இந்த நிகழ்ச்சி திருச்சபைக்கும் பேரரசுக்கும் ஏற்பட்ட போராட்டத்தில் கனோசா கடுந்தவத்திற்குப் பிறகு நடைபெற்ற முக்கியமான நிகழ்ச்சியாகும்

**பேரரசர் இரண்டாம்பிரடரிக்கும்(1215-1250) திருச்சபையும்**

இரண்டாம் பிரடரிக் பேரரசராக இருந்தபோது ஒன்பதாம் கிரேகரி போப்பாண்டவராக இருந்தார் . புனித ஜெருசலேமை மீட்க சிலுவைப் போரில் ஈடுபடவேண்டும் என்று போப்பாண்டவர் இரண்டாம் பிரடரிக்கிற்கு ஆணையிட்டார் அதனை பேரரசர் ஏற்க மறுக்கவே தனது ஆணையை மீறுவதாக கருதி அவரை மதத்திலிருந்து விலக்கு செய்துவிட்டார் . ஆனால் அதற்குள்ளாக பேரரசர் சிலுவைப் போரை நடத்தி வெற்றி கண்டார் . அப்படியிருந்தும் அவரை பதவிவிலக்க முயன்றார் போப். இதற்கிடையில் போப் ஒன்பதாம் கிரேகரி இறந்து நான்காம் இன்னொசென்ட் போப்பானார். இவரும் பிரடரிக்கை குறைகூறினார். எனவே லியோன்ஸ் என்ற நகரில் திருச்சபைக் கூட்டம் ஒன்றைக்கூட்டி பிரடரிக்கை சமய விலக்கு செய்தார் . ஆனால் பிரடரிக் 1250-ல் இறந்து விட்டார். அவருக்குப் பின்வந்தவர்கள் காலத்திலும் தொடர்ந்து பதவி சின்னப் போராட்டம் நடந்து வந்தது

**திருச்சபைக்கும் பேரரசுக்கும் இடையே நடைபெற்ற போராட்டத்தின் முக்கியத்துவம்**

திருச்சபைக்கும் பேரரசுக்கும் நடைபெற்ற போராட்டத்தால் இரண்டு நிறுவனங்களுமே வலுவிழந்தன. ஒன்றையொன்று ஒடுக்கி வலுவிழந்து வாழ்விழந்தன.

இத்தாலியும், ஜெர்மனியும் சிறுசிறு பகுதிகளாகச் சிதறி பத்தொன்பதாவது நூற்றாண்டு வரை ஐக்கியப்படாமல் இருந்தன.

போப்பாண்டவரின் அதிகாரம் சில காலத்தில் உயர்ந்து காணப்பட்டது என்பது உண்மைதான். ஆனால் திருச்சபையானது ஆன்மீகத்தில் வலிமை குன்றியது . போப்பாண்டவர்கள் அரசியலில் மூழ்கினர் போப்பாண்டவர்கள் மன்னர்களது வலிமையை ஒடுக்கியது இறுதியில் அவர்களது வீழ்ச்சிக்கே வழி வகு த்தது. மேலும் ஜெர்மானிய திருச்சபையில் பிளவு ஏற்பட்டது . மன்னரை ஆதரித்தவர்களும் , போப்பாண்டவரை ஆதரித்தவர்களும் மோதிக் கொண்டனர்

இந்த போராட்டம் திருச்சபையில் பல சீர்திருத்தங்களை ஏற்படுத்தியது குருமார்கள் திருமணம் செய்வது தடுக்கப்பட்டது கோவில் மானிய பேரம் தடுக்கப்பட்டது. மன்னர்கள் மண்ணுலகில் இறைவனின் பிரதிநிதிகள் என்ற கோட்பாட்டிற்கு முட்டுக்கட்டை போடப் பட்டது. முக்கியமாக இப்போராட்டத் தின் விளைவாக போப்பாண்டவர்களின் அதிகார வீழ்ச்சியையும் திருச்சபையில் ஏற்பட்ட பல சீர்திருத்தங்களையும், பல நாடுகளில் ஏற்பட்ட தேசிய உணர் வுகளையும் மிக முக்கியமானதாகக் கருதலாம்

## மடாலய முறை

துறவு வாழ்வின் அடிப்படையிலிருந்து தோன்றியதே மடாலய வாழ்வு முறையாகும் அப்போஸ்தலர்கள் என்று அழைக்கப்பட்ட இயேசு கிறிஸ்துவின் சிடர்கள் கிறிஸ்தவ சமயத்தைப் பரப்பும் முயற்சியில் ஈடுபட்டனர் இந்த முயற்சியில் அநேக ர் தங்கள் வாழ்க்கையை அறப்பணிக்கும் ஆன்மீகப் பணிக்கும் அர்ப்பணித்து துறவிகளாயினர். சிலர் கொலை செய்யப்பட்டு இரத்த சாட்சிகளாய் மரித்தனர் . இவர்களது தியாகத்தினால்தான் கிறிஸ்தவசமயம் வளர்ச்சியடைந்தது

கத்தோலிக்க திருச்சபையானது பல காரியங்களைச் செய்யத் பதவறிவிட்டது என்றும், திருச்சபையில் உலகியல் மலிந்து விட்டது என்றும் கருதிய சிலர் தனியே சென்று காடுகளிலும் குகைகளிலும் தவம் செய்து முக்தியடைய விரும்பினர் அப்படிச் சென்றவர்கள் ஓரிடத்தில் கூடிவாழ ஆரம்பித்த போது மடாலயங்கள் தோன்றின

“ஒருவன் என்னைப் பின்பற்றிவர விரும்பினால் அவன் தன்னைத்தான் வெறுத்து, தன் சிலுவையை எடுத்துக் கொண்டு என்னைப் பின்பற்றக்கடவன்'' மத்தேயு 16-24).

**மடாலமுறையின் தோற்றம்**

உலகியல் இன்பங்களைத் துறந் தால் அன்றி முக்தியடைய முடியாது என்பது கீழை நாட்டு சமயங்களின் முக்கியத் தத்துவமாகும். கிறிஸ்தவ சமயத்தை முதன் முதலில் போதித்த புனிதபால் , புனித அகஸ்டின் போன்றோர் ஏறக்குறைய இதே கருத்தினை எடுத்துக் கூறினர். ஆனால் இயேசு கிறிஸ்து உடலை வருத்த வேண்டும் என்று எப்போதும் கூறியதில்லை. ஆனாலும் கிழ்கண்ட பல காரணங்களால் மடாலய முறை தோன்றின.

ஆனால் இடைக்காலத்தில் துறவு வாழ்க்கையை மேற் கொள்வதற்கு வேறுபல காரணங்களும் இருந்தன . கட்டாய ராணுவ சேவையிலிருந்து விலக்கு , கடன் தொல்லையிலிருந்து விடுதலை , பெருந்தண்டனைகளிலிருந்து தப்பித்தல் , உண்ண உணவும் உடுக்க உடையும் பெற்றுக் கொள்ளுதல் போன்ற குறுகிய நோக்கங்களுடன் மடாலய வாழ்வு முறையை நாடினர்

மடாலய துறவு வாழ்க்கையின் குறிக்கோள் எளிதில் முக்தி அடைய வேண்டும் என்பதேயாகும். ஆன்மாவானது உடம்பு என்ற சிறையில் அடைக்கப்பட்டு கிடப்பதாகவும், கடவுளை அடைவதற்குத் தடையாக இருப்பவை உடலைப் பொறுத்த ஆசைகளே என்றும் உண்மையான கிறிஸ்தவ திருச்சபையில் நாளுக்கு நாள் வசதியளித்துக் கொ ண்டே வந்த ஆடம்பரங்களையும் கேளிக்கைகளையும் சுட்டிக் காட்டவும், அவற்றின் மீது தங்களுக்கிருந்த வெறுப்பை வெளிப்படுத்துவதற்காகவும் ஒரு சிலர் மடாலய வாழ்வு முறையை மேற்கொண்டனர்

கொள்கைக்காக தியாகம் செய்து புகழுடைய விரும்பியவர்கள் பலர் அக்காலத்தில் இருந்தனர் ரோமானியப் பேரரசர்கள் கிறிஸ்தவர் அடக்கி ஒடுக்கிய போது, கிறிஸ்தவ சமயத்துக்காக தங்கள் உயிரையே கொடுக்க பலா முன்வந்தனர் . இவர்கள் கிறிஸ்த சமயத்துக்காக தங்களைத் தாங்களே வருத்திக் கொள்வதில் திருப்தியடைந்தனர்.

கிறிஸ்தவர்கள் கீழை நாட்டு சமயங்களான கினாஸ்டிசிசம் (Gnosticism) போன்ற சமயங்களுடன் தொடர்பு கொண்டதும் ஒரளவு இந்த துறவு மனப்பான்மை

வளர்ச்சிக்குக் காரணமாகும். ஏனெனில், உலகை வெறுத்தல், உடலைத் துன்புறுத்துதல் போன்றவற்றை அந்த சமயங்கள் அளவுக்கு மீறி வற்புறுத்தின

மேற்கண்ட பலகாரணங்களால் பலர் துறவு வாழ் க்கையை மேற்கொண்டனர் . கி.பி. நான்காம் நூற்றாண்டில் பெச்சோமியஸ் (Pec[illegible]us) என்னும் துறவி எகிப்தில் ஒரு மடாலயத்தை நிறுவினார் . துறவிகள் தனித்திருப்பதைவிட ஒன்று கூடி வாழ்ந்தால் ஆன்மீக வளர்ச்சிக்கு நல்லது என்ற எண்ணத்திலேயே அந்த மடாலயத்தைத் தோற்றுவித்தார். நாளடைவில் இம்முறை பல்வேறு பகுதிகளுக்கும் பரவியது

**புனிதபாசில்**

உடலை கெப்படோசியாவின் பிஷப்பாக இருந்த புனிதபாசில் என்பவர் முதன்முதலில் மடாலய வாழ்க்கை முறைக்கென்று ஒரு சில விதிமுறைகளை வகுத்தார். வருத்திக் கொள்வதில் பயனில்லை என்றும் நன்மைபயக்கும் உழைப்பின் மூலம் ஒழுங்கை ஏற்படுத்திக் கொள்வதே உகந்தது என்றும் அவர் போதித்தார் எளிய வாழ்க்கை வாழ்ந்து பல மணிநேரங்களைத் தியானத்தில் கழித்தல் நல்லது என்று கருதிய அவர் மக்கள் நடமாட்டம் இல்லாத குன்றுகளில் தனது மடங்களை அமைத்தார்.

**பெனடிக்ட் மடாலமுறை**

கி.பி. ஆறாம் நூற்றாண்டில் வாழ்ந்த பு கழ்பெற்ற புனித பெனடிக்ட் என்பவர் இத்தாலியில் உள்ள மான்டேகாசினோ (Montecassino) என்ற இடத்தில் ஒருபுகழ்பெற்ற மடத்தைத் தோற்றுவித்தார். பெருந்திரளானவர்கள் இவரைப் பின் பற்றினார் . இவர் கி.பி. 529–ல் பெனடிக்ட் சட்ட முறைகளை வெளியிட்டார். பெனடிக்ட் சட்டங்கள் தியாக வாழ்க்கை, எளிமை, கீழ்படிதல் கடின உழைப்பு , இரக்கம், சமூக சேவை போன்றவைகளை வற்புறுத்தியது.

இந்த மடத்தில் கடுமயா ன சோதனைகளை வென்றவர்கள் மட்டுமே துறவிகளாகச் சேர்த்துக் கொள்ளப்பட்டன ர். ஒரு நாளைக்கு ஆறு முதல் ஏழு மணி வரை உழைத்து வேலை செ ய்யுமாறு வற்புறுத்தப்பட்டனர் . சோம்பேறித்தனமே ஆன்மாவின் முதல் எதிரி என்றார் பெனடிக்ட். ஒவ்வொரு துறவியும் எத்தகைய உணவு உட்கொள்ள வேண்டும், உடை உடுக்க வேண்டும், எவ்வளவு பொருளைக் கையிறுப்பில் வைத்திருக்க வேண்டும் என்பது பற்றிய பல விதிகள் விதிக்கப்பட்டது . இந்த மடத்தின் தலைவர் (Abbot) அதன் உறுப்பினர்களால் தேர்ந்தெடுக்கப்பட்டார்

பெனடிக்ட் மடாலயம் பண்பாட்டு ஸ்தலமாக , பண்பாளர்களின் புகலிடமாக விளங்கியது. இறைபணியின் இல்லமாக காணப்பட்டது . மறை பரப்பும் சின்னமாகத் திகழ்ந்தது. பணியாளர்களுக்கு உதவுதல், அனாதைகளுக்கு அபயம் அளித்தல் போன்ற பணிகளைப் புரிந்தது. இடைக்கால ஐரோப்பாவில் இந்த பெனடிக்ட் மடாலய அமைப்பு மற்ற மடாலயங்களுக்கு ஒரு முன் மாதிரியாகத் திகழ்ந்தது

**குளுனிய மடாலய முறை**

கி.பி. பத்தாம் நூற்றாண்டில் ஏற்பட்ட ஒரு சில மடாலயங்கள் கத்தோலிக்க சமயத்தில் மலிந்து விட்ட ஊழல்களைப்போக்குவதற்காகவே அல்லும் பகலும் பாடுபட்டன. பல்வேறு சீர்திருத்தக் கருத்துக்களை அவை வெளியிட்டதுடன் நடைமுறையிலும் நடத்திக் காட்டின. அத்தகைய மடாலய இயக்கங்களுக்குக் குளுனிய மறுமலர்ச்சி இயக்கம் (Cluny) முக்கியமானதாகும். குளுனி (Cluny) என்ற இடத்தில் கி.பி. 910 – ல் அமைக்கப்பட்ட மடா பத்தில் இந்த இயக்கம் ஆரம்பிக்கப்பட்டது

குளுனிய மடாலயத்தில் சேர்ந்தவர்கள் பிரம்மசார்யம், பக்தி, எளிமை |Celibacy, Devotoin, Simplicity ) முதலிய பண்புகளைக் கண்டிப்பாகக் கடைப்பிடிக்க வேண்டுமென வற்புறுத்தப்பட்டனர். மடாலயங்களில் ஊழல்கள், திருச்சபையில் காணப்பட்ட குறைகள் கண்டிக்கப்பட்டன. திருச்சபை பதவிகள் வாங்கப்படுவதையும் விற்கப்படுவதையும் இந்த இயக்கத்தார் கண்டித்தனர் . சமய குருமார்கள் உலகியல் அதிகா ரிகளிமிருந்து பட்டம் பெறுதல் (Lay) தடுக்கப்பட்டது. இந்த குளுனி இயக்கத்தின் விளைவாக திருச்சபையானது பிரபுக்களின் பிடியிலிருந்து விடுதலையடைந்தது போப்பாண்டவரின் அதிகாரம் வலுவடைந்தது. துறவிகளிடையே காணப்பட்ட சுகபோக அமை ப்பில் சேர்ந்தவர்கள் தம்கையாலேக் கொண்டு மரக்கறி உணவு மட்டுமே வாழ்க்கை நடத்த வேண்டும்

**டொமினிக்கன் இயக்கம்**

கி.பி.1215–ல் பிரான்ஸ் நாட்டில் புனித டொமினி க் என்பவர் ஒருஇயக்கத்தை ஆரம்பித்தார். அதற்கு டொமினிக்கன் இயக்கம் என்று பெயர். இந்த டொமினிக்கன் சபை உறுப்பினர்களால் கிறிஸ்தவ சமயம் உலகம் முழுவதும் பரப்பபட்டது . இந்த இயக்கத்தைச் சேர்ந்தவர்கள் கல்வியில் நல்ல தேர்ச்சி பெற்றிருந்தனர் . கடவுள் நம்பிக்கை அற்றவர்க ளிடம் வாதாடி அவர்கள் மனதை மாற்றும் திறமை பெற்றிருந்தனர். மக்களிடம் தத்துவம், சமயசித்தாந்தம் ஆகியவற்றை வளர்க்க பெரிதும்

பாடுபட்டனர். இடைக்கால நாகரிக வளர்ச்சிக்கு அவர்கள் செய்த சேவை பொன்னெழுத்துக்களால் பொறிக்கத்தக்கது ஆகும்

**மடாலயங்களின் சேவைகள்**

1) மடாலயங்களின் நடவடிக்கைகளின் விளைவாக பல நல்ல பயன்கள் ஏற்பட்டன. திருச்சபையில் ஊழலும், உலகியல் ஆசைகளும் மலிந்து கிடந்த போது துறவிகள் தங்கள் தூய வாழ்க்கை மூலமாக மக்களுக்கு ஒருமுன்மாதிரியாக விளங்கினர்

2) மடாலய துறவிகள் மக்கள் முன்பு உயர்ந்த குறிக்கோள்களை வைத்தனர் கிறிஸ்தவ சமயத்தை சீர்திருத்தி அமைத்தனர் சமயப் பட்டங்களையும், பதவிகளையும் விற்கும் சிமனி (Simony) முறையை ஒழிக்க ஓயாது பாடுபட்டனர். மேலும் போப்பாண்டவரைத் திருச்சபையைச் சேர்ந்த இருமார்களே தேர்ந்தெடுக்க வேண்டுமென்ற முறை ஏற்பட்டது

3) போப்பாண்டவர்களைத் தேர்ந்தெடுக்க கார்டினல்களின் குழு (Colage of Cardinals) ஒன்று 1059-ல் அமைக்கப்பட்டது.

## UNIT-V

### 1. நகரங்களின் தோற்றம்

a) மேற்கு ஐரோப்பாவில் பிஷப்புகள் பல கோவில்களையும், கோவில் சார்ந்த நிலங்களையும் பராமரித்து வந்தனர். பின்னர் இப்பகுதியில் மடாலங்களை நிறுவினர். இப்பகுதிகளில் வாணிபமும் தொழில்களும் வளர்ந்து அவை நகரங்களாக வளர்ச்சியடைந்தன.

b) இடைக்காலத்தில் அரசர்களும், பிரபுக்களும் போர் ஏற்பட்டபோது பாதுகாப்பிற்காக பாதுகாப்பு அரண்மனைகளைக் (Castles) கட்டி மக்களைத் தங்கச் செய்தனர். இந்த பாதுகாப்பு நிறைந்த இடங்கள் எல்லாம் பிற்காலத்தில் நகரங்களாக உருவாயின.

c) பெரும்பாலான நகரங்கள் வியாபாரப் பெருக்கத்தின் விளைவாகவே தோன்றின. அவைகளின் முக்கியமானவைகளாக வெனிஸ், ஜெனோவா, பைசா ஆகிய

நகரங்களைக் குறிப்பிடலாம் . இவை கீழை நாட்டுவியாபாரத்துக்கு முன்னோடிகளாக விளங்கின

d) இத்தாலியில் பல அழிந்து போன பழைய நகரங்கள் மீது புதிய நகரங்கள் உருவாயின. உதாரணமாக புகழ்பெற்ற வெருலமியம் என்ற அழிந்து போன இத்தாலிய நகரத்தின் மீது செயின்ட் ஆல்பன்ஸ் என்ற புதிய நகரம் எழுப்பப்பட்டது.

e) இத்தாலிக்கு வெளியே தோன்றிய நகரங்கள் தற்கால கிராமங்களை விட கொஞ்சம் பெரியவையாக காணப்பட்டன. அவைகளில் முக்கியமானவை களாக கலோன், மெயின்ஸ், டிராய்ஸ், ரெய்ம்ஸ், லண்டன், பிரிஸ்டல், நார்விச் ஆகியவை குறிப்பிடத்தக்கவை

இப்படித் தோன்றிய சிறுசிறு நகரங்கள் உரிமைகளைப் பெற்று சுதந்திரமாயின . சுதந்திரமாக வணிகம் செய்ய முற்பட்டன . தங்கள் பாதுகாப் பிற் காக கோட்டைச் சுவர்களைக் கட்டிய போது இந்த நகரங்கள் முக்கியத்துவம் அடைந்தன

**நகரங்களின் வளர்ச்சி**

பொதுவாக மத்திய கால நகரங்கள் தங்கள் பாதுகாப்பிற்காக சுற்றுச் சுவர்களை எழுப்பிக் கொண்டன. எதிரிகளிடமிருந்து இவ்வாறு தங்களைப் பாதுகாத்து கொண்டன . மக்கள் தொகை அதிகரித்து வரவே நெருக்கடி ஏற்பட்டது. அங்கு பொதுக்குளியல் வசதி ஏதும் இல்லை. தெருக்கள் நெருக்கமாகவும் இருளடைந்தும் காணப்பட்டன

ரோமானியப் பேரரசில் பெருநகரங்கள் பல புத்துயிர் பெற்றன இங்குள்ள மக்கள் பாதுகாப்போடு பொருளைத் தேடுவதற்கேற்ற நிலையை உருவாக்குவதற்காக மன்னரிடமிருந்து நகர உரிமை ஆவணத்தைப் பெற்றார்கள் ஏனெனில் வியாபாரத்தில் வளர்ந்து வரும் நகரங்களால் தாங்களும் நன்மையடையலாம் என்று அரசர்களும் கருதினர். இந்த நகர உரிமைப் பத்திரம் நகர மக்களை நிலமானியக் கட்டுபாடுகளிலிருந்து விடுவித்தது . மக்கள் தனி உரிமையும் , வியாபார, அரசியல் உரிமையும் பெற்றனர்

இவ்வாறு பன்னிரெண்டாம் நூற்றாண்டின் இறுதியில் பெரும்பாலான ஐரோப்பிய நகரப் பகுதிகள் சலுகைகளும் , உரிமைகளும் பெற்ற நகரங்களாயின தாங்கள் பெரும் விலை கொடுத்து உரிமைகளைப் பெற்றவுடன் அந்த உரிமைகளை மற்றவர்களுக்கு விட்டுக் கொடுக்க சம்மதிக்கவில்லை. அதே நேரம் தாங்கள் பெற்ற உரிமைகளை பிறர்

பறித்துக் கொள்ளவும் அனுமதிக்கவில்லை . எனவே தங்கள் பாதுகாப்பிற்காக நகரங்களில் இருந்த வாணிபர்கள், கைத் தொழில் புரிவோர் பொதுவான லாப நோக்கில் வாணிப சங்கங்களை (Guild) அமைத்துக் கொண்டனர். இந்த வாணிப சங்கங்கள் நகர வாழ்க்கையின் முக்கிய அம்சமாகக் கருதப்படுகிறது

**நகரங்களின் நிர்வாக அமைப்பும்பணிகளும்**

**a) நகரங்களின் தனித்தன்மை**

இடைக்காலத்தில் பல நகரங்கள் பிஷப்புகளின் இருப்பிடங்களாக இருந்தன . அத்துடன் அவை கோட்டைகளால் சூழப்பட்டு எதிரிகளின் தாக்குதல்களிலிருந்து பாதுகாப்பை அளித்தன. கண்ணியமாகவும், கௌரவமாகவும் நடத்தினர். பல தனிப்பட்ட சலுகைகளையும் வழங்கினர். ஓரளவு தல சுயாட்சி உரிமையையும் அளித்தனர் . பல நகரங்கள் அரசர் அல்லது பிரபுக்களின் மானியங்களாகவே விளங்கின . ஒரு சில நகரங்கள் பிரபுக்களுக்கு சொந்தமாக இருந்தன

**b) நகர உரிமைகள்**

நகரமக்கள் கூட்டமாக ஒரு பிரபுவிடம் ஒப்பந்தம் செய்து கொண்டார்கள் . தங்களது உரிமைகளையெல்லாம் பட்டயங்களில் பொறித்து பிரபுவிடமிருந்து அவர்கள் வாங்கிக் கொண்டார்கள். ஆண்டான் அடிமை , மேலாள் கீழாள் என்ற பாகுபாடுகள் எதுவும் நகரங்களில் இல்லை நிலமானிய நகரங்கள் , வாணிபம் மற்றும் தொழில் வளர்ச்சி சட்டத்தின் முன் அனைவரும் சமமாகவும் , யாவரும் சுதந்திரமான குடிகளாகவும் கருதப்பபட்டனர். சில நகரங்கள் பெருந்தொகையைச் செலுத்தி விட்டு பூரணசுயாட்சியைப் பெற்றுக் கொண்டன

**c) நகர நிர்வாக முறை**

ஒவ்வொரு நகரத்துக்கும் அதன் தலைவராக ஒரு மேயர் அல்லது பர்கோ மாஸ்டர் (Mayor or Burgomaster) என்பவர் இருந்தார். அவருக்கு உதவி செய்யவும் ஆலோசனை கூறவும் பிரபுக்களின் பிரதிநிதிகள் அடங்கிய அவை ஒன்று தேர்ந்தெடுக்கப்பட்டிருந்தது. பொருள் உற்பத்தியாளர்கள், வங்கியாளர்கள், வியாபாரிகள் போன்றோர்களே சபையில் இடம்பெற்றிருந்தனர். அவர்கள் பொதுவாக பூர்ஷுவாக்கள் என்று அழைக்கப்பட்டனர் . இந்த பூர்ஷுவா சபையே நகரங்களுக்கான சட்டங்களை இயற்றியது . நகர வழக்குகளைத் தீர்க்க நீதிமன்றங்கள் இருந்தன

**d) நகர கில்டுகள்**

நகர ஆட்சியில் பலம் பொருந்திய மத்திய அரசாங்கம் அமையவில்லை எனவே மக்கள் தம்மைத்தாமே ஆண்டு கொள்ள முன்வந்தார்கள். அதற்காக பல கில்டுகள் (Guilds) என்ற குழுக்கள் ஏற்பட்டன. இந்த கில்டுகள் நகர ஆட்சியைக் கண்காணித்ததோடு பல வகுப்பினரும் கூடிக்குலாவும் சமூகச் சங்கங்களாகத் திகழ்ந்தன. வியாபாரம், உற்பத்தி ஆகியவை ஒழுங்காக நடைபெற இவை உதவி செய்தன. பல்வேறு சட்டங்களை அதற்கென அவை ஏற்படுத்தின.

**2) நகர ஆட்சி முறை**

நகரங்களின் ஆட்சியாளர்களாகப் பணக்காரக்குழுவினரே பெரும்பாலும் பணியாற்றினர். எனவே அவற்றை செல்வச்சிறுகுழு ஆட்சி (Oligarchy) என்று அழைக்கலாம். ஆட்சியாளர்கள் பல இடங்களில் மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்டார்கள். ஓரளவு பிரதிநிதித்துவ ஜனநாயகம் அங்கு வளர்ந்தது. சில நகரங்களில் மக்கள் அனைவருக்கும் வாக்குரிமை அளிக்கப்பட்டு நிர்வாகம் சாதாரண மக்களால் நடத்தப்பட்டது

**இத்தாலியின் நகர நாடுகள்**

மத்திய காலத்தின் இறுதியில் நகரவாழ்வில் சிறந்தவளர்ச்சியையும் நிறைவையும் இத்தாலியில் காண்கிறோம் இத்தாலியில் ரோம் நகருக்கு வடக்கே அரைகுறை சுதந்திரத்துடன் நகர நாடுகள் (City States) தோன்றின அவைகளில் குறிப்பிடத்தக்கவை வெனிஸ், ஜெனோவா, பிளாரன்ஸ், பிசா ஆகிய நகர நாடுகள் ஆகும்.

1) வெனிஸ்: (Venice) இத்தாலியில் லம்பார்டுகளின் படையெடுப்பின் போது இத்தாலிய அகதிகள் ஏட்ரியாட்டிக் கடலின் மேற்பகுதியில் கடற்கழிகளிடையில் உள்ள சிறு தீவுகளில் மீது வெனிஸ் நகரைக் கட்டினார்கள். இது மத்திய காலத்தில் அதிகாரமும் ஆதிக்கமும் கொண்ட நகர நாடாக விளங்கியது பதினைந்தாம் நூற்றாண்டில் இந்த நகர மக்களின் ஜனத்தொகை இரண்டு லட்சமாக இருந்தது. இந்த நகர அரசு பத்து பேர் கொண்ட கவுன்சிலினால் (Council) நிர்வாகம் செய்யப்பட்டது. அதன் தலைவர் டோஜ் (Doge) என்று அழைக்கப்பட்டார். வெனிஸ் இத்தாலிய விவகாரங்களில் முக்கிய பங்கு வகித்தது. இங்கு ஏற்பட்ட கலை வளர்ச்சி குறிப்பிடத்தக்கதாகும்

2) ஜெனோவா: (Genoa) இது விஸ்கோன்டி (Visconti) குடும்பத்தால் ஆளப்பட்டு வந்தது. ஜெனோவா மிகப் பெரிய துறைமுகமாகும். இங்கு கட்டப்பட்டுள்ள அழகிய அரண்மனைகள், தீட்டப்பட்டுள்ள அழகான ஓவியங்கள் இன்றும் பாராட்டுக்குரியன

3) பிளாரன்ஸ்: (Florence) இத்தாலிய நகரங்களிலேயே முதன்மையானது பி ளாரன்ஸ் நகரமாகும். இதனை பெரிக்ளீஸ் காலத்து ஏதென்ஸ் நகரத்தின் பொற்காலத்தோடு ஒப்பிடலாம். அழகிய கலைக்கு பெயர்பெற்ற அந்த நகரம் கலை மறுமலர்ச்சியில் பெரும் பங்கு பெற்றது. இங்கு ஜனநாயக முறையிலான ஆட்சி நிலவியது. இங்கு தான் உலகப்புகழ் பெற்ற கலைஞர்கள் பல படைப்புகளை படைத்தார்கள். அவர்களில் கவிஞர்களான தாந்தே, பெட்ரார்க், பொக்காசியோ (Dante, Petrarch, Boccaccio) ஓவியக் கலை நிபுணரான புரனல்சோ (Brunelleschi) ஓவியர் பிராபிலீப்போலிப்பி (Fra Filippo Lippi) சிற்பக் கலைஞர் டோனட்டாலோ (Donatello) ஆகியோர்களைக் குறிப்பிடலாம்

இந்த நகரத்தின் மெடிசி குடும்பத்தார் (Medici Family) கலை வளர்ச்சியில் பெரிதும் அக்கறை எடுத்துக் கொண்டனர். காஸ்மோ, அவரது பேரன் லாரன்சோ (Cosimo, Lorenzo) ஆகியோர் கலை வளர்ச்சியில் பெரும் பங்காற்றினர். முக்கியமாக லாரன்சோ தனது காலத்தில் பிளாரன்ஸ் நகருக்கே அழகு சேர்க்கும் விதமாக லியானர்டோ டாவின்ஸி, மைக்கேல் ஏஞ்சலோ, Go... (1468-63) Alv... Dom... கலைஞர்களை பெரிதும் ஆதரித்து வந்தார்.

இந்த நகர நாடுகளின் வரலாறு பெரும்பாலும் ஒன்றுபோல் இருந்தது. இத்தாலிய நகரங்கள் வணிகத்துறையில் போட்டியிட்டு போரிலும் ஈடுபட்டன. சுங்கவரிக்காகவும், சந்தைக்காகவும், சலுகைகளுக்காகவும் போரிட்டன. மேலும் மேல் மட்டத்திலிருந்த பிரபுக்களும் வணிகச் செல்வந்தர்களும் கீழ்மட்டத்திலிருந்த நெசவாளர்களும் ஆட்சியைக் கைப்பற்ற உள்நாட்டுப் போர்களில் ஈடுபட்டனர். ஒவ்வொரு நகர நாடும் தொலைவிடங்களில் வணிகத்துறைக் களங்கள் அமைத்துக் கொண்டிருந்தன. ஒவ்வொரு நகர நாடும் சட்டம் இயற்றியும், நீதிவழங்கியும், நாணயம் அடித்தும் தனி அதிகாரம் செலுத்தி வந்தது. உள்நாட்டு நகரங்கள் பாதுகாப்பு படையும் துறைமுக நகரங்கள் கப்பற்படையும் வைத்திருந்தன.

**மத்திய கால ஐரோப்பாவில் நகரங்கள், வாணிபம் மற்றும் தொழில் வளர்ச்சி**

ரோமானியப் பேரரசு வீழ்ச்சி அடைந்தபின் சுமார் ஐந்து அல்லது ஆறு நூற்றாண்டுகளாக மேற்கு ஐரோப்பாவில் பெரிய நகரங்கள் ஏதும் இல்லாமல் இருந்தது. குறிப்பிடும்படியான அம்சமாகக் கருதப்படுகிறது. இதன் காரணமாகவே ஐரோப்பாவில் பொதுவான வளர்ச்சி ஏதும் இல்லை. காட்டு மிராண்டிகளின் படையெடுப்பால் இருந்த சில நகரங்களின் தோற்றமானது இருண்ட காலத்திலிருந்து ஐரோப்பா மீண்டு வந்ததைத் தெரிவிக்கும் அடையாளமாக இருந்தது. இந்த தோற்றமும் வளர்ச்சியும் வணிகத்தின்

வளர்ச்சியுடன் தொ டர்புடையதாகும். இவ்வாறு நகரங்களின் வளர்ச்சியும் வாணிபம் மற்றும் தொழில் வளர்ச்சியும் மனித நாகரிக வளர்ச்சியில் பெரும்பங்கு கொண்டிருந்தன.

**ஜெர்மானிய நகரங்கள்**

தெற்கு ஐரோப்பாவில் பல பழைய நகரங்கள் புத்துயிர் பெற்றன . ஜெர்மனி, ஹாலந்து, நெதர்லாந்து, ஹங்கேரி, பிரான்ஸ் ஆகிய நாடுகளிலும் புதிய நகரங்கள் தோன்றின.

ஜெர்மானிய நகரங்களின் ஆட்சி ஒ ரு சில பழைய பணக்காரர் குடும்பங் களின் கைகளில் இருந்தது. நகரத் தலைவராகிய பர்கோமாஸ்டரும் (Burgomaster) அவருடைய ஆட்சிக் குழுவும் இக்குடும்பங்களிலிருந்தே தேர்ந்தெடுக்கப்பட்டனர் . தொழில் துறை யில் ஈடுபட்டிருந்தவர்கள் சங்கங்கள் அமைத்துக் கொண்டார்கள். பதிமூன்றாம் நூற்றாண்டில் இந்த சங்கங்கள் ஆட்சியில் பங்கு பெற போராடினர் . ஜெர்மனியில் மிகவும் முற்போக்கான நகரங்கள் கூட நல்ல அமைப்பில் இல்லை . தெருக்கள் குறுகலாகவும் ஒழுங்கின்றியும் காணப்பட்டன . மரத்தாலான வீடுகளில் ஒரு பகுதியில் கால்நடைகளும், நகர் நடுவில் பன்றிகளும் வளர்க்கப்பட்டன ஏழைகள் மதில்களை ஒட்டியிருந்த குடிசைகளில் வாழ்ந்தனர் . நகரங்களில் தானியக் களஞ்சியங்கள் இருந்தன.

**பிரெஞ்சு நகரங்கள்**

பேரரசு, போப்பாட்சி ஆகிய இரண்டின் ஆதிக்கத்திலிருந்தும் விடுபட்ட இத்தாலிய நகரங்கள் சுதந்திரக் குடியரசுகள் ஆனது போல பிரெஞ்சு நகரங்கள் – சுதந்திரக் குடியரசுகள் ஆகவில்லை . அவை நிலமானியதாரர்களின் ஆதிக்கத்தி லிருந்து கூட முற்றிலும் விடுபடவில்லை. பிரபுக்களோடு போராடி சில நகரங்கள் தன்னாட்சி உரிமை பெற்றன. ஒரு சில நகரங்கள் தேர்ந்தெடுக் கப்பட்ட கான்சல் களாலும் , ஒரு சில மேயர்களாலும் ஆட்சி செய்யப்பட்டன . பிரான்ஸ் நாட்டில் நிர்வாகச் சீர்கேடுகளினால் பல நகரங்கள் அழியத்தொடங்கின

**இடைக்கால நாகரிக வளர்ச்சியில் நகரங்களின் பங்கு**

இடைக்கால நகரிக வளர்ச்சியில் நகரங்கள் ஆற்றிய பணிகள் பல

**அ) உடலுழைப்பின் மேன்மை**

உழைப்பின் உயர்வை இடைக்கால உலகுக்கு எடத்துகாட்டிய பெருமை நகரங்களுக்கே உரியது ஆகும். பண்டைக்கால நாகரிகத்தின் பாசறைகளான கிரிசிலும், ரோமிலும் உடலுழைப்பு கேவலமாகக் கருதப்பட்டது . அது அடிமைகள் செய்யும் வேலையாகக் கருதப்பட்டது. ஆனால் இடைக்கால நகரங்கள் உழைப்பை வற்புறுத்தின. உழைக்கத்தெரியாதவனுக்கு அரசியல் பொருளாதார உரிமைகள் மறுக்கப்பட்டன . உழைப்புக்கும், உழைப்பாளிகளுக்குமே சமுதாயத்தில் நல்ல மதிப்பு ஏற்பட்டது

**b) கூட்டு முயற்சியின் மேன்மை**

கூட்டு முயற்சியின் இன்றியமையாமையை இடைக்கால நகரங்கள் வற்புறுத்தின. பொருள் உற்பத்தியில் ஈடுபட்டவர்கள் ஒருகழகமாக அமைய வேண்டும் என்ற கருத்தையே நகரங்களில் அமைக்கப்பட்ட கில்டுகள் என்ற குழுக்கள் நமக்கு எடுத்துக்காட்டுகின்றன. உற்பத்தி துறையில் தொழிலாளர்களும் பங்கு பெற வேண்டும் என்பதை பல நகரங்கள் வலியுறுத்தின

**c) வாணிப வளர்ச்சி**

இடைக்கால வா ணிப வளர்ச்சியில் நகரங்கள் தான் மிகச் சிறந்த இடத்தைப் பெற்றிருந்தன. வாணிபத்துக்கு முதுகெலும்பாக விளங்கிய கண்காட்சிகள் (Fai) லண்டன், கலோன், பாரிசு, டிராய்போன்ற பெரு நகரங்களிலேயே நடைபெற்றன . மேலும் வாணிபத்துக்கு தேவையான கப்பல்களைக் கட்டும் தொழிலில் அக்கால நகர ங்களே சிறந்து விளங்கின. மிலான், கோமோ, வெரோனா, வெனிஸ், பைசா போன்ற நகரங்கள் வாணிபத்தில் ஈடுபட்டு பெரும் பொருள் ஈட்டின . மார்சேல்ஸ், மான்ட்பிலியர், வெலன்சியா, பர்சிலோனா போன்ற நகரங்கள் மத்திய தரைக்கடல் வாணிபத்தில் முக்கிய பங்கு வகித்தன.

**d) ஜனநாயகக் கருத்துக்களின் வளர்ச்சி**

இடைக்காலத்தில் பல நகரங்கள் சுயாட்சி பெற்று விளங்கின . தற்கால ஸ்தல சுயாட்சி முறைக்கு ஒரு முன்னோடியாக விளங்கின தற்கால, பிரதிநிதித்துவ ஆட்சிக்கு அக்கால நகர மன்றங்கள் வழி வகுத்துக் கொடுத்தன . ஸ்தல ஆட்சியில் மட்டுமின்றி மத்திய ஆட்சியிலும் ஜனநாயகப் பண் புகள் வளர இடைக்கால நகரங்கள் பெரிதும் துணை புரிந்தன . சட்டங்கள் இயற்றுவதில் பல தரப்பட்ட மக்களும் பங்கு பெற வேண்டும் என்ற ஜனநாயகக் கருத்து நகரங்களின் முயற்சியாலேயே வெற்றி பெற்றது

**e) கலை வளர்ச்சி**

இடைக்கால கலை வளர்ச்சிக்கும் அறிவுவளர்ச்சிக்கும் நகரங்கள் தான் தாயகமாக விளங்கின. பிளாரன்சை ஆண்ட மெடிசிமன்னர்களும் ரோம் நகரை ஆண்ட போப்பாண்டவர்களும் கலை வளர்ச்சிக்கு பெரிதும் ஆதரவளித்தனர் . இடைக்கால நாகரிகத்தை எடுத்துக் கூறும் கட்டிடக்கலை, ஓவியக் கலை. சிற்பக்கலை, இசைக்கலை முதலியவைகளெல்லாம் நன்கு வளர்ச்சியடைந்த இடங்கள் நகரங்களேயாகும்.

கான்ஸ்டாண்டிநோபிளில் காணப்பட்ட மாபெரும் அரண்மனைகள் , பளிங்கு மண்டபங்களும், ரோம் நகரில் இருந்த பல்கலைக்கழகமும் , அலக்சாந்திரியா நகரில் இருந்த உலகப் புகழ்பெற்ற நூலகமும் , ரேவன்னா நகரில் அமைந்த கட்டிடங்களும் புகழ்பெற்றவை ஆகும். மிலான், பிளாரான்ஸ், நகரங்கள், வாணிபம் மற்றும் தொழில் வளர்ச்சி ஆகிய நகரங்களும் கலைவளர்ச்சியில் பெரும்பங்காற்றின. தாந்தே, பேட்ராக், பொக்காஷியோ, மாக்கியவெல்லி, மைக்கேல் ஏஞ்சலோ , லியோனர்டோ டாவின்சி போன்ற பெரும் சிந்தனையாளர்களையும் கலைஞர்களையும் தோற்றுவித்த பெருமை பிளாரன்ஸ்களுக்கு உரியதாகும்.

இவ்வாறு மத்திய ஐரோப்பாவி ல் தோன்றிய பல நகரங்கள் நாகரிக வளர்ச்சியின் அங்கமாக விளங்கின. அரசியல், வாணிபம், கலை வளர்ச்சியில் முக்கிய பங்காற்றின. ஆனால் மத்திய காலத்தின் இறுதியில் இந்த நகரங்கள் நலிவடைய ஆரம்பித்தன. பலம் பொருந்திய பல அரசர்கள் தோன்றி நக ர அரசை ஒடுக்கி தங்களாதிக்கத்தில் கொண்டு வந்தனர் . மேலும் புதிய நாடுகளும் கண்டங்களும் கண்டுபிடிக்கப்பட்டு கடல் கடந்த வாணிபப் பாதை முக்கியத்துவம் குறைந்ததும் சில நகரங்கள் வாணிப வளம் குன்றி மறைந்தன . சமயச் சீர்திருத்தத்தால் ஏற்பட்ட சமயப் போர்களில் ஈடுபட்டு மேலும் பல நகரங்கள் வலுவிழந்தன

**தொழிலும் வாணிபமும்**

**வாணிப வளர்ச்சி**

ஐரோப்பாவில் கி .பி. பத்தாம் நூற்றாண்டு வரை தொழிலும் வாணிபமும் வளர்ச்சியடையவில்லை. இதற்கு முக்கியக் காரணம் மத்திய தரைக் கடல் பகுதியில் முஸ்லீம்கள், மாக்யர்கள் போன்றோர் அடிக்கடி தாக்குதல்களில் ஈடுப ட்டு வந்ததேயாகும். மேலும் ஐரோப்பிய நிலமானிய பிரபுக்களும் தங்களுக்குள் போரிட்டு அமைதியைக் குலைத்தனர். அவர்களின் பல நடவடிக்கைகள் உள்நாட்டு வாணிபத்தைப் பாதிப்பதாகவே அமைந்தன . ஆனால் பதினோறாம் நூற்றாண்டு முதல் ஐரோப்பிய

நாடுகளில் வாணிப வளர்ச்சி ஏற்பட்டது. சிலுவைப் போர்களின் விளைவாக ஐரோப்பிய நாடுகளுக்கும், மத்திய தரைக்கடல் நாடுகளுக்குமிடையே நெருங்கிய தொடர்பு ஏற்பட்டது. மேலும் வாணிபத்திற்குத் தடையாக இருந்த கொள்ளைக்காரர்கள் வலிமைமிக்க மன்னர்களால் அடக்கப்பட்டனர். இந்த அரசர்கள் கொடுத்த பாதுகாப்புடன் வாணிபம் வளர ஆரம்பித்தது.

வாணிபத்தை ஊக்குவிப்பதற்காக ஐரோப்பாவில் பல இடங்களில் சந்தைகள் அமைக்கப்பட்டன. பொருட்காட்சிகள் (Fair) நடத்தப்பட்டு பொருட்களுக்கு விளம்பரங்கள் கொடுக்கப்பட்டன. பாரிசு, லண்டன், கலோன் முதலிய நாகரங்களில் பொருட்காட்சிகள் பல வாரங்கள் நடைபெற்றன . ஐரோப்பா முழுவதி லிருந்தும் பல வகைப்பட்ட வாணிபர்கள், கைவினைஞர்கள், உற்பத்தியாளர்கள் தங்கள் பொருட்களைக் கொண்டு வந்து குவித்தனர். பல வகைப்பட்ட பொருட்களும் ஓரிடத்தில் கிடைத்த தால் வாணிபம் பெருமளவில் நடைபெற்றது. மேலும் கப்பல் கட்டும் தொழில் வளர்ச்சியடைந்ததால் கப்பல் போக்குவரத் து வளர்ச்சியடைந்தது. துறைமுகங்களில் கலங்கரை விளக்கங்கள் கட்டப்பட்டிருந்தன. பண்டகசாலைகளும் அமைக்கப்பட்டிருந்தன . இது வாணிபத்தை மேலும் ஊக்குவித்தது . வாணிப முக்கியத்துவம் பெற்ற இடங்களில் நகரங்கள் தோன்றின.

**பன்னாட்டு வாணிபம்**

கிழக்கத்திய நாடுகளுக்கும் மேற்கத்திய நாடுகளுக்கும் இடையே நடைபெற்ற வாணிபத்தில் பெரும்பகுதி மத்திய தரைக்கடல் வழியாக நடை பெற்றது இந்த வழியாக வாணிபம் நடைபெற்றதால் இத்தாலிய நகரங்களின் செல்வம் வளர்ந்தது . மிலான், கோமா, வெரோனா வெனிஸ் போன்ற நகரங்கள் பன்னாட்டு வாணிபத்தில் ஈடுபட்டு பெரும் பொருள் ஈட்டின ர். போப்பாண்டவரின் ஆணைகளையும் மீறி ஜெனோவா , வெனிஸ், பைசா போன்ற நகரங்கள் முஸ்லீம் நாடுகளுக்கு பொருட்களையும் போர்க்கருவிகளையும் விற்றன. பன்னிரெண்டாம் நூற்றாண்டில் பிரான்ஸ் , ஸ்பெயின் ஆகிய நாடுகள் வாணிபத்தில் வளர்ச்சியடைந்தன. பர்சிலோனா மற்றும் தெற்குபிரான்சு நகரங்கள் வடக்கு ஆப்பிரிக்காவுடன் வாணிபம் செய்தன . லண்டன் நகரம் துணிகளையும் ரோமத்தையும் அரேபியாவுக்கு அனுப்பி அங்கிருந்து நறுமணப் பொருட்களைப் பெற்றுக் கொண்டது. சீனாவுக்கு துணிகளையும் ரோமத்தையும் அனுப்பி பட்டாடைகள் பெற்றுக் கொண்டது . ரஷ்யாவிலிருந்து குறுமென்மயிர் , அடர்ந்த

தோலாடைகள் ஆகியவற்றை இறக்குமதி செய்தது . பிளாண்டர்ஸிலிருந்த புருகஸ் (Brugas) என்ற நகரம் வாணிபம் மூலமாக செல்வத்தைப் பெருக்கிக் கொண்டது

**வங்கி முறையின் வளர்ச்சி**

ஒருவர் வாணிபத்துக்கு மிகவும் இன்றியமையாத சாதனங்களான நாணய முறை (Currency System), வங்கி முறை, நாணய மாற்று முறை (Exchange System) முதலியவை வளர்ச்சியடைந்தன. இத்தாலியில் இருந்த பிளாரன்ஸ் , வெனிஸ் போன்ற நகரங்களில் பெரும் வங்கிகள் இருந்தன. அவைகள் வியாபாரிகளுக்குக் கடன் தொகைகள் வழங்கின . அரசர்களுக்கும் பிரபுக்களுக்கும் கூட அவை கடன் கொடுத்து போர் முயற் சிகளுக்கு உதவி செய்தன . பிளாரன்சைச் சேர்ந்த வங்கி உரிமையாளர் தனக்குச்சொந்தமாக கப்பல்களைக் கூடவைத்திருந்தாராம்

வெனிஸ், ஜெனேவோ போன்ற நகரங்களிலிருந்த வங்கி உரிமையாளர் பிற நாடுகளில் செல்லுபடியாகக் கூடிய உறுதிப்பத்திரங்களையும் , மாற்று முறிகளையும் , காசோலைகளையும் (Promissory Notes, Bills of Exchange, Cheques) வெளியிட்டனர். நெருப்பு, பூகம்பம் போன்ற விபத்துக்கள் நேர்ந்தால் வணிகர்களுக்கு இழப்பீடு செய்யும் காப்புறுதி முறைகளையும் அக்கால வங்கிகள் கடைப்பிடித்தன. தாள் நாணய முறையும் (Paper Currency) கணக்கு வைக்கும் முறையும் (Book Keeping) இக்காலத்தில் நன்கு வளர்ச்சி யடைந்திருந்தன. இதன் மூலம் பன்னாட்டு வாணிபம் பெரும்வளர்ச்சி யடைந்தது

**கேன்சியாட்டிக் கழகம்**

இடைக்கால ஐரோப்பிய வணிகர் கள் தங்கள் வாணிபத்தைப் பெருக்கு வதற்கும் பாதுகாத்துக் கொள்வதற்கும் சங்கங்கள் அமைத்துக் கொண்டனர் . பொருட்கள் ஓரிடத்திலிருந்து மற்ற இடத்திற்கு கொண்டு செல்வதில் பல இடைஞ்சல்கள் ஏற்பட்டன. முக்கியமாக வரிகளும் (Tolls) திருச்சபைச் சட்டங்களும் , வடகடல், மத்தியதரைக்கடலில் இருந்த கடற்கொள்ளைக்காரர் களும் வாணிப வளர்ச்சிக்கு தடையாக இருந்தனர் . எனவே வட ஜெர்மானிய தகரங்கள் ஒன்று சேர்ந்து கேன்ஸியாட்டிக் கழகம் (Hanseatic League) ஒன்றை அமைத்துக்கொண்டன. இந்த கழகத்தில் லூபக் , கலோன், பிரான்ஸ்விக், விஸ்பி, டான்சிக் உட்பட எட்டு நகரங்கள் இணைந்தன மேலும் பல துறைமுக நகரங்களும் சேர்ந்தன . இந்த ஹேன்சியாட்டிக் கழகம் , டென்மார்க், ஸ்வீடன், ரஷ்யா, இங்கிலாந்து போன்ற நாடுகளுடன் வாணிபம் செய்வதில்

முற்றுரிமை பெற்றது. வடகடல் முழுவதையும் தன் ஆதிக்கத்தில் கொண்டு வந்தது . தனக்கென கப்பற்படையையும் உருவாக்கி கடற்கொள்ளைக்காரர்களின் ஆபத்தை ஓரளவு தடுத்தது . காலப்போக்கில் இந்தக் கழகமானது பல காரணங்களால் முக்கியத்துவம் இழந்தது

இடைக்காலத்தின் இறுதியில் வாணிப வளர்ச்சிக்குத் தடையாக இருந்த பல்வேறு சட்டங்கள் திருத்தப்பட்டன . பன்னாட்டு வாணிபச் சட்டமும் கப்பல் போக்குவரத்துக்கான பொதுவான சட்டமும் இயற்றப்பட்டது. வாணிபப் பாதுகாப்பிற்காக மன்னர்களும் பிரபுக்களும் தனியாக நீதி மன்றங்களை அமைத்துக்கொண்டனர் . இதனால் வாணிப வளர்ச்சி தடையில்லாமல் தொடர்ந்து ஏற்பட்டு வந்தது

**தொழில்களின் வளர்ச்சி**

ஐரோப்பாவில் வாணிப வளர்ச்சிக்கு ஏற்றவாறு உற்பத்தியும் பெருகியது . மத்தியக்காலத்தின் தொடக்கத்தில் போக்குவரத்து வசதி குறைவாகவே காணப்பட்டதால் வாணிபம் பெருகவில்லை. ஆனால் பன்னிரெண்டாம் நூற்றாண்டிலும் அதற்கு ப் பின்னரும் சாலைகள் வளர்ச்சியடைய ஆரம்பித்ததால் போக்குவரத்து வசதி அதிகரித்து வாணிபம் பெருகியது. இதனால் உற்பத்தியும் பெருக ஆரம்பித்தது

**சுரங்கத் தொழில்கள்**

ஐரோப்பாவில் சுரங்கத் தொழில் வெகுவாக வளர்ச்சியடை ந்தது. சுரங்கங்களை வெட்டி உலோகங்களைப் பெறுவதில் முன்னேற்றம் ஏற்பட்டது. இங்கிலாந்து, இத்தாலி, ஜெர்மனி, பிரான்ஸ், ஹங்கேரி ஆகிய நாடுகளில் தங்கச் சுரங்கங்கள் வெட்டப்பட்டன . தங்கத்தின உற்பத்தி அதி , பாத்த உடன் வாணிபம் மேலும் வளர்ச்சியடைந்தது . இரும்புச்சுரங்கங்கள் இங்கிலாந்து, பிரான்ஸ், ஸ்பெயின், சிசிலி முதலிய நாடுகளில் வெட்டப்பட்டன. இங்கிலாந்து. பெல்ஜியம், பிரான்ஸ் ஆகிய நாடுகளில் நிலக்கரிச் சுரங்கங்கள் வெட்டப்பட்டன. தொழிற்சாலைகளில் நீர்ச்சக்கரங்களும், காற்றாலைகளும் வெகுவாகப் பயன்பட்டன.

பலவகையான உலோகங்களு ம் நிலக்கரியும் வெட்டி எடுக்கப்பட்டதால் தொழிற்சாலைகள் வேகமாக வளர்ச்சியடைந்தன . தொழிற்சாலைகளில் அதிகமாக அடிமைகள் பயன்படுத்தப்பட்டனர் நாணயங்கள் , உலோகங்களாலான கருவிகள் , ஆயுதங்கள் முதலியன உற்பத்தி செய்யப்பட்டன தங்கம் வெள்ளி ஆகிய உலோகங்களாலான ஆபரணங்கள் மிக நேர்த்தியான கலைப் பாணியில் செய்யப்பட்டன.

**துணி உற்பத்தி**

இடைக்காலத்தில் துணி உற்பத்தி அதிகமானது . பருத்தியாலும் ரோமத்தாலும் துணி உற்பத்தி செய்யப்பட்டன. இத்தாலி, இங்கிலாந்து, பிரான்ஸ் போன்ற நாடுகளில் துணி உற்பத்தி செய்யும் தொழில் வளர்ச்சியடைந்தது . எண்ணற்ற மக்களுக்கு இந்த தொழில் வேலை வாய்ப்பை அளித்தது பல வியாபாரிகள் பெரும் லாபம் சம்பாதித்தனர் கி.பி. எட்டாம் நூற்றாண்டிற்குப் பிறகு பட்டாடை செய்யும் தொழில் ஐரோப்பாவெங்கிலும் பரவியது

**கைவினைப் பொருட்கள்**

இடைக்காலத்தில் கைவினைப் பொருட்கள் மிகுதியாக ஐரோப்பாவில் செய்யப்பட்டன. மிகவும் அழகான, பளபளப்பான, வண்ணங்கள் பூசப்பட்ட மட்பாண்டங்கள் தயாரிக்கப்பட்டன . பலவிதமான வடிவங்களில் ஓடுகள் தயாரிக்கப்பட்டன. ஐரோப்பா முழுவது ம் கண்ணாடி செய்யும் தொழிற்சாலை களும் காகிதத் தொழிற்சாலைகளும் நிறுவப்பட்டன தோலினாலான பொருட் களின் உற்பத்தியும் வளர்ச்சியடைந்தது . இடைக்காலத்தில் தொழிற்சாலைகள் பெரும்பாலும் முதலாளிகளின் வீடுகளில் அல்லது வீடுகளுக்கு அருகாமையில் கட்டப்பட்டிருந்த கட்டிடங்களில் நிறுவப்பட்டிருந்தன

## 2. கில்டு முறை (GU LD SYSTEM)

இடைக்காலத்தில் நகர பொருளாதர் வாழ்க்கை பொதுவாக கில்டு முறை அல்லது குழு முறையின் அடிப்படையிலேயே நடைபெற்றது. ஒரே தொழிலில் ஈடுபட்ட பலர் ஒன்று சேர்ந்து கூட்டமாக அந்த தொழிலை நடத்துகின்ற முறையே கில்டுமுறை எனப்படும். கில்டு என்பதற்கு ஒருவகை 'தனி உரிமைக்குழு " என்பது பொருளாகும் இந்த குழு உறுப்பினர்களைத் தவிற வேறு யாரும் அந்தத் தொழிலில் ஈடுட முடியாது.

**கில்டு முறை**

கில்டுகள் அல்லது குழுக்கள் இரண்டு வகைப்படும் . ஒன்று வாணிபக் குழுக்கள் மற்றொன்று கைவினைஞர் குழு என்பதாகும்

**1.வாணிபக் குழுக்கள்**

**வாணிபக்குழுக்களின் பணிகள்**

ஒரு நகரில் இருந்த எல்லா வியாபாரிகளும் வாணிபக் குழுவில் உறுப்பினராக இருந்தனர். இந்த குழுவின் முக்கிய நோக்கம் நகர வாணிபத்தைக் கட்டுப்படுத்துவதும், வெளியூர் வியாபாரிகளின் போட்டியிலிருந்து அதைக் காப்பாற்றுவதுமே ஆகும் . உள்ளூர் சந்தை உள்ளூர் வியாபாரிகளுக்கே தனி உரிமை ஆக்கப்பட்டது . அப்படி வெளியூர் வியாபாரிகள் வந்தாலும் வாணிபக்குழுவின் வரைய றுக்கப்பட்ட விலைக்கே அவர்கள் தங்கள் பொருட்களை விற்க வேண்டும் . அதிக விலைக்கு விற்றால் கிடைப்பது அடி உதைதான்.

பண்டங்களின் விலைகள் நன்கு தீர்மானிக்கப்பட்டு ஒரே மாதிரியாக விளங்கின. பண்டங்களைப் பதுக்கி வைத்தல், தேவை ஏற்படும் போது அதிக விலைக்கு விற்றல் போன்ற பழக் கங்கள் தடைசெய்யப்பட்டன . விளம்பரங்கள் மூலம் வீண் செலவு செய்வதும் தடை செய்யப்பட்டது. குழுவின் உறுப்பினர்கள் அவ்வப்போது கூடி வாணிப விதிகளை மாற்றியமைப்பர். ஒவ்வொரு வாணிபத் துறைக்கும் ஒரு குழு (Guild) இருந்தது.

**பெரும் வாணிபக் கழகங்கள்**

பெரிய கில்டுகள் ஒன்று சேர் ந்து பெரும் வாணிபக் கூட்டுக் கழகங்களாக (Corporations) மாறின. மூலப் பொருட்களை அவை மொத்தமாக வாங்கிக் கொண்டன . உற்பத்தி எவ்வாறு நடைபெற வேண்டும் , தொழிலாளர் எவ்வளவு நேரம் வேலை செய்ய வேண்டும், அவர்களுக்கு எவ்வளவு கூலி கொடுக்க வேண்டும் , என்ன விலைக்கு பொருட்கள் விற்கப்பட வேண்டும் என்பதையெல்லாம் அவையே தீர்மானித்தன

நகருக்கு வேண்டிய உணவுப் பொருட்களை வாங்கி வழங்குதல் . நகரச் சாக்கடைகளை துப்பரவு செய்தல், சந்தைகளை ஒழுங்குபடுத்துதல், துறைமுகங்களை ஆழமாக்குதல் போன்ற பணிகளையும் இந்த வாணிபக் கழகங்கள் மேற்கொண்டன . உற்பத்தி செய் வோருக்கு ஊக்கம் அளிக்கும் வகையிலும் , அதே சமயம் நுகர்வோருக்கும் அதிர்ப்தி ஏற்படாத வகையிலும் விலைகள் நிர்ணயம் செய்யப்பட்டன. வியாபாரிகளைக் கொள்ளையடிப்பவர்களை ஒழித்துக்கட்டின. மேலும் அரசர்களும், நிலமானியப் பிரபுக்களும் அத்துமீறி வரிவசூல் செய்ய முற்பட்ட நேரங்க ளில் இந்த வாணிபக் குழுக்களே அவர்களை தடுத்து நிறுத்தின

**வாணிபக் குழுக்களின் பிற நடவடிக்கைகள்**

வாணிபக்குழுக்கள் தங்களுக்கென மண்டபங்கள் கட்டிக் கொண்டன வாணிபர்கள் தங்களுக்குள் ஏற்படும் பிரச்சனைகளை குழுவின் நீதி மன்றங்களிலேயே முறையிட்டு தீர்த்துக் கொண்டனர். இந்த வாணிபக் குழுக்கள் தங்கள் உறுப்பினர்களுக்கு மருத்துவ உதவி, பண உதவி செய்தன . சிறைப்பட்டவர்களை பணம் கொடுத்து மீட்டுக் கொண்டன. வயதானவர்களுக்கு வாழ்க்கை வசதிகள் செய்து கொடுத்தன . இறந்த உறுப்பினர்களின் சவ அடக்கத்திற்கு உதவி செய்தன . நகரங்களில் இருந்த கோவில்களில் நடைபெறும் திருவிழாக்களுக்கு பண உதவி செய்தன . இவ்வாறு நகர வாழ்க்கையின் முக்கிய அம்சங்கள் அனைத்திலும் இந்தக் குழுக்கள் பங்கெடுத்துக் கொண்டன.

**கைவினைஞர் குழுக்கள்**

கைகளால் செய்யப்படும் பொருள்களை உற்பத்தி செய்து வந்த சிறு தொழிலாளர்களும், தங்களுக்குள் குழுக்களை ஏற்படுத்திக் கொண்டனர். ஒவ்வொரு சிறு தொழிலுக்கும் ஒரு குழு அமைக்கப்பட்டது . ரொட்டி சுடுபவர்கள், கருமார்கள், தோல் வினைஞர்கள், ஆடுமாடு மேய்ப்பவர்கள் போன்ற பற்பல தொழில்களுக்கும் தனித்தனி குழுக்கள் இருந்தன . லண்டன், ஆக்ஸ்போர்டு, ஜெனோவா, வெனிஸ், பிளாரன்ஸ் ஆகிய நகரங் களில் ஏராளமான கைவினைஞர்கள் குழு இருந்ததாக அறிகிறோம் . ஒவ்வொரு தொழிலிலும் பல்வேறு வகைகளுக்கும் பல்வேறு நிலைகளுக்கும் தனித்தனி குழுக்கள் இருந்தன.

**கைவினைஞர் குழுக்களின் வகைகள்**

ஒவ்வொரு பெரிய நகரத்திலும் மூன்று வகையான கைவினைஞர் குழுக்கள் இருந்தன. முதலாவது வகை, உள்ளூர் மக்களின் தேவைகளை மட்டும் பூர்த்தி செய்யும் பிரிவு தொழில்களைக் கொண்டவை . ( உ.ம்) ரொட்டி செய்வோர் , மெழுகுவர்த்தி செய்வோர், மது இறக்குவோர் போன்றவர்களைக் கொண்டவை. இரண்டாவது வகை உள்நாட்டவர்களுக்கு மட்டுமன்றி வெளி நாட்டவர்களுக்காகவும் பொருட்களை உற்பத்தி செய்த துணி நெய்வோர் , தோல்வினைஞர், உலோகத்தொழிலாளிகள் முதலியோரை கொண்டவை ஆகும் . மூன்றாவது வகை , மொத்தமாகப் பொருள்களை வாங்கி விற்றவர்களை கொண்டது. கம்பளித்துணி, எண்ணெய், வாசனைத் திரவியங்கள் பட்டு முதலியவற்றில் மொத்த வியாபாரம் செய்தவர்கள் இந்த வகையினைச் சேர்ந்தவர்கள் ஆவார்கள். இதில் முதல்வகைக் குழுக்கள் ஏறக்குறைய எல்லா நகர்களிலும்

காணப்பட்டன. செல்வத்திலும் செல்வாக்கிலும் அவை உயர்ந்து நின்றன. இரண்டாவது வகைக் குழுக் கள் ஒரு சில இடங்களில் மட்டுமே இருந்தன. மூன்றாவது வகைக் குழுவினர் வாணிபக் குழுக்களோடு சேர்ந்து கொண்டனர்

**கைவினைஞர் குழுவின் அமைப்பு**

கைவினைஞர் குழுவின் தலைவர் மாஸ்டர் (Master) அல்லது கைவினை வல்லுநர் எனப்பட்டார். குறிப்பிட்ட சிறு தொழிலைச் செய்தவரும் அதற்கு உரிமையாளரும் அவர் ஒருவரே. அவரே முதலாளி, அவரே தொழிலாளி ஆவார். அவரது வீடே தொழிற்கூடம், அதுவே அவரது கடையும் ஆகு ம். வாணிபக் குழுவில் ஒவ்வொரு மாஸ்டரும் ஒரு உறுப்பினராக இருத்தல் வழக்கம் . கைவினை வல்லுநர் தன் கைகளாலயே பொருட்களை முழுமையாகச் செய்து மனம் மகிழ்வர் கைவினை வல்லுநருக்கு அவரது மனைவி, மக்கள் ஓரளவு உதவுவர் . மற்றபடி அவருக்கு நிரந்தரமாக உதவி செய்தவர்கள் பயிற்சி முற்றுப்பெற்ற தொழிலாளியான ஜர்னிமேனும் (Journeyman) பயிற்சி பெற்று வரும் தொழிலாளியான அப்ரன்டிசும் (Apprentice) ஆகிய இருவர் ஆவர் . அவர்களும் கைவினைஞர் குழுவில் உறுப்பினர்களாவர் . இவ்வாறு குழுக்களில் முதலாளிகளும் தொழிலாளிகளும் சேர்ந்தே இடம் பெற்றிருந்தனர்

கைத்தொழில் ஒன்றை சுதந்திரமாகச் செய்யும் உரிமை இடைக்காலத்தில் சாதாரணமாகக் கிடைப்பதில்லை . மூன்று முதல் பன்னிரெண்டு ஆண்டுகள் வரை ஒருவன் பயிற்சி பெற்ற பின்னரே அவன் ஒரு தொழிலைத் தனிப்பட்ட முறையில் நடத்தும் அனுமதியைப் பெற முடியும் . கைவினைப் பொருள்களை செம்மையாகச் செய்யக்கூடிய நிலையை ஒருவன் பெற்றுவிட்ட போது 'கைவினைச் செம்மல' (Master Craftsman) என்று அழைக்கப்பட்டான்.

பொதுவாக ஒரு கைவினைத் தொழிலில் ஈடுபட்டிருந்தவனின் மக்களும் அதே தொழிலில் ஈடுபடுவது வழக்கம். ஆனால் இத்தகைய தொழில் அடிப்படையில் சாதிகள் அக்காலத்தில் தோன்றவில்லை. ஆனால் உயர்வு தாழ்வுகள் சமுதாயத்தில் பெரிதும் காணப்பட்டன.

**கைவினைஞர் குழுவின் சட்ட திட்டங்கள்**

கைவினைஞர் குழு ஒவ்வொன்றுக்கும் கடுமையான பல சட்ட திட்டங்கள் இருந்தன. அந்த சட்ட திட்டங்களுக்கு உட்பட்டே ஒவ்வொரு மாஸ்டரும் உற்பத்தியில் ஈடுபடவேண்டும். தேவைக்கேற்ற அ ளவே பொருட்கள் உற்பத்தி செய்யப்பட்டன .

உற்பத்தி செய்யப்பட வேண்டிய பொருள்களின் அளவு அவற்றின் தன்மை முதலியவற்றை குழுவே தீர்மானித்தது. பயிற்சியாளர்கள் எத்தனை பேர் சேர்க்கப்படலாம், அவர்கள் எத்தனை ஆண்டு பயிற்சி பெற வேண்டும், பயணத் தொழிலாளிகளுக்கு (Journeyman) எவ்வளவு கூலி வழங்கலாம் என்பதையும் அது தீர்மானித்தது. கில்டு உறுப்பினர்களின் நோய்க்காலத்தின் போதும், விபத்தின் போதும், முதுமையின் போதும் நிதி உதவி செய்தது. நாடகங்கள், பண்டிகைகள், விருந்துகள் முதலியவற்றை ஏற்பாடு செய்து கில்டு உறுப்பினர்களின் வாழ்வில் உற்சாகத்தை ஊட்டியது.

கில்டு உறுப்பினர்களிடம் நன்கொடை பெற்றுக் கொண்டு அதன் உதவி கொண்டு உறுப்பினர்களின் திடீர்த் தேவைகள் பூர்த்தி செய்யப்பட்டன. இக்குழு உறுப்பினர்கள் தங்களுக்கென தனியாக கொடிகளையும், உடைகளையும் கொண்டிருந்தனர். இவ்வாறு குழுக்கள் சமுதாய உல்லாசக் கழகங்களாகவும், தொழிலாளர் சங்கமாகவும், முதலாளிகளின் கூட்டுறவாகவும், சமயக்கூட்டாகவும் திகழ்ந்தன. ஒவ்வொரு குழுவும் தனது தொழில் அல்லது வியாபார ரகசியத்தை பாதுகாத்து வந்தன

குழுவின் விதிகள் கண்டிப்பானவை. அவற்றை மீறியவர்கள் கடுந்தண்டனை பெற்றனர். பொருட்களைச் செம்மையாகச் செய்யாதவர்களும், குறிப்பிட்ட கூலிகளைக் கொடுக்காதவர்களும், குறிப்பிட்ட நேரத்துக்கு மேல் தொழிலாளிகளிடம் வேலை வாங்கியவரும், வரையறுக்கப்பட்ட விலைக்கு அதிகமாக விற்றவர்களும் குழுவிலிருந்து விலக்கப்பட்டார்கள். மேலும் பொருள்களின் விலையைக் குழுவே நிர்ணயித்தது. உற்பத்திக்கு ஆகும் செலவு போக முதலாளிக்கு ஓரளவு இலாபம் கிடைக்கும் படியாகவே விலை நிர்ணயம் செய்யப்பட்டது. அது "நியாயவிலை" (Fair Price) என்று அழைக்கப்பட்டது. நியாயவிலைக்கு மேல் அதிகமாக விற்றவர்கள் குழுவிலிருந்து விலக்கப்பட்டார்கள்

**கில்டு முறையின் நன்மைகள்**

a) கில்டு முறைப் பொருளாதரத்தின் அடிப்படைக கொள்கைகள் உண்மையிலேயே மிகச் சிறந்தவையாகும். இவற்றில் நாம் இடைக்கால கிறிஸ்தவ சமயத்தின் வாடையைக் காணலாம். கிறிஸ்தவ சமயம் எளிமையாக வாழ்வதே சிறந்தது என்றும், செல்வத்தை அளவுக்கு மீறி சேர்க்கக்கூடாது என்றும், வட்டி வாங்குவது பாவம் என்றும், மனிதனை மனிதன் ஏமாற்றுவது அதர்மம் என்றும்

கூறிவந்தது. இத்தகைய சூழ்நிலையில் ஏற்பட்ட பொரளாதரக் குழுக்களும் பொருளாதரத் துறையில் நியாயத்தை வற்புறுத்திவந்தன.

b) கில்டுகளில் கடைப்பிடிக்கப்பட்ட விதிகளில் தலையாயது சமுதாய மனப்பான்மையோடு கூடிய பொருளாதர நடவடிக்கை ஆகும். சமுதாயத்துக்குத் தேவையான பொருள்களையும் , சேவைகளையும் செய்வதே கில்டுகளின் பொருளாதர நடவடிக்கைகளின் குறிக்கோளாக இருந்தன.

c) அதிகமாகப் பொருள் கில்டு முறை சேர்ப்பதை கில்டுகள் ஏற்றுக் கொள்ளவில்லை. ஒரு சிலர் செல்வந்தர்களாக மாற பலர் வறுமையால் வாடும் சூழ்நிலையை கில்டுகள் ஏற்றுக் கொள்ளவில்லை

d) கில்டு முறையின் விளைவாக பொருளாதர நிறுவனங்கள் நியாயமான விலையை வற்புறுத்தின. ஒரு பொருளின் உற்பத்தி செலவை விட கொஞ்சம் அதிகமாகவைத்து விற்பதே நியாயம் என்று கருதப்பட்டது . அளவுக்கு மீறி இலாபம் வைத்து விற்பது பாவம் என்று கருதப்பட்டது.

e) மனிதன் தன் தேவைகளுக்கு மீறி பொருள்களைச் சேர்ப்பதும் தடுக்கப்பட்டது . ஒருவனது தேவைக்கு மேற்பட்டு அவனிடம் வந்து சேர்கின்ற பொருள் சமுதாயத்துக்கே சொந்தம் என்று கருதப்பட்டது . அதிகமாக சேரும் பணம் சமுதாய நலன்களுக்கு செலவு செய்யப்படும் நிலை காணப்பட்டது

f) சமுதாயத்துக்குப் பயன்படக்கூடிய வகையில் ஊழியம் புரியாத எவரும் ஊதியம் பெறுதல்கூடாது என்ற கருத்து ஏற்பட்டது . ஊழியத்திற்கேற்பவே ஒருவனது வருமானம் இருக்கவேண்டும். எந்த வித சமுதாய சேவையுமின்றி ஈட்டப்படும் செல்வம் பாவகரமானது என்று நம்பப்பட்டது

**கில்டு முறையின் வீழ்ச்சி**

கில்டு முறை சிறு சிறு மக்கள் கூட்டங்களுக்கு பெரிதும் ஏற்றவையாக இருந்தது. ஆனால் சமுதாயம் பெரிதாக விரிவடையு ம் போதும், பொருளாதரம் பெரிய அளவில் நடைபெறும் போதும் கில்டு முறையின் கொள்கைகள் நடைமுறைக்கு ஒவ்வாதனவாகப் போய்விடுகின்றன.

வளர்ந்து விடும் தேவைகளுக்கேற்ப பொருள்களை கில்டுகளால் உற்பத்தி செய்ய இயலவில்லை. புதிய தொழிலாளிகள் மிகவும் அரிதாகவே குழுக்களில்

சேர்க்கப்பட்டனர். மேலும் இந்த கில்டுகள் புதிய உற்பத்தி முறைகளை ஊக்குவிக்க மறுத்தன. சுயநலமிக்க பணக்காரக் கும்பல்களாக நாளடைவில் கில்டுகள் மாறின

கில்டுகளில் உள்ள தொ ழிலாளிகளுக்கு மிகக் குறைந்த ஊதியமே வழங்கப்பட்டது. பதினான்காம் நூற்றாண்டில் வறுமையால் வாடிய பல தொழிலாளிகள் கலகத்தில் ஈடுபட்டனர்.

நவீன காலத்தில் புதிய கடல் வழிகள் கண்டு பிடிக்கப்பட்டு உலக வாணிபம் தழைக்கத் தொடங்கிய போது கில்டுகள் தாமாகவே வீழ்ச்சியடைந்தன . ஏராளமான பொருள்களைக் குறைந்த காலத்தில் உற்பத்தி செய்யக் கூடிய இயந்திரங்கள் கண்டு பிடிக்கப்பட்ட போது அவற்றோடு போட்டியிட கில்டுகளால் முடியவில்லை

## 3. மறுமலர்ச்சி (RENAISSANCE)

மறுமலர்ச்சி என்றால் மறுபிறப்பு (re-birth) எனப்படும். மத்திய எலத்தின் இறுதியில் இலக்கியம், கலை, அறிவியல் போன்றவற்றில் புத்துயிர் ஏற்பட்டு புது நாகரிகம் தோன்றியது. கிறிஸ்துவுக்கு முற்பட்ட காலத்திலிருந்தே அறிவுக் கருவூலமாகவும் , இலக்கியம் கலை வளர்ச்சியின் பிறப்பிடமாகவும் இருந்த கிரேக்க ரோமானிய கலாச்சாரம் இடைக்காலத்தில் சமயத்தின் பெயரால் புறக் கணிக்கப்பட்டிருந்தன. இந்த நிலை மாறி ஐரோப்பிய மக்கள் மீண்டும் கிரேக்க , லத்தீன் மொழி இலக்கியங்களை படிக்க ஆரம்பித்தனர் . பண்டையப் பண்பாட்டில் மீண்டும் ஈடுபாடு கொண்டனர் . உலகத்தையும் வாழ்க்கையையும் புதிய பார்வையுடன் உற்றுநோக்கினர் . இதுவே மறுமலர்ச்சியாகும்.

இவ்வாறு மறுமலர்ச்சி என்பது கிரேக்க லத்தீன் மொழி கற்பதில் ஏற்பட்ட மாறுதலையும் ஆதிகால இலக்கியங்கள் செழிப்படைய ஆரம்பித்த நிலையையுமே காட்டுகிறது. மக்களின் எண்ணங்களிலும் செயல்களிலும் ஒரு வகையான சுதந்திர உணர்வு ஏற்பட்டது . அறியாமையிலிருந்தும், சமய நம்பிக்கை மற்றும் மூடநம்பிக்கைகளிலிருந்தும் விடுபட ஆரம்பித்தனர் . பகுத்தறிவுக்குப் பொருந்தாத கருத்துக்களை மறுத்துப்பேசும் தைரியம் பெற்றனர் . 'மறுமலர்ச்சியானது மனிதனுக்கு தனது முழு சக்தியைப் பயன்படுத்தவும், மனவலிமை, உடலின் சக்திகளை அபிவிருத்தி

செய்து கொள்ளவும் , இவ்வுலக வாழ்வை அனு பவித்து உண்மையைத் தேடிக் கொள்ளவும் கற்பித்தது'. மறுமலர்ச்சி இயக்கம் இடைக்காலத்தின் முடிவையும், நவீன காலத்தின் தொடக்கத்தையும் குறிக்கிறது . மறுமலர்ச்சி இயக்கத்தின் பிறப்பிடம் இத்தாலியாகும்.

**மறுமலர்ச்சி ஏற்படக் காரணங்கள்**

**தாய்மொழி இலக்கிய வளர்ச்சி**

ஐரோப்பாவில் தாய்மொழி இலக்கியங்கள் வளர ஆரம்பித்தன . ஸ்பெயின் நாட்டைச் சேர்ந்த சிட் என்பவர் எழுதிய 'நீண்டகதை'யானது காஸ்டைல் நாட்டு மன்னர்களின் பழக்கவழக்கங்களைப் படம்பிடித்துக் காட்டுகிறது . பிரான்ஸில் சார்லிமன்னின் காதல் கதைகள் எழுதப்பட்டன. இத்தாலியில் தாந்தே என்பவர் தெய்வீக இன்பியல்' என்ற நூலை எழுதினார் . இங்கிலாந்தில் சாசர் என்பவர் 'காண்டர்வரிக் கதைகளை' ஆங்கிலோ சாக்சன் மொழியில் எழுதினார் . இவ்விதம் தாய்மொழியில் எழுதப்பட்ட இலக்கியங்கள், நாடகங்கள், கதைகள், கவிதைகள் மக்கள் உள்ளத்தைக் கவர்ந்து அவர்கள் மனதில் புதிய எழுச்சியை ஏற்படுத்தின.

**2. சிலுவைப் போர்கள்**

பிற நாடுகளுக்குச் சென்று திரும்பிய சிலுவைப் போர் வீரர்களிடம் சிறந்த பண்பு பரந்த மனப்பான்மை ஏற்பட்ட ன. சிரியா போன்ற நாடுகளிலிருந்த இலக்கியங்களை இவர்கள் படித்ததால் இலக்கியங்கள் படிக்க அதிக ஆவல் கொண்டனர் . இது மறுமலர்ச்சி ஏற்படக் காரணமானது.

**3. தாந்தேயின் சேவை**

இடைக்காலத்தில் வாழ்ந்த பல அறிஞ ர்கள் கிரேக்க லத்தீன் இலக்கியங் களைப் படித்து வந்தனர் . உதாரணமாக பதிமூன்றாம் நூற்றாண்டில் வாழ்ந்த தாமஸ் அக்வினாஸ் (Thomas Aquinas) கிரேக்க அறிஞர்களான அரிஸ்டாட்டில், ஹோமர் ஆகியோர்களுடைய நூல்களை நன் கு கற்றறிந்தார் . இடைக்கால அறிஞர்களுள் மிகச்சிறந்தவர் தாந்தே ஆவார். இவர் மறுமலர்ச்சியின் முன்னோடி ஆவார். இவர் எழுதிய 'தெய்வீக இன்பியல்' (Divine comedy) வெளியானதைத் தொடர்ந்துதான் மறுமலர்ச்சி இயக்கம் தொடங்கியது என்று கூறலாம். இதன் நூலின் மூலம், இயற்கை, விஞ்ஞானம், ஒழுக்கம், வேத அறிவு ஆகியவற்றை நாம் அறிய முடிகிறது . அவர் தம் கவிதையில் 'வெர்ஜிலின்' மூலம் நரகத்தையும், இறந்துபோனவர்கள் ஆவி சுத்திகரிக்கப்படும் இடத்தையும் கடந்து

எவ்வாறு தன் காதலி பேட்ரிசைக் கண்டு சுவர்க்கம் அடைந்தார்' என்று குறிப்பிடுகிறார். இவர் 'ஏதென்ஸ் ஒரு அறிவு வளரும் வீடு என்றும் , ஹோமர் புலவர்களில் தலைசிறந்தவர் என்றும், அரிஸ்டாட்டில் அறிஞர் தலைவர்' என்றும் குறிப்பிடுகிறார்.

**உலகியல் நூல்களின் வளர்ச்சி**

இடைக்கால நூல்களு ம் கலைகளும் சமய நோக்குடையனவாகத் திகழ்ந்தன அவை திருச்சபையின் ஆதிக்கத்திற்குட்பட்டிரு ந்தன. ஆனால் இடைக்காலத்தின் இறுதியில் திருச்சபையின் செல்வாக்கு மறையத் உலகியல் நூல்கள் வளர்ச்சியடைந்தன, கைக்டத்துறையில் ஏற்பட்ட இந்த மாற்றம் 'மனிதாபிமான இயக்கம்' fe[illegible]m என்று அழைக்கப்படுகிறது . உலகியலைப்பற்றிய பல நூல்கள் கிரேக்க லத்தீன் மொழியில் எழுதப்பட்டிருந்த காரணத்தால் அவைகளைக் – இடதில் மக்களிடம் ஆர்வம் ஏற்பட்டது. அந்த பண்டைய இலக்கியங்களுக்கு என்பதிப்பு ஏற்பட்டது

**போப்பாண்டவர்களின் ஆதரவு**

பண்டைய கிரேக்க லத்தீன் இலக்கியங்களில் பொதிந்து கிடக்கும் கருத்துக்களை மக்களிடம் பரப்புவதில் பல அறிஞர்கள் , பிரபுக்கள், சிற்றரசர்கள் ஈடுபட்டனர். போப்பாண்டவர்கள் கூட இந்த புது அறிவை (New[illegible]) பரப்புவதில் ஈடுபாடு கொண்டார்கள் . அவர்களில் போப் ஐந்தாம் நிக்கோலல் (1447–1445), போப் பத்தாம் லியோ (1513–1521) ஆகியோர்கள் குறிப்பிடத் தக்கவர்கள் ஆவார் . போப் ஐந்தாம் நிக்கோலஸ் வாடி கன் நகரிலுள்ள தனது நூல் நிலையத்தில் ஐந்தாயிரம் நூல்களை வைத்திருந்தார்

**மறுமலர்ச்சி இயக்கம் இத்தாலியில் தோன்றக காரணங்கள்**

மறுமலர்ச்சி இயக்கத்தின் பிறப்பிடம் இத்தாலி ஆகும் . இத்தாலியைப் *புதிய ஐரோப்பாவின் பள்ளிக்கூடம் ', school [illegible]) என்று அறிஞர்கள் கருது கிறார்கள். பண்டைய இலக்கியங்களை மீண்டும் கற்கும் ஆர்வம் இங்குதான் முதலில் தோன்றியது . அதற்கான காரணங்கள் பின்வருமாறு :

**1. கான்ஸ்டான்டி நோபிளின் வீழ்ச்சி (1453)**

பதினைந்தாம் நூற்றாண்டி ன் முற்பகுதியிலேயே கான்ஸ்டாண்டி நோபிள் நகரத்தில் வாழ்ந்த கிரேக்க அறிஞர்கள் பல ர் இத்தா லியை வந்தடைந் திருந்தனர் . 1453ல் கான்ஸ்டாண்டிநோபிள் நகரம் துருக்கியர்களால் கைப்பற்றப்பட்டவுடன் துருக்கிய ஆட்சியில் தங்களுக்கு ஆதரவு கிடைக்காது என்று அச்சம் அடைந்து மேலும் பல கிரேக்க அறிஞர்கள் மேற்கு நோக்கி வந்து இத்தாலி வந்துசேர்ந்தனர் . அவர்களில்

மேனுவேல் கிரிசோலோராஸ் (Manuel Chrysoloras) என்பவரும் ஒருவர், இந்த அறிஞர்கள் தங்களுடன் கிரேக்க-லத்தீன் இலக்கியங்கள் மற்றும் கைப்பிரதிகளை எடுத்து வந்தனர் . எண்ணற்ற மாணவர்களுக்கு கிரேக்க மொழியைப் போதித்தனர் . கிரேக்க ரோமானிய அறிவு பரவுவதற்கு இந்த அறிஞர்களே காரணம் ஆவர்.

**2. இத்தாலிய செல்வந்தர்களின் ஆதரவு**

இத்தாலியில் மிலான் , வெனிஸ், ஜெனோவா, ரோம், பிஸா, ஃபிளாரன்ஸ் போன்ற நகரங்களில் செல்வம் மிக்க நகர அரசுகள் திகழ்ந்து வந்தன . இவைகளை ஆண்டுவந்த மெடிசி (Medici) போன்ற அரச குடும்பத்தினரும், செல்வந்தர்களும், சீமான்களும் கலைவளர்ச்சியில் ஈடுபாடு கொண்டு கிரேக்க அறிஞர்களை ஆதரித்து வந்தனர் . இவர்களின் ஆதரவில் கிரேக்க இலக்கியம் , கலை ஆகியவை வளர்ச்சியடைந்தன . இவ்வாறு இத்தாலிய நகர அரசுகளில் நிலவிய சாதகமான சூழ்நிலையும் , செல்வத்தில் திளைத்திருந்த அரசர்களுக்கும் , பிரபுக்களுக்கும் கலாச்சார வளர்ச்சியைப் போற்ற வேண்டும் என்று தோன்றிய எண்ணமும் இத்தாலியில் மறுமலர்ச்சி ஏற்படக் காரணமாயின.

**3. பட்டணத்து வாழ்க்கை முறை**

நிலமானிய முறை வீழ்ச்சியடைந்தபின் பட்டணங்களில் வாழ்ந்துவந்த மக்கள் யாருக்கும் தலை வணங்க வேண்டிய நிலையில் இல்லாமலிருந்தனர் . அவர்களது வாழ்க்கைமுறை நன்கு வளர்ச்சியடைந்திருந்தது . சுதந்திரமாகச் சிந்தித்துச் செயல்பட்டனர். மக்களின் தொழில் நடவடிக்கைகளின் விளைவாக நாட்டில் செல்வச் செழிப்பு காணப்பட்டது . இந்த செல்வச் செழிப்பின் காரணமாகவே கலை , இலக்கியம் ஆகியவற்றிற்கு அதிகமாக ஆதரவு அளிக்கப் பட்டது

**4. பண்டைக்கால ரோமானிய நாகரிகம்**

இத்தாலி பண்டைக்கால ரோமானிய நாகரிகத்தின் பிறப்பிடமாக விளங்கியது . அறிவு, அரசியல், திறன், கலை செறிவு நிறைந்த வாழ்க்கையை மறுமலர்ச்சிக்கு முன்பே இத்தாலிய மக்கள் வாழ்ந்து காட்டினர் . பண்டைய ரோமானியப் பெருமைகளைக் காட்டும் நாகரிகச் சின்ன ங்கள் இத்தாலியில் மலிந்து காணப்பட்டன . பழைய கலாச்சாரத்திற்கு இத்தாலி பெருமதிப்பு அளித்தது . இவ்விதம் பழைய ரோமானியக் கலாச்சாரத்தின் மீது மக்களுக்கு ஏற்பட்ட ஆர்வம் மறுமலர்ச்சிக்குக் காரணமானது.

**5. லத்தின் மொழி வளர்ச்சி**

இத்தாலி பண்டைய மொழியான லத்தீன் மொழியின் தாயகம் ஆகும். பண்டைய நாகரிகத்திற்கு லத்தீன் மொழி வளர்ச்சியே காரண என்று ஐரோப்பியர் கருதுகின்றனர் , இந்த மொழி வளர்ச்சியினால் இத்தாலியில் இரேக்க ரோமானிய இலக்கியங்கள் புத்துயிர் அடைந்தன.

**6. இத்தாலியில் தோன்றிய தத்துவ அறிஞர்கள்**

இத்தாலியில் திருச்சபையின் ஆதிக்கம் குறையத்தொடங்கியபோது, இத்தாலியில் தோன்றிய அறிஞர்கள் கிறிஸ்தவ சமய நெறிகளையும் , கோட்பாடுகளையும் கண்டித்தனர். இவர்கள் பிறகாலத்தில் அறிவியல் , இலக்கியம், கலை ஆகியவை நல்லமுறையில் வளர்ச்சியடைவதற்கு வழிவகுத்துக் கொடுத்தனர் . அவர்களில் முக்கியமானவர்கள் பெட்ராக் , பொக்காஷியோ, மானுவேல் கிரிசோலோரஸ், மாக்கியவல்லி ஆகியோர் ஆவர் . இவர்களை மறுமலர்ச்சி இயக்கத்தின் முன்னோடிகள் என்று கூறலாம்

**பெட்ராக் (Petrarch 1304 – 1374)**

பெட்ராக் பிளாரன்ஸ் நகரத்தைச் சேர்ந்த அறிஞராவார் . ஐரோப்பாவில் எல்லோராலும் 'அறிவாளி' என்று போற்றப்பட்டார். இவர் லத்தீன் கைப்பிரதிகளைச் சேகரித்தார். சிசரோவின் (Cicero) புகழ்பெற்ற கடிதங்கள் இவரது ஆர்வத்தைத் தூண்டின . வர்ஜில் (Virjil) என்ற லத்தீன் கவிஞரின் காப்பியங்களைப் படித்து , அதைப்போல 'ஆப்பிரிக்கா' என்ற சிறு காப்பியத்தை எழுதினார். இந்த பண்டைக்கால அறிஞர்களை மதித்து அவர்களுக்கு எழுதின கடிதங்கள் போல லெட்டர்ஸ் (familiar letters) என்ற நூல் வடிவத்தில் வெளியிட்டார். இதனால் இத்தாலியில் இலக்கியங்கள் படிப்பதில் ஆர்வம் ஏற்பட்டது. பண்டைய இலக்கியங்களின் மறுமலர்ச்சிக்கு வித்திட்டவர் பெட்ராக் என்று கூறலாம்,

**பொக்காஸியோ (Boccaccio, 1315–75)**

இவர் பெட்ராக்கின் மாணவர் ஆவார். அவரது எண்ணங்கள் நிறைவேற இவர் பாடுபட்டார். பண்டைய கைப்பிரதிகளைச் சேர்த்து கிரேக்க லத்தீன் மொழியறிவைப் பெருக்கினார். இவர் இத்தாலிய மொழியில் எழுதிய டெக்கமரான் (Decameron) என்ற கதைத்தொகுதி புகழ்பெற்ற நூலாகும் . இந்த நூலில் பொக்காசியோ , சமயத்தில்

காணப்பட்ட குறைபாடுகளையும், திருச்சபையினர் நடத்திய ஆடம்பர வாழ்க்கையையும் சுட்டிக் காட்டியிருந்தார்.

**மானுவேல் கிரிசோலோரஸ்(Manuel Chrysolorus)**

கான்ஸ்டாண்டிநோபிளிலிருந்து இத்தாலிக்கு வந்த அறிஞர்களில் ஒருவர் இவர். இவர் 1399-ல் பிளாரன்ஸிலுள்ள பல்கலைக் கழகத்தில் கிரேக்க மொழிப் பேராசிரியராகச் சேர்ந்தார். இத்தாலிய மக்கள் இவரிடம் கிரேக்க மொழி கற்றனர். அதனால் நாகரிகம் அடைந்து அறிவில் புத்துணர்ச்சியும் பெற்றனர்

இவ்வாறு இத்தாலியில் பல அறிஞர்களால் லத்தீன் கிரேக்க இலக்கியங்கள் புதிய வேகத்துடன் பரப்பப்பட்டன. இவர்களது முயற்சியின், காரணமாக இத்தாலியில் மறுமலர்ச்சி இயக்கம் தோன்றி வளர்ந்து பின்னர் ஐரோப்பாவிற்கும் அது பரவியது. இந்த புதிய மறுமலர்ச்சி உணர்வு (Renaissance spirit) வெவ்வேறு துறைகளில் எவ்வாறு தாக்கத்தை ஏற்படுத்தியது என்று காணலாம்

**1. இலக்கியத்துறையில் மறுமலர்ச்சி**

a) பதினைந்து, பதினாறாம் நூற்றாண்டுகளில் தோன்றிய இலக்கியங்கள் உலகியல் சார்புள்ளவைகளாகவும், மனிதனைப் பற்றியும், இந்த உலகத்தைப் பற்றியும் கூறும் நூல்களாக இருந்தன. பொதுவாக லத்தீன் மொழியில் எழுதப்பட்ட நூல்கள் ஐரோப்பா முழுவதும் விரும்பிப் படிக்கப்பட்டன. அதே நேரம் தாய்மொழி வளர்ச்சியும் நசித்துப்போய்விடவில்லை. இத்தாலிய மொழி, பிரெஞ்சு, ஆங்கிலம், ஸ்பானிஷ், ஜெர்மன் போன்ற மொழிகள் லாரன்சோ ஏற்படுத்தினார்கள் இவர்கள். ஜாண் பெசாரியன் என்பவர் பண்டைய கிரேக்க பிரதிகளை சேகரிக்கும் பணியில் ஈடுபட்டிருந்தார். மேலும் காசிமோ டி மெடிசி, டி மெடிசி ஆகிய பிரபுக்கள் மறுமலர்ச்சி இலக்கிய வளர்ச்சிக்குப் பெரிதும் பாடுபட்டனர். ரோம் நகரிலும், நேப்பிள்ஸிலும் நிறுவப்பட்ட Roman, Neapolitan Academy ஆகிய ஆராய்ச்சிக் கூடங்கள் இலத்தீன் மொழி இலக்கியங்களை உயிர்ப்பிக்கும் பணியில் ஈடுபட்டன. அரியஸ்டோ, வில்லானி, கப்போனி, டாசோ (Ariosto, Villani, Capponi, Tasso) போன்ற அறிஞர்கள் இத்தாலிய மொழியில், நவீனங்கள், நாடக, உரைநடை நூல்களை எழுதினார்கள்.

b) ஜெர்மனி : ஜெர்மனியில் இலக்கிய மறுமலர்ச்சிக்கு முக்கிய காரணமாக விளங்கியவர் ஜான் ரூஷ்லின் (John Reuchlin) என்பவராவர். இவர்தான் முதன்முதலில்

முதன்முதலில் விவிலியத்தை விமர்சனம் செய்து திறனாயும் பணியில் ஈடுபட்டார். ரட்டார்டாம் நகரில் பிறந்த எராஸ்மஸ் (Erasmus) என்பவர் எழுதிய 'பொய்மைப் புகழ்ச்சி (The Praise of Folly) என்ற நூல் அக்கால சமுதாயத்தில் காணப்பட்ட குறைகளைச் சாடியது .. அதில் போப்பாண்டவரின் ஆடம்பர வாழ்க்கையும் , திருச்சபையின் ஊழல்களும் கண்டிக்கப்பட்டிருந்தது . இவர் கிரேக்க மொழியிலிருந்த புதிய ஏற்பாட்டை திருத்தி வெளியிட்டார். ஜெர்மனியில் புதிய அறிவு பரவுவதற்கு காரணமாக இருந்த மற்றொரு அறிஞர் மெலங்தன் என்பவராவர். இவர் கிரேக்க லத்தீன் மொழிகளில் பல நூல்களை எழுதினார்

c) பிரான்ஸ் : பிரான்ஸில் மறுமலர்ச்சி இயக்கத்தின் செல்வாக்கு ஓரளவுக்குத்தான் காணப்பட்டது. இலக்கியத்துறையில் பெரிய சாதனைகள் எதுவும் இல்லை . பாரிசு பல்கலைக்கழகம் மறுமலர்ச்சி இயக்கம் தோன்ற ஓரளவுக்குக் காரணமாக அமைந்தது. பிரெஞ்சு எழுத்தாளரான 'பிராங்கோ ராபலே' (Francois Rabelais) என்பவர் Chronicles of Gargantua என்ற நூலை எழுதினார் . அதில் அக்கால மூடநம்பிக்கைகளையும் , பிரபுக்கள் மத குருமார்கள் வாழ்ந்த வாழ்க்கையையும் நையாண்டி செய்கிறார் . மான்டெய்ன்(Montaign) என்பவர் தனது கட்டுரைகள் மூலம் சமயப்பொறையைப் போதித்தார். ரோன்சார்ட், பிராங்கா, வில்லோ (Ronsard, Villon) ஆகிய கவிஞர்கள் சிறந்த முறையில் தாய்மொழியை வளர்த்தனர் . பதினாறாம் நூற்றாண்டில் வாழ்ந்த தெகார்தே (Descartes) என்ற தத்துவ அறிஞர் 'எதையும் நிரூபணத்திற்குப் பிறகுதான் உண்மை என்று ஏற்றுக்கொள்ள வேண்டும் ' என்ற மறுமலர்ச்சி இயக்க அடிப்படைக் கருத்தை தனது "Meditations" என்ற நூலில் கூறுகிறார்.

d) இங்கிலாந்து : இங்கிலாந்திலும் இலக்கிய மறுமலர்ச்சி ஏற்பட்டது . 1481–ல் தாமஸ் லினாக்கன் என்பவர் இத்தாலியிலிருந்து கிரேக்க அறிவின் ஆர்வத்தால் நிறைந்து இங்கிலாந்து வந்து விஞ்ஞான முறைப்படி மருத்துவப் படிப்பை ஆரம்பித்தார். 1491–ல் வில்லியம் குரோசின் என்பவர் இத்தாலியிலிருந்து வந்து ஆக்ஸ்போர்டில் கிரேக்க கல்வியை ஆரம்பித்தார் . இங்கிலாந்தில் தோன்றிய அறிஞர்களில் முக்கியமானவர் சர்தாமஸ் மூர் (Sir Thomas More) என்பவராவார். இவர் உடோபியா (Utopia) என்ற நூலை லத்தீன் மொழியில் எழுதினார் . ஓர் இலட்சிய சமூகம் எப்படி இருக்க வேண்டும் என்பதை இந்த நூலில் மிக அழகாகச்

சித்தரித்துள்ளார். முதலாம் எலிசபெத் அரசியின் காலம் (1558–1603) 'ஆங்கில இலக்கியத்தின் பொற்காலம்' என்றழைக்கப்படுகிறது.

e) ஷேக்ஸ்பியர், மார்லோ, வெப்ஸ்டர், போமான், பிளெட்சர் (Shakespeare, Marlowe, Webster, Beaumont, Fletcher) போன்ற நாடக ஆசிரியர்கள் வாழ்ந்த காலம் அது. ஷேக்ஸ்பியர் 37 நாடகங்களை எழுதி உலகையே ol wi l gomi ssi ooni. Midsummer night, The twelfth night, King Lear, Julius Caesar ஆகியவை குறிப்பிடத்தக்க அவருடைய நாடகங்களாகும் எட்மண்ட் ஸ்பென்சர் (Edmund Spenser) என்பவர் The Faerie Queene என்ற நூலையும், பிலிப் சிட்னே (Philip Sidney) என்பவர் Arcadia என்ற கவிதை நூல்களை எழுதினர். ஜான்மில்டன் என்பவர் The Paradise Lost, Paradise Regained என்ற இரண்டு கவிதை நூல்களை எழுதி பெரும் பெயர் பெற்றார். இவ்வாறு மறுமலர்ச்சி இயக்கம் இங்கிலாந்தில் வேகமாக வளர்ந்தது.

e) ஸ்பெயின் : ஸ்பெயின் நாட்டிலும் புதுமை எழுத்தாளர்கள் தோன்றினர். செர்வன்டீஸ் (Cervantes, 1547 – 1616) என்பவர் Don Quixote என்ற அமர இலக்கியத்தை எழுதினார். இவ்வாறு. ஐரோப்பா முழுவதிலும் இலக்கிய வளர்ச்சி ஏற்பட்டது. புதிதாகக் கண்டுபிடிக்கப்பட்ட அச்ச இயந்திரத்தின் மூலம் இலக்கியப்படைப்புகள் வெளியிடப்பட்டன. இவ்வித இலக்கிய வளர்ச்சியினால் புதிய அறிவு வேகமாகப் பரவியது.

**2. நுண்கலைத் துறையில் மறுமலர்ச்சி**

இலக்கிய வளர்ச்சியோடு நுண்கலையும் வளர்ந்து நுண்கலையின் பல பிரிவுகளான கட்டிடக்கலை, சிற்பக்கலை, ஓவியக்கலை ஆகியவைகள் புதுவடிவம் பெற்று புதிய பொலிவுடன் விளங்குவதையும் காணலா. பண்டைய ரோமானிய கிரேக்க கலை வடிவங்கள் இடைக்கால கிறிஸ்தவக் கலைவடிவங் களுடன் சேர்ந்து புதியபாணி உருவாகியது. இதுவே மறுமலர்ச்சிக்கலை ஆகும். அவைகளை ஒன்றன்பின் ஒன்றாகக் காணலாம்.

அ) கட்டிடக்கலை : கட்டிடக்கலையில் பெரும்மறுமலர்ச்சி ஏற்பட்டது இடைக்கால 'கோதிக் கட்டிடக்கலை' மறைந்து, டோரிக், அயோனிக், கரிந்தியன் (Doric, Ionic, Corinthian) பாணியில் அமைக்கப்பட்ட கிரேக்கத் தூண்கள், ரோமரது வளைவுகள் போன்றவற்றைக் கொண்ட பெரிய கட்டிடங்கள் இத்தாலியில் கட்டப்பட்டன. இந்த புதிய கட்டிடக் கலையின் தந்தை புருனல்ஷி' (Brunelleschi) என்ற இத்தாலியர் ஆவார். மேலும் லியோன் ப த்திஸ்தா ஆல்பர்ட்டி, (Leon Battista Alberti), மைக்கேலோசா (Michelozzo), 'பெனைத்தோ-டா-மஜானா' (Benedetto da Maiano) போன்ற

கட்டிடக்கலைஞர்கள் பிளாரன்ஸ் போன்ற நகரங்களில் பல அரண்மனைகளைக் கட்டினர். ரோமாபுரியில் செயின்ட்பீட்டர் ஆலயம் கட்டுவதில் பெரும்பங்கு கொண்டவர் ‘பிரமாந்தி' (Bramante) என்பவர் ஆவார். இவருக்குப் பின்னர் ராபேல் (Raphael) என்ற கலைஞர் அப்பொறுப்பை ஏற்றுக் கொண்டார். மைக்கேல் ஆஞ்சலோ, பல்லோடியா (P) போன்ற சிற்பக்கலைஞர்களும் அந்த ஆலயம் கட்டுவதில் பெரும்பங்கு வகித்தார்கள்

b) சிற்பக்கலை : 15-ம் நூற்றாண்டில் சிற்பக்கலையும் நல்ல எவளர்ச்சியடைந்தது மறுமலர்ச்சி சிற்பக்கலையின் வழிகாட்டியாக விளங்கியவர் 'லாரன்சோ கிபர்ட்டி' (Loreze Ghiberti) என்பவராவார். இவர் பிளாரன்ஸ் நகர Baptistery ஆலயத்தின் வெண்கலக்கதவுகளை அமைத்தார். அதன் அழகு காண்போரை வியப்பில் ஆழ்த்தும். டொன்டெல்லோ (Donatello) என்ற மற்றொரு சிற்பி, பிளாரன்ஸ் நகரில் St. George ஆகிய சிற்பங்களைச் செதுக்கினார். இவரது சிற்பங்கள் இயற்கையுடன் நெருங்கிய தன்மை கொண்டதாக காணப்பட்டது. இவர் குழந்தைகளின் உருவங்களையும், தன் காலத்தைச் சேர்ந்த புகழ்பெற்ற மனிதர்களின் உருவங்களையும் செதுக்குவதில் ஆர்வம் கொண்டார். வெராச்சியோ, ரோசுலினோ, செலினி (Verrocchio, Robbia, Cellini) ஆகிய சிற்பிகள் உலகப் புகழ் பெற்றவர்கள் ஆவர். ரோமாபுரி செயின்ட்பீட்டர்ஸ் ஆலயத்திலுள்ள மோசஸின் (Moses) பிரமாண்டமான உருவமும், பிளாரன்ஸ் நகரில் காணப்படும் 'இரவுகாலை' ஆகியவற்றைச் சித்தரிக்கும் சிற்பங்களும் மைக்கேல் ஆஞ்சலோவின் சிற்பத் திறமைக்கு சிறந்த எடுத்துக் காட்டாகும்

c) ஓவியக்கலை : மறுமலர்ச்சி கால நுண்கலைகளுள் ஓவியக்கலை தான் சிறந்து விளங்கியது. ஓவியக்கலையின் உறைவிடமாகத் திகழ்ந்தது இத்தாலிதான். இடைக்கால ஓவியங்களில் சமய உணர்வே மேலோங்கி இருந்தது. ஆனால் மறுமலர்ச்சி கால ஓவியக்கலை 'இயற்கையைச் சித்தரித்தல், மனித உடலமைப்பை அப்படியே வரைதல், ஓவியங்களை கான்வாஸ் துணியிலும் மரப்பலகைகளிலும் வரைதல், எண்ணெய் வண்ணங்களை உபயோகித்தல்' ஆகிய சிறப்பியல்புகளைக் கொண்டதாக வி ளங்கியது. இக்காலத்து கலைஞர்கள் தனது விருப்பப்படியும், தனது உணர்ச்சிகளுக்கு வடிவம் கொடுத்தும் ஓவியங்களைத் தீட்டினார்கள். ஓவியங்கள் இயற்கையாகவும், தன்னைச் சுற்றியுள்ள பொருட்களைப் பற்றியதாகவும் இருக்க வேண்டுமென்றே ஓவியக் கலைஞர்கள் நினைத்தனர். இதைத்தான் ஆங்கிலத்தில் "Naturalism in Art என்று குறிப்பிடப்படுகிறது.

இத்தாலியில் பிளாரன்ஸ், வெனிஸ், மிலான், ஜெனோவா போன்ற நகரங்களில் ஓவியக்கலை வளர்ச்சியடைந்தது. பிளாரன்ஸ் நகரைச் சேர்ந்த கியோட்டோ (Giotto) என்பவர் தலைசிறந்த ஓவியர். இவரது 'செயின்ட்பிரான்சிசின் மரணப்படுக்கை' என்ற ஓவியமும், பாதுவா (Padua) நகர ஆலயத்தில் காணப்படும் சுவரோவியங்களும் இவரது தலைசிறந்த படைப்புகளாகும். மேலும் மசாகியோ (Masaccio) பாத்திசெல்லி (Botticelli) போன்றவர்கள் மறுமலர்ச்சி ஓவியக்கலைக்கு ஆக்கம் அளித்தார்கள். வாடிகன் அரண்மனையில் காணப்படும் ராபேலின் சுவரோவியங்களான Sistine Chapel ஆகியவை ராபேலின் அழியாப் படைப்புகளாகும்

லியானர்டோ டாவின்ஸி (Leonardo da Vinci) என்பவர் இத்தாலியில் தோன்றிய பெரிய ஓவிய வல்லுநர் ஆவார். இவரது அறிவாலும் ஆற்றலாலும் அழகு பெறாத துறையே இல்லை என்று கூறலாம். இவர் மனித உடலமைப்பை கூர்மையாக ஆராய்ந்து உடலுறுப்புகளின் ஓவியங்களை தத்ரூபமாக வரைந்தார். மிலான் நகர கோமகனின் ஆதரவில் வாழ்ந்த இவர் மறுமலர்ச்சி கலையின் மணிமுடி போன்றவர். இவர் வரைந்த 'இறுதி விருந்து' (The last supper) 'மோனாலிசா' (Monalisa) ஆகிய ஓவியங்கள் உலகப் புகழ்பெற்ற படைப்புகளாகும்.

மைக்கேல் ஆஞ்சலோ (Michael Angelo) என்பவர் ரோம் நகரிலுள்ள 'சிஸ்டைன் சேப்பல்' என்ற ஆலயத்தின் கூரையில் வரைந்துள்ள ஓவியங்கள் தலைசிறந்தவை. பழைய ஏற்பாட்டில் (Old Testament) கூறப்பட்டிருக்கும் விவிலியக் காட்சிகளை இவர் வரைந்துள்ளார். நான்கு ஆண்டுகளாக உடலை வருத்தி இந்த ஓவியங்களை வரைந்தார். இவரது 'இறுதித் தீர்ப்பு' (The last judgement) சுவரோவியம் உலகிலேயே சிறந்த ஓவியமாகும். மேலும் திதியன் (Titian) என்ற மற்றொரு ஓவியர் வெனிஸ் நகரில் புகழ் பெற்றிருந்தார். வண்ணங்களைக் கவர்ச்சிகரமாகப் பயன்படுத்துவதில் இவர் கை தேர்ந்தவர். இவர் பேரரசர் ஐந்தாம் சார்லஸ், போப்பாண்டவர் மூன்றாம் பால் ஆகியோர்களின் உருவங்களைத் தீட்டியிருக்கின்றார். இத்தாலிய ஓவியர்களுக்கு ஐரோப்பிய அரசர்கள் பெரும் ஆதரவு அளித்தனர்.

### 3. விஞ்ஞானத்துறையில் மறுமலர்ச்சி

இடைக்கால சமுதாயம் திருச்சபையின் ஆதிக்கத்தின் காரணமாக இருளில் மூழ்கிக் கிடந்தது. எல்லாக் கருத்துக்களும் ஆராய்ச்சி, பரிசோதனை இன்றி அப்படியே ஏற்றுக்கொள்ளப்பட்டன. ஆனால் மறுமலர்ச்சி இயக்கம் தோன்றியவுடன் மற்றத்

துறைகளைப்போலவே விஞ்ஞானத்துறையும் வளர்ச்சியடைந்தது . புரட்சிகரமான ப ல கண்டுபிடிப்புகள் தோன்றின..

இடைக்காலத்திலேயே ரோஜர் பேகன் (Roger Bacon 1214-1294) என்ற அறிஞர் அறிவியல் ஆராய்ச்சியில் ஈடுபட்டிருந்தார் . 'தொலை நோக்கி ' இயங்குகிறது என்பது பற்றியும் , நீராவிக் கப்பல், ஆகாய விமானம் பற்றியும் ஆராய்ச்சி செய்து வெளியிட்டார். ஆனால் அவரது கருத்துக்கள் வைதீகக் கருத்துக்களுக்கு முரண்பட்டவையாக இருந்ததால், சமய விரோதி என்று முத்திரை குத்தப்பட்டு சிறையிலடைக்கப்பட்டார் . ஆனால் மனிதனின் சிந்தனைகள் சமயத்தின் கோரப்பிடியிலிருந்து விடுபட்டபோது, அறிவியல் துறையில் புதுப்புது உண்மைகள் மலர ஆரம்பித்தன

முதலாவதாக, வானசாஸ்திரத்தில் பல புதிய உண்மைகள் கண்டு பிடிக்கப்பட்டன. கிரேக்க வான நூலறிஞரான டாலமி (Ptolemy 2-ம் நூற்றாண்டு) என்பவர் பூமியே பிரபஞ்சத்தின் மையம் என்றார் . அதுவே உண்மை என்றது திருச்சபை . எல்லோரும் ஒப்புக்கொண்டனர். அதே நேரம் பித்தகோரஸ் (Pythagoras) என்பவர் கூறிய சூரியனே பிரபஞ்சத்தின் மையம் என்ற கருத்தும் இருந்தது. கோப்பர்நிகஸ் (Copernicus 1473-1543) என்ற போலந்து நாட்டைச் சேர்ந்த வானநூல் அறிஞர் தனது ஆராய்ச்சிகள் மூலம் பாலமியின் கருத்துக்களை தவறு என்று நிரூபித்தார். 1543-ல் "Concerning the revolutions of celestial Bodies" என்ற தனது ஆராய்ச்சி நூலை வெளியிட்டார் . அதில் சூரியன் பிரபஞ்சத்தின் மையத்தில் இருப்பதையும், பூமியும், மற்ற கோளங்களும் அதனைச்சுற்றி சுழல்கின்றன என்ற உண்மையையும் அறிவித்தார் இவர் வெளியிட்ட கருத்துக்களே இன்றி அப்படியே ஏற்றுக்கொள்ளப்பட்டன. ஆனால் மறுமல ர்ச்சி இயக்கம் தோன்றியவுடன் மற்றத்

துறைகளைப்போலவே விஞ்ஞானத்துறையும் வளர்ச்சியடைந்தது . புரட்சிகரமான ப ல கண்டுபிடிப்புகள் தோன்றின.

இடைக்காலத்திலேயே ரோஜர் பேகன் (Roger Bacon 1214-1294) என்ற அறிஞர் அறிவியல் ஆராய்ச்சியில் ஈடுபட்டிருந்தார் . 'தொலை நோக்கி ' இயங்குகிறது என்பது பற்றியும் , நீராவிக் கப்பல், ஆகாய விமானம் பற்றியும் ஆராய்ச்சி செய்து வெளியிட்டார். ஆனால் அவரது கருத்துக்கள் வைதீகக் கருத்துக்களுக்கு முரண்பட்டவையாக இருந்ததால், சமய விரோதி என்று முத்திரை குத்தப்பட்டு சிறையிலடைக்கப்பட்டார் . ஆனால் மனிதனின் சிந்தனைகள் சமயத்தின் கோரப்பிடியிலிருந்து விடுபட்டபோது, அறிவியல் துறையில் புதுப்புது உண்மைகள் மலர ஆரம்பித்தன

முதலாவதாக, வானசாஸ்திரத்தில் பல புதிய உண்மைகள் கண்டு பிடிக்கப்பட்டன. கிரேக்க வான நூலறிஞரான டாலமி (Ptolemy கி.பி. 2-ம் நூற்றாண்டு) என்பவர் பூமியே பிரபஞ்ச த்தின் மையம் என்றார் . அதுவே உண்மை என்றது திருச்சபை . எல்லோரும் ஒப்புக்கொண்டனர். அதே நேரம் பித்தகோரஸ் (Pythagoras) என்பவர் கூறிய சூரியனே பிரபஞ்சத்தின் மையம் என்ற கருத்தும் இருந்தது. கோப்பர்நிகஸ் (Copernicus 1473-1543) என்ற போலந்து நாட்டைச் சேர்ந்த வானநூல் அறிஞர் தனது ஆராய்ச்சிகள் மூலம் பாலமியின் கருத்துக்களை தவறு என்று நிரூபித்தார் . 1543-ல் "Concernihg the Revolutions of the Celestial Bodies என்ற தனது ஆராய்ச்சி நூலை வெளியிட்டார் . அதில் சூரியன் பிரபஞ்சத்தின் மையத்தில் இருப்பதையும் , பூமியும், மற்ற கோளங்களும் அதனை ச்சுற்றி சுழல்கின்றன என்ற உண்மையையும் அறிவித்தார். இவர் வெளியிட்ட கருத்துக்களே இன்றைய வானசாஸ்திரத்திற்கு அடிப்படையாக அமைந்துள்ளன.

பின்னர் ஜாண்கெப்ளர் (John Kepler 1571- 1630) என்பவர் கோப்பர் நிக்கஸின் கருத்துக்களை உறுதிப்படுத்தினார். 'பூமி முதலான எல்லாக் கோளங்களும் சூரியனைச் சுற்றி நீள்வட்டப் பாதையில் (Ellipse) சுழல்கின்றன' என்ற உண்மையைக் கண்டுபிடித்தார். இத்தாலியைச் சேர்ந்த கலிலியோ - (Galileo 1564- 1642 ) என்பவரும் ஆராய்ச்சிகள் மூலம் கோப்பர்நிகஸின் கருத்துக்கள் உண்மையானவைதான் என்று உறுதிப் படுத்தி னார். கலிலியோ பௌதீக சாஸ்திரத்தில் வல்லுநர் ஆவார். அவர் 1609-ல் 'தொலை நோக்கி' ஒன்றை குறைகளின்றி உருவாக்கி அதன்மூலம் கோள்களின் இயக்கம் பற்றிய தனது கருத்துக்களை வலியுறுத்திக் கூறினார் . கலிலியோவின் கருத்துக்கள் திருச்சபைக் கொள்கைகளுக்கு எதிரானது என்று குற்றம் சாட்டப்பட்டு அவர் சிறையிலடைக்கப்பட்டார். இவ்வாறு வானஇயல் துறையில் புதிய உண்மைகள் வெளிவந்தன.

பிரான்சிஸ் பேகன் (Francis Bacon 1551- 1626 ) என்பவர் ஆராய்ச்சியின் அடிப்படையில் அமைந்த தொகுப்பு வழிமுறையே (Inductive method) சரியானது என்றும் அரிஸ்டாட்டிலின் உய்த்துணரும் முறை (Deductive method) தவறு என்றும் சுட்டிக்காட் ட்டினார்.

இரண்டாவதாக, கணிதத்துறையிலும் வளர்ச்சி காணப்பட்டது . இடைக்கால ஐரோப்பிய மக்கள் கிரேக்க ரோமானிய கணித சாஸ்திரத்தையும் , முகமதியர்களின் அல்ஜீப்ரா எண்ணிக்கை முறையையும் அறிந்திருந்தனர் . இத்துறையின் வளர்ச்சிக்குக்

காரணமாக இருந்தவர்கள் இத்தாலி நாட்டு 'தார்தாகிலியா கார்டன்' (Tartaglia), நெதர்லாந்து நாட்டு 'ஸ்டெவினஸ்' (Stevinus) போன்ற கணித மேதைகள் ஆவர்.

மூன்றாவதாக, மருத்துவத் துறையிலும் வியக்கத்தகு முன்னேற்றம் ஏற்பட்டது. இத்தாலி நாட்டு 'எஸ்டாச்சியோ' (Eustachio), பெல்லோப்பியோ (Fellopio) போன்ற அறிஞர்கள் உடலியல் பற்றிய அறிவு வளர்ச்சிக்குக் காரணமாக இருந்தார்கள். ஸ்பெயின் நாட்டு செர்விடஸ் (Servetus) என்பவர் மனித உடலின் இரத்த ஓட்டம் பற்றிய புதிய உண்மையை வெளியிட்டார். ஜெர்மனியைச் சேர்ந்த பாராசெல்சஸ் (Paracelsus), நெதர்லாந்து நாட்டின் வெசாலியஸ் (Vesalius), இங்கிலாந்தைச் சேர்ந்த வில்லியம் ஹார்வி (William Harvey) ஆகியோர் மருத்துவத் துறையில் குறிப்பிடத்தக்கவர்கள் ஆவர்.

நான்காவதாக, மறுமலர்ச்சி மறுமலர்ச்சி காலத்தில் மிக 'முக்கியமான கண்டுபிடிப்பாக விளங்குவது 'அச்சு இயந்திரமாகும்'. இது மனித இனத்தின் வரலாற்றிலேயே சிறப்பான கண்டுபிடிப்பாகும். ஒவ்வொரு எழுத்தையும் தனியாக அச்சாகச் செய்யும் பழக்கத்தை முதன்முதலில் அறிமுகப்படுத்தியவர் நெதர்லாந்து நாட்டைச் சேர்ந்த லாரன்ஸ் கோஸ்தர் (Laurence Coster) என்பவராவார். 1440-ல் இவர் மரத்திலான அச்சுகளைக் கொண்டு அச்சிடும் முறையைப் புகுத்தினார். ஆனால் 1454-ல் உலோகத்தினாலான அச்சுகளைக் கொண்டு முதன்முதலில் அச்சிட்டவர் ஜெர்மனியிலுள்ள மெயின்ஸ் நகரைச் சேர்ந்த ஜாண்குட்டன்பர்க் (John Gutenberg) என்பவராவார். குட்டன்பர்க்கால் முதன்முதலில் அச்சிடப்பட்ட நூல் விவிலியம் ஆகும். 1476-ல் இங்கிலாந்தின் முதல் அச்சுக்கூடம் லண்டன் நகரில் வில்லியம் காக்ஸ்டன் (William Caxton) என்பவரால் நிறுவப்பட்டது. இவ்வாறு அச்சு இயந்திரம் கண்டுபிடிக்கப் பட்டதால் குறைந்த விலையில் ஏராளமான நூல்கள் அச்சிடப்பட்டன. கிரேக்கம், லத்தீன் தவிர ஏனைய ஐரோப்பிய மொழிகளிலும் இலக்கிய நூல்கள் அச்சிடப்பட்டன. இதனால் மறுமலர்ச்சி இயக்கக் கருத்துக்களும், 'புது அறிவும்' பாமர மக்களிடையே வேகமாகப் பரவியது. இவ்வாறு அச்சு இயந்திரம் மனித வாழ்க்கையில் ஒரு புரட்சிகரமான மாறுதலை ஏற்படுத்தியது.

மறுமலர்ச்சி உணர் வு அரசியல் துறையிலும் மாறுதல்களை ஏற்படுத்தியது. நிக்கோலோ மாக்கியவல்லி (Niccolo Machiavelli) என்பவர் பிளாரன்ஸ் நகர ஆட்சியாளராகவும், அரசு தூதுவராகவும் பணியாற்றிய நல்ல அரசியல் அனுபவமிக்கவர். தான் பெற்ற அனுபவங்களிலிருந்து இளவரசன்' (The Prince) என்ற மிக அருமையா ன நூலை எழுதினார்.

இதில் அவர் தனது அரசியல் கருத்துக்களை ஆணித்தரமாகக் கூறியுள்ளார் . "எல்லாவகையான அரசாங்கங்களை விட மேலானது . தேசிய முடியாட்சியே யாகும் . அரசியலமைப்பிற்கும் உயர்வானது முடியாட்சியே ஆகும் . முடியரசரின் அதிகாரம் எதேச்சதிகாரம் கொண்டதாக இருக்கவேண்டும் . ஒரு இளவரசன் தனது நாட்டின் நலத்தையும், தனது நிலையினையும் பாதுகாத்துக் கொள்ள ஏமாற்றுதல் , லஞ்சம் கொடுத்தல், கொலை செய்தல் போன்ற எந்த வழிகளையும் பின்பற்றலாம் . அரசின் இறுதி பயனுக்கும் , அறநெறிக்கும் தொடர்பில்லை " என்று கூறியுள்ளார் . போப்பாண்டவராலும், திருச்சபையாலும் இந்த நூல் கண்டிக்கப்பட்டாலும் மக்களால் விரும்பிப் படிக்கப்பட்டது . ஆட்சியாளர்கள் இவரது கருத்துக்களை பின்பற்ற ஆரம்பித்தனர். இவரது அரசியல் கோட்பாடுகள் அக்கால அரசாங்கங்களில் அதிக செல்வாக்குப் பெற்றிருந்தன.

**மறுமலர்ச்சியின் விளைவுகள்**

1. வரலாற்றில் இழந்துபோன ஐக் கியம் புதுப்பிக்கப்பட்டது. கிறிஸ்தவ மதத்திற்கும் இலக்கிய நாகரிகத்திற்கும் தொடர்பு ஏற்பட்டது
2. ஐரோப்பிய நாடுகளில் தாய்மொழி இலக்கியங்கள் தோன்றி மொழி வளர்ச்சியடைந்தது.
3. புதிய இலக்கியங்கள் தோன்றியதால் மக்களுக்கு புதிய இலக்கிய ஆசிரியர்கள் அறிமுகம் ஆனார்கள் . கல்வியில் பல சீர்திருத்தங்கள் செய்யப் பட்டன . இலக்கியக் கல்வியைப் பரப்புவதில் புதிய திருப்பம் ஏற்பட்டது. ஐரோப்பியப் பல்கலைக் கழகங்களில் இலக்கியக் கல்வி புகுத்தப்பட்டது.
4. பண்டைய இலக்கியங்கள் உலகிற்கு அவசியம் தேவை என்று தோன்றியதால் தாய்மொழிகளில் மொழி பெயர்ப்புகள் செய்யப்படவேண்டிய அவசியம் ஏற்பட்டது
5. மறுமலர்ச்சியால்தான் பண்டை ய கிரேக்க ரோமானியச் சின்னங் களை ஆராய முடிந்தது . இக்கால அறிஞர்கள் ' மூலம்தான் வரலாற்றிலுள்ள குறைகள் நீக்கப்பட்டு உண்மையான வரலாற்றை நாம் அறிய முடிகிறது. சிதைவுற்றிருந்த வரலாற்றுச் சின்னங்களுக்கு புத்துயிர் அளிக்கப்பட்டது.

6. மறுமலர்ச்சியின் விளைவாக மக்களிடம் ஆய்வுக் கண்ணோட்டம் முதிர்ச்சியடைந்தது. எதையும் ஆராயாமல் ஒப்புக்கொள்ளும் நிலைமாறி ஆராய்ச்சி மனப்பான்மையும்; திறமையும் உணர்வும் வளர்ந்தது
7. விஞ்ஞானத்தின் பல துறைகளும் பழைய மூட நம்பிக்கைகளி லிருந்து விடுபட்டு, ஆராய்ச்சி, பரிசோதனை ஆகியவை அடிப்படையில் வளர ஆரம்பித்தன. பல புதிய விஞ்ஞான உண்மைகள் உலகிற்கு அறிவிக்கப்பட்டது.
8. மறுமலர்ச்சியின் விளைவாக ஏற்கனவே வலிமை இழந்திருந்த நிலமானிய முறை வீழ்ச்சியடைந்தது . இதனால் பல நாடுகளில் வலிமையான அரசர்களின் தலைமையில் தேசிய அரசுகள் தோன்றின.
9. மறுமலர்ச்சி மக்களிடம் வீர உணர்ச்சியை வளர்த்தது . இதனால் பலர் வீரதீரச் செயல்களில் ஈடுபட்டனர் . இதுவரை கண்டுபிடிக்கப்படாத பல புதிய நாடுகளும், புதிய கடல்வழிகளும் கண்டுபிடிக்கப்பட்டன
10. இடைக்காலத்தில் பெரிதும் மதிக்க ப்பட்ட திருச்சபை அதிகாரத்திற்கெதிரான கருத்துக்களை இலக்கியங்கள் வளர்த்தன . இதனால் திருச்சபையின் செல்வாக்கு பெரிதளவு நலிவடைந்தது
11. மறுமலர்ச்சியின் விளைவாகவே மதச்சீர்திருத்தம் ஏற்பட்டது .. அச்சு இயந்திரம் கண்டுபிடிக்கப்பட்டதால் விவிலிய நூல்கள் பெருமளவில் அச்சிடப்பட்டு மக்களால் விரும்பிப் படிக்கப் பட்டது. அதன் மூலம் தான் வேதத்திற்கு முரண்பட்ட கருத்துக்களை மக்கள் ஆராய முடிந்தது . இதுவே மதச்சீர்திருத்தம் ஏற்படக் காரணமானது .